ஸ்ரீ :

தழ்வாரெம்பெருமானுர் ஸ்ரீயர் நிருவடிகளே சரணம்.

நம்மாழ்வாருலிர் செய்த

திருவாய்மொழி - நான்காம்பத்து.

ஸ்ரீகாஞ்சி பிதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

திவ்யார்த்ததீபிகை யுரையுடன் கூடியது.

(இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீ ஸ்வாமிகளின்

ஷஷ்டி பூர்த்தி நினைவு மாலையின்

ஒன்பதாவது மலராக வெளியிடப்பட்டது.

ஸ்ரீகாஞ்சி ஸ்ரீ வெங்கடேச்வர அச்சுக்கூடம்

கிடைக்குமிடம் :—

ஸ்ரீரங்கமாலா ஆபிஸ், காஞ்சிபுரம்.

விலை 2—6—0

1951.

http://acharya.org

ஸ்ரீமத்வார் எம்பெருமானும் ஸ்ரீயப் பதிருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திருவாய்மொழி—நான்காம்பத்து

முதல் திருவாய்மொழி—ஒருநாயகம்.

உரையவதாரிகை:—கீழ் மூன்றாம்பத்தில் முடித்த திருவாய்மொழி ஆழ்வார்க்கு அளவுகடந்த ஆனந்தமயமாய்ச் சென்றது. நாம்கு யாதொரு குறையுமில்லையென்பதைப் பன்னிப் பன்னிப் பகர்ந்தருளினார். மற்றுமுள்ள ஸம்ஸாரிகளையும் தம்மைப் போலவே குறையற்றவர்களாக ஆக்குவதில் மிக்க ருசியுடையராய் ஆழ்வார் அவர்களையும் இருத்திப் பணிகொள்ள விரும்பி உபதேசம் செய்யப் புகுகிறார் இத்திருவாய்மொழியில்.

நல்லொரு பத்திலும் பரோபதேச ரூபமாக நல்லொரு திருவாய்மொழி அவதரிக்கும். முதற்பத்திலே * **விடுமின் முற்றவும்** * என்கிற திருவாய்மொழியும், இரண்டாம் பத்தில் * **அணைவதரவணைமேல்** * என்கிற திருவாய்மொழியும், மூன்றாம் பத்தில் * **சொன்னல் விரோதமிது** * என்கிற திருவாய்மொழியும் போலே இந்த நான்காம்பத்தில் இத்திருவாய்மொழி உபதேச பரமாகச் செல்லா நின்றது.

* சொன்னல் விரோதத்தில் அர்ப்பகனான பவிசச்சுகத்தை விடுப்பது பெருக்கேடு என்று உபதேசித்தார். உலகில் பலர் சாஸ்திரஜ்ஞர்களாய் செய்யப்புகுவது சில விரோதிகளுக்கு காகவாதலால் அந்த ப்ரயோஜனங்கள் அற்பமாயும் அல்பஸுகமாயுமிருக்கும்படியை நன்கு எடுத்துக்காட்டவே ஆலிலைகளும் உலர்ந்து நிருத்தக்கூடும் என்ற பரார்த்தம், பகவத் ப்ராப்தி தவிர மற்ற ப்ரயோஜனங்கள் யாவும் அல்பத்வம் அல்பஸுகத்வம் முதலிய தோஷங்களினால் துய்யனவாயிருக்கு மாற்றை விளக்குகின்றார் இத்திருவாய்மொழியில்.

பகவத் கீதையில் ஏழாவது அத்யாயத்தில் (16) * சதுர்விதா பஜந்தே மாம் ஜனாஸ்ஸுக்ருதிநோர்ஜுந, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞானீ ச பரதர்ஷப * என்று நான்கு வகைப்பட்ட அதிகாரிகள் தன்னை வந்து பற்றுவதாகக் கண்ணபிரான் கூறினன். அவர்கள் யாவரென்னில்; 1. [**ஆர்த்த:**] நோய்போலே செல்வத்தை நினைந்தும் அடைய விரும்புபவன். 2. [**அர்த்தார்த்தீ.**] முன்னமே செல்வமில்லாமையால் புதிதாக அதனை யடைய விரும்புபவன். 3. [**ஜிஜ்ஞாஸு:**] பிரிவுற்றிருப்பவனை அதிசயத்தை அறுப்பதாகிற வையவ்ய மோகத்தை விரும்புபவன். 4. [**ஜ்ஞானீ.**] 'ஆத்மஸ்வரூபம் எம்பெருமானுக்கே சேஷப் பட்டிருக்கும் தன்மையது' என்கிற அறிவையுடையனாய் ஆத்மாநுபவமாத்ரத்திலே நிற்கமாட்டாமல் எம்பெருமானோடொரு விரும்பி அவனையே பெரும் போதை நினைந்திருப்பவன்.

http://acharya.org

ஆக இச்சொல்லுவரும் ஸுக்ருதிகள் என்று பேசப்பட்டார்கள். ஞானிகளாகிற மற்றவர்களை தஷ்க்ருதிகள் என்று பேசவேண்டியிருக்க, ஸுக்ருதிகள் என்று பேசினது பகவானுடைய நிருஷ்வாஸ வாதனையில்; 'அல்பமாயும் அஸ்திரமாயுமிருக்கின்ற ப்ரயோஜநாந்தரத்தை விரும்பினாலாகிலும் இத்தப் பகவத்விஷயத்திலே வந்து பாகிக்கலாகாதோ!' என்கிற உலப் பேயாம். காலவரையும் வாசியற ஸுக்ருதிகள் என்று சொல்லிவிட்டதும், ஞானியே பிறந்தவன் என்பதை அந்த தேஹஸாம்யமே அதற்கு மேல் சுலோகங்களினால் வ்யக்தமாகக் கூறுகின்றன்; — [தேஹாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர் விஷ்யதே,.... ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்.] இத்யாதி ச்லோகங்கள் காண்க. (இவற்றின் பொருள்: —) இவர்களில் ஞானிதான் மிகவும் பிறந்தவன்; எனெனில், அவன் ஸ்மை யடையவேண்டுமென்ற ஸம்மையே எப்போதும் நாடியவனும் மற்றொன்றினும் பற்றின்றி விசேஷமாய் ஸம்பந்தத்தில் மாத்ரம் பக்தியுடையவனுமிருக்கிறன்.....ஞானியானவன் என் ஸ்வரூபத்தைத் தரிக்கின்ற ஆத்மாவென்றே என்னுடைய விதாரணம்—என்பதாம்.

இப்படிப்பட்ட ஞானியாக இருந்து வாழ்வதே கன்று என்றும், ஐச்வர்ய கைவல்யங்களில் விருப்பங்கொள்வது பயனற்றது என்றும் பரக்க உபதேசிப்பதே இத் திருவாய்மொழியின் ப்ரமேயமாகும். இதில் ஐச்வர்யம் த்ரிவித ஸம்பந்தத்தைப் பல பாசுரங்களாலும் ஸ்வர்க்கபோகத்தினுடையவும் கைவல்ய மோக்ஷத்தினுடையவும் தோஷத்தை ஒவ்வொரு பாசுரத்தாலும், பகவத் ப்ராப்தியின் உபாதேயத்வத்தைப் பாசுரந்தோறும் அருளிச்செய்கிறார். .... — ....

ஒருநாயகமாய் ஓடவுலகுடனுண்டவர் *
கருநாய்கவர்ந்தகால் சிதைகியபானையர் *
பெருநாடுகாண இம்மையிலேபிச்சைதாம்கொள்வர் *
திருநாரணன்தான் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினே. 1

ஒரு நாயகம் ஆய்	முண்டலம் முழுமைக்கும் அதிபதியாய்ப்பரவி	பெரு நாடு காண	உலகமெல்லாம் நிரம்பிவர்த்த (பரிபவத்தை) காணும்படியாக
ஓட உலகுடன் ஆண்டவர்	வெகுகாலமாகவும் உலகங்களை யெல்லாம் அரசாட்சி புரிந்தவர்கள் (ஒரு காலவிசேஷத்திலே தரித்ரர்களாகி)	இம்மையிலே தாம் பிச்சை கொள்வர்	இப்பிறவியிலேயே தாங்களே பிச்சை யெடுப்பர்; (செல்வத்தின் தன்மை இத்தகையதாதலால்)
கருநாய் கவர்ந்த கால்	கரிய நாய்களால் கவ்வப்பட்ட கால்களையுடையவராயும்	நிருநாரணன் தான் காலம்பெற சிந்தித்து உய்ம்மின்	ஸ்ரீமந்நாராயணனுடைய நிருவடிகளே விரைவாக நினைத்து உஜ்ஜீவியுங்கோள்.
சிதைய பானையர்	உடைந்த பிச்சைப் பாத்திரத்தையுடையவர்களாயும் ஆகி		

* * * உலகங்களெல்லாம் நாசமாக விற்றிருந்து வாழ்ந்தவர்களுங்கூட நாளடைவிலே தரித்ரர்களாய்த் தடுமாறும்படியைக் கட்டுரைக்கும் பாசுரமாகையாலே நித்ய ஸ்ரீமானான எம்பெருமானைப் பணிவதே பாங்கு என்கிறார்.

http://acharya.org

உலகங்களெல்லாவற்றிற்கும் ஒருவனே அரசனென்பது போல் ஸர்வேச்வன் என்ற பெயர் பெறும் மஹாசக்ரவர்த்தி ஒருவன்கூட இருக்கமுடியாது; வைசாக்ய பஞ்சகத்தில் அருளிச் செய்தபடியே பூமியில் ஒவ்வொரு மூலைக்கு ஒவ்வொருவன் அரசனாக அமையக் கூடும்: ஆனாலும் "இகலில் புகழாய் உலகம் மூன்றுடையாய்" என்று போற்றப்படுகின்ற எம்பெருமானுகளே தம்மைப் பாடித்திருக்கும் அவர்களுடைய அபிமானத்தை முன்னிட்டு "ஒரு நாயகமாய் ஓடவுலகுடனுண்டவர்" என்கிறார். உண்மையாகவே அப்படிச் சில அரசர்கள் இருந்தார்களென்றால் கொள்ளலாம். ஓட என்றது—காலம் நெடுகியோட என்றபடியாய் 'நெடுங்காலம் வரையில்' என்று பொருள்படும். இப்படி நெடுங்காலம் உலகை ஆண்டவர்களுக்கும் இழவு ஸம்பவிக்கும்படியை மேலிரண்டடிகளால் விளித்து மாக அருளிச் செய்கிறார் **கருநாய்கவர்ந்தகாலை** என்ற தொடங்கி.

கன்றுக வாழ்ந்தவர்களுக்கும் ஒரு காலத்திலே ஏழரை வக்ர சேருமே; * ஒரு காலுணவையொழியென்றுலொழியாத வயிற்றின் பசி ஆற்றவொண்ணுதே; 'நெடு நாள் மநிப்போடே ஜீவித்துக்கிடந்த நாம் பிச்சையெடுத்துப் பிழைப்பது முண்டோ? பட்டினிகிடப்போம்' என்று இடக்கழியாதே; வயிறு வளர்க்கையிலுண்டான கையா லே பிச்சையெடுக்கவே புறப்பட வேண்டிற்றுமே: முன்பு குறைவின்றியே ஜீவித்துப் போந்தவர்களாகையாலே பலருங்காண வெளியில் புறப்படமாட்டாமல் இருட்டு வேளை களிலே புறப்படுவர்கள்: இருளோடேயிருளாய்க் கறுத்த நாய்கள் தெருவிலேயிரைத்த இடக்கும்: பிச்சைக்கு இருளிலே செல்லுமித்த மஹாப்ரபுக்கள் அவைகிடப்பதறியாதே அவற்றின் வாலிலே காலை வைத்திடுவர்கள். அதனால் அவை வருந்திக் கடித்திடும்; உடனே அத்தப் பாதை பொறுக்கமாட்டாமல், கையிலிருந்த பிச்சைப் பாளையைக் கீழே கெடுத விடுவர்கள்; நாய் கடித்த வலியைப் பொறுக்கமாட்டாதே கதறவேண்டியிருக்கும், 'கதறினால் நம்மைப் பலரும் கண்டுபிடித்து எசுவர்களே' என்கிற கூச்சத்தினால் வாய் இறவாதிருக் கவும் பிச்சைப்பாளை கீழே விழுத்து உடைத்த வோசை கேட்டும் நாய் கத்தினை யொலி கேட்டும் ஓடிவந்து காலைத்தின்றனரென்னுமிதத்தாகும்; இங்ஙனம் பலரும் நிரண்டு கண்டு எளம்படியாக இப்பிறப்பிலேயே பிச்சைபுரும்படியான நீசமை சேர்த்து விடுகின்ற தென்பதை மூன்றடிகளாலே கூறி, இதனால் ஐச்வர்யம் அநர்த்தம் என்பதைக் காட்டி, சற்றடியினால் நித்யபுருஷார்த்தமான பகவத்ப்ராப்திலிலேயே ஊன்றிப் போரும்படி உபதேசித்தாராயிற்று.

கருநாய் என்பதற்கு—கருக்கொண்டிருந்த நாய் என்றும் பொருள் கூறுவர்; குட்டியிட்டநாய் என்றபடி. என்றும் குட்டியைக் காத்துக்கிடக்கிறதாகையாலே 'அதற்கு எதேனும் நீங்கு வருகிறதோ' என்று கண்டாரை யோடிக் கடிக்குமாம். 'வீரக் கழலிட்டகால்' என்று முன்பு கிருதாநிகிடந்தது; இப்போது 'நாய் கடித்தகால்' என்னும் படியாயிற்று.

சிலைக்கியபாளை— ஒருவர்க்கும் உபயோகப்படமாட்டாத பாத்திரத்தையுடை யவர் என்றுமாம். முன்பு பொற்கலத்திலே ஜீவித்தவனுக்கு இப்போது ஒரு புத்தோடு கிடையாதபடியாயிற்று. யாரேனும் ஒரு பிடிசோறு இட்டாலும் தன்கையே ஒரு மூலி யாலே கீழே கழுவிப்போம்படி சிதிலமான பாத்திரமேயாயிற்று கிடைப்பது.

http://acharya.org

பெருநாடுகாண—மூன்று சொல்கோல் செலுத்தாநிற்குமளவில் உபதாரம் கொண்டு காணவருமவர்கள் தாங்களும் தமதாகவும் உண்மை புகலும் பெருநடை. இடத்து பிறவர்கள்; அவர்கள் இப்போது வணிதராய் காணவாசிற்று. "மூன்று வெண்கொற்றக் குடையின் நிழலிலே வாழ்ந்தவருடைய இக்கதி வந்தே டது!" என்று சொல்லிக்கொண்டே காண்பதற்கு வந்து கூடுங்கூட்டம் மிகப் பெரிதாயிருக்குமென்று காட்டப்படுகிறது **பெருநாடுகாண** என்பதனால்.

'மதுரைப்புவரையிருந்தது ஒரு பிறவியிலே, பிச்சைபுக்குத் திரிபவனுக்கு ஆளாய் பிற பிறவியிலே' என்று நியாயமைக்காக **இம்மையிலே** என்றார். **பிச்சை**—பண்டு பலபல ராஜாக்களுக்கு சாமந்தர்களின் வழங்கின கையாலே ஒரு களமும் வாங்கவறியது. **தாம் கொள்வர்**—மூன்று ராஜாக்கள் பலர் கொல்லுவரும் உபதாரங்களைத் தங்கள் கையாலே கோரக வாங்காமல் ஆளிடுவர்கள்; அன்னவர்கள் இப்போது வேல்விழுந்து பிச்சை பிடுங்குகிறபடி. **ஆதலால்** * இடர்கெடுத்த திருவாளனிடையடியே யடைவது கடன்.

மற்பெருதாளுர் **நீநாராயணன்தான் காலம்பார்த்** சித்திரபுத்திரனே என்கிற விதியை கோக்காக இத்திருவாய்மொழியைத் திருநாராயணபுரத்துத் திருநாராயணப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்ததாக ஸம்ப்ரதாயவல்லவ பெரியோர் பலர். .... (1)

உய்ம்மின்திறைகொணர்ந்து என்னுலகாண்டவர் * இம்மையே
தம்மின்கவைமடவாரைப் பிறர்கொள்ளத்தாம்விட்டு *
வெம்மினெளிவெயில் காலைப்போய்க்கூகைதின்பர்கள் *
செம்மின்முடித்திருமாலே விளைத்துச்சேர்ந்தே.

2

திறை கொணர்ந்து	செலுத்தவேண்டிய கப்பற் பொருள் கொணர்ந்து கட்டி	பிறர் கொள்ள	ஆளவர் கவர்ந்துகொள்ளும்படி
உய்ம்மின் என்று	பிழைத்துப்போங்கள் என்று கட்டளையிட்டுக்கொண்டு	விட்டு	கையிழந்து
உலகு	இவ்வுலகத்தை	வெம்மின் ஒளி வெயில்	கொடுதாய் மின்னொளி பரக்கிற்ற வெயிலையுடைய
ஆண்டவர் தாம்	அரசபரிந்த பிரபுக்கள் தாம்	காலைம் போய்	காட்டிலே சென்று
இம்மையே	இப்பிறப்பிலேயே	கூகை தின்பர்கள்	நின்றுவெர்கள்; (ஆதலால்)
தம்	தங்களுடைய	செம்மின் முடி	செல்லிய காந்திபெற்ற திருமுடியையுடைய
இன் கலை மடவாரை	பசுபோன்மையுள்ளாரை ஸ்திரீகளை	திருமால்	நிருமகள் கொழுனனே
		விளைத்து	விரைவாக
		சேர்ந்தே	அடையுங்கோள்.

1 மதுரைப்புவரையிருந்து பெருங்கலம் தாங்கள் ஆண்ட ராஜ்யங்களை விழப்பட்டார் என்றது இப்பாட்டில்; அரசனுடைதாலில் போக்யைகளாகக் கைக்கொண்ட மடவார்களையும் பணைவர்களும் பறிகொடுத்துப் பரிதாபப்படுவர்களென்கிறபடி.

உய்ம்மின் திறைகொணர்ந்து என்ற உலகாண்டவர்—எதிரிகளின் ராஜ்யங்களைத் தாங்கள் அபிரமிக்க இனைத்தால் யாவை குறைபடை திரட்டிக் கொண்டு சென்ற

http://acharya.org

பொருது பரிச்சமப்பட்டு ஆக்மித்துக்கொள்ளுகையன்றிக்கே ஒரு கட்டளை மாத்திரத்தாலே ஸ்ருதகர்ம்யர்களாக ஆக்கிவிடுவர்களாம்; அதாவது—'உயிர் தப்பிப்பிழைக்கவேண்டி விருந்தினர்களாகில் கம்பங்களில் கட்டாந் தொழுத்தி வாழ்ந்துபோங்கள்' என்ற ஒரு கட்டளை தெரிவித்தமாத்திரத்திலேயே பணைவர்கள் பணிந்து நிற்பர்களாயிற்று: இவ்வளவு பெரு மிடுக்காக உலகத்தை ஆண்ட ஸார்வபௌமர்கள் என்றபடி. தீறை என்ற சப்தத்திற்குப் பெயர்.

இங்ஙனே வாழ்ந்த முதுசாம்புகள் மரபழிதலஞ்சலிலேபற்றி எளியவனை மேல் இரண்டடிகளால் அருளிச்செய்கிறார். தாம் ஆசாரத்திறிற்ற சமயில் பல நினை களிலிருந்தும் சிறந்தமாதர்கணேத் தேட்டிக்கொணர்ந்து சேர்த்து வைப்பதுண்டே; அவர் கணவெல்லாம் பகைவர் வந்துபுகுந்து கைக்கொள்ளும் படியாகும். இங்ஙனே கட்டு ரைசெய்கிறான்மின்;—"இது மகபுரமழித்த வம்பு கண்டதிறே; பாண்டவர்களுடைய ராஜலக்ஷ்மியும் சொருக்கு மெல்லாம்விட்டக்கால் மதல்லிலே பரிபூரணபாலகதேவி யிறே இதில்ப்ராசனார்" என்பதாம். "வம்பு மகவும்நன்னெஞ் சூழ்போகி வஞ்சனெஞ்சு, கள்ளிமலிர்தயமைக் கவர்ந்த கடல்வண்ணம்" என்ற பாசுரத்தினால் ஸகலசாஸ்திரமுடைய இறை அறியத்தக்கது. பாண்டவர்களிடம் பரிவும் ஏகாந்தமாயிற்றாம்.

"கண்டார்வணங்கக் கலியாயிமிதே கூற்றுயுலகுக்கொரு காவலராய், பின் போய் பெருவெண்குடை நீழலின்றி விரிதோலுடையும் விரும்புவரே" என்றபடியே வெண்கொற்றங்குடை நிழலிலே தெளிந்த வாழ்க்கையிலே அந்த நினைவும் பிறந்து கையில் வாழுப்பொருளே மதுஸ்ய ஸந்தர்சனத்தாலே முதலாக்கள்களிலே சென்ற தடாத வர்களெல்லாரது மூன்றாம்படி. "பொருந்தா வகைகேடில் பிறபோல் பலபாய மெல்லாமுகள் ஞாலமோரு, விருந்பாத வான் விரும்பி வெய்ய முயிர்செகுப்ப வெகுண்டுகொண்டு" என்ற பெரு மான் திருவாழியிலுள்ளும் "மின்னுருவில் வெள்ளரவம் நிலாவு வெண்பட்டுக் கல்லாக்கு நிலமடந்தை காவலனும், சென்னிமிசை யிருந்தும் பேரா திருக்குமவர் கொல்லிலும் வெல்கையரால்" என்ற பெரிய திருமொழியிலும் காட்டிலும் கொடுமை அறியத் தக்கது.

களைப்போக்குமதின்பக்கல்—காலேறு வோடிறுதி அக்குத் தொடர்ந்து கலியர் பகைவருடைய ஓட்கல் வந்தே ரூபலச்சாரமாகக் காட்டிலும் கொடிய தாயாதி யல்லரே.

நுமதின்பக்கல்—தம்மைப்பகைவர்களென்றபடி. ஆக மூன்றாமடிகளாலும் செல்வக்கிடப்பிலே சிக்கேட்டை நிறுத்தி நாற்படையால் வாழ்ச்சிக்குமுபாயமுபாயத்தை உணர்த்தருளுகிறார்; "மூடிச்சோதியராய் உலகு முச்சோதி மலர்ந்ததுவோ" என்ற பேசலாம்படியாய் • கதிரார்சிலையில் கலந்தெரிந்தாரொத்த சீன்முறுவலனை மம்பெருமான் கோலதாமதமின்றி அழகுபெறுகிறார்களென்கிறார்.

இக்கே இம்மையையே வழியெடுத்த நம்பி பூர்வாசார்யர்கள் காண்மின்;—"தம்மை ஆச்ரயித்தார்க்குக் கொடுக்கைக்குத் தம்மையன்றி முடியாண்டு; கொடுப்பிக்கைக்கு அழுகே

http://acharya.org

விருப்பாகுமுண்டு; விரையாமையாதுள்ள இழவேயுள்ளது: அவன் முடியைத்தரிலும் கிங்கள் திருவடியைச் சேருங்கோள்; கிங்கள் உங்களடிவிடாதே கொள்ளுங்கோள்." (2)

அடிசேர்முடியினராய் அரசர்கள்தாம்தொழ *
இடிசேர்முரசங்கள் முற்றத்தியம்பவிருந்தவர் *
பொடிசேர்துகளாய்ப்போவர்கள் ஆதலின்தொக்கென *
கடிசேர்துழாய்முடிக் கண்ணன்கழல்கள்நினைமினே. (3)

அடி சேர் முடியினர் ஆகி	தமது காலிலேபடித்த கிரீடத்தையுடையவராகி
அரசர்கள் தாம்	மஹாராஜாக்கள்
தொழ	வணங்கும்படியாகவும்
இடி சேர் முரசங்கள்	இடியோடு ஒத்த பேரிகைகள்
முற்றத்து	தம் தம் மாளிகைமுற்றத்திலே
இயம்ப	முழங்கும்படியாகவும்
இருந்தவர்	வாழ்ந்தவர்கள்
பொடி சேர் துகள் ஆய் போவர்கள்	பொடியோடு பொடியாய்த் தொலைந்து போவர்கள்;
ஆதலின் சொக்கென	ஆதலால் விரைவாக
கடி சேர் துழாய் முடி	நறுமணம்மிக்க திருத்துழாய் மாலையணிந்த திருமுடியையுடைய
கண்ணன்	கண்ணபிரானுடைய
கழல்கள்	திருவடிகளை
நினைமின்	சிந்தியுங்கள்.

* * * மற்றுள்ள அரசர்கள் தங்களை யடிபணிந்து நிற்க அவர்களை மதியாதே வாழ்ந்தவர்கள் அந்தச் செல்வக்கிடப்பை யிழந்து ஒருவரும் மதியாதபடி யாயிற்றே.

"அரசர்கள்தாம் தொழ" என்குமிடத்து 'தாம்' என்ற முதல் வேற்றுமைச் சொல்லுருபு என்று தமிழர்கள் சொல்லிப் போருவர்கள்; கம் ஆசாரியர்கள் அதற்கும் ஒரு கருத்து அருளிச்செய்வர்கள்; இங்கு கடுகாண்மின்;—"[தாம் தொழ] தாங்களறிந்த தாகத் தொழுமித்தனை போக்கி இவனிப்படி தொழுதான் என்னும் ப்ரமபத்தி அவனுக் கில்லை: 'இன்ன ஸ்ரீபாதத்திலே தலைசாய்த்தே னென்னும் இவர்கள் தாம் நினைத்திருக்குமித்தனை."—தொழப்படுகிறவரசர்கள் மகாபலம் பண்ணிருக்க, தொழுமவர்கள் தாங்கள் எத்தை பெறுவரோ நினைத்துத் தொழுகிற மாத்திரமேயுள்ளது என்ற கருட்டாடபடி.

இங்கனே பல அரசர்கள் தொழுகொண்டேயும் அவர்களை அநாதரித்து ஆடல் பாடல் கண்டு போதுபோக்கிக் கிடக்கும்படியைக் கூறுவது இரண்டாமடி. இடிமிடித் தாற்போலே ஒலிக்கின்ற பேரிகைகள் தமது மாளிகை முற்றத்திலே சப்திக்க, அதிலே செவியறித்து அப்படியாயிற் சொருகிக்கிடந்தவர்கள் என்றபடி.

பொடிசேர்துகளாய்ப் போவர்கள்—தம் காலிலே குனிந்தவர்களே மதியாய் பண்ணிருக்கும்படியான மதிப்பை யுடையராயிருந்தவர்கள், தம் தலையிலே ஒருவன் அடியிட்டானே 'நாம் இவன் தலையிலே அடியிட்டோம்' என்று நினைக்கவேண்டாதபடி, அப்ப

http://acharya.org

மான துகளாய்ப் போவர்கள் என்றபடி. அதனால் * கர்முடிமேல்புனைந்த தண்டெழுழை முடையபரமனது திருவடிகளே விரைவாக விரும்புங்கள் என்கிறார்.

முதல்—முதல் என்ற வடசொல் விகாரம். ... ... (3)

தினைப்பான்புகிற்கடலேக்கலில் துயிலைவீற்றிரார் *
பனைத்தோருகங்களும் இவ்வுலகமுண்டு உமிழ்ந்தவர் *
மனைப்பலர்தருங்கரு மாய்தலல்லால்மற்றுக்கண்டிலம் *
பனித்தாள்தாமரை பற்றி வெம் பாதகம் பாயுமே. (4)

தினைப்பான் புகில்	ஆலோசித்துப் பார்க்குமிடத்து
பனைத்தோர் உகங்களும்	
இவ்வுலகு உண்டு உமிழ்ந்தவர்	இவ்வுலகத்தையாண்டு முடித்து போலவைக்கள்
கடல் சுக்கலில் துயில் மணிவில் பலர்	கடலில் சுக்கலிட்ட கொப் மணிசித்தாட்டுதும் அரிசமான தொகையுள்ளவர்களாவர்
(எப்படிப்பட்ட பிரபுக்களும்)	
மனைப்பலர் தருங்கரு	தாங்களிருந்த வீட்டில் இடம் உற்றப்பக்கங்களோடுக்கூடத் தொலையுப்பட

மாய்தல் கல்லால்	அழிந்து போவது தவிர
மற்று கண்டிலம்	வேறொன்றும் பார்த்தோமில்லை (ஆதலால்)
பனி தாள்	பனைமரம்போன்ற அடிகளையுடைய
பை வினை	(குலையாபீடமென்றும்) மதாபிமானை
அட்டகம்	கொன்றொழித்த கண்ணபிரானுடைய
பாதம்	திருவடிகளே
பணிமின்	வணங்குங்கள்.

* * * எதிர்ப்பு கெடுவதற்காகவாவது ஒருவர் பிறகில்லாதவிடத்திலே எப்பேர்ப்பட்ட திருவடிகளை வணங்கவேண்டுமென்கிறார். ஏதேதான் இல்லையைவாவது கழித்துபோனவர்களான ப்ரபுக்கள் பத்தியேபோல் இருப்பார்களென்று நினைக்கத் தொடங்குமே, கடலில் சுக்கலிடுகிற நுண்மையை எண்ணி முடித்தாலும் முடிக்கலாம்; அவர்களை எண்ணி முடிக்கப்போகாது என்றபடி.

மனைப்பால் மருவுகரு மாய்தலல்லால் மற்றுக்கண்டிலம்—மேற்சொல்லப்பட்ட வர்கள் முடியாமனவில் தாங்கள் இருந்த பகுதிகளும் ஆவி சுற்றுப்பக்கங்களுக்குள் வரை தெரியாதபடி அழிந்துபோவதை தவிர, வேறுமிருந்திருப்பது ஒன்றையாகக் கண்டிலோம் என்றபடி. பெருமழை விழும்போது அருநூறிற்றூர் மாங்களையும் அழிக்குமாபோலே அக்கப்பக்கத்திலுள்ளவர்களையும் அடியறுத்துக்கொண்டு போகின்றமையைச் சொல்லுபடி. ஆதலால், குலையாபீடமதமானைகளைக் கொன்றொழித்த பெருமானுடைய திருவடிகளைப் பணியுங்கள் என்கிறார்.

பனைபோன்ற கால்களையுடைய யானை என்றதனால் அதன் அதிபலவான்தன்மை தெரிவிக்கப்பட்டதாம். ... ... (4)

பணிமின்திருவருளென்னும் அஞ்சீர்ப்பைம்பூம்பள்ளி *
அணிமென்குழலார் இன்பக்கலவியழுந்துவர் *
துணிமுன்புநாலைப் பல்லேழையர்தாமிழிப்பச்சேல்வர் *
மணிமின்னுமேனி நம்மாயனல்லேல்வாழ்வினே. (5)

http://acharya.org

அம் பீதம் பை பூ பன்னி	'அழகும் குளிர்ச்சியும் விசாலமும் முன்ன நும்பிலைபோலே
நிரு அருள் பணிமின் என்னும்	(மாதர்கள்:) திருவை பண்ணையேறும்' என்ற பிரபத்திபண்ணினார்கள்
அணி மென் குழலார் இன்பம் கலவி அருத உண்டார்	அழகிய மெல்லிய கூந்தலை யுடைய மாதர்களின் நித்ய பக்கலிலுமுதத்தை அனுபவித்தவர்களானவர்கள்
தணி முன்பு கால	அளத்தணி (மிக் பக்கத்திற்கு எட்டம் போராமல்) முன்புதத் நிற்காத்திசம் தொடும்படி யான வழுவலையடைத்து
பல் மலையர் தாம் இறிப்ப	பல மாதர்கள் இழிவாகக் கூறி பேசும்படி
செல்வர்	(பிச்சையெடுக்கப் போவார்கள்;) (ஆதலால்)
மணி மின்னு மேனி	நீலமணிபோல் மின்னுகின்ற திருமேனியையுடைய
கம் மாயவன்	எம்பெருமானுடைய
பேர்	திருநாமங்களை
சொல்லி	வாயிரத்தினம் பண்ணி
வாழ்மின்	வாழுங்கள்.

* * * நிற்நிலம்பற்றின் தூகர்ச்சியும் அன்றாகாதலால் எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லி வாழுங்களென்கிறர். இப்பாட்டின் முன்னடியை அன்வயிப்ப தில் நிர்வாஹ பேதமுண்டு; அப்போதப்படைப்பூப் பள்ளியிலே திருவருள் பணிமின் என்று அன்புடன் வேண்டுகின்றவர்களான அணிமென்குழலாருடைய இன்பக்கலவி யழுதத்தை யுண்டவர்கள்—என்பது பூருவர்களின் நிச்சயதரம். இப்போது **'பணிமின் திருவரு ளென்னும்'** என்பது அணிமென் குழலாருக்கு விசேஷணமாயிற்று. "பணிமின் திருவருள்" என்பதற்கு—திருவை பண்ணையேறும் என்று பொருள். இங்ஙனே ஸ்த்ரீகள் சொச்சித்திருப்படியாக இருக்க இவ்புருஷர்கள் என்றதாயிற்று.

"பணிமின் திருவருள்" என்று சொல்லுகிற வார்த்தை ஸ்த்ரீகளினுடையது என்று நிச்சயிப்பதிற்காட்டிலும் அநுபோக்தாக்களான புமான்களுடையது என்றே நிச்சயிப்பது அழகியது என்று திருவுள்ளம்பற்றிய பட்டர் "பணிமின் திருவருளென்னும்" என்பதை "இன்பக்கலவி யழுதுண்டார்க்கு விசேஷணமாகவி யுரைப்பராம். இதே "அடிசேர்முடிவினராகி அரசர்கள்தாந்தொழ" என்ற மதுராகாரர்களால் தொழுகிறைஞ் சப்படுமவரீகள் கூறப்பட்டவர்களுக்கு ஸ்த்ரீகளாம்* பணிமின் திருவருளென்னப் பெறுகை ஓர் ஏற்றமல்லாமையாலே, ஸ்த்ரீகளிடத்திலே இவர்கள் 'பணிமின் திருவருள்' என்ற விபரீதோக்தப் பேரிருத்தபடியாகக் கொள்வது என்று என்று பட்டர் திருவுள் ளம்போலும். அன்வயசாஸ்திரத்தின் எளிய சக்தியர்த்தித்வத்தைக் காட்டியவாறு.

"பணிமின் திருவருள்" என்ற கை கூப்பிக்கொண்டு விண்ணப்பஞ் செய்பவர்க ளும் அந்நிலம் பைம்பூம்பள்ளி அணிமென்குழலார் நிர்பக்கலவி யழுதுண்டவர்களுமான அரசர்கள்—என்று பொருள் கண்க. "பல்கைமீர்! திருவை பண்ணியருளவேணும், கல்கை மீர்! அருள் செய்யவேணும்" என்ற பல் பல்லிரண்டையும் காட்டிக்கொண்டு விஜ்ஞபோ கங்களே பரபவித்தவர்கள். **தணிமுன்பு நாலவும் பல்லேழையர்தாமிறிப்பவும் செல்வர்**—; (அதாவது) நாம் அணுபவித்த மாதர்களே வேறுவிலர் கைப்பற்றிக் கிடப்பர்கள்; இவர்கள் தங்களுடைய தேதநயாத்திரைக்கான அரசர்களிடத்தே போய் யாசிக்கப் புகுவர்கள்: கழுமலக் கொடியையும் உடன் சேர்ந்த அரையில் துவி எட்டம் போராதே கிடக்கும்; முன்பக்கத்திலே மாத்திசம் குறையத்திற்று ஆவணமாகல் நிறை தணி தொக்கா நிற்கும்:

http://acharya.org

இந்த எளிவரவைக்கண்டு அவர்கள் அப்போது தம்மை அபிமானித்திருக்குமவர்களுடைய முகமலர்த்திக்காக ஏதேனும் செய்வர்கள்; அனைத்தும் பாம பேக்யமாகக்கொண்டு அவ் விடத்தே நடந்துசெல்வர்களாம்.

"ஜீர்யந்தி ஜீர்யத: கேச: தந்தா ஜீர்யந்தி ஜீர்யத:, சக்ஷுஸ்ச்ரோத்ரே ச ஜீர்யேதே த்ருஷ்ணைகா நிருபத்ரவா." என்ற ச்லோகம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. தலை நரைத்தாலும் பற்கள் விழுந்தொழிந்தாலும், கண் இருண்டிப்போனாலும்; காது செவிடாகி யொழிந்தாலும் சப்பாணி யொண்முதாதிரம் குறையொன்றும் மின்றி வளர்ந்து செல்லும்—என்பது இந்த ச்லோகத்தின் கருத்து.

ஆக இவ்வளவாலும் தேறவாகச் சொல்லப்பட்ட விஷயபோகங்களிலே கரை யற்று, விலக்ஷண நிர்யாமகனை விச்நுவாய் படைத்த பெருமானுடைய நிருபாயத்வத்தைச் சொல்லி அதுவே போதுபோக்காக உஜ்ஜீவிக்கலாமென்கிறார் கற்றடியால் .... (5)

வாழ்ந்தார்கள்வாழ்ந்தது மாமழைமொக்குளின்மாய்ந்துமாய்ந்து *
ஆழ்ந்தாரென்றல்லால் அன்றுமுதலின்றுறுதியா *
வாழ்ந்துங்கள் வாழ்ந்தேநீர்போய் என்பதில்லே நிற்குரில் *
ஆழ்ந்தார்கடற்பள்ளி அண்ணலடியாரன்றே. (6)

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது — கண்முக வாழ்ந்தவர்களென்ற மேல்கோப்பிலிருப்பவர்கள் வாழ்ந்த வாழ்வைப் பேசுகிறதாம்.

மா மழை மொக்குளின் — பெருமழையில் தோற்றம் நீர்க் குமிழிபோலே

மாய்ந்து மாய்ந்து — அழிந்தழிந்து

ஆழ்ந்தார் என்ற அல்லால் — கதோகதிமபாடைத்தனர் என்ற சொல்லப்படுவது தவிர

அன்றுமுதல் — ப்ரஹ்மருத்ரர் முதலாம் தொடங்கி

இன்று அறுதி ஆ வாழ்ந்தார்கள் வாழ்தே நித்யர் என்பது இல்லை — இன்ற வரையில் வாழ்ந்தவர்கள் ஒரு நன்மை யாக வாழ்ந்திருந்தம் இடையாது

நிற்குரில் — நிலையின்ற வாழ்வையுடைய வேண்டில்,

ஆழ்ந்த ஆர் கடல் பள்ளி — ஆழமாகி யெனைத்த திருப்பாற் கடலில் துயில்கின்ற

அண்ணல் அடியார் ஆகின் — ஸ்வாமிக்கு அடிமைப்பட்டிருக்கின்

* * * உலகில் வைதிகர்களுக்கு ஒரு வழக்குமுண்டு; அதாவது — நாம் சிறிதளை செய்தவிட்டவர்களின் நூற்றுக்கணக்கானவர்கள் மாண்டுபோயிருந்தாலும், நெய்ய வசமாக மனிதர்களைப் பிழைத்தவர்களிருந்தால் அவர்களுமாத்திரம் மிகவிட்டு எண்ணிக்காட்டி 'அவன் பிழைத்தான், இவன் பிழைத்தான்' என்று சொல்வதுண்டு; அது போலவே, இவ்வுலகில் கற்றுக தெடுல வாழ்ந்தவர்களும் பலர் இருக்க அவர்களைவிட்டு, மூழ்ந்தவர்களை எடுத்துரைப்பதென்? மீதமும் ஜீவித்தவர்களும் இல்லையோ? என்ன; அதற்கு விடை கூறுகின்றபடியில்—ஒருமுடிகாலத்தோடுமே இன்றளவும் செல்லும் சுருங்கியே ஜீவித்தார் ஒருவரையும் கண்டிலோமென்கிறது.

வாழ்ந்தவர்களாக உள்ளார்கள் நினைக்கப்படுகிறவர்கள் வாழ்ந்த அழகு தெரியாதோர்? அவர்கள் வாழ்ந்ததும் மழைப்பெருக்கில் நுண்டானும் சீக்குமிழிபோலே கலந்து கிடந்து, ஜீவித்தார்கள் பண்டைபாபத்தாலே அதோகதியிலே விழுந்து ஒழிந்துபோனவர்

http://acharya.org

தனியொழிய, ப்ரஜாபதிமுதலிட்ட காலம்முதல் இன்றளவும் தன்னை ஆராய்ந்து பார்த்துக்கொள்ளவார்; வாழ்ந்தவர்கள் ஒருபடியாக வாழ்ந்தே போனார்கள் என்பது இடையாது; வாழ்வும் கேடும் கலந்த காட்டியாயிருக்குமே யல்லது ஒரே வாழ்வு என்பது எங்கும் காணக் கிடைக்காது; அவ்வகையில்லாத மேலான வாழ்ச்சியை விரும்பியிருந்தீர்களாகில், கரிணாகரசயனனான பெருமானுக்கு அடியவரென்ற பேர்பெற்ற வாழ்ப்பாருக்கோன் என்றாயிற்று.

மாமழைமோக்குளில்—"படியைழைமோக்குளிற் பல்காலும் தோன்றி" என்ற நாலடியார் (27) செய்யுளைக் காண்க. **ஆழ்ந்தார்**—தலைப்பட்டார்கள் என்றபடி. மண்ணோடு மண்ணைப் போய்விட்டார்களென்பது கருத்து. நிற்க + உறில் — நிற்குறில்; தொகுத்தல்.

ஆழ்ந்தார் கடற்பள்ளி யமண்ணுக்கு அடியவராகுங்கோள் என்றதன் கருத்து யாதெனில்; எம்பெருமான் * தன் தாளும் தோளும் முடிகளும் சாளிளாத பலபரப்பித் திருப்பாற்கடலிலே திருக்கண் வளர்ந்தருள்வதாவது "குறைவில் தடங்கடல் கோளரி வேறித் தன்கோலச் செந்தாமரைக்கண் உறைபவன்போலவோர் **யோகுபுணர்த்த**" என்கிறபடியே சேதநர்கள் வழிபட்டாரவதற்கு என்ன உபாயம் செய்யலாமென்ற உபாய சிந்தையோடேயாதலால் அவன் கிடைவு பலித்ததாம்படி செய்யப்பாருங்கோளென்கை. (6)

ஆமின்சுவையவை ஆரேடடிசிலுண்டார்ந்தபின் *
தாமென்மொழிமடவாரிருக்கப் பின்னும்தற்றுவார் *
சமினெமக்கொருதுற்றென்ற இடரிவராதலின் *
கோமின்தொழாய்முடி ஆதியங்கோநீருணங்களே. (7)

ஆம் இன்சுவை அவை அடிசில் ஆரேடி	பசுபோல்வனைய் கட்டி வேபெதுமான அன்னத்தை
உண்டி ஆர்ந்தபின் தா மெல் மொழி மடவார் இருக்க	வயிறாயுண்டு நீர்த்தபின்பும் வெகு அழகாகப்போலவ்வையார் கள் வேண்டிக்கொள்ள (அந்த வேண்டுகோளை மீறமுடியாமல்)
பின்னும் தற்றவார் (அப்படி யிருப்பதற்கான செல்வம் அழித்தவளவிலே)	மேலும் நின்றுகொண்டிருந்தவர்கள்
எமக்கு ஒரு தற்ற சமின் என்ற	'எமக்கு ஒரு வகை கொடுக்கள்' என்று சொல்லிக்கொண்டு
இடரவர் ஆதலின்	தமோதிச் செல்வர்கள்; ஆதலால்,
தழாய் முடி	நிருத்துழாயையணிந்த நீ ருடியையுடைய
ஆதி அம் சோதி குணர்ந் கோமின்	ஸ்ரீவேர்வாழுடைய நிருக்குணக்களே சேர்த்து அநுபவியுங்கள்.

* * * தேறத போலுரைத்திற்று நேரடியான அன்வயமும் முன்னிய போகமும் அதிகாரமாகையாலே வகைகாரணத்துதலுல ஸ்ரீவேள்வாழுடைய நிருக்குணக்களே அநுஸந்திக்கவேண்டுமென்கிறார். ஏட்டாளங்களோடுங்கூடப் 'பசுபோல்வனைய' அடிசில்' வயிறாயுண்டு நீர்த்தபின்பும் உடனே இனியமாதர் வந்து ப்ரியபாவனை தோற்ற, வேண்டும் உண்ணவேணுமென்ற நிர்ப்பந்திக்க, அவர்களுக்காகப் பின்னும் உண்பவர்களாய் இங்கனே வயிறு வாழ்ந்தவர்கள் தாங்களே பின்னியொருகாலத்தில் 'எனக்கு ஒருபிடி சோறு இடுவீர்களா?' என்று ஒரு வகைத்திற்கு மன்றுடும்படியாவர்கள்; ஆதலால்,

http://acharya.org

நிருத்துழாய் மாலையனை ஸர்வேசுவரனுடைய திருக்குணங்களே யநுபவித்து சித்த ஸுகியாயிருக்கப் பாருங்களென்றாளாயிற்று.

இப்பாசுரத்தின் கட்டு ஸ்ரீஸுக்திகள் மிக மிகரஸம் வாய்ந்தவை; அவை காண்மின்;—"முன்பு இரண்டு கண்டு நிர்ணயம் காதியாகி பெற்று ஜீவிக்கப் புக்கவாறே ஒரு வெள்ளாட்டியையும் வைப்பாகித்து 'ரதமியார்!' என்னவும் பண்ணி 'அடிதுணை கின்றுர்' என்னவும் பண்ணும்: கண்டதடையே இட்டு வயிற்றை நிரப்பி, உறங்குமிடத்து வாய்விட்டு அட்டைபோலே பெயரவும் நினையுமாட்டாதே கிடந்து புளாகிற்குமே; அவ்வளவிலே இவனுக்கு ஸ்நேஹியனாயிருப்பார் சில ஸ்த்ரீகள் வந்து 'உடம்பு பதர் போலே யிருந்தது! இதுகொண்டு எங்களே ரக்ஷகர்க்கையரிது வெங்கே கோக்கப்பார்க் கிறது?' என்பர்கள்: அதுகேட்டு 'கர்ம வண்டியேயோ!' என்ற இவன்தானும் ப்ரமிக்கும். ஒரு நிமிஷைத் தேட்டு 'இதுவென்? பிடி' என்பர்கள்; பின்னே புழுபோதொழியமாட்டாலே. அப்பேச்சின் இனிமையிலே துவக்குண்டு மீண்டும் புழுவாகிற்கும். இவர்களே [இந்த ஸ்த்ரீகளே] இக்கட்டமயிலே வேறே பொருளன் கைக் கொள்ளுமே; அவர்களையும் முன் புத்தி யிலிமைப்போலே இரக்க வாட்டா கிற்பர்களே யிவர்கள். அங்கே தன் வயிறு வாழுமன் சென்று 'செல்வமெல்லாமுமக்கொருப்படி தரவேணும்' என்னும். பண்டு கண்டது கண்டால் தன் வாயிலிடாதே இவர்களுக்காக்கப் போக்தவன் (இப்போது) தன் செல்வமையாலே வளர்ந்து எங்கிருன்றே. அப்போதை யலனுக்கு ப்ரியமாக அவர்கள் முகம் பார்ச்சுகிறே; மீண்டும் தட்டித் திரிவர்கள். ஆனேன்பு ஜ்ஞானத்தின் நிலையாமை இதுவாமென்பு ஸ்வரூபஜ்ஞான ஸாதகமான நிருத்துழாய்மாலையைத் திருமுடியிலே உடையனும் நுகத்தாலே பூதனும் நிலனிக நேரோராயிரமான விக்ரஹத்தை யுடையனுமிருக் துள்ளவனுடைய குணங்களைக் **கோமின்**—அநுபவியுங்கள்."

அருகலை— கைப்பு நிற்பிப்பு புளிப்பு உவர்ப்பு அவர்ப்பு காரப்பு என்பவை. அடிசில், அடிசில் எனை இரண்டு வகையாகவும் சொல்லப் படுமன்றே; உலை. **சமின் கோமின்**-முன்னிலைப்பன்மை வினைமுற்றுக்கள். 'கோமின்' என்பதில் **கோ**—வினைப்பகுதி. .... (7)

குணங்கொள்நிறைபுகழ்மன்னர் கொடைக்கடம்பூண்டுருந்து *
இணங்கியுலகுடனாக்கீறும் ஆக்கவினையில்லார் *
மணங்கொண்டபோகத்தாலன்னியரும் மிள்ளர்கள்ளில்லையே *
பணங்கொளரவினையான் தீருமாயப்படியே. (8)

குணம் கொள் நிறை புகழ் மன்னர் கொடை கடம் பூண் இருந்து — குணசாலிகளும் நிறைந்த கீர்த்தியை யுடையருமான சாஸ்த்ரமர்யாதைகளால் ஸுஸம்பாதனமான ஸ்வத்ரவ்யத்தைத் தமக்கு யதிட்டிக்கொண்டிருந்து

இணங்கி உலகுடன் ஆக்கிறும் — ஸ்வருசிப்படி உலகங்களே ஸ்வாதீனப்படுத்தி ஆண்டாலும்

ஆக்கு அவினை இல் வார் — அவ்விஷயத்தில் அந்த ஸம்பத்தையே நிரூபகமாக நினைத்திருக்கை யில்லாதவர்கள்

மணம் கொண்ட போகத்தால் — ஸ்த்ரீகளை போக்யங்களில்

அன்னியரும் மிள்ளர் கள்ளில்லையே — பொருந்தியிருக்கும் அபேக்ஷிதவஸ்துக்கள்; படைத்தளித்த ஆதிசேஷனே பரிக்ரஹமாகவுடைய ஸர்வேச்வரனது

பணம் கொள் அரவினையான் தீரும் ஆயப் படியே — திருவாய்மொழி படியுங்கள்; (படித்தால்) மீட்டெடுக்கவேறு பெருஞ் செல்வம் கிடைக்கும்.

http://acharya.org

* * * அரசாட்சி புரிவதான்ய போகமும் எம்பெருமானோடொன்றிக் கிடக்கை போட்டதென்றும், அக்கலை கைவிடின்ற அநுதாபமும் கிலேசிப்பதென்றுமாருளிச் செய்கிறார். அரசர்களில் மேன்மையை முன்னரையடியால் விரித்தருளின்றார். அமைய வேண்டிய குணங்களாலும் அமையப்பெற்றவர்களாயும், உலகெல்லாம் கொண்டாடும் படியான புகழையுடையவராயும், பார்பனையாகவே ப்புக்களின் புத்திரர்களாயும், வேண்டினார் வேண்டினபடியே பொருள்களைக் கொடுப்பதாகிற ஒளதார்யத்தைக் கடைப்பிடித்துக் கொண்டவர்களாயும், மேன்மைபராட்டி இராமப்புடனிராதே சிலவான்களாய் உலகத்தோடு பொருந்துமவர்களாயும் வாழ்வர்களெனினும் எம்பெருமானை ஆச்ரயிக்கப்பெறாதவர்கள் பிழ்ச்சொன்ன போகத்திலிருந்து சரித்தபோலர்; ஆதலால், சேஷசாயியான எம்பெருமானுடைய திருநாமங்களை யெல்லித்தாம் பண்ணுங்கள்; அப்படியானால் மீட்சியின்றியே நித்யரீயாக வாழலாம் என்றாயிற்று.

அவனேயில்லார் என்பதற்கு "அவனையன்றிப் பெறார்" என்று கலித்து பொருள் கொள்ளவுமாம். "அவன் ப்ரஸாதமில்லையாயின் அந்த ஸம்பத்தாலே இடையாது" என்று சடுமுதலிய வியாக்கியானங்களில் முன்னுணர்ந்து காண்பதால் இங்கனே பொருள் கொள்வது தகுதியென்று சில பெரியார் கருதுகின்றனர். "**அவனேயில்லார்**—அவனே அச்சயித்தலில் லாதவர்கள், மணக்கோலம் போகத்துமல்லாமலும் மீள்வர்கள்" என்றபடி பண்ணீராயிரப்படியோடு பொருந்தும். திருநாமம் சொல்லித்தலைநின்றவனை அவர்களைத் திருவயலக்தாழ் வானோர்போலே அத்தாலின் சேவையதின் எம்பெருமான் அங்கீகரித்தருள்வன் என்ற கருத்துப்பட "பணக்கோலரவினையான் திருநாமம்படியின்" என்றார். .... (8)

படமன்னுபல்கலன்பற்றோடரத்து ஐம்புலன்வென்ற *
குடமன்னுகாயம்செற்றுக்கழிந்தும் ஆங்கவனேயில்லார் *
நுடமன்னுநின்கவர்க்கமெய்தியும் மீள்வர்கள்மீளவில்லை *
கொடிமன்னுபுள்ளுடை அண்ணலைக்கழல்கள்தொழுமினே. (9)

படம் மன்னு பல் கலன் பற்றோடு அரத்து	பரிமளரூபமாக வருகின்ற பலவான ஆபரணங்களோடும்
ஐம்புலன் வென்ற	ஸ்ரோத்ராதிகளிட்டவர்களால் பஞ்சேந்திரியங்களையும்
குடம் மன்னு காயம் செற்றுக் கழிந்தும்	வசப்படுத்தினவர்களாய் அநாதிகாலமாக ஸித்தமான சரீரத்தை
ஆங்கு அவனே இல்லார்	அவ்விஷயத்தில் அந்த எம்பெருமானே ஆச்ரயித்த விலக்ஷணர்கள்
நுடம் மன்னும் நின் கவர்க்கம் எய்தியும் மீள்வர்கள்	வெகுகாலம் கிலேபெற்றி ருக்கும்படியான இனிமையான ஸுகத்தை அடைந்தும் திரும்புவர்கள்; (ஆதலால்)
கொடி மன்னு புள் உடை அண்ணல் கழல்கள் தொழுமின்	கருடத்வஜனான ஸ்வாமியினுடைய திருவடிகளை ஸேவியுங்கள்; (அப்படியானால்)
மீள்வு இல்லை	என்றும் மீட்சியில்லாத பெருஞ் செல்வமுண்டாகும்.

http://acharya.org

* * * மேற்பாசுரங்களில் இவ்வுலகவாழ்க்கைகளில் நேயத்வத்தை அருளிச்செய்தவர்தாம். இனி இரண்டு பாசுரங்களில், ஸ்வர்க்கலோக போகத்திலுடையவும், கைவல்யபோகத்திலுடையவும் நேயத்வத்தையருளிச்செய்வாராய், இப்பாட்டில் ஸ்வர்க்க போகமும் வேண்டாவென்கிறார். ஸ்வர்க்கம் பெறுதற்காகக் கடுந்தவம்புரிவதுண்டு; அத் தவம்புரிவுக்கான நிலைமையை ஒன்றரையடியாலருளிச்செய்கிறார். படிமன்று பல்கலன் பற்றோடணிப்பதாவது—குல பரம்பரையாகத் தங்களுக்குக் கிடைத்த ஆபரணம் முதலிய சிறப்புக்களே அடியோடு துறப்பதாம். ஸ்வர்க்கலோகத்தில் அளவிறந்த போகங்களே அனுபவிக்கப்பெறவேணுமென்னும் கருத்தால் இவ்வுலகபோகங்களே வெறுக்கிறபடி, "மன்னரடவஞ்ஞை உயிர்காவலிட்டு உடலிற் பிரியாப்புலனைத்தும் கொத்து நான் வாட வாடத் தவஞ்செய்ய" என்றும், "காயோடு நீடுகனியுண்டு வீசுகடுங்கால் துகர்த்து நெடுங் காலம் ஐந்துழுதுண்டு தவஞ்செய்ய" என்றும், "வீழ்கனியு மூழிலையும் என்னுமிவையே துகர்த்துடலம் தாம்வருந்தித் துன்னுமிலக்குமம்பைத் துஞ்சியும், வெஞ்சுடரோன் மன்னு மழல்நுகர்ந்தும் வெண்தடத்நிறுட்டிடந்தும்" என்றும், "காயிலைதின்றுங் காலிறைத் துக்கநிதேடித் தியிடைநின்றும் பூவலம் வந்தும்" என்றுஞ் சொல்லுகிறபடியேயிருந்த கடுந்தவம் புரிகின்றவர்கள் படிமன்றுபல்கலன் பற்றோடணித்தவர்களாயும் ஐம்புலன் வென்றவர்களாயும் செடிமன்றுகாயஞ் செற்றுச்சாராமிருப்பர்களாயிற்று.

செடிமன்று காயம் செற்றுக்கள்—உடம்பிலே தாமமண்டும்படியிருப்பவர்கள் என்றபடி. தவத்திற்காக நெடுங்காலம் ஒவ்வொரு ஆஸனத்திலிருந்தால் சலியாமையாலே உடம்பிலே தாமமண்டிவிடும். இக்கே "நெடியார் சுழற்கற்றை முன்னின்று பின் தாழ்க்க, அரியாசனங்கிரி யென்றெண்ணிப்—பிரியாது, பூங்கொடிகள் வைகும் பொரு புலர் குன்றென்னும், வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு" என்ற பூதத்தாழ்வார் பாசுரம் நினைக்கத்தகும். (இதன் கருத்தாவது—) நிருமலியேதும் வழியில் பலர் வீற்றி ருக்க எம்பெருமானே சேவித்தவம்புரிகின்றனர்: அப்போது, மூச்சுவிடுதல், உடம்பு அசைத்தல் முதலியன ஒன்றுஞ்செய்யாதே வால்மீகி முதலிய மஹர்ஷிகளைப்போலே விருந் தாதனால் அவர்களது கூந்தற்கற்றை முன்னின்று பின்தாழ்ந்திருக்கவே, பூங்கொடிகளா னவை அத்தக்கூந்தலின்மேலே படர்ந்திருந்தனவாம். பண்டு வான்மீகிமுனிவர்மீது புற்று மூடினாப்போலே இந்த பக்தர்களின்மீதும் பூங்கொடிகள் படர்ந்திருப்பது அற்புதமான வொரு காட்சியாக அமைந்தது—என்பதாம்.

இவ்வண்ணமாகக் கடுந்தவர் புரிந்தவர்கள் பகவத்ப்ராப்தியையே உத்தேச்ய மாகக்கொண்டு தவர்புரிந்தவர்களாயின் அன்றே; இவ்விடமெல் ஸ்வர்க்கம் சென்றிருந்து "கூனே புண்யே மர்த்யலோகம் விசந்தி" என்கிறபடியே புண்யம் கழித்தவுடனே இழே தள்ளப்பட்டு விழுந்தொழிவர்கள். "பின்னோயிந்நிலைக்கென்னும் புணர்க்கொடுக்கிலும் போகவொட்டாரே" என்னும்படி நீண்டில்லாத மஹா புருஷார்த்தத் தைப் பெறவேண்டியிருந்திருக்களாயின் கருனைக்கொடி யொன்றையே பெருமானது திருவடிகளைப் பணிவது என்று என்றாராயிற்று.

http://acharya.org

குறுகுகிகவுணர்வுத்தொடுநோக்கி எல்லாம்விட்ட *
இறுகலிறப்பென்னும்ஞாலிக்கும் அப்பயனில்லையேல் *
சிறுகநினைவதோர்பாசமுண்டாம் பின்னும்விடில்லை *
மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில்விடிஃதே. (10)

குறுக — பட்டிமேய்தபடி மனத்தைச் சுருக்கி
உணர்வுத் தொடு — ஞானக்வடிவனான ஆத்மாவோடு
மிகநோக்கி — சன்முகச் சேர்த்து (ஆத்மஸ மூத்காரத்தைப்பண்ணி)
எல்லாம் விட்ட — (ஐச்வர்யம், பகவதநுபவம் முதலிய) எல்லாவற்றையும் வெறுத்தவனும்
இறுகல் இறப்பு என்னும் ஞாலிக்கும் — மோக்ஷமாகிய மை வல்யமோக்ஷத்தில் விருப்பங்கொண்டவனான ஞானயோகி கிட்டுவதற்கும்

அப்பயன் இல்லை எல் — அந்த பகவதநுபவமும் இல்லையாகில்,
இதற்கு — அதற்காக
நினைவது — நினைப்பதற்குறுப்பான
பாசம் உண்டாம் — ஒரு பந்தம் உண்டாகும்;
பின்னும் விடில் இல்லை — அதற்குமேலே அத்தக் கைவல்ய மோக்ஷம் ஒரு காலும் விட்டு நீங்குவதன்று;
மறுகல் இல் ஈசனை பற்றி விடாவிடில் — வேறுபாடில்லாத எம்பெருமானை ஆச்ரயித்து கைங்கர்யம்
விடிதே வீடு — அதுவே பரமபுருஷார்த்தம்.

* * * மேற்பாட்டிற்சொன்ன சுவர்க்கப்போலே அன்றிப்பரமபதம் மேலே சொன்ன மோக்ஷமான கைவல்யத்தினும் மேற்பட்டதாகையிட்டு பகவத் கைங்கர்யத்தையே பரம ப்ராப்யமாகப் பற்றுங்களென்கிறார்.

"மிகவுணர்வுத்தொடு எல்லாம் குறுகநோக்கிவிட்ட இறுகலிறப்பென்னும் ஞாலிக்கும் அப்பயன் இல்லையேல்" என்றும் அர்வயிப்பது. மிகுந்த ஞானத்தை மூடை யாய்க்கொண்டு ப்ராக்ருத போகங்களெல்லாவற்றையும் அற்பங்களாகக்கண்டு அவற்றில் ஆசையைவிட்டு—என்பது முதலடியின் கருத்து. மற்றொரு வகையாகவுமுரைக்கலாம்;— **குறுக**—மனம் கண்டவிஷயங்களிலும் பாக்குசெல்லாதபடி அதனைக்குறுக்கி; ஜிதேந்திரிய னாகி என்றவாறு. **உணர்வுத்தொடு**—ஞானஸ்வரூபனான ஆத்மாவோடே, **மிகநோக்கி**—என்றது ப்ரவணமாக்கி; **எல்லாம்விட்ட**—பகவத் ப்ராப்தியுமுட்பட எல்லாவற்றையும் வெறுத்த—என்றபடி. ஆத்மாநுபவமொன்றுகிலே மற்ற எந்த புருஷார்த்தத்தையும் கணிசியாத—என்றதாயிற்று.

இறுகலிறப்பு—இறப்பு என்பது இங்கே மோக்ஷத்தைச் சொல்லுகிறது. **இறுகல்**—ஸ்வகோசம்; பகவதநுபவமாகிற மோக்ஷமானது விகாச மோக்ஷமென்றும், ஆத்மாநுபவமாகிற மோக்ஷமானது ஸங்கோச மோக்ஷமென்றும் கொள்ளக்கடவது. ஸ்வரூபாநுரூபமான பகவத் கைங்கர்யங்களெல்லாம் தன்முகச்செய்வதற்கு உறுப்பான மோக்ஷம் விகாசமோக்ஷம். ஆத்மாநுபவமோக்ஷத்தில் அந்த விகாசத்திற்கு அவகாச மில்லையன்றே. **"ஜ்ஞாநஸங்கோசரூபாயை"** என்கிறபடியே சுருங்கியும் பிறப்பதும், இறப்ப தும் இடையாது என்கிற இவ்வளவே பயனுதலால் இது ஸங்கோச மோக்ஷமெனத் தருதி யிடையதென்று திருவுள்ளம்பற்றிய ஆழ்வார் **இறுகலிறப்பு** என்ற வொரு அழகாக அரு ளிச்செய்தார்.

http://acharya.org

என்னும் ஞானிக்கும்—(இப்படிகிறப்பையே) புருஷார்த்தமென்றிருக்கும் ஜ்ஞானிக்கும் என்றபடி. [**ஞானிக்கும்**] என்றது—ஜ்ஞாகயோக நிஷ்டனுக்கும் என்றவாறு.

அப்பயன் இல்லையேல்—எம்பெருமானே உபாயமாகப் பற்றுதல் இல்லையாகில் என்றபடி. **சீரிய நினைவதோர் பாசமுண்டாம்**—இழிவான புருஷார்த்தங்களை நினைப்பதற்கு அப்பாலான கர்மபாசமே மேலிடும் என்றபடி. இங்கே அருளிச்செய்த காண்மின்; "ப்ரக்ருதிஸம்பந்த வைரக்ய பூர்வகமாகஜ்ஞாகயோக நிஷ்டனுக்கும் எம்பெருமானே ஆச்ரயித்தாலல்லது ஆத்மாவலோகன விரோதி கர்மம் போகாது; பகவத் ஸமாச்ரயணத்தாலே யாயிற்று ஆத்மாவலோகனம் பிறப்பது."—என்று

அப்பயனில்லையேல் என்பதற்கு 'பகவதுபாயகமில்லையாகில்' என்று பொருளாகும்பக்ஷத்தில், **பயன்** என்கிற சொல்லால் அநிஷ்டநிவர்த்தகமான உபாயத்தைப் பயனாகச் சொல்லவாமோ? என்ற சங்கை பிறக்கும்; இதற்கு ஸமாதானத்தைப் பூர்வாசார்யர்களே காட்டியுள்ளார்கள்; பகவதுபாயத்தை ஆழ்வார் ஸ்வயம்புருஷார்த்தமாக நினைத்திருப்பவராதலால் இவருடைய கருத்தாலே பயனென்ற தத்தனே. இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்:—"**உபாஸநந்தான் ஸுகரூபமாயிருக்கையாலே பயனென்கிறது; அவனுடைய ஸாதநம் இனிதாக ப்ரயோஜனமாயிருக்கிறது.**" என்று.

சீரிய நினைவதோர் பாசமுண்டாம்—இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறலாம்: (1) கைவல்ய நிஷ்டர்களும் எம்பெருமானே அடிபணியாமல் முயற்சி செய்பவர்களுக்கு 'இவர்கள் மிகவும் கூறுதற்கர்கள்' என்று நினைக்கும்படியான கரும பக்தமே உண்டாகும். (2) நிகரற்ற புருஷார்த்தங்களை ஸ்மரிப்பதற்குறுப்பான ஸத்தும் உண்டாகும்.

பின்னும்விடில்லை என்பதைத் தனிவாக்யார்த்தமாக யோஜிப்பதிலுக்காட்டில் "**மறுகலிலீசனைப்பற்றி விடாவிடில் பின்னும் விடில்லை**" என்று யோஜிப்பது நிறைக்கும்; ஈட்டின் யோஜனை இதுவே. **மறுகலில்** என்பதை 'மறுகல் இல்' என்று பிரித்து ஸாதனத்துக்கு விசேஷணமாக்குதல்; அன்றியே, மறுகலில் என்று ஏழாம் வேற்றுமையாகக்கொண்டு, மறுகுகிற ஸமயத்தில்—ப்ராணனியோக ஸமயத்திலே வருப்கலக்கத்தில் என்று பொருள் கொள்ளுமுமுண்டு. ('மறுகல் இல்' என்று பிரிக்குப்போது, அகில தோஷப்ரத்யநீகனனை சன் என்றபடி.) ஆக, **மறுகலில்**—சரமஸமயத்தில், **ரகிலீசற்றி விடாவிடில்**—எம்பெருமானே அநுஸந்திப்பதாகிற அநிமஸ்மிருதி இல்லாமல் இந்தயுடலே விடவேர்த்தால் என்றபடி. **பின்னும்விடில்லை**—அந்த கைவல்ய மோக்ஷமும் விரும்பிக்கமாட்டாது. அந்த அநிஷ்டநிவர்த்தக அநிமஸ்மிருதி ஆவச்யகம் என்று காட்டினபடி.

விடுஅஃதே—"நிருபாரணன்தான் காலம்பெறச் சிந்தித்துய்ம்மினே" என்று முன்னுறமுன்னம் தான் சொன்னதுவே புருஷார்த்தம் என்றபடி. .... (10)

http://acharya.org

அஃதேஉய்யப்புகுமாறென்ற கண்ணன்கழல்கள்மேல் *
கொய்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சுற்றேவல் *
செய்கோலத்தாயிரம் சீர்த்தொடைப்பாடலினைபத்தும் *
அஃகாமல்கற்பவர் ஆழ்துயர்போயுய்யற்பாலரே. (11)

உய்யப் புகும் ஆறு — உஜ்ஜீவகோபாயம்
அஃதே என்ற — நிருகாரணன் தான்களேயென்ற அதிவிட்டி
கண்ணன் கழல்கள் மேல் — எம்பெருமானுடைய நிருவடிகள் விஷயமாக,
கொய் பூ பொழில் சூழ் குருகூர் சடகோபன் குற்றேவல் — கொய்வதற்குரிய பூக்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட நிருகரிக்குத் தலைவரான ஆழ்வாருடைய வாசிக கைங்கர்ய ரூபமாயும்

செய் கோலத்த சர்வாலங்கார ஸம்பன்னமாயுமிருக்கிற ஆயிரம் — ஆயிரத்தெகையுள்ள
சீர் தொடை பாடல் — நிருக்குணக்களே யுட்பித் தொடுத்த மாலை போன்ற இப்பாடலில்
இவை பத்தும் அஃகாமல் கற்பவர் — இப்பத்துப் பாசுரங்களையும் குறைவின்றி நிதமவர்கள்
ஆழ் துயர் போய் உய்யற்பாலர் — ஆழ்ந்ததவர் நீங்கப்பெற்று உஜ்ஜீவிக்குத் தக்கவரை யுடையராவர்.

* * * துயரங்கள் நீங்கி ஆத்மோஜ்ஜீவகம் பெறவிதே இத்திருவாய்மொழி கற்பதற்குப் பலன் என்ற பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். எம்பெருமானது நிருவடிகளே உபாயமென்று அத்திருவடிகள் விஷயமாக ஆழ்வார் வாசிக கைங்கர்யரூபமாய் அருளிச்செய்ததும் ஸர்வாலங்கார பூர்ணமான ஆயிரத்தினுள் இவைபத்தையும் குறையறக் கற்பவர்கள் இவ்வர்ய கைவல்யங்களிலே ஆழங்காற்பட்டுவரும் கலைப்பீல்லி பகவத்கைங்கர்ய மஹாராஜ்யத்தைப் பெறுவரென்றதாயிற்று.

அஃதே என்றது—இப்பதிகத்தில் முதற்பாட்டிலும் இப்பாட்டிலும் ப்ரஸ்துதமான நிருவடிகளைக் குறிக்கும்.

செய்கோலத்தாயிரம் என்றவிடத்து "உதாத்தாதி பதக்ரம ஸ்வரவாக்ய பஞ்சாதி பாதவ்ருத்த ப்ரகரணாண்ட அர்த்தகாத்யாயாச்சபர்வாதி அலங்காரங்கள்போலே எழுத்து அசைசீர்ப்பத்தமடி தொடை நிரைநிரைபோசை தளவினம்யாப்புப் பாத்துறை பல்லிசை தாளம் பத்து நாறுபிரம் முதலான செய்கோல மிதுக்குமுண்டு" என்ற ஆசார்யவசநாநுஸாரியான நிர்வாஹகரியும் அதன் வியாக்கியானமும் அநுஸந்தேயம்.

உய்யப்பாலரே என்ற பாடத்திலும் 'உய்யற்பாலரே' என்ற பாடம் தரும் (11)

நாலாம்பத்து—முதல் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் நிருவடிகளே சரணம்.

http://acharya.org

நாலாம்பத்து—இரண்டாந் திருவாய்மொழி—பாலனய்

உரையவதாரிகை: மேற் மூன்றும்பத்தில் "முடியானே யென்னும் திருவாய்மொழி யில் ஆழ்வார்க்கு உண்டான அவஸ்தை ப்ரஸக்திகளாலே முன்ன திருவாய்மொழிகளாலே ஒருவாறு தணிய மடிக்து கிடக்கது. இப்போது அது தணியெடுத்து கிற்கின்றது.

ஸ்ரீ விபீஷணாழ்வான் ராவணனுக்குச் சொன்னஹிதம் அவனுக்கு உபயோகப்படா மல் தனக்குப் பெருமானைப் பற்றுகைக்கு உறுப்பாகப்போலவும், ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வான் இரணியனுக்குச் சொன்னஹிதம் அவனை வெஞ்சிறப்படாதே தனக்கு பகவத் பக்தி மிகு தற்கு உறுப்பாகப்போலவும் ஆழ்வார் செய்தருளும் பரோபதேசங்கள் பிறர்க்கு உறுப் பன்றிக்கே தமக்கு எம்பெருமான் பக்கலிலே அபிநிவேசம் மிகார்க்து செல்வதற்கே கேதுவாயிற்று. ஆகவே என்றைக்கோ கழித்துபோன எம்பெருமான்படிகளே அக் காலத்திற்போலவே இன்று அனுபவிக்கப்பெறவேணுமென்கிற விடாய் பிறக்கது: ஆஸாப் பட்டபடியே கிடையாமையாலே, எம்பெருமானோடு கலந்து பிரிந்தாளொரு பிராட்டி யின் கிலைமையை யடைக்து தான் சொல்லிக்கொண்டக, அவள்படியை அநுஸந்தித்த திருத் தாயார் பெண்பிள்ளையின் கிலைமையைப் பேசுகிற முகத்தாலே ஸ்வதசையை வெளியிடு வதாய்ச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

பிராட்டி ஒருகால் திருவடியைக் கண்டபோது "ஸாகரம் தர்த்துமுற்புக்தம் ரூபமப்ரதிமம் மஹத், தர்ஷ்டுமிச்சாமி தே வீர." என்றும்; (அதாவது) 'நீ முன்பு கடல் கடந்த வடிவை நான் இப்போது காண விரும்பகின்றேன்; காட்டவேணும்' என்றும். அப்படிக் காட்டவல்ல சக்தி மாருதிக்கு உண்டு என்ற அறிந்தபடியாலே அர்த்தனம் அபேக்ஷித்தான்; அப்படியே ஆழ்வாரும் எம்பெருமானுடைய சக்தியை அறிந்தவராத லாலும் தம் அவாவின் மிகுதியாலும் என்றைக்கோ கடந்துபோனவற்றையும் இன்ன காணப்பெற விரும்புவது பொருந்தியதே யென்ப. .... (*)

பாலனய் ஏழுலகுண்டுபரிவின்றி *
ஆலிலை அன்னவசுச்செய்யுமண்ணலார் *
நாலிணைமேலனி தண்டுழாயென்றே
மாலுமால் * வல்வினையேன்மடவல்லியே. (1)

பாலன் ஆய்
பரிவு இன்றி
ஏழ் உலகு
உண்ட
ஆல் இலை
அன்னசம்
செய்யும்
அண்ணலார்
தான் இணை மேல்

சிறு குழவியாகி
அகாயாஸமாக
ஏழுலகங்களையும் திருவயிற்றிலே
வைத்து
ஆலந்தளிரிலே
நித்திரை செய்தருளின
ஸ்வாமியினுடைய
உபய பாதங்களின்மீது

அணி
தண் அம்
துழாய் என்றே

சாத்தப்பெற்ற
குளிர்த்துழாயினை யென்றே
வாய் வெருவிக்கொண்டு

வல் வினை
யேன் மட
வல்லி

வலிய பாபத்தைப் பண்ணின
என்னுடைய இளங்கொடி
போன்ற மகள்

மாலும்
ஆல்

ஸ்வாமோஹத்தினின்றும்
அகோ!.

http://acharya.org

* * * பண்டு ஆனிலையில் பன்னிலைவெண்ணெய் என்பெருமானுடைய திருவடிகளில் லேசாத்தின திருத்துழாயை இப்போது பெறவேணுமென்ற என் மகன் [பராங்குசநாயகி] ஆசைப்படுகின்றானென்ற திருத்தாயார் கூறுகின்றாள். இன்னுலகமெல்லாம் திரியவே வென்ற நிலையில் அழுந்தி அழியப்புகுகின்ற எப்பெருமான் இவற்றையெல்லாம் தனது திருவயிற்றிலே வைத்து ஒரு சிறிய ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளுகிறான். அது என் மகற்கோ கடந்த கிழமை. அப்போது அந்த வடதளசாயிப் பெருமானுடைய தாளிணை மேலணிந்த தண்ணந்துழாய்மாலையை இப்போது என் மகன் அபேக்ஷிக்கின்றானே யென்கிறாள்.

பாலனாய் என்ற சொல்லைத்தனியாக் கீழ்மேலே அருளிச் செய்வதாயது—"பரு வம்நோய்மை மேன்பு மோகத்தை மேற்கொண்டு வயிற்றிலே வைத்து ஆலிலையிலே சயனித்தருளி இப்போது என் மகன் இப்பாடுபடுகின்றான்" என்பதாக. வயது சென்றவரையிருந்து இவ் வருந்தோதில் செய்தால் அல்லலாகக் கருதவேண்டியிராது; பச்சைப்பசுங் குழந்தையா யிருந்து கொண்டு செய்த செயலாகையாலே கருதாமல் விடுகிறது போலும்.

"பாலனாயழுதுண்டு" என்ற சொற் சேர்க்கையில் ஒரு பொருளின்பம் காட்டுகிறார் நம் பிள்ளை; அதாவது—இது முற்றுகைகளின் வகையிலே ஒரு வினைத்தானும் சடக்கென எடுத்து வசமிலே போட்டுக் கொள்வது இயல்வதாதலால் ஆலிலைப் பாலனும் எழுலகுண்ட புத்திரூக்ஷமாகவன்றே; பின்னைத்தனத்திற்கு எதிர் 'இது மாத்திரமும் இது வாத்தியாது' என்ற அர்யரோக்தமான வார்த்தையை நினைக்கவேண்டுகின்றதே.

பரிவதின்றி = பரிவாவது வருத்தம்; இதிலும் ஆயாஸமில்லாமல் மிக எளிதாகச் செய்தலை சொன்னபடி.

அன்னவசம் செய்யும் = வயிற்றிலுள் அன்னம் சென்றவாறே பரவசமாகக் கண்ணுறங்கிப்போவது உலகியற்கையாதலால் இத்திலைக்கு **அன்னவசம்** என்ற பெயரிடப்படுகின்றது போலும். எப்பெருமானும் எழுலகங்களையுண்டதனால் உடனே இத்திலை யுண்டாகத் தட்டில்லையே.

இவ்விடத்தில் நம்பிள்ளை ஈடு காண்மின்;— "**[அன்னவசம் செய்யும்]** தன் வயிறாகையாலிறே **"அணைமத்தம்"** என்கிற அன்னத்துக்கு வசமாக." என்பதாம். மூன்றி தலையில் **அணைமத்தம்** என்று சொல்லுகிறவர்கள் சேதகர்கள்; அவர்களெல்லாரும் பிரளய காலத்தில் திருவயிற்றிலுள்ளடங்கி பெய்யாகவே அன்னமாக ஆய்விட்டபடியை அழகாக அருளிச் செய்தபடி.

அண்ணலார் தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே= "தோளிணை மேலும் கண்மலர்மேல் சோதியும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடையும் மால்" என்கிறபடியே திருமுடி திருத்தோள் திருமார்பு முதலிய இடங்களிலும் திருத் துழாய்மாலை அலங்கரிக்குமாயினும் அடியே பிடித்து அடியை விடாதவிவனுக்குத் தாளிணைமேலணி தண்ணந்துழாயொழிய வேறெதுவும் நினைவு செல்லாதாகையாலே அதனையே வாய் வெருவுகிறபடி.

http://acharya.org

தண்ணந்துழாயென்றே= "பாலறாய் வாழுமுண்டதும் ஆனிலை யுள்ளவளந்
செய்ததும் எப்போதோ கழிந்ததாயிற்றே! அப்போதவளிந்த நிருத்துழாய்மாலை இப்போது
கிடைக்க வழி யில்லையே!' என்று மவ்வளவு சொன்னதும் கோபமும் மீண்டும் மிண்டும்
அதனையே வாய்வெருவுகின்றனென்றபடி.

என்றேமாலுமால்= நிருத்துழாய் நிருத்துழாயென்று வாய் வெருவுகிறதோடு
நிற்கவில்லையே! உள்ளமும் குலையாகின்றனே! என்கிறன். இங்கே சட்டு ஸ்ரீவசநபூஷண
வாக்யம்;—"ராஜபாட்டையிலே ஆபரணத்தை யிறக்கினால் அதை யெடுப்பாரில்லை யன்றோ?"
என்பதாம். உலகத்தில் மணி பொன்னிலே நிலைத்து நெருப்பு என்கிற ப்ரமம் உண்டாக
லாம்; இங்கனே ப்ரமம் உண்டானதற்காக அவ்வஸ்துவானது அக்நியின் கார்யமான சுடு
கையைப் பண்ணமாட்டாது; சுடுமாயின் அச்சரியப்படவேண்டியதேயாகும். அதுபோல
இங்குள் காண்க; * ஆனிலையுள்ளை வளந்செய்து மண்ணையாருடைய தாளினிலேலணிதண்
ணந்துழாய்மாலை யென்பது இப்போது இல்லாத வஸ்துவே: அதனை வாயாற் சொல்லுது
ப்ரமத்தின் காரியமாக இருக்கட்டும்; 'மாலுமால்' என்னும்படி வியாமோஹமும் உண்டா
கிறதே! என்ன ஆச்சரியமிது; என்றபடி. .... (1)

வல்லிசேர்நுண்ணிடை ஆய்ச்சியர்தம்மொடும் *
கொல்லைமையெய்து குரவையிணைந்தவர் *
நல்லடிமேலணி நாறுதுழாயென்றே
சொல்லுமால் * சூழ்வினையாட்டியேன்பாலவையே (2)

சூழ்வினை யாட்டியேன்	விரும்த தீவினையை யுடையேனு யென்றவளை
பாலை யுண்டு சேர் நுண் நிடை	பதுமை போன்ற பெண்ணுலகள் கொடிபோன்ற நுட்பமான இடையையுடைய
ஆய்ச்சியர்தம்மொடு கொல்லைமை செய்து	கோபிமார்களோடே பரம்புகட்டத செய்யுங்கள் செய்து
குரவை பிணைந்தவர்	ரஸஸ்பர்சை செய்த கண்ணபிரானுடைய
தட்டடி மேல் அணி	அழகிய திருவடிகளின் மீது சாத்தின
நாறு துழாய் என்றே	சதமணம் வீசுகின்ற திருத்துழாயென்றே
சொல்லுமால்	சொல்லுகின்றன்; அதோ!

* * * கண்ணபிரான் ஆய்ச்சிகளோடு கூடிக் குரவை கோத்தகாலத்துத் திரு
வடியிலணிந்துகொண்டிருந்த திருத்துழாய் மாலையை யெப்படியோ வாய் வெருவுகின்றனென்
கிறன். **குரவை** யென்பது ரஸஸ்பர்சை யென்றபடி. நல்லொரு ஆய்ச்சியின்பக்கத்திலும்
நல்லொரு கண்ணனுக்குப் பல நிறவுருவங்கொண்டு கைகோத்தாடினது வடமொழியில்
ரஸஸ்பர்சை யென்றும், தென்மொழியில் குரவைக்கூத்தென்றும் வழங்கப்படுமிது.

வல்லிசேர்நுண்ணிடையாய்ச்சியர்— 'வல்லிசேர்' என்பதை இடைக்கு விசேஷணமா
கக்கொள்ளலாம்; ஆய்ச்சியர்க்கே விசேஷணமாகக்கொள்ளலாம்; மூன்றாம்பாதத்தில்,
கொடிபோன்ற இடையை யுடையவர்களென்பதால்; நான்காம்பாதத்தில் கொடிபோன்ற
வர்களாயும் நுட்பமான இடையை யுடையவர்களாயுமிருக்கின்ற ஆய்ச்சிகளென்பதால்.

http://acharya.org

கொல்லிமை = வாய்புகுடக்த சொல்; 'கொல்லி' என்னும் சொல்லின்மீது மையிருந்து எதிக்கிவ்விறது. "கொல்லியாக்கினை மூக்கரித்திட்ட" என்ற ஆண்டாள் பிரயோகமும் "கொல்லி வெல்பர் கொலோ" என்ற கம்மாழ்வார் பிரயோகமும் காணத்தக்கன. கூரத் தாழ்வான் அதிமானுஷஸ்தவத்தில் "தூர்த்தாயிதம் தவஜரி யத் கில ராஜகோஷ்ட்யாம்" என்ற இல் தூர்த்தாயிதம் என்றதுவே கொல்லிமையாயாகும்.

பாலை = பதுனபர்களும் பெயர்; இது, உலகமாகுபெயராய்ப் பெண்பின்னிலை யுணர்த்தும். .... (2)

பாலியல்வேத நன்னாலினைகொண்டு *
மேலுலகின்மையினில் நிறைத்தநின்ற *
சேவடிமேலணி செம்பொன்பூவேன்றே
கூவுமால் * கோல்லிப்பாவைபாடுமின்கோதையே. (3)

பா இயல் வேதம்	சந்தஸ்ஸுக்கள் பொருந்திய வேதங்களின்ற	அணி செம் பொன் அடிகள் என்றே	அணிந்த செவ்விதாய் விரும்பத்தக்கதான திருத்தமா யென்றே
நல் நால் மறை கொண்டு	நிர்மலமான பல மாலைகளைக் கொண்டு	உலகம்	கூப்பிடா நின்றன் (பாசெல்லில்)
தேவர்கள் மா முனிவர்	தேவர்களும் மஹா முனிகளும்	கோல் வினை யாட்டியேன்	வலிய பாபத்தைப் பண்ணின வளவான மனத்தையுடைய
நிறைந்த நின்ற சே அடி மேல்	ஆராதிக்கும்படி (உலகமெலாம் வளைத்து) நின்ற திருவடிகளின் மேலே	கோதை	நெஞ்சு உள்ளேயுடையளான பெண்பின்னை.

* * * உலகளந்தருளின எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாயை என் மகள் ஆசைப்படாநின்றாளென்கிறாள். மூன்றில் "தேவர்கள் மாமுனிவரினைந்தாகின்ற சேவடி." என்றிவ்வளவேயுள்ளது: "உலகளந்த திருவடி." என்று விசேஷமாக இல்லை; "பாற்கடல் சேர்ந்த பரமனுடைய அழகிய திருவடிகளிலே அணிந்த செம்பொற்துழாயென்ற இவள் கூப்பிடா நிற்குமென்கிறாள்" என்றருளிச்செய்தார் ஆருயிரப்படியில். மற்ற வியாக்கியானங்களில்—"உலகளந்தருளினவன் திருவடிகளில் திருத்துழாயை ஆசைப்படாநின்றாளென்கிறாள்" என்றுள்ளது.

பா இயல் வேதம் = பா என்ற சந்தஸ்ஸுக்களைச் சொல்லுகிறது. காயத்ரீ, திரிஷ்டுப், அநுஷ்டுப், ஜகதி என்றிப்படி பலவகையாய்ப்பட்ட சந்தஸ்ஸுக்கள் ப்ரஸித்தங்கள். ஒருபாதம் இத்தனை அக்ஷரங்களென்று சொல்லியிருந்தால் இன்ன சந்தஸ்ஸு என்று நியதியும் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சந்தஸ்ஸுக்களிலே வர்த்திப்பதான வேதவாக்கியங்களும் இவ்வாறான மாலைகளையுங்கொண்டு தேவர்களும் மஹர்ஷிகளும் ஆராதிக்கும்படி லோகத்தை வளைத்துநின்ற செவ்விய திருவடிகளின்மேலே சாத்தப்பட்ட திருத்துழாயையே சொல்லிக் கூப்பிடாநின்றாள்; அதாவது, 'அந்தத் திருத்துழாய் வேணும், அந்தத் திருத்துழாய் வேணும்' என்ற ஆதலே வாய்வெருவுதலாக இராநின்றாள், அந்த வஸ்து இப்போது கிடைக்கமாட்டாதது என்பதை அந்தோ! அறிகின்றிலள்—என்று ஸாரம்.

http://acharya.org

கோள்வினையாட்டியேன் என்று சொல்லிக்கொள்ள வேண்டுமபடி இங்கு என்ன விசேஷமுள்ளது? தன்மகன் இல்லையே யாய் வெறுமலடு புண்ய பலன் என்ற நிலைக்குத் தட்டிவிடுமே; "ப்ரபலமான பாபத்தைப்பண்ணின என்னுடைய மகள்" என்று சொல்லிக் கொள்ளவேண்டி வருமே சங்கை பிறக்கும்; யதிர்ஷ்டவசத்தினாலே இதற்குப் பொருள் கொள்ளவேண்டும். பலதினவதத்திலே இவ்வம்மான் ஈடுபட்ட பெண்ணேயைப் பெற்ற என்னுடைய பாக்கியமே பாக்கியம் என்று சொல்லிக்கொள்வதே நாற்பரியாகும். அன்றியே, தாய் என்பது உபசாரத்தினாலன்றோ மாதாவாகிறாள்? மகளுடைய பதற்றத்தைக் கண்டு வருத்தப்பட்டுச் சொல்லுகிற பாசுரமாகவே தாய் பாசுரம் அமைகின்றபடியால் "வல்வினையேன்" என்றும் "கோள்வினையாட்டியேன்" என்றும் தன்னைச் சொல்லிக் கொள்வதும் பொருந்தும் என்னலாம்.

கோள்வினை— முயற்சியை விடாத பாபம். அநுபவித்தே அறவேண்டிய பாபம் என்னுமாபோல்.

கோதை என்று பெண்மக்களுக்கும் பூமாலைக்கும் பெயர். நெருக்க மயிர் முடியை யுடையவள் (அல்லது) அழகிய பூமாலையை யணிந்தவள் என்கிற பொருளில் இங்குக் **கோதை** என்ற சொல் பிரயோகிக்கப்பட்டுள்ளது; ஆகு பெயர்.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் இன்சுவை நிக்கவை;—"தன் மாலையையும் மயிர் முடியையும் கண்டார் படுமத்தைத் தான்படுவதே. இம்மாலையையுடைய இவள் வேறொரு மாலையை ஆசைப்படுவதே. "மாசுவத்து மாலையானவிவள் வேறொரு மாலையை ஆசைப் படுவதே. மாசுவத்து மாலுக்கு மால் ஆவன்; அம்மானுக்கு மால் இவள்." .... (3)

கோதிலவண்புகழ் கோன்டுசமயங்கள் *
பேதங்கள்சொல்லிப் பிதற்றும்பிரமனும் *
பாதங்கள்மேலணி பைம்பொன்றாமரையென்றே
ஓதுமால் * வல்வினையேன் கடந்தோளியே. (4)

வல்வினை யேன்	பெரும் பாவத்தை யுடையேனுமை யனது
தடந்தோளி	பெருந் தோள்களை யுடையளான பெண் பிள்ளை
சமயங்கள்	சமயவாதிகள்
கோதிலவண் புகழ் கொண்டு	குற்றமற்ற விலக்ஷணமான குணங்களைக் கொண்டு
பேதங்கள் சொல்லி	தாம்தாம் பற்றிய குணங்களின் ஏற்றங்களைச் சொல்லி
பிதற்றும் பிரமன்	பிதற்றும்படியாகவுள்ள ஸ்வபாவமான
பரன் பாதங்கள்மேல் அணி	பரம புருஷனுடைய திருவடிகளின்மேலே (நித்ய முக்தர்கள்) சாத்தின
பைம் பொன்	பசும்பொன்போல் விரும்பத்தக்க
தாமரை என்றே ஓதும்	திருத்துழாயென்றே சொல்லுகின்றன.

(ஆல்—அசோ)

* * * திருவாட்டி வெறுந்தரனி விருத்திற பாதம்பணுடைய திருவடிகளில் திருத்துழாயை என்மகள் ஆசைப்படாகின்றனெனகிறாள். முன்னிரண்டடிகள் பரமபத நாதனை வருணிப்பன. மற்றெருமாலது நிருக்குணங்களிலே புருத்தவிட்டால் மற்றொரு

http://acharya.org

குணத்தினுடைய அதிசயமும் எல்லோரையும் வென்றதாயிருக்கும்; பரத்வத்திற்கு உடான குணங்களும் வைலக்ஷண்யத்திற்கு உடான குணங்களுமாக வருக்கப்பட்டுள்ள குணங்களில் ஒருவர் ஒரு குணத்தை அநுபவித்து அதன் அருமைபெருமைகளே மேற்கொண்டாட, இங்கனே வாதவிவாத கலஹங்கள் ஏற்பட்டுவிடும்; இத்தகைய குணநுபவவிவாதமேயாய்ச் செல்லுமாம் பரமபதத்தில். "வேங்கியாளர் நேற்றுக் குணக்கேழ் கொள்கையினாலே" என்று (1-6-4) மேலுமருளிச் செய்யப்பட்டது.

சமரிகள் என்றது—ஒவ்வொரு குணத்தில் அநுபவத்திலே ஊற்றமுற்று அதைப் பெருமைப்படுத்திச் சொல்வதையே தமது சதாசாரமாகக் கொண்டவர்கள் என்றபடி. உபநிஷத்துக்களில், தஹராவித்யை உபகோசலவித்யை சாண்டில்யவித்யை அக்ஷிவித்யை வைச்வாநரவித்யை என்றப்படி. அங்கங்கே வித்யைகள் கூறப்பட்டுள்ளன; அவற்றிலே வன்றினவர்களேச் சொல்லுகிறதாகவும் அருளிச் செய்வர்கள்.

கோது இலவண்புகழ் = ஒரு குணத்தை அநுபவிக்கும்போது இன்னொரு குணத்திலே நெஞ்சு செல்லுமாகில் அது குணத்திற்குக் கோதாகும்; அம்மில்லாமை சொல்ல முகத்தான் ஒவ்வொரு குணமும் தனித்தனியே பரம போக்யமாக அநுபவிக்கலாம்படி ஸாரஸ்யம் மிக்கிருக்கின்றமை சொன்னபடி.

பேதங்கள்சொல்லி = பேதமாவது விசேஷம்; தான் அநுபவிக்கிற குணம் கருஞ்சு வர்ணமென்று சொல்லி என்றபடி. ஒருகுணத்தை அநுபவித்து 'இதுவும் ஒரு குணமே! இதுபோலேயோ விசேஷம்' என்பர்களாய். ஆக இப்படி அநுபவிக்கலாம்படி மிடைந்த நிறக்குணங்களே யுடையவனும் தூணைகுண்டாதனுடைய நிருவடிகளில் நித்யவாஸிகளும் முக்தர்களும் சாத்திய நிருத்துழாயைப் பற்றியே இவன் பலனாகும் அலற்றுகின்றனென்றதாயிற்று. .... (4)

தோளிசேர்வின்னைபொருட்டு எருதேழ்தழீஇக்
கோளியார் * கோவலனார் தடக்கூத்தனார் *
தாளிணைமேலணி தண்ணந்துழாயன்றே
தாஞ்தான் * நைகின்றதால் என்றன்பதரே. (5)

என் தன் மாதர்	எனது பெண்பிள்ளை
தோளி	அழகிய தோள்களே யுடையவளும்
சேர்	அதரூபையுமான
பின்னை பொருட்டு	ப்பின்னைப் பிராட்டிக்காக
எழ் எருது	ஏழு எருதுகளையும்
தழீஇ கோளியார்	தழுவிக்கொண்டவரும் [அதாவது-நிரஸித்தவரும்]
கோவலனார்	கோபால சிரேஷ்ணரும்
தடம் கூத்தனார்	குடக்கூத்தாடினவருமான கண்ணபிரானுடைய
தாள் இணைமேல் அணி	உபய பாதங்களின்மேலே சாத்திய
தண் அம் துழாய் என்றே	குளிர்ந்தழகிய திருத்துழாயென்றே சொல்லி
தாளும் தான் நைகின்றது	கால்தோயும் நிலையாகின்றன.

* * * பிள்ளைப் பிராட்டிக்காக ஏழெருதுகளேயும் தழுவிக்கொண்டவரும் கண்ணபிரானுடைய திருவடிகளில் சாத்திய திருத்துழாய் விஷயமாகவே என் மகன் நைகின்றனென்கிறன்.

http://acharya.org

தோலி என்பதும் **சேலி** என்பதும் பிள்ளைக்குத் தனித்தனி விசேஷணங்கள். அழகிய தோலியுடையவளாயும் தலைக்குத்தகுந்திருப்பவளுமான கம்பின்மேல் வென்றபடி.

"தழீஇக்கோலியார்" என்பதில் ஒரு முழுச் சொல்லை; தழுவிக்கொண்டவர் என்பது பொருள். இதனை இரண்டு சொல்லாக பயன்படுத்தி 'எருதேற்றழீ' என்று பிரித்து, 'கோளியாச் கோவலனார்' என்று பாடங்கொண்டு வருவதை பார்க்கலாம்.

'எருதுகளே முடித்தவர்' என்னவேண்டுமிடத்துத் தழுவினவர் என்றது மங்கல வழக்கு.

இப்படிப்பட்ட கண்ணபிரானுடைய திருவடிகளிற் சாத்தின திருத்துழாயை யாயிற்று இவள் ஆசைப்பட்டது.

மாதர்—அழகு; அழகுடையவள். .... (5)

மாதர்மாமண்டைபொருட்டு னைமாய் *
ஆதியங்காலத்து அகலிடங்கீண்டவர் *
பாதங்கள்மேலணி பைம்பொற்றுழாயென்றே *
ஓதுமாலெய்தினள் என்தன்மடந்தையே. (6)

மண்மாதர்	நிறைந்த அழகுடைய
மண் மடந்தை பொருட்டு	பூமிப் பிராட்டிக்காக
ஆதி அம் காலத்து	முன்னொரு காலத்தில்
எனம் ஆய்	வராஹ மூர்த்தியாய்
அகல் இடம்	விஸ்தாரமான பூமண்டலத்தை
கீண்டவர்	பிளந்தெடுத்துக் கொணர்ந்த பெருமானுடைய
பாதங்கள்மேல்	திருவடிகளின்மீது
அணி	சாத்தின
பைம் பொன்	மிகவும்பசிய நிறமுள்ள
துழாய் என்றே	திருத்துழாய் என்றே
ஓதும் மால்	நிகழ்ச்சியான
எய்தினள்	வியாமோஹத்தை அடைந்தாள்.
என் தன் மடந்தை	எனது பெண்பிள்ளை

* * * ஸ்ரீ வராஹ மூர்த்தியாய் ப்ரளயார்ணவத்தில் பூமியை யெடுத்தருளின போது திருவடிகளிலணிந்திருந்த திருத்துழாயைப் பெரிதாசையொன்று ஆசைப்படுகின்றாளென்கிறாள்.

"ஆதியங்காலத்து" என்றால் "ஆதியங்காலத்து" என்றதற்கு கம்பின்மேல் தாழ் பரியபாருளிச் செய்கிறார்—"ரக்ஷகனுனைவன் தன் விரோதிநிரஸனத்துக்காகக் கொண்ட கோலத்தை அநுபவிக்கிற காலமாகையாலே அழகிய காலமென்கிறாள்" என்று.

"அகலிடங்கீண்டவர் பாதங்கள் மேலணி பைம்பொற்றுழாய்" என்கிறதே; அகலிடங்கீண்டபோது திருவடிகளில் திருத்துழாய் அணியப் பெற்றதுண்டோ வென்னில், உண்டு. "உத்திஷ்டதம் தவ்ய நுஸார்த்தருகேஷ: ஸுதாவராதாதவ்ய மஹீம் ப்ரக்ருஷ்ய, விதார் வதோ வேதமயம் சரீரம் ரோமாந்தராந்தர முகை: ஸ்துவந்தி." என்ற ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (1-4-29) கூறப்பட்டிருத்தலால் அப்போதும் மகரிஷி மஹர்ஷிகள் இட்ட திருத்துழாய் உண்டு என்றுணர்க. மேற்காட்டிய ச்லோகத்தில் "ஸ்துவந்தி" என்று ஸ்துதிப்பதைச் சொல்லியிருப்பது புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பணத்திற்கும் உபலக்ஷணமாகும்.

http://acharya.org

இப்பதிகத்தில் பெரும்பாலும் பகவத்தோஷம் "மாலுமால்" "கூவுமால்" "ஓதுமால்" "மடல்ஞாமால்" "கற்புமால்" என்றிவ்வாறே வருகின்றது; இச்சொற்றொடர்களில் **ஆல்** என்பது அசைச்சொல். இப்பாசுரத்தில் மாத்திரம் **ஓதுமால்** என்ற சொற்றொடரில் **ஆல்** என்ற இவ்வசை; **'ஓதும் மால்'** என்று பிரிக்கும்; முதற்படியான பயத்தியத்தை யடைந்தானென்றபடி.

மடந்தை— மகளிர் பருவம் பதினைந்திலிருந்து பதினேழாவது வயது வரையுள்ள பருவத்துப் பெண்; இச்சொல் பெண் பொதுப்பெயராகவே பெரும்பாலும் வழங்கும். .... (6)

மடந்தையை வண்காலத்திருமார்பினில் *
தடங்கொள்தார்மார்பினில் வைத்தவர்தாளின்மேல் *
வடங்கொள்பூந்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
மடங்குமால் * வானிதனில் என்மடக்கோம்பே. (7)

வான் நுதலீர்	ஒளி பொருந்திய நெற்றியை யுடைய பெண்காள்!
என் மட கொம்பு இவள்	இளங்கொடி போன்ற எனது இப்பெண்பிள்ளை
மடந்தையை	இளமைப் பருவமுள்ள
வண் கமலம் திரு மார்பினை	அழகிய தாமரைப்பூவில் பிறந்த பிராட்டியை
தடம் கொள் தார் மார்பினில்	விசாலமானதும் மாலை யணிந்ததுமான திரு மார்பிலே
வைத்தவர்	(பாற்கடல் கடைந்த காலத்து) வந்தகொண்ட பெருமானுடைய
தாளின் மேல்	திருவடிகளின்மீது (சாத்தின)
வடம் கொள்	செறியத் தொடுக்கப்பட்டதும்
பூ	அழகியதும்
தண்ணம்	குளிர்ச்சி பொருந்தியதுமான
துழாய் மலர்க்கே	திருத்துழாயின் பொருட்டே
மடங்கும்	சாய்ந்து விழுகின்றாள்.

* * * அழகமைந்திருக்கும் கடல்கடைந்த காலத்துப் பெரிய பிராட்டியாரைத் திரு மார்பிலே வைத்தருளின எப்பெருமானுடைய திருவடிகளில் திருத்துழாயை என்மகள் ஆசைப்படுகின்றாளென்கிறாள்.

மூலத்தில், அப்புதுமதன காலமென்பதற்கு வாசகமான சொல் இல்லையாகிலும் "திருமாதினோ மார்பினில் வைத்தவர்" என்கிற சொல்லமைப்பை நோக்கி "**அம்ருதமதந காலயிலே**" என்ற பூருவாசாரியர்கள் உரைத்தருளினார். பிராட்டியைத் திருமார்பிலே கொண்டிருப்பவன் என்றமாத்திரம் 'வைத்தவர்' என்கையன்றிக்கே, ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு அவதாரம் ப்ரதானமாகவருகிற அடைவுக்குச் சேரவேண்டுகையாலும் இவ்வாறு நிரூபித்தல் மிகப்பொருத்தம்.

கோம்புபோல்சீதைபொருட்டு இலங்கைநகர் *
அம்பெரியுய்த்தவர் தாளினைமேலணி *
வம்பவிழ்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
நம்புமால் * தானிதற்கென்செய்கேன்? நங்கைமீர்! (8)

http://acharya.org

கண்கைகீர்	பெண்கள்!	அணி	சாத்தின
கொம்பு போல் சேதை பொருட்டு	பூங்கொடி போன்ற சீதாபிராட்டியின் பொருட்டு	வம்பு அவிழ் தண் அம் துழாய் மலர்மே	பரிமளப்ரகாசமாய்க் குளிர்ந்தழகிய திருத் துழாயின் மீதே
இலங்கை கச்	இலங்காபுரியில்	இவன் கம்பும்	இவன் ஆசைப்பட்டா நின்றான்;
அம்பு எரி	அம்புனில் நின்றும் மேம்பும் அக்கினியை	இதற்கு நான் என் செய்கேன்	இதற்கு நான் என்ன பரிஹாரம் செய்வது.
உய்த்தவன் தான் இணைமேல்	செலுத்தின இராமபிரானுடைய உபயபாதங்களின் மீது		

* * * விதேஹராஜாட்டிக்கான இலங்கை மாநகரைப் படைபொருத பெருமானது திருவடிகளில் திருத்துழாயை என்மகன் விரும்பா நின்றனென்கிறாள். **கொம்பு போல்சீதைபொருட்டு**:: ஸ்ரீகலைக் **கொம்பனார்** என்ற கூரவது தமிழர் மரபு; வஞ்சிக் கொம்புபோல் மிக்க மென்மைத்தன்மை பொருந்தியிருக்கும்படியைக் கூறியவாறு. **கொம்புபோல்** என்பதற்கு மற்றொரு பொருளும் கம்பின்மை அருளிச் செய்வதுண்டு; "'ஆகார்' என்கிறபடியே ஏகவசனத்தில் ஏகதேசமென்றதால்" என்பது நாட்டு ஸ்ரீஸூக்தி. கொம்பானது விருக்ஷத்தின் ஏகதேசமாகையன்றோ; "**வானேதேவதரு**" என்றும், "மனக்கே தண்ணீர்த்தக் கற்பகம்" என்றும் விருக்ஷமாகச் சொல்லப்படுகிறபடியால் அதில் ஏகதேச மான கொம்பாகப் பிராட்டியைச் சொல்லுதல் பொருந்தும்.

சீதை—சீதா என்ற வடசொல் இரு. [சீதா லாங்கலபத்ததி:] என்ற நிகண் டின்படி உழுபடைக்கு சீதா என்ற பெயராதலால் முகாக்ரகர்த்தியின் யாகாரமே நிலத் தில் உழுபடை பட்டவிடத்தில் நின்றும் சேட்டி தோன்றின காரணம்பற்றி அவளுக்கு இலக்கினாலும் சீதையென்ற பெயராயிற்று.

நம்பும்— விரும்பும்; "வாய்பும் போலும் கையாகும்மே." .... (8)

நங்கைகீர்! நீரும் ஓர்பெண்பெற்றநல்கினீர் *
எங்ஙனேசொல்லுகேன்? யான்பெற்றவெழையை *
சங்கென்னும்சக்கரமென்னும் நாமமென்னும் *
இங்ஙனேசொல்லும் இராப்பகலென்செய்கேன்? (9)

நங்கைகீர்	மாதர்கள்!	சங்கு என்னும்	சங்கு என்கிறான்;
நீரும் ஓர் பெண் பெற்ற நல்கினீர்	நீங்களும் ஒப்பில்லாத ஒரு பெண்ணைப் பெற்ற அன்போடு வளர்த்திருக்கின்றீர்கள்;	சக்கரம் என்னும்	சக்கரமென்கிறான்;
		நாமம் என்னும்	நிருத்துழாயென்கிறான்;
யான் பெற்ற ஏழையை	நான் பெற்றிருக்கின்ற இப்பேதையை	இராப் பகல்	இரவும் பகலும்
எங்ஙனே சொல்லுகேன்	எப்படி யென்று சொல்லுவேன் (ஆயினும் சொல்லுகிறேன்;	இங்ஙனே சொல்லும்	இப்படியே சொல்லா நின்றான்;
		என் செய்கேன்	யாது செய்வேன்?

* * * என் மகன் பரமபுருஷனுடைய நிஷ்காரணத்வத்தைச் சொல்லுவதாகத் தொடங்கி முற்றமுடியச் சொல்லமாட்டாதே இடையிடையே தளர்ந்து சோர்படுகின்றா னென்கிறாள். பாகவதரை வாயிலாய் திருத்தாய் தனது தோழிமார்களை **நங்கைகீர்** என்று விளித்து 'நீங்களும் ஒப்பில்லாத பெண்ணைப் பெற்று வளர்க்கிறீர்களே., என் பெண்மக

http://acharya.org

வில் தன்மை உங்கள் பெண்களுக்கு உண்டோ?' என்றான்; 'எங்கள் பெண்பிள்ளைகளிற் காட்டிலும் உன் பெண்பிள்ளைக்கு வாசி என்?' என்ன அவர்கள் கேட்க, **எங்ஙனே சொல்லுகேன்?** என்கிறான். இவ்விதமான பேர்களுக்கு விஷயமாகிலன்றே நான் சொல்லுவது; பாவத்தை நினைக்கவே ஒருபடி பேதிஞ்சுமே நினைக்கவிலே ஆழ்ந்தவர்களின்படி. பேச்சுக்கு நிலமன்றே; "ஆஸ்லாதிதகேதாரம்: புலிந்ருதகாந்தாரம், ஸதா பாருஞ்சிஷ்டோ த்ராவ்டவ்யன் ஸர்வதேஹிந:" என்கிறபடியே கண்டிருக்கலாமத்தனை யல்லது பேசமுடியாதன்றே என்கிறான்.

ஆனாலும் பேசக்கூடியாட்டில் பேசலாகாதோ என்ன; பின்னடிகளால் பேசுகிறான். சங்கு சக்கரம் நிருத்தழாய் என்றிப்படி பகவத் வஸ்துக்களைச் சொல்ல நினைத்த விவள் அவற்றை ஒரு சேர்த்தியாகச் சொல்லமாட்டாமல் 'சங்கு' என்ற சொல்லி, அது தான் மேலெடுத்தாப்போலே பிருக்கையாலே பெருவருத்தத்தோடே நின்று, மீண்டும் ஒரு காழிகை கழித்து 'சக்கரம்' என்ற சொல்லி, அதன் பிறகு ஒரு காழிகை கழித்து 'ஆழாய்' என்ற சொல்லி ஆக இப்பாடுபட நின்றாள் என்கிறான். .... (9)

என்செய்கேன்? என்னுடைப்பேதை என்கோமளம் *
என்சொல்லும் என்னரமல்லல்நங்கைமீர்! *
மின்செய்பூண்மார்பினன் கண்ணன்கழல்தூழாய் *
பொன்செய்பூண்மென்முலைக்கென்று மெலியுமே. (10)

சக்கைமீர் — பெண்காள்!
என்னுடை பேதை என் கோமளம் — பேதைத்தனமும் ஸுகுமாரத் தன்மையும் பொருந்திய என்மகளானவன்
என் சொல்லும் என் வசமும் அல்லன் — என் சொல்லிலும் நிற்பதில்லை, என் வசத்திலும் நிற்பதில்லை;
மின் செய் பூண் மார்பினன் — ஒளியைச்செய்கின்ற நிருவாபரணமணிந்த நிருமார்வையுடையவனை
கண்ணன் கழல் — கண்ணபிரானுடைய நிருவடிகளிலுள்ள
தூழாய் — நிருத்துழாயை
பொன் செய் — பசலை நிறம் பூத்ததும்
பூண் — ஆபரணங்களணிந்ததும்,
மெல் — பிரிவாற்றகில்லாததுமான
முலைக்கு என்ற — முலையில் அணிந்துகொள்ள வேணுமென்ற விருப்பி
மெலியும் — (அது கிடையாமையாலே) உடம்பு இளைக்கப்பெறுகின்றாள்;
என் செய்கேன் — இதற்கு யான் யாது செய்வேன்?

* * * மேற்பாட்டில் 'நங்கைமீர்!' என்ற விளிக்கப்பட்ட நங்கைகள் பாலகுரு நாயகியின் தாயை நோக்கி 'அம்மா! உன்மகள் கிடீட்ட வழக்கன்றே; அவளுக்கு ஹிதம் சொல்லலாகாதோ?' என்ன, அவர்களுக்கு விடை கூறுகின்றாள்: அந்தோ! இப் பெண்பிள்ளை எனக்கு விதேயை யன்றிக்கே கண்ணபிரானுடைய ஆபரண சோபையிலே அகப்பட்டு அவனது நிருவடிகளில்நிருத்துழாய் தன்முலைக்கு அலங்காரமாக வேறு மென்று உடம்பு இளைக்கின்றாளே! என்கிறான். அந்தோ! இவளுடைய நிலைமையை நோக்குங்கால் இவளை இழக்க நேருப்போலும் தோன்றுகின்றதே!' என்ற கருத்துப்பட **'என்செய்கேன்'** என்றது. நான் சொல்லும் ஹிதவசனம் கேட்கும் பருவமன்று என்பான், **'என்னுடைப்பேதை'** என்கிறான். 'இவளேயோ நாம் தண்டிப்பது' என்ற இரங்கவேண்டும்படி. யான மௌக்ருமார்ய முடையவள் என்ற கருத்துப்பட **'என்கோமளம்'** என்கிறான்.

http://acharya.org

என்சொல்லுமல்லன் என்வசமுமல்லன்— நான் சொல்லும் ஹிதவசனம் கேட்பது மில்லை, நான் ஹிதமுரைக்க நினைக்கும்படியான நிலைமையிலுமில்லை என்றபடி.

ஏலவிக்கின்ற கொண்டுபரபாணத்தைத் திருமார்பிலே அணிந்துள்ளவனை கண்ணபிரானது திருவடிகளிற்சாத்தின திருத்துழாய்மாலையே தனது முடிக்கு அலங்கார மாக வேணுமென்று ஆசைப்பட்டு அது கிடையாமையாலே மெலிகின்றாள்; இதுவே இவ்வண்ணம் என்றுளாயிற்று.

பொன்செய்பூண்மென்முலைக்கு= பொன்மயமான ஆபரணங்கள் பூண்ட முலைக்கு என்கிற பொருளும், விரஹத்தாலே புண்டான பசலையிறம் பொருந்திய முலைக்கு என்கிற பொருளுமுண்டு.

"மென்முலைக்கு வேணும்" என்ற சொல்லைத் தொடங்கி விளைமுற்றுக் கூறி முடிக்கப்பட்டாதே இடையிலே மெலிந்து நின்றுளனாக. .... (10)

மெலியுநோய்தீர்க்கும் நம்கண்ணன்கழல்கள்மேல் *
மலிபுகழ் வண்குருகூர்ச்சடகோபன்சொல் *
ஒலிபுகழாயிரத்து இப்பத்துமல்லவர் *
மலிபுகழ்வானவர்க்காவர் நற்கோவையே. (11)

மெலியும் நோய் தீர்க்கும்	மெலிவை விளைக்கும்படியான பிரிவுநோயைப் போக்கவல்லவனான	ஒலி புகழ்	கொண்டாடப்பட்ட குணபூர்த்தியையுடைய
நம் கண்ணன்	எமது கண்ணபிரானுடைய	ஆயிரத்து	ஆயிரத்திலும்
கழல்கள் மேல்	திருவடி விஷயமாக,	இப்பத்தும்	இப்பத்துப் பாசுரங்களையும்
மலி புகழ்	வளர்ந்த புகழையுடைய	வல்லவர்	நன்கு வல்லவர்கள்
வண் குருகூர் சடகோபன் சொல்	நிருகரிக்குத் தகுதியான ஆழ்வார் அருளிச்செய்த	மலி புகழ்	மிக்க புகழையுடைய
		வானவர்க்கு	நித்யசூரிகளுக்கு
		நல் கோவை ஆவர்	நல்ல சேர்த்தியாவர்.

* * * இந்திருவாய்மொழி கற்றுச் சிற்சிலரிகளோடு ஒரு கோவையாகப் பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிற பாசுரமிது. ஆழ்வார் மெலியுமளவான வளவிலே எம்பெருமான் வந்து முகங்காட்டி ஆற்றுவிக்க வேண்டியிருக்க, அப்படிச் செய்யாமல் முதலடியில் தொலைக்கும். நிருத்துவதை கோத்தவன்று வெள்ளக்கேடாக வொண்ணாதென்று கண்ணன் ஆற்றினகிலனேற் பிரிதுமானறற்று நிற்க, அவர்களும் பிரிவாற்ற மாட்டாதே கண்ணுஞ்சுழிவிட்டுச் சாலவும் வருந்தியிடக்க, இனி உய்யலியல்லை யென்னும்படி முடியுமளவானவாறே *தாரையாகிரமுத்ய கௌரீ: ஸ்மயமாநமுகாம்புஜம், பீதாம் பரா: ஸ்ரக்வி ணமாததாநமத்ர:* என்கிறபடியே பிரகவாசடைப்பிரான் சடக்கெனத் தோன்றி முகங்காட்டியளை ப்ரவித்தமேயன்றே. இன்னமே ஆபத்துக்களிலேயன்று உதவியில்லையுமுண்டு கண்ணபிரான் ஆழ்வார்க்குக் காட்டிகொடுத்து தேற்றுவித்தாலிற்று. இப்படிப்பட்ட எம்பெருமானது திருவடி விஷயமாக ஆழ்வாரருளிச் செய்த ஆயிரத்தின் இப்பத்தும் நன்கவல்லவர்கள் வானவரோடு கல்ல சேர்த்தியாவர்கள். .... (11)

நான்காம்பத்து இரண்டாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

http://acharya.org

நான்காம்பத்து ஏன்ருந் திருவாய்மொழி—கோவைவாயாள்.

உரையவதாரிகை:—மீழ்திருவாய்மொழியின் ஆழ்வார் ஆசைப்பட்டபடியே எல்லாம் பெறும்படி எம்பெருமான் இவ்வோடே கலந்து, தம்முடைய பராப்ரணயித்வத்தை வெளிவிட்டுக்கொண்டான்; அநுகூலன் நிலவும் உலகத்த ஆழ்வார் அந்த நிலைவிற்கு முன்னிலையை இத்திருவாய்மொழியிலே பேசுகிறார்.

இத்திருவாய்மொழியை நம் பூருவாசாரியர்கள் மூன்றுபடியாக நிர்வஹிப்பர்கள். 1. சக்ரவர்த்தி பிடித்துத் தலையுமென்ற அழுகின்ற குழந்தைக்குத் தேங்காயைக் கொடுத்து அழுகையை மாற்றுமாபோலே; புருஷோத்தமனே! நீர்த்திருவாய்மொழியில் தேகாவஸாநவிப்ரக்ருஷ்டங்களைப் பெறவேணுமென்ற ஆசைப்பட்ட ஆழ்வார்க்கு எம்பெருமான் ஒரு ரூபாயாயத்தைப் பண்ணிவைக்க, அந்தாலே, நீர்ப்பிறந்த இழவையெல்லாம் மறந்து அந்த குணத்தையே அநுபவிக்கிறீர் என்று எம்பார் அருளிச் செய்யும்படி.

2. காலத்தால் தேசத்தால் கைகழிந்தவற்றை யநுபவிக்க ஆசைப்பட்ட ஆழ்வாருடைய திருமுகமண்டலத்தை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! நீர் அபேக்ஷித்தபடியே செய்யக்கடவோம்' என்ற ஒருவார்த்தை சொல்ல, அது கேட்டுக் களித்துக் கிரியாபலமறுத்து க்ருதார்த்தராகிறீர்—என்ற திருவுள்ளம்பற்றி அருளிச் செய்யும்படி.

3. எம்பெருமான், ஆழ்வார் அபேக்ஷித்தபடியே செய்து தலைக்கட்ட வல்லவனாகையாலே, (அதாவது) காலம் தானிட்ட வழக்காம்படி காலதிவ்யாயுதனாகையாலே, காலோபாதியைக் கழித்து, அநாதிகாலத்திற் போலேயன்றிக்கே இற்றைக்காலத்திற்போலே ஒரு போகியாக்கிக் கொடுக்க அவற்றை யநுபவித்து மகிழ்கிறீர்—என்ற பட்டர் அருளிச் செய்யும்படி.

அபேக்ஷித்த போகங்களைத்தாராமல் ஏதோவொரு குணத்தை யநுபவிப்பிக்க அதனிலே களித்துப் போகிறாரென்பது, எம்பாருடைய நிர்வாஹம். அபேக்ஷித்த போகங்களைத் தாராவிட்டாலும் தருவதாகமுகம் நோக்கி வாயிலுஞ் சொல்லி மகிழ்வித்தானெம்பெருமான் என்பது, நிருமலர்பிரானின் நிர்வாஹம். அபேக்ஷித்தபடியே அநுபவிப்பித்தருளினானென்பது, பட்டருடைநிர்வாஹம். இங்ஙனே மூன்றுபடியாகவும் நிர்வஹிக்க ஏலுமிதிறே மூன்று என்ற தெரிவித்தவாறு. (*)

கோவைவாயாள்பொருட்டு ஏற்றினெருத்தநிறுத்தாய்! * மதிளிலங்கைக்
கோவையிபச்சிலைருவித்தாய்! குலதல்யானைமருப்பொரித்தாய்! *
பூவையிபாதீர்ஞாலப் போதல்வனாங்கேனேனும் * நின்
பூவையிபாம்மேலிக்குப் பூகம்பாத்தென்னெஞ்சமே. (1)

http://acharya.org

கோவை வாயர் பொருட்டு	கோவைக்கனிபோற் செவ்வ அதரத்தையுடையனான கப்பின்னைப் பிராட்டி நிமித்தமாக
எற்றின்	எருதுகளினுடைய
எருத்தம்	பிடரியை
இறத்தாய்	முறித்தவனே!
மதின்	மதின் சூழ்ந்த
இலங்கை	லங்காபுரிக்கு
கோவை	அரசனான ராவணன்
வீய	முடியும்படியாக
நிலை	சரத்தை விலே
குனித்தாய்	வளைத்தவனே!
குலம் கல் ஆனை	கல்லை ஜாதியிலே பிறந்து அழகியதான குவலய பீடமான யானையினுடைய
மருப்பு	கொம்பை
ஒசித்தாய்	முறித்தொழித்தவனே!
பூவை வீயத் தீர்	புஷ்பத்தை விட்டு நீக்கத் தீர்த்தத்தை [புஷ்பத்தையும் தீர்த்தத்தையும் என்றபடி]
தூவி	பணிமாறி
போதால்	உரிய காலங்களில்
வணக்கேன் எனும்	உன்னைப் பணிந்திலேனென்னும்
என்	உன்னுடைய
பூவை வீ ஆம் மேனிக்கு	காயாம் பூப்போன்ற நிருமேனிக்கு
புகம் சாத்து	சாத்தத் தகுதியான சந்தனம்
என் செஞ்சமே	எனது செஞ்சமேயாகும்.

• • • கப்பின்னைப் பிராட்டி நிமித்தமாக எருதுகளை அடர்க்குப்போதும், விதர பிராட்டி நிமித்தமாக இராவணனை வதிக்குப் போதும் அந்தந்த காலங்களிலுண்டான சிரமம் தீரும்படி அடியேன் அவ்வப்போதுகளில் கல்விமுதலியிருந்த உபசாரங்கள் செய்யப் பெற்றிலேன்; அப்படியிருந்தும் என்னுடைய ஸ்ரீதரத்தையே உனக்குப் பரம போக்யமாகக்கொண்ட விதம் என்னே! என்று கருதுகிறார். அந்தந்த காலங்களில் விரோதசரம் பண்ணப்பெறாத குறைதீர இப்போது என்னெஞ்சதானே உனக்கு விரோதசரமாக வென்றது என்னை பரமதாதிபர்காண்.

கோவலாயர்பொருட்டு= 'பின்னைபொருட்டு' என்னாமல் இங்ஙனே சொன்னது, அவளுடைய வாயழகைக் கண்ட கண்ணபிரான், தன்னைப் பேணாதும் எருதுகளின் கொடுக்கைக்கனிவாயமதும், 'அருந்தொழில் செய்தாகிலும் இவளை சரம் பெற்றே தீர வேணும்' என்று உறுதி கொண்டபடியைக் காட்டுதற்காம். இங்கே சுட்டு ஸ்ரீ மஹதி காண்மின்;—"ரிஷபங்களேழையும் முன்னிட்டு 'இவற்றை அடர்த்தார்க்கு இவளைக் கொடுக்கக் கடவோம்' என்று சொல்லி இவளை அலங்கரித்து முன்னே கொண்டுவந்து நிறுத்தினர்கள்; 'இவளை அநியாயமாயில் இவற்றை முரித்தாலாகாதோ' என்று தன்னைப்பேணுதே அவற்றின் மேலே விழுந்தான்."

மற்றொருவகையான சமப்பொருளும் அருளிச் செய்வதுண்டு; அதாவது—ஒரு தேமுடைத்தவர்க்கு கப்பின்னையை மணம்புரிவிப்பதென்ற கல்யாணகுணம் ஏற்படுத்தப்பட்டிருப்பதான செய்தியைச் செவியுற்ற கண்ணபிரான் பலராமனேதுகூட அவ்விடத்திற்கு எழுந்தருளினபோது, கப்பின்னையின் மன்னைநிரை முந்துறமுன்னம் பலராமன் கிற்க, அவனைக்கண்ட அவன் 'ஒருகால் இவன் ஏருதேமுடித்தானுமில் இவளை மணம்புரிந்து கொள்ளவேண்டி வருமோ!' என்ற இல்லுப்போடே இடைத்தானாம்; உடனே கண்ணபிரான் வந்து தோற்றினவாறே மிக மகிழ்ந்து புல்முதலல் செய்தனளாக, அப்போது அதந்நிலுண்டான பழப்பெயர் கலிதீர்த்துக் "கோவலாயர்" என்றதாக.

http://acharya.org

"பற்றினைநீத்துமிதத்தாய்" என்ற இவ்வடதானத்தை இங்கு முறையிடுவதற்குக் காரணம் யாதெனில்; மாயாமாவின் மேலே பெருமான் தொடருகிறபோது அருகே நின்ற இளையபெருமாள் தெளிந்துநின்று 'இது மாயாமிருகம்; உபேக்ஷணமாயை' என்றுப் போலே சாஸனம் அப்போது [எற்றினைநீத்த மிதத்தபோது] 'இவை அனுராகவேஷம் பொருந்தியவை' என்று சொல்லியிருந்தவரோ; அற்றோ! அது செய்யப் பெற்றிலேனே! என்னும் குறையைக் காட்டுதலாய்.

மதிவிலங்கைக்கோவையியச் சிலைதனித்தாய்!= கோத்திற்கு மதிளுடை மைவிசேஷத்தைச் சொல்ல வேண்டியதன்றிருக்க, இங்குச் சொன்னதற்குப் பின்னே ஒரு கருத்தருளிச் செய்கிறார்—இராவணன், சர்வாதிகனான ஸ்ரீகல்யாணத்தை இருமகனுரைத் தனக்கு ரக்ஷகனாக நிக்கவேண்டியிருக்க அது செய்யாதே இந்த மதிளே காக்கு ரக்ஷகம் என்றி ருந்தானிறே; 'இம்மதிளும் ஈரும் உயிரே கடிகு' என்று இறுமாப்புக் கொண்டிருந்தானிறே; அது நோன்ற அருளிச் செய்தருளிச்செய்த. இராவணன் விரோதமாக தேவரீர் நிலை நிறுத்த காலத்திலே விபீஷணாழ்வான்போல்வாரைப்போலே அருகே நின்ற ஒன்றும் உதவப் பெற்றிலேனே! என்னுங்குறையை இங்குக் காட்டியிருக்கின்றபடி. கோவை என்ற விடத்து இரண்டனுருபுக்கு விவக்ஷையில்லை.

நலதல்யாமோருப்போச்த்தாய்!= முலையாகிற பெண்ணும் பதயாமோயை மதமூட்டிக் கம்மன் தனது ஆண்மை வாசலிலே நிறுத்திவைக்க, அதன் கோப்பை முறித்து அத்தோடே போர் செய்கிறபோது "ஆனைவை செய்தறிவார் அஞ்சனமாமலைபோலே, மேனிவளைத்தடல் வேழம்விழ முனிந்து" இதுபோலிப்படியே 'அற்றோ! பரமகாருணிகரான இக்கண்ணபிரானுடைய வடிவெங்கே! இந்த மூர்க்கப் பாம்பு எங்கே!' என்று கலிதெளித்த மதுரையிற் பெண்களின் நிலைமைகின்று தாமும் உருகப்பெறுத குறையைக் காட்டிக் கொள்ளுகிறபடி.

பூவைவியா= 'வியா' என்பதை 'செய்யா' என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சமாகக் கொண்டு 'புஷ்பங்களைப் பணியாதே' என்று பொருள் கொள்வதுமுண்டு; அன்றியே, 'வியா' என்பதை ஏதிச்சாறப் பெயரெச்சமாகக் கொண்டு 'புஷ்பங்களை விட்டு கீழ்நாத கைத்தலம்' என்றுரைத்தலுமுண்டு; புஷ்பங்களோடு கூடின கீழ் என்றபடி: புஷ்பங்களையும் கையும் பலியாதே என்றதாயிற்று. **போதாம்வணங்கேளாய்**—ப்ரஹ்மேபரேசட்டிக்காக ஸருதேழுடச்சபோதென்ன, விபரிசட்டிக்காக இரவணனோடு பொருதபோதென்ன, மதுரையில் கந்தரவ பதயாமோயோடு பொருதபோதென்ன, ஆகிய இப்போதுதலிலே உடனிருந்து உபசாரங்கள் செய்யப்பெற்றிலேனிறே என்றபடி.

நின்பூவைவியாமேலிக்க என்னெஞ்சமே பூகஞ்சாந்து= உன்னுடைய திருமேனிக்கு எனது நிருதயமே உபசாரம்; அதாவது—அந்தந்த ஸமயங்களில் உடனிருந்து உபசாரங்கள் பண்ணப்பெற்றிலேனே! என்ற இப்போது குறைப்படுகின்றதற்கு நெஞ்சே காரணமாதலால் இத்தனைய கேடுகள் உண்டாயிருக்கப் பெற்றமிதலே உபசாரப்பாயம் எனறபடி. அன்றியே, உனக்குப் பூகஞ்சாந்து என்னெஞ்சமாய்விடுவதே! என்று நடு

http://acharya.org

ப்படுகின்றாளாகுமாம். என்னெஞ்சினே யப்பெருமான்! இத்தனை யுகப்புச் செய்வதே! என்றவாறு.

பூவைவீ— பூவைப்பூ; காயாம்பூ. வீ என்ற பூவுக்கும் பெயர். "வீயகம் நெடுஞ்சினை" (36) என்ற புறநானூற்றில் காண்க. பூவைவீ-போல்—பூவைப்பூப்போன்ற தான் என்றபடி. .... (1)

பூகஞ்சாந்தென்னெஞ்சமே புகையுங்கண்ணியெனதுடையீ*
வாசகஞ்செய்மாலையே வான்பட்டாடையுமஃதே *
தேசமானவணிகலனும் என்கைகூப்புச்செய்கையே *
சன்னலமுண்டுமிழ்ந்த எச்சிலோகரார்த்திக்கே. (2)

சன்	எப்பெருமான்
நலம் உண்டு உமிழ்ந்த எச்சில்	(ஒரு காலத்திலே) உலகங்களை உண்டு (மற்றொரு காலத்திலே) வெளிப்படுத்தின எம்பெருமானும்
எனக்கு	ஒப்பற்ற நிலைமையான மிக்க ஞானத்தையுடையதாயும் விருப்பத்தை பெருமானுமான
பூகம் சாந்த என் நெஞ்சமே புகையும் கண்ணி	பூவைப்பூ நிறமுள்ள சந்தனம் என் மனமேயாகும்; அணிந்து கொள்ளுதற்கு உரிய மாலை
எனதுடைய	என்னுடைய
வாசகம் செய் மாலை	வாக்கினால் தொடுக்கப்படுகின்ற சொல்மாலையேயாம்;
கலம் பட்டு ஆடையும்	சிறந்த திருப்பரி வட்டமும்
அஃதே	அந்தச் சொல்மாலையேயாம்;
தேசம் ஆன அணி கலனும்	தேஜஸ்ஸையான அணிகலன்களும்
என் கை கூப்பு செய்கை ஏ	எனது அஞ்சலிபந்தமே யாம்

* * * தமது மனமொழி மெய்களாகிற மூன்சாதனங்களும் எப்பெருமானுக்கு ரூப பரம போக்யமாகின்றனவாகை விபத்து கூறுகின்றார். எப்பெருமானது திருமேனியின் வைலக்ஷண்யத்தையும், அவன்றனக்குத் தம்மிடத்து உண்டான விருப்பத்தையும் சிந்தனை செய்து, நான் சொல்லுகையே மீண்டும் வாய்வெருவுகிறபடி.

எனதுடைய வாசகஞ்செய்மாலையே புகையுங்கண்ணீ= எப்பெருமான் பூமாலை கள் அணிந்து கொண்டால் என்ன துணிந்துவல்லபிராட்டியோ அது தமது சொல்மாலையை ஏற்றுக்கொண்டதனால் இறைவிக்கு என்றபடி.

வான்பட்டாடையும் அஃதே= தமது சொல்மாலையை எப்பெருமானுக்குப் பிரதாபம் பண்ணினார். அழகிய வஸ்திராபரணாதிகளுக்கு உலகில் மதிப்பு ஏற்படுவதில்லை; எப்பெருமானுக்கு ஆழ்வாருடைய செவ்வி இல்லையாகில் மதிப்பு ஏற்படாதென்பது மேற்பாசுரத்தில் காட்டினர். இங்கே வாயினீர்மேடு காண்மின்;—"ஆழ்வாருடைய உகந்தருளினை அணிகலங்களும் சோபாவஹமான பரிவட்டமும், இவருடைய பாசுரமாகிற பட்டாடையாயிற்றுக்காணும். 'கல்ல நாமாகவேண்டும்' என்ற அடியிலே சொற்றுத் தோற்றவிரே."

என்கைகூப்புச்செய்கையே தேசமானவணிகலனும்= ஆழ்வார்தாம் ஒரு அருமை பண்ணினால் அதுதன்னை எப்பெருமான் தன்னை வாய்பாடை பூவிலதனைக் கருதுகின்றான்

http://acharya.org

போதும். **அஞ்ஜலி** என்பதற்கு "அம் ஜலயதி" என்ற வ்யுத்பத்தி கூறுவர்; அகாரவாச்யனான எம்பெருமானே சேர்ப்பண்டாரக உருக்குலைய வென்றபடி. "நின்தலையைத் தாழ்த்து இருகை கூப்பென்றால் கூப்பாத பாபிஷ்ட விதி" என்கிறபடியே ஒர் அஞ்ஜலிமாத்திரமும் அரிதாய இக்கிலத்தில் அது கிடைக்கப் பெற்றால் எம்பெருமான் மிக்க புகழ்பெற்று விளங்குவனென்பதில் ஐயமில்லை.

ஸர்வேச்வரனுயிர், ஜகத்துக்கு ஸ்வப்ரகார ரக்ஷகனுயும், அந்தத் தன்மையினால் என்னே விடுபடுத்திக் கொண்டவனுயும் அதிரியமான நிருமேனியையுடையவனுயுமிருக்கிற எம்பெருமான் இப்படியெல்லாம் இருக்கிறவனே! என்பது ஈற்றடியின் கருத்து. .... (2)

ஏகமூர்த்தியிருமூர்த்தி மூன்றுமூர்த்திபலமூர்த்தி
யாகி * ஐந்துபூதமாய் இரண்டுகடராயருமாகி *
நாகமேறிநடுக்கடலுள்துயின்ற நாராயணனே! * உன்
ஆகமுற்றுமகத்தடக்கி ஆவியல்லல்மாய்த்ததே. (3)

ஏக மூர்த்தி	காரணபூதமான ஒரு மூர்த்தியாய்	இரண்டு கடர் ஆய்	ஸர்வ சக்திரான ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமுமுடையனும்
இரு மூர்த்தி	(ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் மே) ப்ரக்ருதி மஹான் எனச் சரீரமாகக்கொண்டு நிற்கும் மூர்த்தியாய்	அரு ஆவி கடல் நாகம் பதி துயின்ற காரணனே உன் ஆகம் முற்றும்	ஸர்வாத்தர்யாமியாய், நிருப்பாற் கடல் நடுவே திருவனந்தாழ்வான் மீது எறி நிருக்கண்வளர்ந்தருளின காரணனே! உன்னுடைய திருமேனியையும் அதற்கு வேண்டிய மற்றெல்லா வற்றையும்
மூன்று மூர்த்தி	ஸாத்விகமாயும் ராஜஸமாயும் தாமஸமாயும் மூன்று வகைப்பட்ட அஹங்காரத்தை வடிவாகக்கொண்ட மூர்த்தியாய்		
பல மூர்த்தி ஆய்	மஹத் முதலிய காரணங்களே வடிவாகவுடையனும்	அகத்த அடக்கி ஆவி அல்லல் மாய்த்ததே	எனது நெஞ்சினுள்ளே அடக்கிவைத்த உன் திருவுள்ளம் இப் பீடிக்கப்பெற்றதே!
ஐந்து பூதம் ஆய்	பஞ்ச பூதங்களே வடிவாக வுடையனும்		

* * * இப்திருவாய்மொழியில் தாரக்ருண்டான ஆற்றலை நேரப்பெற்றமை யை இக்கருஷிச்செய்கிறர். **ஏகமூர்த்தி**-என்றடிக்கு முன்பு ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைத் தெளிவித்துரைத்துக் கொண்டு ஒரே மூர்த்தியாக இருக்குமிருப்பை அருளிச் செய்தபடி. **இருமூர்த்தி**= என்றடியிலே உக்முகனைப் ப்ரக்ருதி மஹானாக என்ற இரண்டு தத்துவங்களையும் சரீரமாகக் கொண்டு நிற்கிற நிலையைச் சொன்னபடி. **மூன்றுமூர்த்தி** = ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்ற மூன்றுவகைப்பட்ட அஹங்காரமென்கிற தத்துவத்தைச் சரீரமாகக்கொண்டு நிற்கும் நிலையைச் சொல்லுகிறது.

பலமூர்த்தியாகி ஐந்துபூதமாய்= ஸாத்விகாஹங்காரத்தின் காரியமான பதினொரு இந்திரியங்களையும் தாமஸாஹங்காரத்தின் காரியமான நிலம் நீர் தீ கால் விசும்பு என்கிற பஞ்ச பூதங்களையும் சரீரமாகக் கொண்டிருக்கும்படியைச் சொன்னபடி.

http://acharya.org

கோமுத்தி—பரமாகாசத்தையுமுத்தி; **இருமுத்தி**—பரமாகாசத்தேவன் வாழ்கின்ற வானுலகத்தேவன் ஆகிய இரண்டு முத்தி. **மூவிரு முத்தி** – ஸங்கர்ஷண அநிருத்த ப்ரத்யும்ந மூர்த்திகள். **பலமுத்தி**—"கல்லிலும் மேலவிபரசரர்ப் பிறக்தாய்" என்கிற அதேக விப வாதாரமூர்த்திகள் என்றுமைப்பாருமுண்டு.

இண்டுகடாய் = மனிய சுந்தரக்கிழ் சொல்லுகிறது; இவ்விருவரைச் சொன்னது கார்யகரர்க்கங்களை யெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம்.

அடு ஆசை= ஒவ்வொரு பொருளிலும் அநுப்ரவேசித்திருக்கும்படியைச் சொல்லுகிறது. **அடு**—அநுபவி.

[**நாகமேறி** இத்யாதி.] விருத்திக்கப்பட்ட ப்ரமன் முதலியோர் வந்து அடி பணிதற்குப் பாங்காகத் திருப்பாற்கடலிலிடையே திருவனந்தாழ்வான்மீது சாய்ந்தருளினவனே!

[**உன் ஆகமுற்றும்** இத்யாதி.] **ஆகம்**— உடம்பு; உடம்புக்கு வேண்டியவை யனைத்தையும், பூமாலை, திருப்பரிவட்டம், ஆபரணம் ஆகிய இவற்றை (இலக்ஷணையால்) சொல்லுகிறது. **உன் ஆகமுற்றும்**—உன் திருமேனிக்கு வேண்டியவற்றை யெல்லாம்; **அகத்து அடக்கி**—என்னுள்ளே உண்டாம்படி பண்ணி; (அதாவது, இரண்டு பாட்டுக்களிற் கூறியபடியே அனைத்தையுங்கொண்டு.) **ஆவி**—உன் சரீரத்திலிருந்த, **அல்லல்**—துயரம், **மாய்ந்தது**—போக்கிக்கொள்ளப் பெற்றது.

'என் ஆவி' என்றுமது 'என்துயர்' என்றுமது சொல்லாமையாலே இரண்டு வகையாகவும் கொள்ளப் பொருந்தும். இங்கே நம்பிள்ளைபடி;—"உன் திருவுள்ளத்திறுவ்டாலை அல்லல் ஒருபடி விளக்கப் பெற்றதே!. இத்தனையை ஒருபடி கைமாறுகொள்ளாத நீ க்ருதக்ருத்ய னாகை. அன்றிக்கே, என்னுடையானது நித்யஸம்சாரியி னுடையதாய்."

.... (3)

மாய்த்தலெண்ணெயமர்ந்தடுத்த மாயப்பேயுயிர்
மாய்ந்த * ஆயமாயனே! வமனனே! மாதவா! *
பூத்தண்மாலைகொண்டு உன்னைப்போதாலணைக்கேனெனும் * நின்
பூத்தண்மாலைதெடுமுடிக்குப் புனைவற்கண்ணியெனதுயிரே. (4)

மாய்த்தல் எண்ணி
வாய்
முலை தந்த
மாயம் பேய்
உயிர்
மாய்ந்த
ஆயி மாயனே!
உன்னை
நீ தன் மாலை
கொண்டு

மூடிப்பரந்த கிளைத்த
வலிலை
கஞ்ச நிற்கிய முலையை வைத்த
பூதனையினுடைய
பிராணனை
முடித்தவிட்ட
வாமனனே! மாதவா!,
உன்னை
பூக்கள் தொடுத்தும் குளிர்த்த
மாலைகளைக்கொண்டு

போது
வனச்சேல்
எனும்

நின்

நீ தன் மாலை
கொய் முடிக்கு

புனையும்
கண்ணி
எனது உயிரே

கல்லப்போலுவின்
வழிபாடு செய்யப்பெற்றி
லேதுகிறாம்

உன்னுடைய

புஷ்பமயமாய்ச் செய்யிய மாலை
யாலே அலங்கரிக்கப்பட்ட
சீண்ட திருமுடிக்கு

அலங்காரமாய்ச் சாத்துகின்ற
மாலை
என் பிராணனாவதே!

http://acharya.org

* * * பூதனையை முடித்தல் முதலான செயல்களில் விடாய்ந்து வந்துள்ள சிரமபரிகாரம் பண்ணப்பெற்றிலனேனும் உன் திருமேனிக்கு யாதேனுமோர் உபகாரமாய்விட்டதே யென்றிருப். கம்சன், தன்னைக் கொல்லப்பிறந்த தேவகிபுத்திரன் ஒளித்து வளர்த்தனையறிந்து, அக்குழந்தைகளை காடியுளைக்க கொல்லும்பொருட்டுப் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி கள்ள பெண்ணுருவத் தோடு இடையே திருவாய்ப்பாடிக்கு வந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ண னிடத்தைச் சேர்ந்து தனது நஞ்சு தோய்ந்த முலையைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவா னவள் குறும்பை அவ்வளவிலே தலைமடங்காக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி, அவள் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு சாம்பு களின் கட்டெல்லாம் கீழ்மேலழுந்த இறக்குப்படி செய்தனன் என்ற வரலாறு இங்கு அறியத்தக்கது.

"முகப்பத்தலைண்ணி" என்றவிடத்து 'இன்னுரை மாய்த்தல்' என்ற கிரியன் சொல்லாமையாலே 'உலகத்தையே மாய்க்கவெண்ணி' என்றும் பொருள் கொள்ளலாம். கை நகச்சரீரியான கண்ணபிரான் கலிய கிளர்ந்தது உலகத்தையே உபஸம்ஹாரம் பண்ண கிளர்ந்தபடி யாருமன்றே. அவன் பேயாய் வருகையன்றியே தாயாய் வந்ததனால் 'மாயப் பேய்' எனப்பட்டது.

வாமனனே!= க்ருஷ்ணாவதாரத்தில் பூதனை முலைகொடுத்தபோது அதற்கு மாற்ற மருந்தாக முலை கொடுக்கைக்கு ஒரு தாயாகிறாயிருந்தாள்; 'வெல்கொல்லையுண்டானை மீட்டாய்ச்சி தூட்டுவான் தன் கொல்லை வாய்வைத்தான் சார்க்க" என்றும் 'பேய்ச்சி பாலுண்ட பெருமானைப் பேர்த்தெடுக்க ஆய்ச்சி முலைகொடுத்தாளஞ்சாதே" என்றும் பேயாழ்வார் அருளிச்செய்து வைத்தாரே. அழகியமணவாளபடி, வாமனனைப் பெற்றிட்டு வைத்துத் தாயும் தமப்பனும் தபஸ்ஸிலே அபேக்ஷராயிருக்க, தூணாயர்க்குறி [மறைபொருள்] விருத்தனிடத்தே தானே சென்று பிட்டுப்படியாயிற்றே; அக்காலத்திலே தாம் உடனிருந்து உபசாரம் செய்யப் பெறுமைக்கு ஏங்குகிறபடி.

மாதவ!= லக்ஷ்மீ வல்லபனே! என்றபடி. "நோன் நிருமுடையார்க்கில்லை" என்று ஒரு பழமொழியுண்டு; செல்வமுடையார்க்கு ஆபத்து ஒன்றும் வாராது என்ற வாது. இப்பிச்சொன்ன அபாயங்களில் எம்பெருமான் தப்பிப்பிழைத்தது பிராட்டியின் கடாக்ஷத்தினு லென்கிறச் போலும்;

ஆரப்ய சைசவமனாரதயப்ரயத்னாத் யத்பூதனாரநிலிபதத்தரணம் முராரே:
தல்யாணி ருக்மிணி முகாம்புஜ நிர்வ்ருதி மாங்கள்யனாதமஹிமா கமு தஸ்ய நேதை:

என்ற ச்லோகம் இங்கு அநுஸந்திக்க வுரியது. லக்ஷ்மீகடாக்ஷமிருக்கும்போது அபாயம் புகுர ப்ரஸக்தியில்லையாயினும் இருவருமான சேர்த்திக்கு மங்களாசாஸனம் பண்ண ப்ராப்தியுண்டே; "மடிவாய் இன்னலமாய்பிலில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்ன வேண்டுமே; அது தவறின குறையை நினைக்கிறரென்னலாம். பாற்கடல் கடைந்த காலத்தில் பிராட்டி திருமார்பிலே வந்து சேருமபோதும், வாமனனுய் மாவலிபக்கல் எழுந்த ருளினபோதும், பேய்ச்சி முலை கவைத்தபோதும் உடனிருந்து உபசாரம் செய்யப்

http://acharya.org

பெற்றிலேனெனிலும், உன்னுடைய திருமுடிக்கு அலங்காரமாகச் சாத்தும் மாலை என்னுடைய ப்ராணனுகதே! என்கிறார். தம்முடைய ஸ்தானத்தையே இங்கு ப்ராணனுகச் சொல்லுகிறபடி. .... (4)

கண்ணியெனதுயிர் காதல்கைகச்சோதிமுடிமுதலா *
எண்ணில்பல்கலன்களும் ஏழுமாடையும் அஃதே *
நண்ணிமுழுலகும் நவிற்றும்கீர்த்தியும் அஃதே *
கண்ணனெம்பிரானெம்மான் காலசக்கரத்தானுக்கே. (5)

காலம் சக்கரத் தான்	காலத்தை நடத்துகிற நிரு வாதிபையுடையவனும்
எம்மான்	எனக்கு ஸ்வாமியாய்
எம் பிரான்	எனக்கு மநோரதபரகாஷ்டை
கண்ணனுக்கு	ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்கு
எனது உயிர்	என் ஆத்மாவும்
கண்ணி	மாலை போல் போக்யமாகை கின்றது;
காதல்	எனது ஆசையானது
கனகம் சோதி முடி முதல் ஆ	பொன்மயமாய் ஒளியையுடைத் தானதிருவபிஷேகம் முதலாக
எண் இல் பல் கலன்களும்	எண்ணற்ற பல திருவாபரணங் களாக ஆகா கின்றது;
எழு ஆடையும்	ஏற்றதான பீதாம்பரமும்
அஃதே	அக்குச் சரதேயம்;
மூ உலகும்	மூவுலகங்களும்
கண்ணி	இட்டி
கவிற்றும்	தரிக்கின்ற
கீர்த்தியும்	புகழும்
அஃதே	அக்குச் சரதேயம்.

* * * தம்முடைய உயிரையும் காதலியும் எம்பெருமான் பேரப்பொலிய அபிமானித்தபடியைப் பேசுகிறார். **எனது உயிர் கண்ணி** — என்னுடையதாக அபிமானித்திருக்கிற உயிரை எம்பெருமான் தனக்கு மாலையாகக் கொண்டானென்கை. இங்கே ஒடு— "மார்வத்து மாலே * என்கிறவளவிலே தனக்கு மாலையாகக்கொள்ளுகை ப்ராப்தம்; அதொழிய என்னுயிரையல்லவோ தனக்கு மாலையாகக்கொள்ளுகிறது" என்பதாம். மாலையாவது கொண்டாலென்ன ஆனந்தமுண்டாகுமோ அந்த ஆனந்தம் என்னுயிரினால் எம்பெருமானுக்கு உண்டாகிறது என்ற படி.

கனகச்சோதி முடிமுதலா எண்ணில் பல் கலன்களும் எனது காதல் = வைவர்ண்யமயமாய் ஒளியிலக்கு இடம் முதலான எண்ணிறந்த பல திருவாபரணங்களும் என்னுடைய காதல் என்றபடி. அதாவது இவருடைய காதலுக்குருத் தான் இலக்காகப் பெற்றதுண்டே அது தன்னையே தனக்குப் பல திருவாபரணங்கள் சாத்தினதாக அவன் திருவுள்ளம்பற்றி யிருக்கிறபடி.

ஏழுமாடையும் அஃதே = அந்தக் காதலியே பீதாம்பர மணிந்ததாகவும் எம்பெருமான் அபிமானிக்கிறனென்கை. ஆடைக்கு ஏழும் என்று விசேஷணமிட்டது, எம்பெருமான் தனக்கும் பீதாம்பரத்திலே மிக்க ருசியுமுண்டாயைக் காட்டும். தான் உகந்து வற்புறுத்திக்கொள்ளுகிற என்றபடி. இவ்விடத்து ஈட்டில் ஒரு ஐதிஹ்யமுண்டு; அதாவது— "ஒருகால் ஸ்ரீவைஷ்ணவ வல்லுத்தாள் திருப்பரிவட்டங்களை அழுகியதாக வாட்டிக் கொண்டு வந்து [லலைவசெய்து கொண்டுவந்து] எம்பெருமானுக்குக் காட்ட, அவரும் பரமதிருப்தியடைந்து அவளைப் பெருமான் திருவடிகளிலே கொண்டு புக்கு 'இவள் வெகு

http://acharya.org

மனோஹரமாகத் திருப்பவிவட்டம் திருத்திக்கொண்டு வந்திருக்கிற படியைத் திருக்கண் சாத்தியருளவேணும்' என்று சொல்லித் திருப்பவிவட்டங்களைக் காட்டியருள, பெருமாளும் கண்டு உகந்தருளி உடையவரைநோக்கி 'வாரீர்! இவற்றுக்காக, முன்பு பறவை கம்பிரத்தில் சென்ற குற்றம் பொறுத்தோம்' என்ற திருவாய்மொழிக்கருளினோம்" என்று —வண்ணன் முன்புசெய்த குற்றமாவது—கண்ணபிரானும் பலராமனும் அக்ரூரரால் அழைக்கப்பட்டு மதுரைக்கு எழுந்தருளினபோது அந்தரிக்ஷத்தில் சாலுவனிடத்தில் கம்பனுடைய வண்ணன் தலைமூட்டைகளைக் கண்டுகொண்டது, இவ்விருவரும் அவனிடத்தில் வந்தம் விருப்ப, அவன் கொடாதொழிந்தது.

மூவுலகும் தண்ணீர் நவிற்றம் நித்தியம் அஃதே—தாமுடைய காதலியே எம் பெருமான், மூவுலகிலுள்ளாரும் தன்னைக் குறித்துப் பண்ணுகிற ஸ்துதியாகத் திருவுள்ளம் பற்றினன் என்க. ஆழ்வாரொருவர் கடல்புகைய விலக்கிய காதலோடு எப்பெருமானைத் துதிப்பதானது மூவுலகும் ஒன்றுசேர்ந்து துதித்தாப்போலுள்ளது என்றவாறு.

இதெல்லாம் யாருக்கென்னில், **கண்ணனெம்பிரானெம்மான் காலைக்காத்** **தானுக்கே**—கையும் திருவாழியுமான அழகைக்காட்டி என்னை வீடுபறித்திக்கொண்ட பெரு மானுக்கு என்றபடி. **காலைக்காத்தான்**—கடலைத்தடுத்திலிற திருவாழியையுடையவன் என்னை. பாசுரப்போசில் பகவத்விஷயாகின்றவை நினைக்கத்தக்கது. காலைக்காத்தை இச் வதிப்பவனான எப்பெருமான் எல்லாம் பொருள் கூறலாம்; கீழ்த் திருவாய்மொழியில் இவர் விரும்பினபடி காலேபாதியைக் கழித்துப் பூர்ணாயுஸைப் பல்லாண்டிசைத்ததற் கிணங்க இங்ஙனேயருளிச் செய்தபடியாகவுமாம். 50

காலைக்காத்தொடு வெண்சங்கம் கையேந்தினாய்! *
ஞாலமுற்றுமுண்டுமிழ்ந்த நாராயணனே! என்றென்று *
ஓலமிட்டுநானழைத்தால் ஒன்றும்வாராயாகிலும் *
கோலமேனிசென்னிவிக்ந உள்கமலமன்னகுரைகழலே. (6)

காலன் சக்கரத் தொடு } (பகைவனையழிப்பதில்) எங்கள் போன்ற திருவாழியோடுகூட
வெண் சங்கு அம் கை வந்தினும் ஞாலம் முற்றும் உண்டு உமிழ்ந்த } வெளுத்த சங்கத்தை அழகிய திருக்கையிலே தரித்திருப்பதனே! உலகமுழுவதையும் ஒருகால் விழுங்கி மற்றொரு கால் வெளிப்படுத்தின
காராயணனே என்று என்ற } காராயணனே! பலகால் சொல்லி

நலம் இல்லை நான் அழைத்தால் ஒன்றும் வாராய் ஆகிலும் } கூப்பிட்டு நான் அழைக்க நீ நிற்கும் வித்தகமாம் போலிலும்
உன் கமலம் அன்ன குரை கழல் } உன்னுடைய தாமரை மலர்போன்ற ஒளிவீசுகின்ற திருவடிகள்
என் சென்னிக்கு கோலம் ஆம் } எனது தலைக்கு அலங்காரமாகின்றன.

* * * மேற்பாசுரங்களில் எப்பெருமானுடைய ப்ரணயித்வம் சொல்லிற்று; இப்பாசுரத்தில் தம்முடைய ப்ரணயித்வம் சொல்லுகிறது. **காலன்** என்று யமனுக்குப் பேராதலால், எதிரிகளுக்கு யான் போன்றதான சக்கரம் என்று பொருளாகலாம். திருவாழி திருச்சங்குகளைக் கையிலேந்தினவனே! என்றும், ப்ரளயபத்திலே உலகங்களை

http://acharya.org

என்னது ஆவி மேலோய்	என் ஆத்மவஸ்துவிலே அபிநிவேசமுடையவனே!
ஏழ் கொள் ஏழ் உலகமும்	அழிய வகை லோகங்களிலும்
தன்னில்	பூர்ணமாக வியாபித்து
முற்றும் ஆகின்ற	கை பதார்த்தங்களும் தனக்கு ப்ரகாரமம்படி கின்ற
சோதி ஞானம் மூர்த்தியாய்	சோதிமயமான ஞானத்தை ஸ்வரூபமாகவுடையனே!
என்னது ஆவி	என் ஆத்மவஸ்துவும்
உன்னதும்	கீழிட்ட வழக்காகவும்
உன்னது ஆவி	உன் ஆத்மவஸ்துவும்
என்னதும்	காவிட்ட வழக்காகவுமான
இன்ன வண்ணமே நின்றாய்	இப்படியிலே நின்றாய்;
என் உரைக்கேன்	இதற்கு என்ன பாசுரமிட்டுச் சொல்லுவேன்?.

* * *—எனக்காக லோகங்களையும் வியாபித்து என்னிலையில்கரித்த உன் படி பேச்சுக்கு நிலமன்று என்கிறார்.

என்னதாவி மேலோய் என்பதற்கு இரண்டுபடியாக நிர்வஹம்; —என்னுடைய ஸத்தையைப்பெற்று அத்தாலே மிகுந்த ஞானத்தை படைத்தவனே! என்றுமாம்; என்னைப் பெறவேணுமென்கிற ஆகிஞ்சந்யமுடையவனே! என்றுமாம். உன்னதான சொல்லடியும் இவ் விரண்டுவகை நிர்வஹத்திற்கும் ஸ்வரஸமே இடந்தருகின்றதென்னில்; என்னதாவி மேலோய் என்பதற்கு என்னுடைய ஆவியின்மேலே மிகுப்பவனே! என்பது பதப்பொருள்; மேலே காட்டிய இரண்டு வகையான கருத்தும் இதில் உறையும்; ஆகிஞ்சந்யப்பட்ட ஒருவன்தனைப் பெற்றவிட்டவன் விஷயத்திலும் பெற நினைப்பவன் விஷயத்திலும் இவ்வளவே சொல்லத்தகும். கீதையில் ஸப்தமயுத்தாகாம் என்பதற்கு "ஸ ததோ மாமகாஸ்தாஸ்ரா நாடி—ததோயாகர் காண்டவாரணாகம்" என்று எம்பெருமானார் பொருள் பணித்ததும் இங்கு ஒரு புடை ஒப்புநோக்கத்தக்கது.

பெற்றுத் தீர்த்துவிட்டதாகச் சொல்லுகிற அர்த்தமும், பெறவேணுமென்ற ஆவல் கொண்டிருப்பதாகச் சொல்லுகிற அர்த்தமும் ஒன்றோடொன்று பொருந்தாதனவால் மேலே காட்டிய இரண்டு நிர்வஹங்களிலும் விகல்பமாகக் கூறியிருப்பது எங்ஙனே பொருந்துமென்ற சங்கை பிறக்கக்கூடும். இவ்விசாரங்களுக்குப் பொருந்தாமையொன்றுமில்லை. ஆழ்வார் விஷயத்திலே எம்பெருமான்பெற நினைத்திருக்கும் அளவுகள் பல பலவுண்டு; அவற்றில் பெற்றத் தீர்க்கட்டியலை நிலை; இனிப் பெறவேண்டியலை நிலை; எந்த வண்ணம் பெற்றுத்தீர்ந்தோம், அந்நிலையே நீடுநிற்கவும் என்னதாகக் கூறினவண்ணம் நிரோதமுள்ளது என்றவாக்கு.

[ஏழ்கொள்ஏழுலகமும் இத்யாதி.] இதற்கும் இரண்டுபடியாக நிர்வஹம்; என்னதாவி மேலோய்! என்பதற்கு 'என்னுடைய ஸத்தையைப் பெற்ற அத்தாலே மிகுந்த ஞானத்தை படைத்தவனே! என்ற பொருள் கொள்ளும்படத்தில் அதற்குச் சேர இதற்கும் பொருள் கொள்ளவேண்டும்; எற்கெனவே எம்பெருமான் எங்கும் நிறைந்திருந்தாலும் இப்போது ஆழ்வாரைப் பெற்ற பிரியமாலே அத்தல்யாப்தி இப்போதே ஸபலமானதாக எம்பெருமான் நினைத்த நினைவு தோற்றச் சொல்லுகிறபடி. இதற்கு முந்தி வ்யாபகனன்றிக்கே இப்போது தான் வ்யாபகனாவு மென்றபடி. 'என்னதாவிமேலோய்!' என்பதற்குக் கூறிய இரண்டாவது நிர்வஹத்திற்குச் சேர, தன்னை அகப்படுத்திக் கொள்ளுகைக்காக எம்பெருமான் எங்கும் வியாபித்திருக்கிறானாகக் கூறவதாய்ப் பொருள்கொள்ளவேணும். மற்று;—"[ஏழ் கொளித்யாதி.] இவரைப் பெற்ற ப்ரீதியாலே வ்யாப்தியும் புதுக்கணித்ததென்றுமாம்; ஒரு வரைப் பிடிக்க நினைத்த அவன் பல்லாண்டாலே அதிவேசத்தாலே மாரைவலைவாரைப் போலே, தன்னை அகப்படுத்துகைக்காக வ்யாப்தனாய்நின்றானென்னுமாம்."

http://acharya.org

[உன்ன தென்ன தாலியும் இத்யாதி.] என் ஸ்வரூபம் நீ இட்ட வழக்கு, உன் ஸ்வரூபம் நானிட்ட வழக்கு என்பது தேர்த்தபொருள். இவ்விடத்தை ஆளவந்தார் அருளிச் செய்யும்போது கேட்டிருந்த முதலிகளிலே சிலர் 'ஜீவாத்மாவின் ஸ்வரூபம் பரமாத்மா இட்ட வழக்கு என்னும் இதில் பொருத்தமாம் வொன்றுமில்லை; பரமாத்மாவின் ஸ்வரூபம் ஜீவாத்மா இட்டவழக்கு என்கிறதே, இதுவென்? இது பொருத்துமோ?' என்றுரைசெய்தார். அப்போது ஆளவந்தார் அருளிச்செய்தபடி—"இவன் அவனிட்டவழக்கு என்கிற விஷயத்தில் கர்மம் தடையாகநிற்கவுங்கூடும்; ஸர்வேச்வரன் தன்னை இவனிட்ட வழக்காக்குமிடத்தில் தடை செய்வாரில்லை; ஆனபின்பு 'உன்னதாகி என்னது' என்பதுதான் நிர்விவாதம். 'என்னதாகி உன்னது' என்றதில் சிலர்கள் விவாதப்பட்டால் படாமேவல்லது 'உன்னதாகி என்னது' என்றதில் விவாதப்பட வொயாதில்லை" என்றும்.

இப்படி ஒரு சீராகக் கலக்கு பரிமாறும் ப்ரணயித்வருணம் என்னுல் பேசித் தலைக் கட்டலாயிருந்ததோவென்ன முடித்தாயிற்று. .... (ஆ)

உரைக்கவல்லேனல்லேன் உன்னுலப்பில்கீர்த்திவேள்வளத்தின் *
கரைக்கணேன்றுசெல்வன்கான் காதல்மையலேறினேன்*
புரைப்பிலாதபரம்பரனே ! பொய்யிலாதபாற்சுடரே ! *
இரைத்துக்கல்வமேன்மக்களேத்த யானுமேத்தினேன். (ஈ)

புரைப்பு இலாத பரம்பரனே	புரையற்ற பரத்வம் பொருந்திய எம்பெருமானே!
பொய் இலாத	(என்றேதென்டான கலவியில்) பொய்யில்லாத
பரம் சுடரே	பரஞ்சோதிப் பெருமானே!
உரைக்க வல்லேன் அல்லேன்	என் வன்மையால் சொல்ல சக்தியுடையேனல்லேன்;
உளப்பு இல் உன் கீர்த்தி வெள் பத்தின்	முடிவில்லாத உனது ப்ராவணித்வ குணக் கடலினுடைய
கரைக் கண்	கரையிடத்து
கால் என்ற செல்லல்	கால் என்னுமாக்கு அழியிற வேள்! (முற காலும் அடியிடமாட்டேன்;)
காதல்	ப்ரேமத்திலுள்
மையல் ஏறினேன்	மிக்கேறிக் கிடக்கிறேனத்தினை
கல்வ	விலக்ஷணர்களான
மேல் மக்கள்	நித்ய ஸூரிகள்
இரைத்து எக்க	போகவாசஞ்செய்து தழுக்க (ஆல்வழியைப் பெற்றி)
யானும் ஏத்தினேன்	நானும் நிறைய துதித்தேனித் தனை.

* * *—எம்பெருமானுடைய ப்ரணயித்வருணம் தன்முடைய பேச்சுக்கு நிலமன்று என்பதை அழகுபட அருளிச்செய்கிறார். உரைக்கவல்லேனல்லேன்—உன்னுடைய ப்ரணயித்வ குணத்தை அநுபவித்தநுபவித்து உன்னை முழுகுவே னத்தனையொழிய இன்னபடி யென்று பேசவல்லேனல்லேன் என்றபடி. முழுதும் பேச முடியாமற்போனாலும் பேசலாமளவு பேசினுலோவென்ன, உன் உலப்பில் கீர்த்திவேள்வளத்தின் கரைக்கண் என்று சேல்வன் நான் என்கிறார்; உன்னுடைய ப்ரணயித்வ குணமுத்தரத்தின் கரையிலேதான் என்னுல் அடி யிடமுடியுமோ? என்கை. கடலிலுள்ளே இறங்கமுடியுமே முடியாதா என்கிற விசாரம் ஒருபுறமிருக்கட்டும்; கடற்கரையிலாவது சென்று நிற்கவும் ப்ரகாசியில்லையே என்கிற இச் சொல்லழகு சாலவும் ரஸிக்கத்தக்கது.

இங்ஙனே கலையருகும் செல்லப்போகாத விஷயத்தில் நீ ஏதோபேசிக்கொண் டிருக்கிறியே, இஃது என்ன? என்று எம்பெருமான் கேட்டனனைக் கொண்டு காதல் மையலேறினேன் என்கிறார். ப்ரேமத்தாலே கலங்கினேன்; கலங்கினவர்களின் செயலுக்கு நீர் அடைவுண்டோ என்றவாறு.

http://acharya.org

ஆழ்வீர்! உம்முடைய சொற்களே சோக்குமிடத்து, நீர் என்னுடைய குணக்கடலைக் கரைகண்டவராகத் தோற்றுகின்றீர்; இவ்வளவில் பெரிய பெரிய குறைமொழிகளைப்பேசப் புறப்பட்டிருக்கமாட்டீரே வென்று எம்பெருமான் நிருஷ்ணன் பற்றினதாகக்கொண்டு, இரைத்து கல்ல மேன்மக்களேத்த யானுமேத்தினேன் என்கிறார்.

இவ்வாட்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் இரண்டுவகையே வழிவெடுத்தனர்; அவை வருமாறு:—"இவ்விஷயத்தில் நீர் ப்ரமிப்பானேன்? ப்ரமிப்பாருக்கு ஓர் ஆலம்பகம் வேண்டாவோ வென்ன, இந்த ஸம்ஸாரிகள் பித்தேறி வாய்க்கண்டேன். அதனாலே செய்தேனென்கிறார். இந்த ஸம்ஸாரிகளோடு இவரோடு அவர்களோடு வாசியற்றிறே இவ்விஷயமிருப்பது. ஸர்வஜ்ஞனும் ஸர்வ சக்தியான தான் அறியப்புக்காலும் "தனக்கும் தன் தன்மையறிவரியனாயிறேயிருப்பது; தன்னையறியப்புக்க வேதங்கள் பட்டது படுமத்தனை தானும். [புரைப்பிலாத பரம் பரனே பொய்யிலாத பரஞ்சுடரே!] நீ ஸர்வஸ்மாத்பரனாயிருக்கிற இருப்பில் புரையில்லாதாப் போலே என்னெட்டைக் கலியால் வடிவிற்றேற்ற புகரிலும் புரையில்லிக்கேயிருக்கிறவனே! அன்றிக்கே, நிரவதிகமான ப்ரணயித்வருசை ஸ்பாவத்தில் கண்ணழிவில்லாதாப் போலே என்னெட்டைக் கலியிலும் பொய்யின்றிக்கே அத்தால் வந்தபுகர் வடிவிலே தோற்ற விருக்கிறவனே வென்னுதல்.....பரமபக்தியுத்தராய்க்கொண்டு கடல்வண்ணர்த்தாப் போலே இரைத்துக்கொண்டு இந்தஸ்ரீகள் ஏத்தக்கண்டையாலே தானும் ஏத்தினேனல்லது, தான் சத்தாலும் ஏத்தினேனேனென்கிறார்." ... . (9)

யானுமேத்தி ஏழுலகும்முற்றுமேத்தி * பின்னையும்
தானுமேத்திலும் தன்னையேத்தவேத்தவெங்கெய்தும்? *
தேனும்பாலும்கன்னலும் அமுதுமாகித்நித்திப்ப *
யானுமெம்பிரானையேயேத்தினேன் யானுய்வானே. (10)

யானும்	எம்பெருமானருளால் அறிவுபெற்ற தானும்	எல்லா யுலகும்	முடிவு பெறுவது மது! (அதிலும்)
ஏத்தி முற்றும் ஏழ் உல கும் ஏத்தி	நினைத்து, எல்லாவுலகங்களும் ஒன்று கூடி யேத்தி,	யான் உய்யான்	நான் தரித்திருப்பதம் காகவே,
பின்னையும் தானும் ஏத்திலும்	அதற்கு மேலே ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனுமான தானுங்கூடி ஏத்தினாலும்	தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகித்நித்திப்ப	தேனும் பாலும் கன்னலும் அமுதும் போலே சுவைக்க,
தன்னை ஏத்த ஏத்த	தன்னேத்தும்திசைத்தும்திசைக்க	யானும் எம்பிரா னையே ஏத்தினேன்	தானும் எம்பெருமானையே ஏத்தினேன்.

* * *—ஒருவராலும் எல்லைகாண வொண்ணாதபடி அளவிறந்த பெருமையையுடைய பெருமானை தான் ஏத்தை பெறுவதற்காக ஏத்தினேனத்தனை யென்கிறார். யானுமேத்தி என்ற விடத்துள்ள உம்மையை உயர்வுநிறப்பும்மையாகக் கொள்ளலாம்; "மயர்வற மதிநல மருளினன்" என்ற முதலடியிலேயே சொல்லும்படி அருள்பெற்ற தானும் என்றபடி. ஏழுலகும் முற்றும்—போதிவுடையார் நிற்றறிவுடையார் என்ற வாசியில்லாமல் எல்லாரும் ஏத்துவது. பின்னையும் தானுமேத்திலும்—ஸர்வஜ்ஞனென்றும் ஸர்வசக்தனென்றும் பேர் பெற்றிருக்கின்ற எம்பெருமான் தானும் ஏத்துவது. இவனே எல்லாருங்கூடி யேத்தினாலும் முடிவுகாண்பதென்பதுண்டோ?

இவ்வே ஈடு;—மயர்வற மதிநல மருளப்பெற்ற தானுமேத்துவது; விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியறச் சிறியார் பெரியார் என்னுதே ஸர்வரும் ஏத்துவதுர்

http://acharya.org

ன்வதன் ஸர்வஜ்ஞனுய், தொடங்கின காரியம் செய்து தலைக்கட்டுகைக் டோன ஸர்வசக்தியுக்தனுன தானும் எத்துவது; இப்படியெல்லாரும் ஒருமிடறுபேதிக்குறும், பின்னையும் எத்தினவிடம் அளவுபட்டு எத்தாதவிடம் விஞ்சியாயிற்றிருப்பது விஷயம். அப்பரரோடு அப்பரரோடு அளவுடையாரோடு அளவிலிகளோடு வாசியில்லே விஷயத்தை எல்லோரோன வொண்ணுமைக்கு."

இப்படியறிந்து வைத்தும் எத்தனையிலே தீர் பிரவர்த்திக்கது என்? என்ன, விஷயம் பரமரண்யமாக இருப்பதனுலும், இதிலே ஈடுபடுக்கும்படி அவன் பண்ணின மநோரம காரத்தைச் சிதை செய்ததனுலும் எத்தப்புருக்தே னென்கிறர் பின்னடிகளிலுல். எத்தர திருக்கில் பிழைத்திருக்க மாட்டாமையாலும் எத்தினேனென்கிறர் யான் உய்வான் என்பதனுல். ... ... (ஐ)

உய்வுபாயம்மற்றின்மைதேறிக் கண்ணனெண்கழல்கள்மேல் *
செய்யதாமரைப்பழனத் தென்னன்குருகூர்ச்சடகோபன் *
பொய்யில்பாடலாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் *
வையம்மன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர்மண்ணுடே. (ஈக)

மற்ற உய்வு உபாயம் இன்மை } வேறு வழியிலும் தரிக்கவேயில்லாமையை
தேறி கண்ணன் } தெளிந்து ஸர்வபோக்தாவுடைய
ஒண் கழல்கள் மேல் } அழகிய திருவடிகள் விஷயமாக,
செய்ய தாமரை பழனம் } செந்தாமரைகள் நிறைந்த நீர்நிலங்களையுடைய
தென் குருகூர் { தென் திசையிலுள்ள அழகிய திருக்குருகூர்க்குத் தலைவரான
சடகோபன் { நம்மாழ்வார் (அருளிச் செய்தான)
பொய் இல் பாடல் ஆயிரத்துள் } யதார்த்தம் பொருந்திய ஆயிரத்திலுள்ளும்
இவை பத்தும் வல்லார்கள் } இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள்
வையம் மன்னி வீற்றிருந்து { இப்பூமண்டலத்திலே செருக்காமம் பொருந்தி யிருந்து
மண்ணுடே விண்ணும் ஆள்வர் { இக்கிலத்திலேயே பரம பதத்தையும் ஆளப் பெறுவர்கள்.

• • •—இத்திருவாய் மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது இப்பாட்டு. இத்திருவாய் மொழியை ஓதினவர்கள் உபய விபூதியையும் தாம் இட்ட வழக்காக நிர்வஹிக்கப் பெறுவர்களென்கிறர்.

இத்திருவாய்மொழியினுல் ஸர்வேசுவரனுடைய ப்ராப்யத்வகுணத்தைப் பேசப் புகுந்தது, பேசித் தலைக்கட்டினபோதென்கிற வண்ணத்தினுலன்று; இன்னமே பேசினுலன்றது வேறென்றுமே தரிக்க வொண்ணுமையாலே பேசிற்றென்பதை வெளியிடுகிறர் உய்வுபாயம் மற்றின்மைதேறி யென்பதனுல்.

பொய்யில் பாடலாயிரம்—வால்மீகிபகவானுக்குக் காட்டிதந்த நான்முகக் கடவுள் "ந்தே வாதநூதா கவயே காதிந்ரு ஸ்ருஷ்டி: கரஸ்ய வாதகரோ வ்ருணோ ஸ்லோகவேஷ: தநோரது—தே வாகந்ருதா காவ்யே காதிதர பஷ்யஸி, குரு ராமக தாம் புண்யாம் ச்லோகபத்தாம் மநோரமாம்" என்ற அருள் செய்ததனுல் ஸ்ரீராமாயணம் பொய்யில் பாடலாக அமைத்ததாயிற்று. "வேதநூல் ஒதுவின்றதுண்மையல்லநில்லே மற்றுரைக்கிலே" (திருச்சந்தவிருத்தம்) என்ற வடமொழிவேதத்திற்குச் சொல்லப்பட்ட எதிய வாநித்வம் தமிழ்வேதத்திற்கும் குறையற்றதென்க.

http://acharya.org

வையம்மன்னி வீற்றிருந்து மண்ணுடே விண்ணுமாள்வர்—"பூமியிலே எம்பெருமா னுரைப்போலே ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே கெடுங்காலமிருந்து இவ்வே விருக்கச்செய்தே பரமபதம் தன்கள் திறமுறிப்படி செல்லும்படி தன்வர்கள்; அக்கோபோலன் 'ஆண்மின்கள் வானகம் ஆழியான்தமர்' என்கையன்றிக்கே இவ்வேவிருக்கச்செய்தே தன்களிட்ட வழக் காகப்பெறுவர்." என்பது கம்பின்னீடு.

கஞ்சியர் பட்டர் திருவடிகளில் ஆச்சரித்தபின்பு கெடுங்காலம் பட்டர்பாடே அர்த்த விசேஷங்கள் கேட்டு இன்புறவேணுமென்று இருந்தார், இருக்கையில் பட்டர் திருநாட்டுக் கெழுந்தருள கேர்ந்துவிட்டது; இந்த வருத்தத்தினால் கஞ்சியர் "வையம்மன்னி வீற்றிருந்து" என்ற இவ்விடத்தை அருளிச்செய்யும்போது உருத்தோறும் வெகுரிவேதப்படுவராம்.

பட்டர் இருபத்தெட்டு (அல்லது 32) பிராயத்திலே திருநாட்டுக்கெழுந்தருளினா ரென்று சிலர் கூறுவதுண்டு. இதற்குப் போதுமான பிரமாணம் கிடைத்திலது; ஆராய்ந்து பார்க்குமளவில், பட்டர் ஐம்பது ஐம்பத்தைந்து பிராயம் எழுந்தருளியிருந்தார் என்று சொல்வதற்குச் சான்றுகள் உள்ளன. தூற்றிருபது நிருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்த எம்பெருமானுரை சேர்க்குமிடத்து பட்டர் எழுந்தருளியிருந்தது மிகவும் இளம்பகாலம் என்று சொல்லலாம்படியுள்ளது. ... . (கக)

மூன்றாந் திருவாய்மொழியுரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து நான்காந் திருவாய்மொழி — மண்ணையிருந்துதுழாவி.

உரையவதாரிகை.—ஆழ்வாருடைய பரமவைலக்ஷண்யத்தை வெளியிடுவதாயிற்று இத் திருவாய்மொழி. எம்பெருமானுடைய ஸம்பந்தப்பெற்ற பொருள்களேயும் எம்பெருமானுக் குப் போலியான பொருள்களோடுகூட்டி அப்பெருமான்றன்னையே கண்டதாகக்கொண்டு களிக்கையே பரமவைலக்ஷண்யமாகும். அந்த நிலைமையே ஆழ்வார்க்கு இத்திருவாய்மொழி யில் உண்டாயது.

இத்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய ப்ரணயித்வரூபத்தைப் பேசிப் பரமா னந்தம் பொங்கி நின்றராழ்வார்; அந்த நிலைமையைக்கண்ட எம்பெருமான் அந்த ரஸத்தை அளவாறுபடுத்தி ரஸநிஷ்பத்திக்காக அந்த ஸம்ச்லேஷத்தைச் சிறிது குறைத்து நின்றான்; அதனால் ஆழ்வார்க்கு ஆற்றுமை மிகார்ந்தது. பரமபதிப்பைப் போக்கடித்தவனெருவன் அத் தோடு போலியான முடிப்புகளெல்லாவற்றையும் அலித்தழித்துப் பார்க்குமாபோலே அவ னுடைத்த பதார்த்தங்களேயும் அவனோடு ஸம்பந்தமுள்ள பதார்த்தங்களேயு மெல்லாம் அவ னுகக்கொண்டு ப்ரமித்துக் கிட்டிப் பார்த்துப் பிச்சேறினபடியாய்ச் சென்றுகிறது இத் திருவாய்மொழி.

பெருமான் பஞ்சவடியில் பிராட்டியைப் பிரிந்தபோது "கூதிஷ்டூஹுதெ வொரஸி கூதிஹுநதெஹுரஸி। கூதிதுதுவாவாதி காஹுஷ்டெஷ்டதுரா=க்வதிதப்ரமதே வைதே க்வசித் விப்ரமதே பவத். க்வசித் மத்த இவாபாதி கச்சாச்சிவேஷ்டனதப்ர:" என்று வால்மீகி கூறினபடியே பட்டபாடுகளெல்லாம் இப்போது ஆழ்வார் படுகிறாயிற்று.

http://acharya.org

கம்பெண்ணீயிடு;—"பிரட்டியைப் பிரிந்த வலக்தாம் ஆற்றுமையாலே மேல் சோக்கிப் பார்த்து விலக்க லஞ்சரிப்பது, அதுதானும் மாட்டாதொழிவது, ஒரு வ்ருக்ஷத்தில் கின்றும் வ்ருக்ஷாக்தரத்திலே சென்று கிட்டுவது, மைதிலியைக் கண்டிகோளோவென்ற கேட்பது, ஆனை பெண்ணாக லொன்றின்றிக்கே தேடுவதாய் அவர் பட்டாப்போலே இவனும் அப் படியே படுகிருளிப்போது. இப்படி கோவுபடுகிறவிவள் தசையை அநுஸந்தித்த திருத்தாயார் இவள் படுகிற பாடுகளையும் இவள் சொல்லுகிற வார்த்தைகளையுஞ் சொல்லி, இதுகண்டு தான் பொறுக்காமாட்டாமே கோவுபடுகிறபடியுஞ் சொல்லி இவள் கை வாங்குமானவாக, அவள் வந்து முகங்காட்டி ஆச்வாஸிப்பிக்க தரித்தநாய்த் தலைக்கட்டுகிறது இத்திருவாய்மொழி."

மண்ணியகுத்துழாவி வாமனன்மண்ணிதுவென்னும்*
விண்ணினத்தொழுதவன்மேவு வைகுந்தமென்றுகைகாட்டும் *
கண்ணினையுண்ணீர்மல்கநின்று கடல்வண்ணனென்னுமன்னே! * என்
பெண்ணினைப்பெருமையல்செய்தாற்கு என்செய்கேன் பெய்வளையீரே! (1.)

பெய் வளையீர் — கையில் வளையணிந்த மாதர்கள்!,
மண்ணை இருக்த அழாவி — (என் மகளானவள்) பூமியைத் துழாவி
இது வாமனன் மண் என்னும் — இது (எம்பெருமான்) வாமனனுக்கு அளக்த கொண்ட மண்' என்று கூறுகின்றாள்;
விண்ணை தொழுத — ஆகாசத்தை (நோக்கி) அஞ்சலி பண்ணி
அவன் மேவு வைகுந்தம் என்று — 'அவ்வெம்பெருமான் கித்ய வாஸம் பண்ணுகிற ஸ்ரீ வைகுண்டம்' என்று சொல்லி
கை காட்டும் — தன் கைகளாலே (சிதர்க் கும்) காட்டா கின்றாள்;
உள் கீர் — அகவாயில் கண்ணீராளது
கண்ணை மல்க கின்று — கண்ணையும் விஞ்சிப் புனல் படும்படி கின்று
கடல் வண்ணன் என்னும் — கடல்போலும் கிறக்கின்ற புடையழகன் என்று சொல்லுகின்றாள்;
அன்னே — அம்மே!
என் பெண்ணை பெரு மால் செய் தார்க்கு — என்னுடைய மகளை இப்படி அதிசயமான பிச்சேறும் படி பண்ணினவருக்கு
என் செய்கேன் — யாது செய்வேன்?.

* * *—பரகாலநாயகியின் திருத்தாயார் மகளுடைய செய்தியை கினைவு வந்தவர் களுக்கு அறிகியா கின்றுகொண்டு 'இப்படி யிவளை எம்பெருமான் பிச்சேற்றினனே! இதற்கு கான் என் செய்வேனென்கிறாள். 'பண்டு எம்பெருமான் இவ்வுலகத்தை அளந் தருளினபோது அவன் திருவடிகளோடே ஸம்பந்தம் பெற்றது இந்த மண்' என்ற சொல்லி ஆழ்வார் போதுபோக்குகிறபடியை முதலடி தெரிவிக்கும். உலகத்தில் எல்லாரும் மண்ணே மண்ணுகவே கினைத்துக்கிடப்பர்கள்; ஆழ்வார் அவ்வளவில்லிக்கே அதுதன்னிலே ஒரு விசேஷ ப்ரதிபத்தி பண்ணுகிறபடி.

விச்வாமித்ரமுனிவன் யாகரக்ஷணார்த்தமாக ஸ்ரீராமபிரானை கூட்டிக்கொண்டு அரண்மனைக்கு சென்றபோது, பெருமான் ஒரு சோலையைக்கண்டு 'இதுஎன்ன' என்றுகேட்க, முனி வன் "ஸ்ரீ விஷ்ணோ தர்மாச்ரம ஸித்தர்த்தம் விஸ்வாமித்ரோ காம" என்று தொடங்கிச் சொல்லி வந்து 'ஸ்ரீராமஸ்ய ஸகாசாத் ஸர்வலோகாபகாரகாரிணி தாடகா—ஸ்ரீராம தவ பக்தியா தன்னையவ வாமகன்யோப புஜ்யதே." என்றான்; இது முன்பு விஸ்தாரமாய் ஸ்ரீவாமகமூர்த்தி எழுந் தருளியிருந்த தேசமாயிற்று; அப்பெருமான் இவ்விடத்தைவிட்டு அகன்ற பின்பு அவன் பக்கல் பக்தியாலே விடமாட்டாமல் அம்மண்ணை மோந்து கொண்டு கிடக்கின்றேன்—என் பது விச்வாமித்ரன் சொன்ன வார்த்தையின் கருத்து. அபிமதசமுடையர்படி. இதுவாயிற்று.

http://acharya.org

நிலத்திற்குக் குணம் மணமென்று சான்றோர்களின் கொள்கை; "மதுவடி வுழிவி—கத்தலரி ப்ருதிவி" என்பர்கள்; எம்பெருமானுடைய சௌலப்யம் மிக்க நிருவடியின் ஸம்பந்தம் பெற்றதனால்தான் மண்ணுக்கு மணமுண்டாயது என்று பாய்ச்ச காயகியின் உபந்யாஸம் போலும்.

விண்ணைத்தொழுது அவன் மேவு வைகுந்தமென்று கைகாட்டும்—மண்ணைத்துழாவிப் பேணினபடி நீழே சொல்லிற்று; விண்ணைத்தொழுது பேணுமாறுபோல. இதில் சொல்லுகிறது. ஆகாசத்தை நோக்கித் தொழுது 'எம்பெருமான் நித்யவாஸம் பண்ணுகிற நிருநாடு அதோ பாருங்கள்' என்று சொல்லிக் காட்டுகின்றனரென்க.

இங்கே ஸ்ரீபராசரபட்டர்;—"ஆர்ஷ்டிஷேணஸ்ருத்யர்த்தமிலே மின்னு பரமபதம் கண்டார்களிறே இவர்" என்றருளினார். பரமபதத்தில் வாழுகையிலும் நித்யஸூரிகளோடு ஸஹவாஸமாயிருக்கையிலும் ஆர்ஷ்டிஷேணனென்னும் ரிஷிக்கும் ஸாக்ஷாத் ஸர்வேச்வரனைக் கண்டு பேசுகையிலும் ஸ்வாதந்த்ர்யம் கண்டபோதில்லை. அல்லது "யஸ்மாத் பரமஹம்ஸாநாம்—அப்யஹம் ஸாபதஸ்ச" என்கிற பகவத்வசனமே ஸாக்ஷியாகக் கொண்டு இவ்விஷயம் காணத்தக்கது. "கஸ்யாபி தூதா பவிதாஸ்மி கௌரவாணாம் யுஷ்மாபிரேவ ஸஹஸா விநிவர்த்தமாநா நாம் தெலஹீநுணாயுகமதே—அன்யாதிக்ரம்ய நிகமம் கைலாஸன்ய முந்முகா, கதி: பரமவித்தாநாம் தேவர்ஷீணாம் ப்ரகாசதே." என்கிற ச்லோகம் இக்கு விலக்ஷணமாயிருக்கையால்போல் தோன்றுகிறது.

[கண்ணினுள் இத்யாதி] நலந்தேயுடையாரே நிருநாட்டைக் காட்டின வத்தலை யொழிய, நிருநாட்டில் அவரிருக்கிறபடியைக் காணப்பெறுகையாலே கண்ணீர்மல்க நின்ற தன்னுற்றுமையாலே நிருவடிவத்தை நினைத்துக் கடல்வண்ணனே யென்கிறாள். கடல் போன்ற நிருவேங்கடத்தைக் காட்டியன்றே எம்மை இவ்வளவு வியாமோஹத்திற்குச் செய்தது என்று தெரிவித்தவாறு.

[என்பெண்ணை இத்யாதி] இவ்வளவு என்மகளுக்கு லோகவிலக்ஷணமான வியாமோஹத்தை உண்டுபண்ணின மறுமாறுபாடன் விஷயத்தில் நான் செய்யக்கூடியது யாது? அவளை இக்குவக்கு சேரும்படி செய்யவல்லேனே? அவர் வருமளவும் ஆறியிருக்கும்படி இவளுக்குச் சொல்லவல்லேனே? முன்னம் மாட்டுகிறிலேன் என்று கருத்து. ... (க)

பேய்வளை கைகளே கூப்பி தொழ கடிகமழ் தண்டுழாய் முடிக்கும் * செய்யதோர்ஞாயிற்றைக்காட்டிச் சீதரன்தூர்த்தியீதென்னும் * கையும்கண்ணீர்மல்கநின்று காணலுற்றேனுமன்னே ! * என் தெய்வவுருவிற்சிறுமான தெய்கின்றதொன்றறியேனே. (2)

பேய்வளை கைகளே (என் மகளானவள்) (பலகாலும் கழன்று விழுது) இடப்படாநிற்கிற வளை களையுடைய தனது கைகளே
கூப்பி குவித்த அஞ்சலி பண்ணி (கடலைப் பார்த்து)
தொழ கூடாகாத செய்கை எம்பெரு மான்
கடிகமழ் (எனக்கு மூக்குக்கூட்டப்) பள்ளிகொண்டருளின

கடல் என்னும் கடல் (இது) என்ற சொல்லுவாள்;
செய்யதோர் ஞாயிற்றை காட்டி சிவந்த ஒளியில் ஒப்பற்ற வஸ்து ருசியைக் காட்டிக் காட்டி
சீதரன் தூர்த்தி என்னும் 'பொரா நிற்கச்செய்தேயும் கூடியுள்ள எம்பெருமா னது வடிவு இது' என்று சொல்லுவாள்;
கையும் (தான் அவலோகிக்கிற்கு அநுபவிக்கப்பெறுமை யாலே) வாடுவாள்;

தி. 4—12

http://acharya.org

கண் நீர் மல்க நின்று	(அந்த வாட்டத்திலுமே) கண்ணீர் பெருக நின்று
காரான் என்னும்	'காராயணன்' என்று வாய் வெருவுவாள்.
அன்னே	அம்மே!
எம் தெய்வம் உரு வில் நிறுமான்	என்னுடைய (திருவாணிரி கள் வடிவுபோல்) அப் ராக்குதமான வடிவை யுடையனாய் மன்போல இனியபருவத்தையுடைய எளை இவன்
சொல்கின்றது ஒன்று அறிகேன்	செய்கின்ற காரியங்கள் ஒன்றும் அறிகிலேன்.

* * *—எம்பெருமானோடு எய்ப்பத்தமுடைய கடலையும் மலர்ச்சோலைகளைக்கண்டு பாங்கி சொல்லுமவற்றைத் திருத்தாயார் கூறுகின்றார். இப்படிமான வடிவழகைத்த இவள் செய்வதொன்றும் எனக்கு இன்னதென்று தெரிகின்றதில்லை யென்கிறார்.

பெய்வளைக் கைகளைக்கூப்பி—இப்போது தாய்மார்க்கு விசேஷதசையன்றே சென்றுகின்றது; இப்படிப்பட்ட நிலைமையில் கையில்வளைகள் கழன்றுவிழுகை பேணுகையன்றே முறைமை; பெய்வளைக் கைகளென்னலாமோ? என்ற சங்கை தோன்றும்; இந்த சங்கையை மனத்தில்வைத்துக்கொண்டு ஸ்மார்தாக்ரமமாக அருளிச்செய்கிறார்—"கடல் வண்ணன் என்றவாறே, கழன்ற வளைகளெழியச் சரித்தவளைகள் பூரித்தனகாணும் என்று. இவ்விடத்தில் ஒரு லோகம் நினைக்கத்தக்கதன்று; அதாவது "யாதி நவாதீ யவை வடதி வாஸஸாஸ் சுதனை தத்தம்ஹரா மனிதா நீவ-ரொவயவாதி ஸைராணிவ-நவ்ருஹ்தெவரவி தாதி—யாமி நயாமிதி தவே வததி புரன்தரத் சுதனை தர்வக்கர:, களிதாதி புரோவயவாதி அபராணி புரன் ததைவ தனிதாதி." என்பதாம். (இதன் கருத்து.) கையில் பலவளைகளை அணிந்து கொண்டிருந்த காயகியோடு காயகன் பேசிக்கொண்டிருக்கும்போது அவளை நோக்கி யாமி என்றுன்; வெளியூருக்குப் போவதாக இருக்கிறேன் என்றபடி. இப்படி சொன்னவளவே பிரிவை ப்ரஸ்தாபித்தவாறே அக்காதலி பிரிவு வந்திட்டதாகவே கருதி அப்போதே மேனி மெலிந்து கை நழுவுப்போலேயாகி வளைகள் சரிந்துவிழத் தொடங்கின; அக்கிலையைக்கண்ட காதலன் அவளுடைய பிரிவாற்றுமையைக் கண்டு சொன்ன, தான் பிரிந்து சென்வது தகாதென்று தணிந்து நயாமி என்றுன்; இதை இரண்டு சொற்களாகக் கொண்டால் 'நான் பிரிந்து போவேனல்லேன்' என்று பொருளாரும்; ஒரே சொல்லாகக் கொண்டால் 'என்னையும் உடனழைத்துக்கொண்டு போகிறேன்' என்ற பொருளாரும். இங்கே ஏகப்ரயோகத்திலே இரண்டு பொருளும் விவக்ஷிதமாகலாம். காதலன் இங்ஙனே சொன்னதைக்கேட்ட காதலி அந்த க்ஷணத்திலேயே பிரிவாற்றுமைதுயர் தொலையப்பெற்று உடல் பூரிக்கப்பெற்றதனால் முன் க்ஷணத்திலே கழன்றுவிழுந்த வளைகள்போக சேவித்தலை (உடல் பூரிப்பாலே) பண்ணென்று வெடித்து விழுந்தொழிந்தனவாம். இந்த நிலையில் விசேஷதசையில் இருக்கின்ற பராங்குச நாயகிக்குக் கையில்வளை பெய்யப்பெற்றிருத்தல் கூடுமோ? என்ற சங்கை; விசேஷ தசையை பிரகாசிப்பிக்கும் (மேற்பாட்டில்) கடல்வண்ணனென்ற தலைவனது திருநாமத்தை உச்சரிக்கப்பெற்ற உலப்பினால் வளைகள் கையில் தங்கியிருந்தன வென்ற சங்காபரிஹாரம் செய்ததாயிற்று.

அஞ்ஜலி மாருதே பிருத்தான்; கடலோசைகளுக்கு செவிப்பட்டது; கண்ணுக்கு இலக்காக வேண்டிய எம்பெருமான் காதுக்கு இலக்கானதாகக் கருதினன்; கடலோசை வழியாகக் கடலே நினைத்துக் கடல்வண்ணனான எம்பெருமானே நினைத்து, அப்பெருமான் பள்ளி கொண்டருளும் கடலன்றே இது! என்று நின்றுள். பிரான் என்றது இராமபிரான் என்றபடியாய், அவன் ஒரு பிரயோஜனத்தைப் பெறுதற்காகக் கடற்கரையிலே தளைக்கிடை கிடந்த வார்த்தை நினைத்துப் பிரான்கிடக்குங்கடல் என்றதாகவும் கொள்ளலாம்.

http://acharya.org

செய்யதோர் காயிற்றைக் காட்டிச் சீதான்மூர்த்தி யீதென்னும் = இவ்வெல்லாம் கட லோசையோடே வருகின்றபடத்து, பொழுதுவிடிந்தவாறே ஸர்ப்பங்கண்டதும் 'ஸ்ரீதரனு டைய வடிவு இது' என்கின்றாள். மிகுந்த கடல்வண்ணனாக அநுஸந்திக்கப்பட்ட எம்பெரு மானை இப்போது ஸர்ப்பவடிவாக அநுஸந்திப்பதற்கு, என்ன பொருத்தம்? என்று சங்கை பிறக்கும். இன்று ஆருயிர்ப்படி யருளிச்செயல் கண்மின்;—"எம்பெருமானும் பிராட்டி யும், ஆதிச்யனும் அவனுடைய ப்ரபையும்போல இருக்கையாலே, அந்த ஆதித்யனைக்காட்டி ஸ்ரீதரன்மூர்த்தி யீதென்னும்" என்பதாம்.—ஸ்ரீ ராமாயணத்தில் ராவணனை சோக்கிப் பிராட்டி சொல்லுகையில் "அங்கயா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" என்கிறாள்; ராவணவதத் திற்குப் பிறகு பிரமன் முதலிய தேவர்களை சோக்கி ஸ்ரீராமபிரான் சொல்லுகையில் "அங்கயா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா" என்கிறான். இவ்வண்ணம் நித்ய தம்பதிகளின் நிருவாக இலுள் எம்பெருமான் ஸர்ப்பத்தைப்போல் பரிகலிதத்வனமையால் ஸர்ப்பத்தைப் பார்க்கும் போது பிராட்டி நினைவுக்கு வரக் குறையில்லை. "ப்ரபா ப்ரபாவான்களைக் கண்டவாற்றா லருளுமவனுமாக இருக்குமிருப்பை நினையா நின்றாள்" என்பது நாடு மூப்பத்தாறுபடி.

ஆசார்ய ஹ்ருதயத்தில் "புனியேழுலகாதியை யநேரிலே" என்று தொடங்கி யுள்ள சூர்ணிகையில் 'பிரிதரன்மூர்த்தி யீதென்னும்" என்கிற இத்தப் பாசுரம் எடுத்தாளப் பட்டுள்ளது. அவருடைய நிருவுள்ளத்தின்படி, பார்க்குமலையில், "த்வேஷ: ஸதா லலிதக் மண்டல மத்யவர்த்தி நாராயண:" என்கிறபடியே எம்பெருமான் ஸர்ப்பமண்டல மத்யஸ்த னதனால் அதுபற்றி "செய்யதோர் காயிற்றைக் காட்டிச் சிரிதரன்மூர்த்தி யீதென்னும்" என்றதாகக் கொள்ளலாம்.

கண்ணீர்மல்க நின்று ஸையும் = சிரிதரன் என்னுப்படியே புருஷகாரபூதையான ஸ்ரீ மஹாலக்ஷ்மி அருகேயிருக்கச் செய்தேயும் பேறிழந்த நான் இனி யார் புருஷகாரமாகப் பெறவிருக்கிறேன் என்று உடைகுலைப்படா நின்றாள். ஸ்ரீமந் நாராயணனென்று கூடச் சொல்லமாட்டாதே நாரணன் என்கின்றாள்.

எம்பெருமானுக்குப் போலியான பொருள்களையும் அவற்றோடு தொடர்புள்ள பொருள்களையும் அநுஸந்திக்க வநுஸந்திக்க, சித்யாநுபவசாலிகளான சித்ய ஸூரிகளின் வழியில் பிறக்கும் புகர் இவட்குப் பிறக்கின்றமையைத் தாய் தெரிவிக்கின்றாள் என் தெய்வ வுருவிற் சிறுமான் என்பதனால்.

செய்கின்றதொன்று அறியேன் = இவள் தொடக்குவது என்ன? தலைக்கட்டுவது என்ன? என்பதொன்றும் மதிக்கின்றிலே னென்றபடி. ... ... (உ)

அறியுஞ்சக்தீயைத்தழுவி அச்சுதனென்னும்மெய்வேவாள் *
எறியுந்தண்காற்றைத்தழுவி என்னுடைக்கோவிந்தனென்னும் *
வெறிகொள்துழாய்மலர்காறும் வீயுடையாட்டியேன்பெற்ற *
செறிவினமுன்கைச்சிறுமான் செய்கின்றதென்கண்ணுக்கொன்றே. (ரூ)

வீயுடையாட்டியேன் பெற்ற } கொடுவினைப்பேருடைய நான் பெற்ற,
செறிவினமுன்கைச்சிறுமான் } செருக்கினை வினைவல்லகோ யனிந்த முன்கைகளோ யுடைய இவ்வினம் பெண் ணனைமன்,
அறியும் } அறியும் சக்தி யைத் தழுவி அச்சுதன் என்னும் மெய் மோகன் எறியும் } அறியப்பட்ட சிலத்த தெருட்சியைத் தழுவி 'எம்பெருமான்' என்கிறாள்; உடம்பு மெலிந்தினள்; மிகவென்ற

http://acharya.org

தன் காற்றை தழுவி—குளிர்ந்த காற்றைத் தழுவி என்னுடை கோவித் தன் என்னும்	'என்னுடைய கண்ணன்' என்கிறள்;	காணும்	மணக்கப் பெற்றிருக் கின்றன:
வெறிகொள்	பரிமளம்பிக்க	செப்பின்றது	(இப்படியே இவள்) செப் கின்ற தொழில்கள்
கமழ் மலர்	திருத்துழாய் மலர்கள்	என் கண்ணுக்கு ஒன்றே	என் கண்களுக்கு ஒன்று காதே? பலவே.

* * *—மகளுடைய அதிப்ரவ்ருத்திகளைச் சொல்லப் புகுந்து, இவற்றுக்குக் காரணம் இல்லை யென்கிறள். எம்பெருமானுடைய திருவடிகளைச் சொல்லாவிடில் "தேஜஸாம் நாசம் ஸ்ருஜேத்" என்றும், "குமுதித தேவர்குமுதங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தி னுள்ளே பெருவதோருரு" என்றும் தேஜஸ்புஞ்ஜமாகவே சொல்லுவர்கள். பராங்குச நாயகியானவள் செவ்விய தேஜஸைக் காணும்போது அதனை அச்சேதனங்களிலே ப்ரதிபத்தி பண்ணித்தழுவுகின்றாள்; அந்த ப்ரதிபத்தியின் கூத்தாடியே மேய்க்கவேண்டியிருக்கிறபடியாலே—உடம்பில் தாமறுண்டாவது கிடையாது. அக்னிதேவதை தன் காரியத்தைச் செய்யாதிருக்குமோவென்னில், ப்ரத்யவதாரணார்த்தமாகச் செய்தானன்றே பராங்குசநாயகிக்குச் செய்வது. "நாதைஷ வஹ்நி: பவகேரிதோபி ந மாம் தஹேதி அதர ஸமந்தஹாஸம். பச்யாமி பத்மாஸ்தாணஸ்தருணி சீதாநி ஸர்வாணி திசாம் முகாநி." என்றாளிறே ப்ரத்யவதாரணார்த்தவாள். என்னை கொருப்புச் சுடுகின்ற தில்லையே யென்றாள்; அதுபோலேயாயிற்று இதுவும்.

எறியுந் தன்காற்றைத் தழுவி யென்னுடைக் கோவித்தனென்னும்=வீசுகிற குளிர்ந்த காற்றை, பகைமேற்தூவிட்டுத் தன்னோடே கலக்க வருகிற சத்ருக்களைக்கொண்டு தழுவிப்பிரியுள்ளடங்காமையாலே எம்முடைய கோவித்தன் என்கிறள்.

வெறிகொள் துழாய்மலர் நாறும்=திருத்துழாய்ப்பரிமளம் கமழ்கின்றது தனக்காகவே உத்தரவிபூதியில் திருத்துழாய் மறுமணம் கமழ ப்ரஸக்தியேதென்னில்; இதற்கு முன் எம்பெருமான் தனக்கு அபிமதமான பரிமளம் பத்தெட்டு குளிக்கு நிற்குமே. அன்றியும், இரண்டாமடியிற் கூறியபடி, எம்பெருமான் காற்றோடே கலக்க புகுந்து கலவிசெய்த தாகவும் கூடும்.

வினையுடையாட்டியேன் பெற்ற=கல்வினை யென்றுவது தீவினை யென்றுவது பிறப்பித்தல கூறவில்லை; ஆயினும் இவளை ப்ரகரணாநுகுணமாகையாலே தீவினையுடையேன் என்றே பொருள்படும்; பட்டாதும், இப்படி பகவத் விஷயத்தில் அவகாஹிக்கும்படியான பெண்ணைப் பெற்றது கல்வினையின் பயனாகவே உள்ளுறைக் கருதத்தக்கதாதலால் கல்வினையாட்டியேன் என்பதே உள்ளுறை பொருளாம். உண்மையில் தாயின் நிலைமையும் ஆழ்வார்க்கே உள்ளதாதலால் இவ்வினையுடைமை ஆழ்வார்க்கேயாகும்.

ஒன்றே?—ஒன்றல்ல, பல என்றபடி. ... . (கூ)

ஒன்றியதிங்களைக்காட்டி ஒளிமணிவண்ணனேயென்னும் *
நின்றகுன்றத்தினைநோக்கி கெடுமாலே! வாவென்றுகூவும் *
நன்றுபெய்யும்மழைகாலில் காணவந்தானென்றுரைக்கும் *
என்றினைமையல்கள்செய்தான் என்னுடைக்கோமளத்தையே. (ச)

ஒன்றிய	(எல்லாக்கலைகளும்) பொருந் திய	இங்கினை காட்டி	பூர்ண சந்த்ரனை (அருகில் நின்றார்க்குக்) காட்டி

http://acharya.org

ஒளி மணிவண்ணனே என்னும்	ஒளியையுடைத்தான நீல மணிபோன்ற வடிவை யுடையவனே! என்று கூப்பிடுகிறாள்;
நின்ற குன்றத்தினை நோக்கி	(அத்தச் சக்கரமண்டலத் தளவு உயர்ந்து) நிற்கிற மலையைப்பார்த்து
(கையுலகங்களையும் அளக்கைக்கு வளர்ந்தருளின எம்பெருமான் என்று கிளைத்து)	
நெடுமாலே வா என்று கூவும்	'நெடுமாலே வாராய்' என்று அழைக்கிறாள்;
கன்று மேய்க்கும் மலை காணில்	கன்றுகளை மேய்க்கிற மலையைக் கண்டால்
காராயணன் வந்தான் என்று	காராயணன் வந்தான் என்று கூறி
ஏத்தும்	மேகத்தைக் கண்ட மயில் போலே கூத்தாடுகின்றாள்;
என்னுடை கோமளத்தை	மெல்லியலாளான எனது மகளுக்கு
என்று இன மையல்கள் செய்தார்	இப்படிப்பட்ட மயக்கங்களை பண்ணினார்.

* * *—என்னாக்கியைகளும் நிரப்பப்பெற்ற சக்கரணைக் கட்டிக்காட்டி 'நீலமணிவண்ணனே!' என்று அழைக்கின்றாள். உயர்கின்ற ஒரு மலையைப்பார்த்து, உலகங்களை அளந்தருள்வதற்காக நிரவதரித்து நிற்கிற ஸர்வேச்வரனென்று கொண்டு 'என் ஆர்த்தி தீரவாராய்' என்றழைக்கின்றாள். என்முகப் பெய்யும் மேகத்தைக்கண்டால் 'காராயணன் நம் உகுவுதல் தீர வந்தான்' என்று, மேகத்தைக்கண்டு மயில் கூத்தாடுமாபோலே கூத்தாடு கின்றாள். அந்தோ! இப்படிப்பட்ட வியாமோஹங்களை எனது பெண்ணிற்காக உண்டு பண்ணிவிட்டாயே! என் செய்வேன்! என்கிறாள் திருத்தாய்.

ஒன்றிய என்றது கைகளிரண்டும் பொருத்தப்பெற்ற என்றபடி. ய அநுஷ்டா ஹதஹோ ஜாத :—தக்ஷ்ரமா மஹலோ ஜாத:" என்ற புருஷஸூக்தத்தில் சக்ரதன் எம்பெருமானுடைய திருவுள்ளத்தில் நின்று தோன்றினதைச் சொல்லிற்று. "காரணவஸ்துவின் குணங்கள் கார்ய வஸ்துவிலே வந்து மிக்கிருக்கும்" என்கிற நியாயப்படி காரண பூதனான எம்பெருமானுடைய குளிர்ச்சியெடியாகவே சக்ரதனுக்குக் குளிர்ச்சி யுண்டாயிற்றென்று பக்தர்கள் அபிநயித் கொள்வதுண்டு; குளிர்ந்த சக்ரதனைக் கண்டவாறே குளிர்ந்த திருவுள்ளமுடைய எம்பெரு மானுகவே பாவனை செல்லுகின்றது. ஒளிமணிவண்ணனே! என்று விளியாகவுங்கொள்ளலாம்; காராத்தை விளியுருபாகக் கொள்ளாமல் பிரிநிலைப் பொருளதாக்கி 'இவன் ஒளி மணிவண்ணனேயன்றி வேறல்லன்' என்பதாகவுங் கொள்ளலாம்.

இரண்டாமடியில் இரண்டு நிர்வாஹங்களுண்டு:—நின்ற குன்றமொன்று தென்பட்டது; வடிவில் பெருமையைக் கண்டவாறே, ஜகத்தையெல்லாம் தன் திருவடிகளின் கீழே யிட்டுக்கொள்ளும்படி பெரிய வடிவையுடையனான த்ரிவிக்ரம பகவான் என்றெண்ணி, எழுத்தருளாய் என்றழைக்கின்றாள் என்பதாகப் பின்னாளுடைய நிர்வாஹம். மழைபெய்யா மல் நின்று அடிக்கடி மழைபெய்யப்பெறுவதனால் அழுக்கற்றுப் பசுகு பசுகென்றிருக்கு மாறு கண்டு பராங்குச நாயகி என்ன நினைத்தா ளென்னில்; எம்பெருமான் தெடுகால் உபேக்ஷித்திருந்த குற்றவாளி யாகையாலே உள்ளபடியே வந்தகிற்க வெட்கப்பட்டு, பச்சைப்போர்வையிட்டு மூட்டாக்கிட்டு நிற்கிறானாகக்கொண்டு 'கரியகடலே! நீ இன்னமே வெள்கவேறுமோ? வந்தில்' என்கிறாள்—என்ற வஞ்சோக்தி நிர்வஹிக்கும்படி. வஞ்சோக்தி யுடைய ஒன்பதினுயிரப்படி ஸ்ரீஸூக்திகள் காண்மின்'—"நின்றதொரு மலையைப்பார்த்து, ஸகல லோகங்களையும் அளக்கைக்கு வளர்ந்தருளின எம்பெருமானென்றே கொண்டு என்னார்த்தி தீரவாராய் என்று அழைக்கும். ஸாபராதனுகையாலே விட்டவர் அஞ்சி நிற்கிறானாகக் கொண்டு 'உன்னுடைய ஸ்நேஹாதிசயம் அறியோமோ? வாராய்' என்று ஸோபபூர்வகமாக அழைக்கும் என்றுமாம்."

தி. 4—13.

http://acharya.org

இந்த நிர்வாஹ பேதத்திற்கு நிதானம் எதென்னில்; கேடுமோல் என்கிற சொல்லே யாகும். மால் என்னுஞ்சொல்லுக்குப் பெருமை, வியாமோஹமும் முதலிய பல பொருள்களுண்டு: பெருமையென்னும் பொருளிலே கோக்குவைத்தார் பிள்ளான்; வியாமோஹமென்னும் பொருளே கோக்கினர் கஞ்சியர்.

கன்று பெய்யும் மழையைக்கண்டால் காரணன் வந்தானென்று கனிப்பதற்குப் பல வகையான கருத்துக்களுண்டு; "ஒக்குமம்மாவருவமென்று உள்ளங்குழைத்து காணுறும், தொக்க மேகப் பல்குழாங்கள் காணுந்தோறும் தோன்றுவன் சான்" என்கிறபடியே மேகத்தைக் காணும்போதே * மின்னுமாமழை தவழும் மேகவண்ணனை காரியணுணுடைய சூரபதுமன் வந்தேதிரும். "தழைகளுந் தொங்கலும் தழுவி யெங்கும் தண்ணுமை பெக்கும் மத்தளி தாழ்பலி, குழல்களும் கீதமுமாகி யெங்கும் கோவிந்தன் வருகின்று கூட்டங்கண்டு, மழை கொலோ வருகின்றதென்று சொல்லி" [பெரியாழ்வார் திருமொழி 3—4—1] என்ற பாசுரப் படியும் கொள்ளலாம். "வத்தினோடு வாய் வருந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல், பெய்த்நுயர் விட்டதெழிடமும் கித்துலக்கோட்டம்மா! என்னித்த மிக வன்பாலே வைப்பனடியேனே" [பெருமாள் திருமொழி 5—7.] என்கிறபடியே அக்ஷகதிகளால் எதிர்பார்க்கப் படுந்தன்மை மழைக்கும் திருமாலுக்கும் ஒக்குமாதலாலும் மழையைக்கண்டு காரணன் வந்தானென்று ஆராதல் அமையும்.

இனி மையல்கள்—இப்படிப்பட்ட மயக்கங்கள். இன்ன என்பது 'இவ' என்று தொக்கிக் கிடக்கிறது. என்று என்பதற்கு 'என்றைக்கு' என்ற பொருளைத்தார் பிள்ளை ராயிர வரைகாரர். .... (4)

கோமளவான்கன்றைப்புல்லிக் கோவிந்தன்மேய்த்தனவென்னும் *
போமிளகாகத்தின்பின்போய் அவன்கிடக்கையிதென்னும் *
ஆமளவொன்றுமறியேன் அருவினையாட்டியேன்பெற்ற *
கோமளவல்லியைமாயோன் மால்செய்துசெய்கின்றகூத்தே. (5)

கோமளம் வான் கன்றை புல்லி — இனியபெரிய கன்றைத்தழுவி (இவை)
கோவிந்தன் மேய்த்தன என்னும் — பசுமேய்க்க முடிசூடின கண்ணன் (இன்ன உகந்து) மேய்த்தனவென்று கூறுவாள்;
போம் இளம் காகத்தின் பின் போய் — இஷ்டப்படி நடக்கின்ற இளைய காகத்தின் பின்னே (இதற்கு முன்னே விடத்தில் அபிநிவேசம் என்ற காரணத்தால் சென்ற விதத்தில்) சென்று
அவன் கிடக்கை — அவன் பள்ளிகொள்ளும் படுக்கை
இது என்னும் — இது என்று சொல்லுவான்;
அருவினையாட்டியேன் பெற்ற — (அநுபவித்து முடிக்க) அரிய பாபத்தை யுடையேனான பெற்ற
கோமளவல்லி — மிருதுஸ்வபாவையாய், கொடிபோன்ற இவளை
மாயோன் மால் செய்து செய்கின்ற கூத்த — எம்பெருமான் மயக்கி பண்ணுகிற இத்தகைய கூத்தாட்டு
ஆம் அளவு ஒன்றும் அறியேன் — எவ்வளவில் ஆகும் என்று ஒன்றும் அறிகிலேன்.

* * *—இங்கு 'ஆன் கன்றை' என்றும் 'வான் கன்றை' என்றும் பிரியும். "ஆன் கன்றை என்ற பாடமாகவுமாம்" என்ற பன்னீராயிரத்திலுள்ளது. பசுக்களை மேய்ப்பதிற் காட்டிலும் கன்றுகளை மேய்ப்பதில் கண்ணபிரானுக்கு மிக்க ஆசையுண்டு; "நெய்த்திலும் பசுநெய்மேய்ப்பு உவந்து செல்கனிவாயெங்களாயர் தேவே" என்ற பகற்கூட்டங்களை மேய்ப்பதில் வெகு உவப்பு உள்ளதாகச் சொல்லப்பட்டது; "கன்று மேய்த்து இனிது உகந்தகாலாய்" என்ற கன்றுகளை மேய்ப்பதில் இனிமையுப்பு உள்ளதாகச் சொல்லப்பட்டது. பிறர்

http://acharya.org

கை பார்த்திருக்கும் அசுரர்களை ரக்ஷிப்பதிலேயே ஊக்கமுடையவன் எம்பெருமான் என்பது உள்ளுறை பொருள்.

கண்ணபிரான் கன்றுகளை மேய்த்த வென்பதற்கு பரகால நாயகி, தெருவில் நிரம்பக் கன்றுகளைப்பிடித்து அணைத்துக்கொண்டு 'நம் கண்ணபிரான் மேய்த்த கன்றுகள் இவை' என்கின்றாள். இக்கேட்டு ஸ்ரீ பலதேவர்:—"கன்றின் கழுத்தைக் கட்டிக்கொண்டவரை அது துள்ளிப்போக விற்குமே; அவன் பரிகரமாயே விருந்தென்னும்" என்பதாகம். "காற்றின் வடிவனுய் ஒடி அகப்புக்கு மாற்றருந்தானான்" என்கிறபடியே கைக்கு எட்டாமல் ஒடுகிற தன்மை கண்ணபிரானுக்குப்போலவே கன்றுக்கும் கண்டதனால் "கோவிந்தனுடைய பரிகரமே இவை" என்று நிச்சயமாகச் சொல்லுவளென்றபடி. கோமளமென்று இளமைக்கும் மென்மைக்கும் பெயர்; மாணிக்கத்தில் ஒருவகைக்கும் பெயர். ஆன்கன்று என்றால்—பசுங்கன்றென்றபடி. வான்கன்று என்றால்—நிச்சயமான கன்று என்றபடி. கோவிந்தன்—பசுக்களையும் கன்றுகளையும் மேய்த்த பெருமேன்மைக்கு முடிசூடினவன்.

[போம் இளகாகத்தின் இத்யாதி.] ஸர்ப்பம் ஓடக்கண்டவுடன் அஞ்சாதே அதன் பின்னேயோடி 'எம்பெருமானுடைய திருப்பள்ளி மெத்தை இது' என்கின்றாள். "ஐந்து பைத் தலையாடரவினை மேவிப் பாற்கடல் யோகித்திரை சிக்கைசெய்த வெந்தாய் உன்னைச் சிக்கை செய்து கொண்டே" என்கிறபடியே அவனுடைய சேஷிதையான வைபவத்தையே இடைவிடாது சிந்திப்பவளாதலால் அதுவே நினைவாயபடி. அதனாலே கூடித் தானும் படுக்கையென்ற ஆசையோடே சாகத்தின் மேலே ஏறுகின்றாளென்றபோதும்.

"ஆனையை ஒன்றுமறியேன்" என்பதை உள்ளவிடத்திலேயே அர்த்தியிக்கலாம்; 'மாயோன் அருளினையாட்டியேன் பெற்ற கோமளவல்லியை மால் செய்து செய்கின்ற கூத்து ஆமனவொன்றும் மறியேன்' என்று அர்த்தியிக்கலாகாம். மூன்றாம் பாசுரத்தில், கூத்தே! என்பது 'இப்படியும் ஒரு கூத்து ஆமதே!' என்று முடியும். ... ... (இ)

கூத்தர்குடமெடுத்தாடில் கோவிந்தனுமெனுவோடும் **
வாய்த்தகுழலோசைகேட்கில் மாயவனென்றுமையாக்கும் *
ஆய்ச்சியர்வெண்ணெய்கள்சாணில் அவனுண்டவெண்ணெயீதென்னும் *
பேய்ச்சிமுலைநவைத்தார்க்கு என்பெண்கொடியேறியபித்தே! (கூ)

கூத்தர் குடம் எடுத்து ஆடில் } மாயோனும் கூத்தாடுபவர்களை குடத்தை எடுத்து ஆடினால் கலாவில்

கோவிந்தன் ஆய் எனும் } (குடக்கூத்தாடுதலே ஸ்வபாவமாகவுடைய) கிருஷ்ணன் ஆய் என்ற கருதி (கான்வகைக்கு) ஒப்பவான்,

வாய்த்த குழல் ஓசை கேட்கில் மாயவன் என்று மையாக்கும் } இவ்வ குழலின் ஓசையைக் கேட்டபோதில்

ஆய்ச்சியர் வெண்ணெய்கள் சாணில் } கிருஷ்ணன் என்று நினைத்து மோஹியா நிற்பள்; இடைச்சிகள் வசியிலே வெண்ணெயைக் கண்டபோதில்

அவன் உண்ட வெண்ணெய் எது என்னும் } அவன் அமுது செய்தருளின வெண்ணெய் இது என்கிறாள்;

பேய்ச்சி முலை நவைத்தார்க்கு } பூதனையினுடைய முலையைப் ப்ராணனோடே கவர்த்து முடித்த கண்ணபிரானுக்கு

கொடி என்பெண் } கொடிபோன்றவளான என்னுடைய மகள்

ஏறிய } நிலமண்டலமிடிப்படி கொண்ட

பித்த ஏ } பித்தே இருந்தபடி. ஆச்சரியம்.

* * *—தீவனத்திற்பசுக்கள் குடக்கூத்தாடித் திரிகிறவர்களுண்டே; அவர்கள்வந்து குடங்களை விசியெறிந்து ஆடுமதுகண்டால் * குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்ல

http://acharya.org

கோவாகிய கோவிந்தனே ஆடுவதாக ப்ரதிபத்திபண்ணி அதனை அநுகேயிருந்த காண் நடுவின் முன். எப்படிப்பட்டவர்களையும் மீடுபடுத்தவல்ல புள்ளாய்குழலின் இசைவன்ற செவிப்பட்டான், கண்ணபிரானென்று சொல்லி வியாமோஹிக்கின்றாள். இடைச்சிகள் கொணர்க்து விற்கும் வெண்ணெயைக் கண்டால், அன்ன அவன் நிருவாய்ப்பாடியில் களவுகண்டு அமுதுசெய்த வெண்ணெயோடொத்த வெண்ணெய் இது என்று சொல்லா நின்றாள்; தாய் உதவாத தனிமையிலே பூதனையென்பவள் தாய்வடிவுகொண்டு வந்த சமயத்தை, அவளை முடித்துத் தன்னைச் சேமமாகத் தந்த உபகாரத்துக்குத் தோற்று இவள் பித்தேறினளாயிற்று; இப்படியும் ஒரு விலக்ஷணமான பிச்சு உண்டோ வென்கிறாள் நிருத்தாய்.

குடமேத்தாடில் மன்னகையாலே, மாதாலவமாலை கூத்துக்கமைப்பொருள் படுத்தாள்; குடக்கூத்தென்றிலேயே விடுபடுவானென்பது பெறப்பட்டது. அக்காலத்துச் செல்வம் மிக்கினள் யாகம்செய்யுமாபோலே இவை யர்க்குச் செல்வர்கிருஷ்ணன் களிப்புக்குப் போக்கு விடாகக் குடக்கூத்தாடுவர்கள் என்று ப்ரார்த்தி. கண்ணபிரானும் சாந்திசெய்ப்பாட்டுக்காகக் குடக்கூத்தாடினனும்; அதில் ஆழ்வார்கள் மிக மடுபடுவர்கள். "ரோச் கமலர்போல் செங் கண்மரலென்றெருவன், பாரோர்களெல்லாம் மறிழப்பறைகறங்கச், சீரார் குடமிரண்டேற்றிச் செழுந்தெருவே ஆரோனைச் சொல்லியாடுமதுகண்டு, வாரின முலையாரணியரு மெல்லாரும், வாராயோ வென்றழைக்கும் சேவற்றனன் வல்லிளையாள்" என்று தொடங்கியுள்ள சிரிய நிருமடற் பாசுரம் காண்க.

குடக்கூத்தாடுமது கண்டு கோவிந்தன் என்று சொல்லி முடிஞ்ளாசாம்; யாரோ வயிற் றுப்பிழைப்புக்காக ஆடித்திரிகிறார்களத்தனை; கண்ணனல்லன்' என்று விவேகிகள் கூறி னால் 'கோவிந்தனும்' என்று சொல்லி முடிவளாசாம். 'கோவிந்தனேயோ?; நின்னைமாக காண்கிலேன்' என்றவாறு.

வாய்த்த குழலோசை இத்யாதி. கண்ணபிரானுடைய வேணுகானச் சிறப்பு பெரியாழ் வார் திருமொழியில் "சலலம் பெரிய நிலனில் வாழும்" என்கிற பதிகத்திலும், ஸ்ரீசங்கராஜ ஸ்தவ—உத்தரசதகத்தில் "வெளலோ ஸ்ரீஸுதயாலவாலதலை—சாலோசக்கிச் சலலாம்பூவ" இத்தி யாதி ச்லோகத்திலும் பரக்கக் காணத்தக்கது.

மாயவனென்று='மாயவனுடை கண்ணன் வாதகிற குழலின் ஓசையென்று' என்று பொருள் கொள்வது தனிர 'மாயவனுடை கண்ணனேயென்று' என்கிற பொருளும் கொள்ளத் தகும். இதே "புகழுடைய்லோருலகில் 'நூடன்று கேள்வியினை யென்கோ" என்றருளிச் செய் திருக்கையாலே எம்பெருமான்றன்னையே லக்ஷ்யமாகக் கொள்ளுகிற புடைபடுண்டிதே; குழலோசையை எம்பெருமானுகவே பாவித்து பண்ணு கின்றனென்றபடி. கண்ணனுடைய குழலோசையாக நினைத்து மோஹிக்கின்றனென்ற பொருளில் மாயவன் என்ற சொற்களை யில் கோக்காக கப்பின்னே அருளிச்செய்யும் அத்தம் மிக அழகியது; அதாவது—நில கோபி மார்களுடனே கலந்து பிரிந்தால் அத்தலையில் பிரணய ரோஷம் தலையெடுத்திருக்கும்; மீண்டும் அவர்களோடு கலக்க நினைக்குர்போது அந்த ஊடலை ஆற்றவேண்டிச் சில தாழ்ந்த சொற் களைக் குழலிலேயிட்டுப் பாடிக்கொண்டே செல்வனும்; 'பகலெல்லாம் பசுக்களின் பின்னே போனேன்; தாய் தந்தையர்க்குப் பாதத்தினருகிருந்தேன்; பிரிந்தேன்; தரிக்கமாட்டிற்றிலேன்; ஒருபகல் ஆயிர முழியாய்ச்செல்லா நின்றது, என்றிங்களே பாசுரங்களை உள்ளே யிசைத்துப் பாடுவதுண்டு; அது தோன்ற மாயவன் என்றதாக.

http://acharya.org

மையாத்தல்—மோதவிடுதல்.

"ஆய்ச்சியர் வெண்ணெய்" என்ற விடத்து, பிராமணஸ்த்ரீகள் கடைந்து திரட்டிய வெண்ணெய்க்கண்டால் ஒன்றும் பேசாள்; இடைச்சிகள் கையில் முடை நாற்றம் பெற்ற வெண்ணெய் கண்டால்—என்ன இன்னவைப் பொருளைப்பற் நாம்சொல்லி.

அவனுண்ட வெண்ணெய் எதென்னும் — கண்ணபிரான் அக்காலத்து அமுதுசெய்த வெண்ணெய் இப்போது காணமுடியாதாகலால், அவனுண்ட வெண்ணெயோடு ஸதர்ஸ்ய மான வெண்ணெய் என்றபடி.

முன்னடிகளில் கோவிந்தன், மாயவன் என்ற திருநாமங்களைச் சொன்னதுபோலே இங்கும் [மூன்றுமடியிலும்] ஒரு திருநாமம் சொல்லவேமாயிருக்க அது சொல்லாது அவன் என்றது—வெண்ணெயுண்ண அவன் பட்டபாடுகளே யெல்லாம் உளப்படுத்தினவாறு. "யாரார் வனமுலையான் மத்தாரப் பற்றிக்கொண்டு, யாரினடுநாள் எத்தனியோர் போதுமாய், நீரார் கயிற்கடைத்து வெண்ணெய் நிரண்டதனை, யோரார்துதல் மடவாள் வேடுரைக் கலத்திட்டு, காரா ரூரி யேற்றி கள்கையை வைத்ததனைப், போரார் வேற்கண் மடவாள் பேசத்தனையும் பொய் யுறக்கம், ஓரானவன் போதுறங்கியறிவுற்றத், தாரார் நடந்தோள்களுள்ளனையும் கைகோட்டி, ஆரா தவெண்ணெய் விழுங்கி" (பெரிய திருமடல்) இத்யாதி.

ஈற்றடிக்கு வ்யாக்யானம்;—"இவன் இப்படிக் கலவுகைக்கு நிதானமென்னனில்; [பேய்ச்சி முலை கவைத்தாற்போல்.] அவன் முன்பே யொரு உபகாரத்தைப் பண்ணிவைத்தான்; அதினாலே தோற்றவன்று தொடங்கி இவள் பிச்சேறத் தொடங்கினாள்; தாயுங்கூட உத வாதவயஸ்ஸிலே பூதனையன்று முலைகொடுக்க, அவ்வளவிலே உணர்த்தியுண்டாய் அவளை முடித் தத் தன்னை கோக்கித்தக்தானே; அப்படிகாரத்தினாலே தோற்று அன்று தொடங்கி இவள் பிச்சேறி னாள்.—பூத்தருபுணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, கனிதரு புணர்ச்சி என்றிவை புணர்ச்சிக்கு நேரது. அதாவது—எட்டாத கொம்பிலே கின்றதொரு பூவை ஆசைப்பட்டால் இவன் தன் னைப் பேறுதே இவளாசையை முடித்துக்கொடுக்க 'இவன் தன்னைப் பேறுதே நம் நினைவை முடித்தானே' என்று அதுக்காகத் தன்னைக்கொடுக்கை பூத்தரு புணர்ச்சி. அற்றிலே அழுக்கு றைவனைத் தான் புக்கேறவிட, அதற்காகத் தன்னைக் கொடுக்கை புனல்தரு புணர்ச்சி. அவிந்தி மாக ஆனையின் கையிலே அகப்பட்டவனே மீட்டுக்கொடுக்க, அதுக்காகத் தன்னைக் கொடுக்கை கனிதரு புணர்ச்சி. இவை யொன்றுமல்ல; அவள் தன்னை கோக்கினதுக்கு இவன் தன்னை யொழிக்கொடுக்கிறான்." .... (6)

எறிவித்தீவினை யெல்லாவுலகுகண்ணன்படைப்பென்னும் *
நீறுசெவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றேறும் *
காறுதுழாய்மலர்காணில் காரணன்கண்ணனீதென்னும் *
தேறியும்தேறுதும் மாயோன்திறத்தனளேயித்திருவே. (எ)

எறிவித்தீவினை எல்லாவுலகுகண்ணன்படைப்பென்னும் — திருக்தமயக்கத்தோடே கூடியிருக்கச்செய்தே (வேதாந்த யித்துக்கன் சொல்லுமாபோல) ஸகலலோகங்களும் கிருஷ்ணனுடைய ஸ்ருஷ்டி என்று கூறுகிறாள்;

நீறுசெவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரென்றேறும் — சிவன்சாத்தை பேன்கோக்கில் இடக்கண்டாளாகில் ஸர்வேச்வரனுடைய அடி யார் என்று கொண்டு (அவர்களோடு தொடர்த்து) ஒதுகிறாள்;

காறுதுழாய்மலர்காணில் காரணன்கண்ணனீதென்னும் — வெறுமால் அடியார் என்று ஓதும்

தேறியும்தேறுதும் மாயோன்திறத்தனளேயித்திருவே.

http://acharya.org

சாறு அழாய் மலர் காணில்	பரிமளம் மிகும் திருத்துழாயின் பூக்காலைக் கண்டாளாகில்	தேறிலும் தேறாள்	தேறினால்லதிலும் கலக்கினாலதிலும்
சாரணன் கண்ணி எது என்னும்	ஸர்வஸ்மாதிபரனான காரணனுடைய மாலை இது என்கிறாள்;	மாசோல் திதத் தலன்	திருமகள் போல்வாளான இப்பெண்பிள்ளை மற்பெருமான் விஷயமல்லது வேறொன்றிலாள்.

* * *—"என்பெலும்கொடு வேய்யர்த்தே" என்று மேற்பாட்டில் தலைக்கட்டிற்றே. உலகில் பித்துக்கொள்ளிகளாயிருக்கு மவர்கள் வாயில் வந்தபடி எதையேனும் தப்புத்தவறு மாய்ப் பேசவதுண்டே; அப்படி. இவள் எதேனும் பேசினிற்குளோ என்ன; பித்தாயினை நிலைமையிலும் பகவத்விஷயத்தில் தெளிவு பிறந்தும் மாறிற்றிலளே யென்கிறாள். பரசரமதமறிவி முதலானுர் தெளிந்திருந்து என்னவார்த்தை சொல்லுவர்களோ அத்தவார்த்தை இவள் சொல்லுகின்றாள் காண்மின். "வாசரபரம் ஈஷ்டிவரம் சுர தலைவாதுதிகதி பது தெதே வாரி வயூஜீவுணிவ தூரவிவாதூத்ய—பராசரம் முனிவரம் சுருதவெளீவாற்றிகல்கியர், மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ராணிபத்யாயிவாத்ய ச" என்கிறபடியே வணங்கி வழிபட்டுக் கேள்விகேட்ட மைத்ரேய பகவானுக்கு, சுற்றுமுள்ள கொண்டிருந்த பராசரபகவான் "விஷ்ணோரகாபரா ஶக்தி: ஜகத்தெஜேவத ஸ்தி:கதி: ஸ்ரீதிர ஜகதாலோள ஜகதோவா ஜகத்ஸ்வா—வில் ஜேஸ் ஸைசாத் உத்பூதம் ஜகத் ஸர்வம் சுன்றிதம். ஸ்ரீதி ஸர்வபாகாத்தாலோள ஜகதோன்ய ஜகச்ச ஸ:." என்ற உபதேசித்த அருட்பெரும் பொருளை இவள் பித்தங்கொண்டிருந்திற நிலையிலே அலமீலையாக மடித்துவைத்திருந்தாளாயிற்று. வேருவேதமோதிய அத்தணன் பித் தேறினாலும் வேதவாக்கியங்களிலே சொல்லித் திரியுமாபோலே இவளும் வாளாபனத்தாலே பகவத் விஷயமல்லது பேசாளென்கை.

நீறு செல்வேலிடக்காணில் நெடுமாலடியாளென்றேறும்=நிருமாலடியார்களுக்கு பஸ்ம தாரணம் சான்ற மிகித்தம் என்னுமிடம் ஆழ்வார்தாமதன்று; நீறு இடுமவர்களே நெடுமா லடியாரென்ற பிரமத்தை பண்ண ப்ரவர்த்திப்பிக்கை, அப்படியிருக்க இங்கு அருளிச்செய்வதற் குக் கருத்தென்னென்னில்; "தெய்வம் எதேனுமாகிலும் ஸாத்த்விகமாக இடக்காணில் நெடுமா லடியாரென்றேறும்." என்பதை அநுஸரிப்படி யருளிச்செயல். இதிலே அடியொற்றியே மற்ற வியாக்கியானங்களும் முன்னவை. பஸ்மதாரணம் பண்ணினவர்களேயாயினும் அந்த பஸ் மத்தைக் குறைக்கே பூசாதே நெடுக இட்டால் 'ஸாத்த்விகபுண்ட்ரதாரிகளிவர்கள்' என்ற அவ் வளவுக்காக ப்ரமித்து பண்ணினென்றபடி..

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸங்கல்பஸூர்யோதயத்தில் ஸாத்த்வ புண்ட்ரதாரண விதிப்பகுதியில்— "நந்த— வாஜ்ஞாஸாலை தவாயஜ்ஞம் ஸ்ரீ ஹரீத வக்ஷ:ஸ்தலாததவிஷ்டரவே தூ ஜிஜ்ஞாஸே கயம் ஸாலவி கிங்காரா:கதந்தா வதோஷ்டவ-ஸ்ணுவ் திவாஷ்டிழ்?" என்று தொடங்கி அருளிச்செய்யப்பட்டதற்கும் விரோதங்களைப் பரிஹரித்துக்கொள்ளக்கடவை. (அவற்றின் கருத்துச் சுருக்கம் வருமாறு:—) அகில பாகவதர்களாலும் விரும்பத் தொன்னப் பட்ட தமிழ் வேதமாகிய திருவாய்மொழியில் 'நீறு செல்வேலிடக் காணில் நெடுமாலடியா ரென்றேறும்' என்கிற பாகரத்தினால் பகவத் பக்தர்களுக்கு பஸ்மதாரணம் ஸஹஜமென்போல் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே, இது எப்படி? என்ற ஸந்தேஹித்துக்கொண்டு சில ஸாதாரணங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன. மேலே நாம் காட்டியவைகளிலே ஒரு ஸாதாரணம். மற் றொரு ஸாதாரணமாவது—நீறு என்றுஞ் சொல் பஸ்மத்தையே சொல்லும் என்கிற நியதி யில்லை, ஆழ்வார்தாமே "மாயன் தாளடி நீறு கொண்டு அணிய முயலில்" என்று வேறோரிடத்

http://acharya.org

நில் அருளிச்செய்திருக்கையாலே பாகவதர்களின் நிருவடிப் பொடியையும் பொருளாகக் கொள்ளலாம் என்பதாம்.

பன்மாதாரணம் பண்ணுகிறவர்கள் குறுக்கே பூசல் காண்பதொழிய மாத்வாதி இடுவதுமுண்டோவென்ற இவர் முற்காலத்திலேயே சங்கித்தார்கள்; அதற்குப் பரிஹாரமும் நம் பிள்ளை யருளிச்செய்தார். கட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—"அவர்கள் செவ்வேவிடுவர்களோ வென்னில், அதுவுமன்றிக்கே இதுவான்றிக்கே பாகவப்ராயர் விருப்பார்கள் தரிப்பர்களிறே." (அதாவது) இரண்டுங் கெட்டான் என்று சொல்லப்படுகிற இவர் பக்ஷத்தையே மாத்தி புண்ட்ரமாகவும் தரிப்பர்களென்றபடி.

[காறுதுழாய் இத்யாதி] உதயணம் மிக்க நிருத்யுராசையைக் கண்டால், என் நாயகன் *தோளினைமேலும் கன் மார்பின்மேலும் உடர்முடி மேலும் தாளினைமேலும் பூசுத்த தண் ணந்துழாய் இது என்கிலேன்.

பலசொல்லி என்? இத்துக்கொள்ளாமலிருக்கிற காலத்தோடு இத்துக்கொண்டிருக் கிற காலத்தோடுவாசியற மன்மகள் பாகவத்விஷயமான வார்த்தைகளில் தெளிவுபெற்றே விருக்கின்றாளென்கிறது சுற்றடி. "இத்திரு" என்றதனால் இப்பாசுரத்து நாயகி ஸ்ரீ மஹா லக்ஷ்மியின் அம்சம் என்பது தெரிவிக்கப் படுகிறது. இதைப்பற்றின விவரணம் ஆசார்ய ஹ்ருதயத்தில் (இரண்டாம் ப்ரகரணத்தில்) "இராவெனில் உவாசகம் குழைத்தவன்" என்கிற சூர்ணையிலும், "இத்திரு மண்ணோர்வண்மை வெளிப்படுதல் மின்னேகோ லென்கிறவொப்பு" என் கிற சூர்ணையிலும் காணத்தக்கது. ... ... (எ)

திருவுடைமன்னரைக்காணில் திருமாலேக்கண்டேனேயென்னும் *
உருவுடைவண்ணங்கள்காணில் உலகளந்தானென்றுதுள்ளும் *
கருவுடைத்தேவில்களெல்லாம் கடல்வண்ணன்கோயிலேயென்னும் *
வெருவிலும்வீழ்விலுமோவாக் கண்ணன்கழல்கள்விரும்புமே. (அ)

திரு உடை	பூர்ணமான சௌகுமார்யத்தை யுடைய	கரு உடை	விக்ரஹபுஷ்டியான
மன்னரை காணில் திரு மாலே	ஆஸார்யனைக் கண்டால் திருமகள் கொழுநனான எம்பெருமானே	தேவு இல்கள் என்னும்	தேவதாந்தரங்கள் பரமும்
கண்டேனே என்னும்	கண்டேனே! என்று கூறுவர்;	கடல்வண்ணன் கோயிலே என்னும்	எம்பெருமானின் (பரத்வத்தை யுள்ள) கோயில்களே என்று கூறுவர்
உரு உடை	சிலாரூப வடிவங்களை யுடைய		
வண்ணங்கள் காணில்	(காயாம்பூ முதலிய) பதார்த்த நன்மோத் கண்டால்	வெருவிலும் வீழ்விலும்	அஞ்சினபோதும் (ஆர்த்தி யாலே) சோர்ந்தபோதும்
உலகளந்தான் என்று துள்ளும்	(இச்செல்வியுள்ளது) நிரு மூலகளத்தருளின எம் பெருமானுக்கு' என அத் யவஸித்து ப்ரீதியோடே துள்ளுவர்!	முகை	ஒழிவாதகாலமெல்
		கண்ணன் கழல்கள் விரும்பும்	திருப்பாதங்களை திருவடிகளையே போற்றுவர்.

* * *—செல்வம் மிக்க ஆசார்யனைக் கண்டால் திருமாலேக்கண்டதாகவே சொல்லுவ ளாம். எனென்னில்; "நாவிஷ்ணுவ்யதிரிக்தோ ஹி விஷ்ணுர்: ப்ருதிவிபதி:" என்று சாஸ்த்ரம் கூறுகின்றது; விஷ்ணுவின் அம்சமில்லாமல் ஆசார்யனை அமைய முடியாதென்பது இந்த ப்ரமா ணத்தின் கருத்து. பூதத்தாழ்வார் தமது திருவந்தாதியில்—"கோவாசல் மாலிலங்கைத்து வன் கண் முகப்பே, மாவேகிச் செல்கின்ற மன்னவரும்—பூவேலுஞ் செங்கமல நாபியான் சேவ டிக்கே யேற்றிறைப்பும், தண்கமல சேய்த்தார்தாம்." என்றருளிச்செய்திருப்

http://acharya.org

பகவானே ஆராதித்த அதன்பலனுகவே அரசாகவாகிச் சீரிய சிங்காசனம் எதிர்பார்க்க வொண்ணாதே.

இங்கே ஐந்து ஐதிஹ்யங்கள் காட்டில் அருளிச் செய்யப்படுகின்றன. அரசன் ராமன் தன் தலையிலே அடியிட்டு ஆசீர்க்முத்திலே எதிர்போது நாதமுனிகள் கண்டு "ஸர்வேச்வரன் ப்ரஹ்மாதிகள் தலையிலே அடியிட்டுப் பெரியதிருவடியின் மீது எழுந்தருளி இருக்கிறவன்றே" என்று சொல்லி மோஹித்தாராம். மது ராஜாவைக்கண்டு ஆவல்பின்னே தொடர்ந்து போனர் என்று முன்பு.

கருவுடை வண்ணங்கள் காணில் உலகளந்தானென்று துள்ளும்=விலக்ஷணரூபங்களே யுடைய பதார்த்தங்களைக்கண்டால் (அதாவது, நீலம் குவளை காயா முதலிய கருவுற்றிய பொருள்களைக் கண்டால் 'உலகளந்த மாயன்' என்று சொல்லித் துள்ளுகின்றன்.

(கருவுடை யித்யாதி.] கம்புலத்துக் கிடக்குங் கன்றானைக்கண்டால் அவையெல் லாம் பெரிய பெருமாள் பள்ளிகொண்டருளுகிற கோயிலே யென்று சொல்லுகின்றன். எந்த ப்ரதிமையிலும் வர்பெருமாளுடைய ஆவேசம் இருக்கை நீருமென்பது கருத்து. நாதர் பேர் கையெடுத்துக்குப்பிடவேண்டும்படி விருக்குமிடம் எதுவானாலும் அங்கு எம்பெருமா னுடைய ஸாந்நித்யம் உண்டாகிலே யிருக்குமென்க. இங்குக் கடல்வண்ணன் என்றதனால் "ஞுகாஸாகிவ தீ தமதோஸம் யோ முதுதி வாஜுமதி வலஸூதிவ தத்வலாஸ கெபவாகுதி மதுதி—ஆகாசாத் பதிதம் தோயம் யதா கச்சதி ஸாகரம். ஸர்வதேவநமஸ்காரः கேஸவம் ப்ரதி கச்சதி." என்கிற ஸுப்ரஸித்த ச்லோகம் நினைவுக்கு வருகின்றது. ஆகாசத் தண்ணீரும் கடலிலேபோய்ப் புகுமாபோலே எந்தத் தெய்வத்தைப் பற்றினை வண்காரமும் கடல்வண்ண னிடத்தே போய்ச் சேருமென்பது மேலெடுத்த வாசகத்தின் கருத்து.

வெகுளிலும் வீழ்விலும்=வெறுத்தலாவது அருளாதது; வீழ்த்தலாவது மோஹித்தல். தெளிவோடே கூடியிருந்து பார்த்துக்கொண்டு அருளி யிருக்கும்போதும், அறிவழித்து மோஹித்துக் கிடக்கும்போதும் நுடைவிடாதே கண்ணன் கழல்களில் விருப்பமே இவருக் குச் செல்லா நின்றது என்றதாயிற்று. ... . (அ)

விரும்பிப்பகவரைக்காணில் வியலிடமுண்டானேயென்னும் *
கரும்பெருமேகங்கள்காணில் கண்ணனென்றேறப்பறக்கும் *
பெரும்புலவாணரைகாணில் பிராணனென்றுபின்சேல்லும் *
அரும்பெறல்பெண்ணினமாயோன் கலத்தியலர்ப்பிக்கின்றனே. (ஆ)

பகவரை	ஸர்வேச்வரனை	எதிர்பார்க்கும்	(அக்கே செல்ல) மேலே பெருத்து பறப்பதற்கு அவாவுகிற்கும்;
காணில்	கண்டால்		
விரும்பி	ஆதரவு கொண்டு மேவி		
வியல் இடம் உண்டானே என்னும்	அகன்ற உலகத்தை ப்ரள யாபத்திலே உண்டி திருவயி றிலே வைத்து ரக்ஷித்த ஸர்வரக்ஷகனே என்பன்;	பெரு புலவாணரை காணில்	பரந்த அழகிய பசுக் கணைக் கண்டால்
கரு பெரு மேகங்கள் காணில்	கறுத்துப்பெருத்த மேகங்களைக்கண்டால்	பிராண	(அவற்றை மேய்த்து ரக்ஷிப் பவனை) உபகாரகனை
கண்ணன் என்று	கண்ணபிரான் என்று நினைத்து	உடன் என்று	கூடவருகிறான் என்று நினைத்து
ஏறப்பறக்கும்	மேலெழுந்து பறக்கும்	பின் செல்லும்	அப்பசுக்களின் பின்னே போகும்

http://acharya.org

பெறல் அரு பெண்மையினை மாயோன்	பெறுதற்கு அரியவளான இப் பெண்மணி எம்பெருமான்	அன்றி அரவிற்கே இன்புள்	வாய்விட்டு அலறும்படி பண்ணி (அதற்குமேலே) மோதிக் குப்புடி பண்ணுகிறான்.

* * *—பகவர் என்றது பாகைகாக்கிறவர்கள் என்றபடி. ஸ்ரீராமாயணத்தில் பரிபூர்ணர்களான உத்தமாச்ரமிகள் என்று கொள்க. பகவானைச் சொல்லுகிற சொல்லையிட்டே அவர்களைக் கூறினது—அவர்கள் பகவானில் வேறுபடாதவர்கள் என்பதைக் காட்டுதற்கென்க.

அப்படிப்பட்டவர்களைக் கண்டால், உலகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்து நோக்கின பெருமானுக்கே பிரதிபத்தி பண்ணுவன். "ஸ்ரீராகீது ஆத்மைவ மே மதம்" என்கிற பகவத்கீதைபடியே நோக்குப்போதும்.

கரும்பெரு மேகங்கள் காணில்=கறுத்துப் பெருத்து விடாய்தீர்க்குமதான மேகத்தைக் கண்டவாறே அப்படிப்பட்ட வடிவையுடையனான கண்ணபிரான் தானே வந்து தோன்றினானாக்கொண்டு கோலாஹலங்கள் செய்யா நிற்பன். இங்கே ஒரு இதிஹாஸம் எடுத்துக் அருளிச்செய்யப்படுகிறது:—ராஜேந்திரசோழன் என்னும் மன்னில் திருவாய்க்குலத்தாழ்வார் என்று ஒருவரிருந்தாராம்; அவர் கார்காலத்திலே பயிர் பார்க்கவென்று புறப்பட்டு வயலருகில் சென்றவாறே மேகத்தைக் கண்டு மோஹித்து விழுந்தாராம்; இவர் விழுந்ததைக் கண்டு நின்ற சிஷ்யகன் ஒடிவந்து அவரை யெடுத்துக்கொண்டு வந்து க்ருஹத்திலேவிட்டு 'இவருடைய ப்ரக்ருதியை அறிந்திருந்தும் இக்காலிலே இவரை வயல் பார்க்கப் புறப்படவிடலாமோ?' என்றும். மேகத்தைக் கண்டு பகவானுகவே யென்னி மோஹித்து விழுதல் பக்தர்களுக்கு உள்ளதென்ற இதனால் விளங்கிற்று.

பெரும்புலவாணரை காணில் பிரானுளனென்று பின் செல்லும்=பசுக்கூட்டங்கள் வயல்களிலே மேய்ந்துவிட்டு மாலைப்போதிலே மீண்டு வரக்குள்ளே புகுதல் எங்குமுண்டே; அத்தகைய நிலைக் கண்டால், * கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு கலந்து நமைகளுந் தொங்கலும் தழும்பி யெங்கும் தண்ணுமையெக்கம் மத்தளி தாழ்பிலிக் குழல்களுங் கீதமுமாகி யெங்குங் கோவிந்தன் வருகின்ற கூட்டமதனிலே கொண்டலை, முன்னலியிலே கண்டவாறே காணுங். நிற்குமிடமிலே அவன் எழுந்தருளக் கூடுமென்று கருதிப் பின்னுலேசென்று பார்க்கின்றன். இப்பசுக்களின் கோஷ்டிக்குள்ளே கண்ணபிரான் இருக்கக்கூடுமென்று நினைத்து, எப்படியும் அவனைக் காணவேணுமென்று கருதி அவற்றைத் தொடர்ந்துகொண்டே செல்லாகின்றன் என்றுமாம்.

புலம் என்றது இந்திரியங்களை அடக்கியிருக்குமதான என்றபடி: அழகிய என்பது தேர்ந்தபொருள்.

எப்போதும் தன்னையே வாய் வெருவும்படியாகவும் மோஹிக்கும்படியாகவும் இப்படி எம்பெருமான் செய்துவிட்டானே! என்கிறன் நற்றடியில். ஆழ்வார் இவ்வுலகில் திருவவதரித்தது மிக்க நலப்பயன் என்பது அரும்பெறல் பெண்ணினை என்பதனால் தெரிவிக்கப்பட்டது. "அருவினையேன் கெடுங்காலமும் கண்ணன் கிண்கிணிப்பாதம் பணிப்பெற்ற" என்ற திருவிருத்தமும் இங்கு அநுஸந்தேயம். ... ... (கு)

தி. 4—15.

http://acharya.org

அயர்க்கும்சுற்றும்பற்றிகோக்கும் அகலவேகீளேக்குக்கொள்ளும் *
வியர்க்கும்மழைக்கண்துளும்ப வெவ்வுயிர்க்கொள்ளும்மெய்சோகும் *
பெயர்த்தும்கண்ணேவென்றுபேகம் பெருமானேவாவென்றுகூவும் *
மயல்பெருங்காதலென்பேதைக்கு என்செய்கேன்?வல்வினையேனே. (கo)

அயர்க்கும் — மோஹியா நிற்பள்;
சுற்றும் பற்றி கோக்கும் — (கண்ணன் தன்னிடத்து வராதொழியானென்று நினைத்து அவன் வருகையை) சுற்றிலும் பன்காலும் பார்ப்பள்;
(அவ்வளவிலும் காணுமையிறே அவன் தாரத்திலே நிற்கிறதுகவெண்ணி)
அகல கீள் கோக்கு கொள்ளும் — பார்த்த கண்ணை ஓட்டி மெடுப்போது பாராகிற்பள்;
(அக்கும் காணுமையிறே)
வியர்க்கும் மழை கண் அணும்ப — வேர்த்து நீராக நிற்கும்; மழைபோலக் கண்களில் நீர் துளும்பும்படி
வெவ் உயிர்க்கொள்ளும் — வெவ்விதாக மெடுமூச்செறிகின்றாள்;
மெய் சோகும் — (இத்தகைய பரிதாபத்தாலே) சரீரம் தரிக்கமாட்டாமல் வாடுவள்;

பெயர்த்தும் — மின்னையும் (ஆசையிருந்தபடியிறே)
கண்ணே என்று பேகம் — கிருஷ்ணனே! என்று கூப்பிடுவாள்;
(அவ்வளவிலே வந்தாகுமென்னில்)
பெருமானே — என்னுடைய ஸ்வாமியே!
வா என்று கூவும் — வரலாகாதோ? என்று அழைப்பாள்;
மயல் — (இப்படிப்) பித்தேறிப்போய்
பெருகாதல் — பெரிய காதலையுடையளான
என் பேதைக்கு — என் சொற்கோப் பெண்ணுக்கு
வல்வினையேன் — (இவளே இப்படிக் காணும்படி) கொடிய பாபத்தையுடைய நான்
என் செய்கேன் — என்ன செய்வேன்?

* * *—பராங்குசநாயகியின் பலவகைப்பட்ட நிலைமைகளை மெடுத்துரைக்கின்றார் நிருத்தாய். அயர்க்கும்=நினைவுகளிலே அறிவழிந்து விடுகின்றாள். சுற்றும் பற்றி கோக்கும்—நினைவுகளிலே அறிவு குடிபுகுந்திருந்து, தனக்குக் காட்சி தருவதற்காக எம்பெருமான் அருகே வந்திருந்தானுகக்கொண்டு மிக்க ஆவலுடனே சுற்றும் நோக்குகின்றாள். அகலவே கீள் கோக்குக்கொள்ளும்—சுற்றும் பார்த்தும் காணுதொழிந்தவாறே, பரமபதத்தில் நின்றும் இப்போதே புறப்பட்டிருக்கக் கூடும்; அவ்விருந்து எழுந்தருளுகிற அழகைக் காண்போம்" என்று மெடுந்தாரத்திலே கண்ணோட்டிப் பாராகின்றாள். வியர்க்கும்=அவற்றைக் காணப்பெறுமையாலே நினைப்பாலே வியர்வை மிகும். [மழைக்கண் இத்யாதி.] வேர்வையாய்ப் புறப்பட்டதுபோக மிகுந்தது கண்ணீராய்ப் புறப்படும்; அதினும் மிகுந்தது மெடு மூச்சாய்ப் புறப்படும். அந்த பரிதாபத்தாலே சரீரம் தரிக்கமாட்டாமல் சோரும்; பின்னையும் ஆசை பேராநிற்கவொட்டாமையாலே, பெண்களுக்கு அற்றுத் தீர்ந்த கிருஷ்ணனே! என்று கூகின்றாள். அவ்வளவு கூனினவாறே உருவெளிப்பாட்டாலே அவன்றன்னை வந்து தோன்றினனுகக் கொண்டு 'பெருமானே! வா' என்று அன்புதோற்ற அழைக்கின்றாள்.

மயற் பெருங்காதல் என் பேதைக்கு வல்வினையேன் என்செய்கேன்?=இவள் நிறத்திலே நான் செய்யக்கூடியதான உபாயம் ஒன்றும் தோன்றவில்லையே!; இவளுடைய காதலோ கையழிந்து விடுகின்றது. அதுதானே வடிவுகொண்டாற்போலே யிருக்கின்ற இவளுக்கு நான் என்ன செய்யவல்லேன்? 'இப்படியெல்லாம் நீ இருக்கத்தகாது' என்று நான் சொன்னால் அதுகேட்குமப்படியான நிலைமையன்றே. 'இப்படிப்பட்ட காதல் உனக்கு ஆகாது' என்று சொல்லலாமென்று பார்த்தாலோ, அது விஞ்சி விடுகின்றதே! என்செய்வேன்! என்கிறாள்.

http://acharya.org

மயற்பெருங்காதல்—மோதறத்தை விளைக்கக்கடவதான பேரன்பு என்றபடி. "வல் வினைகளே" என்றவிடத்து ஈடு;—"இவனே இப்படி காணும்படி மதராபாபத்தைப் பண்ணி னேன். ஆழ்வான் திருவனைக்கல் சேவிப்பட்ட பின்பு எம்பெருமானுர் திருவுள்ளம் சேவு பட்டாப்போலே காணும் திருத்தாயார் திருவுள்ளம்படுகிறது." ... ... (கட)

வல்வினைதீர்க்கும்கண்ணனே வண்குருகூர்ச்சடகோபன் *
சொல்வினையால்சொன்னபாடல் ஆயிரத்துள்ளிவைபத்தும் *
கல்வினையென்றுகற்பார்கள் கலவினைவைகுந்தம்கண்ணி *
தொல்வினைதீரவெல்லாரும் தொழுதெழவிற்றிருப்பாரே. (கக)

வல் வினை தீர்க்கும் கண்ணனே	எனை பாபங்களையும் போக்குவியல்வினமான கிருஷ்ணனே
வண் குருகூர் சடகோபன்	வளப்பமுடைய திருகளிக் குத் தலைவரான ஆழ்வார்
சொல் வினையால்	சொல்லுக் தொழில் வல்லமையால்
சொன்ன பாடல்	அருளிச்செய்த பாட்டுக்கள்
ஆயிரத்துள் இவை பத்தும்	ஆயிரத்துள் இவை பத்துப் பாட்டுக்களையும்
கல் வினை என்று கற்பார்கள்	இது கல்ல செய்கை என்று கருதிக் கற்குமவர்கள்
கலவ் கடை	(பகவதநுபவமாகிற) ஆனந் தத்தை யுடைத்தான
வைகுந்தம் கண்ணி	பரமபதத்தைக் கிட்டி
தொல் வினை தீர	அநாதியான பாபங்கள் மறுவலிடாதபடி ஒழிய
எல்லாரும் தொழுது எழ	அங்குள்ள நித்யஸூரிகள் எல்லாரும் வணக்கப் பேரியலோத்தினை யுடைய ராம்படியாக
விற்றிருப்பார்	இருக்கப்பெறுவர்கள்.

* * *—இத்திருவாய்மொழி கற்பவர்கள் எல்லாத்துன்பங்களும் தொலையப்பெற்றுத் திருநாட்டிலே நித்யஸூரிகள் ஆதரிக்குப்படியான பெருமைபெற்று இனிழ்வரென்று பலனுரைத் தருளிச்செய்கிறார்.

மேற்பாட்டிற் கூறியபடி ஆழ்வார்க்கு ஆற்றாமை மீதூர்ந்தவாறே இவர் விஷயத்தில் இவர் தமக்கு ஒரு செய்ய வேண்டுவதென்று திருவுள்ளம்பற்றிய எம்பெருமான் பதறி நடிவகுத்து வேலை வாதித்து இவருடைய துயரங்களைப் போக்கியருளினனென்பது வினைக்க வல்வினை தீர்க்கும் கண்ணனே யென்கிறார். இல்லு கற்பில்லே யிட்டில்—"பெற்றவர்கள் கைவிட்டால் பிடித்தவர்கள் கைவிடார்களே" என்னுள்ள ஸ்ரீவசநத்தை நினைக்கத்தக்கது. மேற்பாட்டில் "மயற்பெருங்காதலென் பேதைக்கு என் சொல்கேன் வல்வினையேனே" என்று தாய் சொல்லித் தமக்கட்டுகையாலே பெற்றவர்கள் கைவிட்டமை விளங்கிற்று. உடனே "வல்வினை தீர்க் கும் கண்ணனே" என்கையாலே பிடித்தவர்கள் கைவிடுவானமை விளங்கிற்று. பிடித்தவர்கள் என்றது—பரகத ஸ்வீகாரமாகப்பற்றின எம்பெருமான் என்றபடி.

"வண் குருகூர்ச் சடகோபன்" என்றவிடத்து வண்மையைக் குருகூர்க்கு விசேஷண மாக்கியதனால் பல்லீராயிரத்தில்; சடகோபனுக்கு விசேஷணமாக்கியருளினர் மற்ற பேர் சிரியர்கள். உதாரரான ஆழ்வார் என்றபடி. இன்று சாமூல்கூட பகவத்குணநுபவம் பண் ணுகைக்குப் பாங்காகப் பாசுரம்பாடியருளின ஔதார்யத்தை என்னென்போம்!

சொல்வினையால் சொன்னபாடல் என்றது—வாசிகை கைங்கர்யமாகப்பாடின பாசுரம் என்றபடி. கல்வினை என்று கற்பார்கள்—இப்பாசுரங்களின் இனிமை நெஞ்சிலே பட்டால் இவற்றையொழிய வேறொன்றும் போதுபோக்கவிடார்; அப்படி இவ்வினையிலே தோற்றுக் கற்காவிடினும் 'இது நமக்கு கல்லை பயக்குமது' என்று கொண்டாகிலும் கற்பவர்கள் என்றபடி.

http://acharya.org

"தொல்வினைநீர் கலவிடை யைகுத்தம் கண்ணி" என்ற அவ்வியப்பது. 'கலவினை, கலனுடை" என்ற இருவகையாலை பாடம் காண்கிறது. பொருள் ஒக்கும். ஆனந்த ப்ரகாசமான வென்றபடி. எல்லாரும் தொழுதெழ வீற்றிருப்பார்—இப்பரகாசம் பலின்றவர்கள் பரமபதத்தேறச் சென்றால் அங்குள்ள நித்யமுக்தர்கள் இவர்களே ஆதரிக்கும் பரிக வாசாம கோசரம். "பதியினில் பாலினில் பாதங்கள் கழுவினர்" என்கிறபடியே மஹோபசாரங்கள் செய்யப்பெற்று முடியுடை வானவராய் வீற்றிருப்பர்கள் என்கை. இருசுடர்ந்துளார் இவ் வருளிச்செயல்களிலே ஈடுபட்டிருக்கும்திறம் "கேட்டு ஆரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே" என்ற இவ்வளவுக்கியாதும் அறியத்தக்கது. .... (கக)

நான்காந்திருவாய்மொழி யுரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து-ஐந்தாந் திருவாய்மொழி—வீற்றிருந்தேழுலகும்.

உரையவதாரிகை :—நீழ்த் திருவாய்மொழி பெருகிடாயோடே சென்றது. இங்ஙனே ஆழ்வார் விடாய்க்க வேணுமென்பதுதானே எம்பெருமானுடைய திருவுள்ளம்! சோறு உண்பதற்குப் பரி உபகரணமாகாப்போலே எம்பெருமானே யநுபவிப்பதற்கு அவதாரம் அவையல்லே உபகரணமாவது. அந்த ஆசையுண்டானாலன்றோ தன்னுடைய பரிபூர்ணது பவத்தைத் தந்தருள எம்பெருமான் திருவுள்ளம் பற்றவல்லே. அத்தகைய ஆசை *முனியே நான்முகனில் உண்டாகின்றது. "முடிந்த அவா" என்பது அங்குத்தான். அதற்குக் கீழுள்ள தெல்லாம் அந்த அவாவுக்குப் பண்ணுகிற க்ருஷியாயிருக்கும். எம்பெருமான் இடையிடையே வந்து காட்சிதரா தொழிலில் ஆழ்வாரை இழக்க கேருமே. "தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றும்படி. பகவத்குணானுபவக்களுக்குத் தண்ணீர்ப்பந்தல் வைக்கைக்காகவன்றே ஆழ்வாரை இங்கு வைத்திருப்பது. எம்மேலை விச்லேஷங்கள் மாறிமாறி நடந்தாலல்லது எம்பெருமானுடைய திருவுள்ளம் நிறைவேற வழி யில்லை; நம் போலியர்களின் பாக்கியமும் பரிபக்குவமாக வழியில்லை.

இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குச் சென்றுறற ஆனந்தம் பேச்சுக்கு நிலமன்று. " இனி யென்னகுறை யெழுமைமேல்?" என்றும் " இனியாவர் கொகல் வானந்தே " என்றும் மார்பு தட்டிப் பேசலாம்படி யாக்கியருளினன் எம்பெருமான். இத்திருவாய்மொழி யின் அமைப்பை நோக்குமிடத்து இதற்கு மேற்பட்ட பரிபூர்ணதபவம் வேறில்லை என்றே சொல்லலாம்படியிராகின்றது. ஆனதுபற்றியே இத்திருவாய்மொழி *சூழ்விசும்பணி முகிலுக்கு அடுத்த திருவாய்மொழியாக இருந்திருக்கலாம் என்று கஞ்சீபர் ரஹஸ்யமாக அருளிச் செய்வராம்.

நீழ்த்திருவாய்மொழியில் போலிகண்டு ப்ரமித்து மயங்கி ஆற்றுமையும் தீர்ந்த ஆழ்வாருக்கு எம்பெருமான் உபயவிபூதிகாதனையிருக்கிற தன் படிகளில் ஒன்றும் குறையாதபடி முற்றாட்டாகக் காட்டிக்கொடுத்து 'ஆழ்வீர்! நம்முடைய படிகளெல்லாம் கண்டீரே; மேறது இத்த ஐச்வர்யமெல்லாம் நிறம் பெற்றதாவது நம்முடைய திருவாக்காலே ஒழுங்குபடப் பாடினு லாயிற்று. ஆகவே பாடிக்களிப்' என்று சொல்லி ஆழ்வார் திருக்கையிலே தாளத்தைக் கொடுக்க, அவ்விருப்புக்குப் பல்லாண்டுபாடி மகிழ்ந்திராய்ச் செல்லுகிறது இத்திருவாய் மொழி.

http://acharya.org

விற்றிருத்தேழுலகும் தனிக்கோல்செல்ல,வீவில்சீர் *
ஆற்றல்மிக்காளுமம்மானே வெம்மாபிளக்தான்தன்னே *
போற்றியென்றேகைகளாரத் தொழுதுசொல்மாலைகள் *
ஏற்றகோற்றேற்கு இனியென்னகுறையெழுமையுமே? (க)

விற்றிருத்த ஏழ் உலகும் தனி கோல் செல்ல வீவு இல் சீர் ஆற்றல் மிக்கு ஆளும் அம்மானே வெம் மா பிளந்தான் தன்னே — (பரமபதத்திலே) எழுந்தருளியிருந்து ஏழ்வுலகங்களிலும் அதிகாரமான செங்கோல் நடக்கும்படி முடிவில்லாத கல்யாண குணங்களோடுகூடியவராய் சார்ந்தவர்களுக்கு ஆம் என்ற ஸ்வாமியாய், கொடிய (கேசி என்னும் அசுரனை) குதிரையை வாய்பிளந்து கொன்ற பெருமானே

போற்றி என்றே கைகள் ஆர தொழுது சொல் மாலைகள் ஏற்ற — (அவன் உகக்கும்படி) ஸம்பாவனைக்கு புண்ணியஞ் செய்துள்ள எனக்கு

போற்றி போற்றி என்று வாழ்த்திக்கொண்டே கைகளின் விடாய் தீரும்படி அஞ்சலிபண்ணி சொற்களாகிற மாலைகளே

இனிமேல் எழுமையும் என்ன குறை — எழுமுறைபடியான நான் மக்களிலும் என்ன குறையுண்டாம்?

* * *—எல்லாவுலகங்களையும் கிரஹிக்க வல்லவனை எம்பெருமானை எத்தப்பெற்ற எனக்கு ஒரு காலத்திலும் ஒரு குறையுமில்லை யென்கிறார்.

திருநாட்டில் திருவனந்தாழ்வான் மீது பெரியபிராட்டியாரோடுகூட எழுந்தருளி யிருந்து "பொன்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும், அன்னதுஞ் சோராமே ஆள்கின்ற வெம்பெருமான்" என்கிறபடியே உலகமெல்லாம் செங்கோல் செலுத்தி நிலைபெறுவனும், இவ் வுலகம் நிலைபெறுதற்குறுப்பான ஞானம் சக்திமுதலிய திருக்குணங்கள் நிரம்பப்பெற்றவனும் தன்னுடைய ப்ரபுத்வத்திலும் கொடுங்கோன்மை கட்டாதே சார்ந்தார்யோடே யிருந்து ஆண்பவனும், ஸ்ரீ கிருஷ்ணனுய்த் திருவவதரித்துக் கேசிவதம் பண்ணின எம்பெருமானைப் பல்லாண்டு பல்லாண்டென்று வாயாரப்பாடிக் கையாரத் தொழுது, ஆனந்தத்திற்குப் போக்குவிடாதச் சொல்மாலைகள் சொல்லும்படியான பாக்கியம் பண்ணினவனெனக்கு எத்தைக்கு மேழேழ்பிற பிக்கும் ஒரு குறையில்லை யென்றாராயிற்று.

திருநாட்டில் அநுபவத்தையும் இங்கிருந்தே யநுபவிக்கப் பெற்ற நான் 'அங்கே போகப்பெற்றிலேன்' என்கிற குறையை யெனக்கிலேன் என்றவாறு.

ஆற்றல்மிக்கு என்பதற்கு "அநுத்தர்த்த ஸ்வபாவனுய்" என்று ஆசார்யப்படி. உபய விபூதியுக்தனை செருக்கோலே தன்பக்கல் நிலைக்கும் கிட்டவொண்ணாதபடி யிருக்கையன்றி ஸமம் ஸமியமாக அரசுபுரிகையைச் சொன்னபடி. ஸ்ரீராமபிரான் ஆசாண்டபடியைச் சொல் லுமிடத்து "ஸஹோ ராஜதக-வாகிஷ்வ"—ராமோ ராஜ்ய முபாஸித்வா" என்றார் வால்மீகிமுனி வர். இங்கு உபாஸித்வா என்ற ப்ரயோகம் மிகவழகியது. தன்பக்கலில் குடிமக்கள் அந் சுகையன்றிக்கே குடிமக்களிடத்தில் தான் அந்நிலைத்திப்பன் போலும் ஸ்ரீராகவன். அப் படியேயாயிற்று எம்பெருமான் எழுலகும் தனிக்கோல் செலுத்தும்படி. ஆதலால் என்கிற பெருமையே ஆற்றல் என்றிருப்பதாகக் கொள்க. அதாவது—சக்தி. ஆற்றல் என்ற பிடுங் குக்கும் போதலால், இவ்வளவையும் கிரஹிக்கவல்ல ஸாமர்த்தியம் மிகுந்தவன் என்றதாக வுமாம்.

தி. 4—16

http://acharya.org

வெம்மாவினைத்தா னென்று இங்கு அருளிச் செய்ததைப்பற்றி இரண்டு வகையான நிர்வாஹமுண்டு; மேலே "ஆற்றல் மிக்காரும்" என்றதற்கு விடுக்கவே கூடியானும்படி யைப் பொருளாகச் சொல்லும் பாஷத்தில் அதற்கு இந்த வெம்மா வினைத் தரிதை திருஷ்டாந் தமாகக் கடவது. 'இது உபலக்ஷணமாய் இப்படி விடுக்குடையனுய்ச்செய்த செயல்களே யெல்லாம் எடுத்துக்கொள்ளலாம். இது பட்டருடைய நிர்வாஹம்.

"வெம்மா வினைத்தான்" என்றதை அத்தக் காரியத்தில் மோக்காகக் கொள்ளாமல் கண்ணபிரான் என்ன வ்யக்தியைக் காட்டுவதற்காகச் சொன்ன சொல்லாகக்கொண்டு, ஆற் றல்மிக்காரானவன் யாவனென்றும் கண்ணபிரான்=என்ன காட்டுவதாகக்கொள்க. ஆற்றல் என்பதற்கு 'சாக்தி' என்னும் பொருளில் இந்த நிர்வாஹம். சக்தியோடே ஆஸ்ரயத்தன்மை ஸ்ரீராமாயணாதிகளிலும் கண்டுகொள்ளலாம். இது செல்லவே காணத்தக்கதாம். பிறந்தவன்றே கம்ஸனைக்கொன்ற முழுக்க வல்லனாயிருந்தும் நெடுநாள் ஒளித்து வளர்த்த தும், அடியவர்களுக்கு இழிதொழில் செய்து நின்றதும் முதலானவை காண்க. ... ... (க)

மல்லியம்மானுடைய நிர்வாஹம்.

மையகண்ணுள்மலர்மேலுறைவாள் உறைமார்பினன் *
செய்யகோலத்தடங்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
மொய்யசோலைகளேத்தி உள்ளப்பேற்றேன் *
வெய்யகோள்கள்முழுதும் வியன்ஞாலத்துயிரே. (உ)

மையகண்ணுள் — மை பொழுதப்பட்ட கண்ணை யுடையனாய்
மலர் மேல் உறைவாள் உறை — தாமரைமலரிலே வஸிப்பவளான லக்ஷ்மி
மார்பினன் — நித்யவாஸம் பண்ணப் பெற்ற மார்பையுடையனாய்
செய்ய கோலம் நடை கண்ணன் — சிவந்த அழகையுடைத்தாய் விசாலமான நிருக்கண்களையுடையனாய்
விண்ணோர் பெருமான் தன்னை — நித்யஸூரி நாதனான எம் பெருமானை

மொய்ய சோலைகள் — செறிந்த சோலைகளாலே சூழ்ந்ததாய்
இரை மாலிகள் — இரையை யுடைத்தான மாலிகைகளாலே
வியல் ஞாலத்து — அகன்ற பூமியிலே
உயிர் — பிரகாசிக்கும்படியாக
வெய்ய கோள்கள் முழுதும் — கொடிய க்லேசங்கள் அனைத்தும்
ஏத்தி — துதித்து
உள்ள பேற்றேன் — என்னெஞ்சாலே அநுபவிக்கப் பெற்றேன்.

• • •—மேற்பாசுரத்திற் சொன்ன போன்மைக்கு அடியான ப்ரஸ்துத ஸம்பந்தத்தை யுடையவரே கைலாதபக்ஷமும் நீ ரும் படி புகழப்பெற்றேனென்கிறார். மையகண்ணுள்— கறுத்த கண்ணையுடையவன் என்றபடி. ஸ்த்ரீகளுக்கு இது லக்ஷணம். வடநூலார் அஸிதே க்ஷணை என்று ப்ரயோகிப்பர்கள். ப்ராட்டி எம்பெருமானுடைய கரிய திருமேனியை இடை விடாது கண்டுகொண்டிருப்பதனால் ஒருவாறு ஸ்ரமம் நீக்க கண்ணையுடையளாயினள்போலும் என்ன ரஸோக்தியாகவும் கம் முதலிகள் அருளிச்செய்வர்கள். "பெரிய ப்ராட்டியார் நிருக்கண்க ளாலே ஒருகால் கடாக்ஷித்தால் ஒருபாட்டம் மழை பொழிந்தாப்போலே லோகோஜ்ஜீவன திரு மேனி குளிரும்படியாயிற்றிருப்பது" என்ற கட்டி ஸ்ரீஸூக்தியும் நோக்குக.

மலர்மேலுறைவாளுறை மார்பினன்=பூவிலும் கூடி அடிவிடுமவள் பொருந்தி வாழப் பெற்ற திருமார்வை யுடையவன். ஸ்ரீநாகாரூடன் திருமகன் பெருமானைக் கைப்பிடித்த பின்பு ஸ்ரீ நிலைபுரிவை தினையாதாப்போலே ஸ்ரீநாதநாலாயிரம் இவன் மார்பில் சுவடு அறிந்தபின்பு தாமரைப் பூவையும் நினைக்கமாட்டாளாம்.

http://acharya.org

செய்யகோலத் தடங்கண்ணன் = பிராட்டியானவள் எம்பெருமானுடைய கரியகோலத் திருவுருவைக் கண்டுகொண்டேயிருந்து கரும் கண்வியானதுபோலே, எம்பெருமானும் அப் பிராட்டியினுடைய செய்ய திருமேனியையே கடாசகித்துக்கொண்டிருக்கையாலே அத்திரு மேனியிற் சிவப்பு ஊறி இவன் செய்யகோலத்தடங்கண்ணனாயிருக்கும். இக்கண்ணழகும் இச்சேர்த்தியழகும் காட்டிகொடுத்த மிதாவாகாமே அநுபவிக்கைக்கு ஒரு கடாசகவண்டு என் கிறது விண்ணோர்பெருமான்தன்னை என்று.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமானைத் தொடையழகு பொருந்திய சொல்மாலைகளைக் கொண்டு தரிக்கவே, அநுபவித்தே அறவேண்டும்படியான கருமபக்தங்களடைக்கலும் தேடிக் தொழிந்தன வென்கிறார் பின்னடிகளில். இவ்வாழ்வாருடைய கருமபக்தங்கள் என்று பிரித்துச் சொல்லையாலே, உலகத்திலேயே கருமபக்தர்கள் இல்லையாம்படி செய்துவிட்டமை தோன்றுகின்றது. சம்மேலிடுவீடு:—"பரமே விழுந்தோமே என்னையொருவனையும் கொள்ளக் கொள்ளுகையன்றிக்கே * வரும்காடு முளகமும் தன்னைப்போலேயாம்படி. காணிருந்த விபூதியி லுண்டான கருமங்களுமடைய கழித்ததென்னை. .... (உ)

வீவிலின்பம்மிக எல்லிகிழ்ந்தகம்மகிழ்ந்தன் *
வீவில்சீர்மலர்க்கண்ணன் விண்ணோர்பெருமான்தன்னை *
வீவில்காலமிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன் *
வீவிலின்பம்மிக எல்லிகிழ்ந்தனன்மேவியே. (ஊ)

வீவு இல் இன்பம் மிக எல்லி கிழ்ந்த	அழிவில்லாத ஆனந்த மானது மிகுதியான எல்லியிலே வர்த்திக்கிற(படியிலே)	வீவு இல் காலம் இசை மாலைகள்	ஒழிவில்லாத காலமெல்லாம் இசைமிக்கசொல்மாலைகளாலே
கம் அகத்தன்	அகத்தும் புறம்பும் நிருகாமத்தையுடையவனும்	ஏத்தி	தரித்து
வீவு இல் சீரன்	முடிவில்லாத வைலக்ஷண்ய பரத்வையுடையவனும்	மேவப் பெற்றேன்	பெட்டப்பெற்றேன்;
மலர் கண்ணன்	தாமரை மலர்போன்ற கண்களோடையவனும்,	மேவி	பிரிவு
விண்ணோர் பெரு மான் தன்னை	விண்ணோர்க்குத் தலைவனாயிருப்பானை	வீவு இல் இன்பம் மிக எல்லி கிழ்ந்தனன்	முடிவில்லாத ஆனந்தத்தினுடைய மிகுவான எல்லியிலே இராநின்றேன்.

* * *—திருவாய்மொழிபாடி. அடிமை செய்யப்பெறுகையால் தமக் குண்டான ஆனந், தம் எம்பெருமானுடைய ஆனந்தத்தையும் அதிசயித்தது மன்கிறார். முதலடி. ஆனந்தவல்லியை யடியொற்றி அருளிச்செய்ததென்று ஆசாரியர்கள் நிருவுள்ளம்பற்றுகிறார்கள். ஆனந்தவல்லி யாவது தைத்திரீயோப நிஷத்தில் ஒரு பகுதி. அது எம்பெருமானுடைய திருக்குணங்களுள் ஒன்றான ஆனந்த குணத்தைப்பற்றிப் பேசுகின்றது. அந்த ஆனந்தம் இவ்வளவு கொண்ட தென்று சொல்ல முடியாதென்பதைக் காட்டுவதற்கு அங்கு ஒருவகையான கல்பனை செய் யப்பட்டிருக்கிறது. (அதாவது—) ஒரு மநுஷ்யன்; அவன் கல்வி யெனவா பருவத்திலுள்ள வன்; கலை சாஸ்திரங்களிலும் ஒன்று விடாமல் ஒதிப் பிறர்களுக்கும் ஓதுவிப்பவன். ஆலய நின்றி யல்லாக் காரியங்களிலும் வாழவாற்செய்பவன்; நேரறத்திலும் மனத்திலும் இடமுள்ள வன்; இவ்வளவும் வாய்ந்தாலும் நிச்சயமிருத்தாம் பயனில்லையே. அப்படியன்றிச் செல்வ மெல்லாம் நிலைத்த பூமண்டலம் முழுவதையும் செங்கோல் செலுத்தி ஆளும்படியான ஒப்புயர் வற்ற ஐச்வர்யத்தும் வாய்ந்தவன். இப்படிப்பட்ட அதிசயங்கள் நிறைந்த ஒரு மநுஷ்யனிருந் தால் அவனுக்கு உண்டாகக்கூடிய ஆனந்தத்தை முன்னே எடுத்துக்காட்டி, அதைவிட நூறு பல்கு அதிகமான ஆனந்த முடையவர்களாக மநுஷ்ய கந்தர்வர்கள் என்ற வகுப்பைக்காட்டி,

http://acharya.org

அவர்களிலிடை நூறுபங்கு அதிகமான ஆனந்த முடையவர்களாக தேவகந்தர்வர்களைக் கூறி இப்படியே நூறுநூறுபங்கு அதிகமான ஆனந்த முள்ளவர்களாக விசையாய்க் கிலோகலோக பித்ருக்களையும், ஆஜானஜ தேவர்களையும், கர்மதேவ தேவர்களையும், தேவர்களையும் இந்திரனையும் ப்ருஹஸ்பதியையும் பிரஜாபதியையும் சொல்லிவந்து, அந்த ப்ரஜாபதியின் ஆனந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தமுடையது பரப்ரஹ்மம் என்று சொல்லப்பார்த்து, 'பரப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை இவ்வளவு மட்டமாகவா சொல்லிவிடுகிறது' என்று குறைப்பட்டு "யதோ வாசோ நிவர்தந்தே" என்றபடி மறுபடியும் நிறுத்துகிறதாம்; அதாவது மேற்சொல்லிக் கொண்டுவந்த ப்ரக்ரியையில் கடையிலாக யாதொரு ப்ரஜாபதி சொல்லப்பட்டானோ, அவனை அடுத்த பர்யாயத்தில் மநுஷ்ய கந்தர்வத்திலே நிறுத்தி அவன் முதலாக ப்ரஜாபதி பரையும் சொல்லிக்கொண்டுபோய், அந்த ப்ரஜாபதியின் ஆனந்தத்தைவிட நூறுபங்கு அதிகமான ஆனந்தம் பரப்ரஹ்மத்தினுடையது என்று சொல்லி முடிக்கப்பார்த்து அதுவும் கூடாமையாலே முன்போலே மறுபடியும் ஒரு பர்யாயம் சொல்லுவது—இப்படியே அர்த்தியாக இன்றைக்கும் புரட்புராவுருத்தியிலேயே இடக்கின்றதும் வேத புருஷன்.

இப்படி அபரிச்சேத்யமான ஆனந்த முடையவனெம்பெருமான் என்று இப்பாட்டின் முதலடியில் அருளிச்செய்து, ஈற்றடியில், "விதிவின்பம் மிகவெய்தி நிகழ்ந்தனன்" என்கையாலே எம்பெருமானுடைய ஆனந்தவல்லியிற் காட்டிலும் ஆழ்வாருடைய ஆனந்தவல்லி மேம்பாடுடையதாகக் கொள்ள இடமுண்டு.

வீவு—விச்சேதம்; அது இல்லாத இன்பம்—அபரிச்சின்னமான ஆனந்தம். அதுதான் எல்லையெல்லாம், மிகவெல்லைகடந்த—'இனி இதற்கு மேலில்லை' என்னலாம் படியான எல்லையிலுள்ளதாம்.

வீவில்சீரான் என்று நித்ய விபூதியுடையையுஞ் சொல்லும்; கல்யாண குணமுடையையுஞ் சொல்லும். மலர்க்கண்ணன்—இயற்கையான ஆனந்தமுடையவ னென்னுமிடம் திருக்கண்ணன்தானே சோட்சொல்லித் தரும்மாம். ... ... (ரு)

மேவிநின்றுதொழுவார் வினைபோகமேவும்பிரான் *
தூவியம்புள்ளுடையான் அடலாழியம்மான்தன்னை *
காவியலாலிசைமாலைகளேத்தி கண்ணப்பெற்றேன் *
ஆவியென்னுவிலை யானறியேன்செய்தவாற்றையே. (ச)

மேவி நின்று தொழுவார் வினை போக — நெஞ்சு பொருந்தியிருந்து அநுபவிப்பாருடைய பாபக்கன்மாவும் விலகும்படி
மேவும் — தான் அவர்களோடே கலக்கின்ற
பிரான் — மஹோபகாரகனும்
தூவி அம் புள் உடையான் — சிறகுகளையுடைய அழகிய பெரிய திருவடியை ஸாரதியாகவுடையனும்
அடல் ஆழி — போர்வல்ல திருவாழியை யுடையனுமான
அம்மான் தன்னை — ஸர்வேச்வரனை
ஈ — இயல்பாகவே
இசை மாலைகள் — நாவிலுடைய தொழிலாலே இசைந்தபடியான மாலைகளை
ஏத்தி — சூட்டி
கண்ண பெற்றேன் — ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றேன்;
ஆவி — எனக்கு அத்தாத்ம பூதனான
என் ஆவியை — என்னுடைய ஆத்மாவை
செய்த ஆற்றை — இன்னபடிசெய்த ப்ரகாரத்தை
யான் அறியேன் — நான் அறியமாட்டேன்.

* * *—இத்ய ஸௌரிசதனுயிருத்துலவத்த இத்ய ஸம்ஸாரியான என்பக்கலில் பண்ணி யருளின மஹோபகாரம் என்னே! என்று கூடுபடுகிறார்.

http://acharya.org

எம்பெருமானுக்கு ப்ரணதார்த்திஹரன் என்ற ஒரு திருநாமமுண்டு; அதன் பொருளே முதலடியில் அநுஸந்திக்கிறார். மேலே சொன்ன தொழுகையாவது தன்னையே விரும்பித் தொழுகை; ப்ரயோஜநாந்தரங்களுக்கு முடிவேலாதே அநந்யப்ரயோஜநர்களாய்த் தொழுகை. "கும்பும் மேலும் கரையாகுமே" என்கிறபடியே மேலுதலாலது ஆசைப்படுகை; தன்னையே ஆசைப்பட்டு என்றபடி. ப்ரயோஜநாந்தரங்களை ஆசைப்பட்டுத் தொழுவாருடைய விரோதியைப் போக்குமாட்டானே? என்று சொல்லவேண்டாம்.

தூவி அம் புள்ளுடையான்—தூவியென்ற சிறகுக்குப்பெயர்; கருத்மானுக்குச் சிறகிருக்கின்றனமையை இவர் எடுத்துரைக்க வேணுமோ? வேண்டா; ஆயினும் உரைப்பது அநுபவரஸமிக்கதாலேயாகும். "பல்லாண்டு புள்ளின் நிறகொளி பாவித்துத் நின் கொன்ன வோர்க்கும் இடர்தென் செனிலே" என்று மேலே அருளிச்செய்தாரே, இழ்வாருடைய திருவுள்ளத்திலே பெரியதிருவடியின் நிறமே உலாவத்நிருக்கும் போதும். அம்புள்—அழகிய புள்; என்ன அழகு என்னில்; "தூவெரி வாலது கிணாகெபொகி நா—த்வதங்க்ரி லம்மர்த்த கிணைக்க சோபிகா." என்ற ஆளவந்தார் அருளிச்செய்தபடியே எம்பெருமானுடைய திருவடி பட்டுப் பட்டுத் தழும்பேறின அழகு.

அடலாழியம்மான் = அடல்—கொல்லுகை, வலியை, போர், வெற்றி என சான்கு பொருள்களுண்டு.

காதலால் இசைமாலைகளேத்தி — காப்புறட்டினதெல்லாம் இதனும் இசைபமாயிற் றென்பர். சலிபாடவேணுமென்கிற முயற்சியின்றியே காக்கு இயம்பிற்றெல்லாம் நல் லிசை மாலைகளாயினவாம். திருவாய்மொழியைக் கொண்டு அவனையேத்தி அநுபவிக்கப் பெற்றே னென்கை.

[ஆவி என்னுவினை இத்யாதி.] ஆவி என்கிறது எம்பெருமானே; உலகுக்கு முயிராயிருக்கையாலும், வேதாந்தங்களிலே ஆத்மா என்ற எம்பெருமானே வழங்கிவருகையாலும் ஆவியென்னத் தட்டில்லை. [என் ஆவியைச் செய்தவாற்றை யானறியேன்] விபுவான தான் அணுவான வென்னைத் தன்னிலும் பெரியனாக (அல்லது, தன்னோடொத்த) ஞானத்தையுடை யோனாய்படி, பண்ணினனிதற் காச்சரியம், என்றவாறு. .... (சு)

ஆற்றகல்லவகைகாட்டும் அம்மானே * அமரர்தம்
எற்றை யெல்லாப்பொருளும்விரித்தானேயெம்மான்தன்னே *
மாற்றமாலைபுனைந்தேத்தி வானும்மண்ணும்வெல்கின்றேனே *
காற்றின்முன்னம்கடுகி வினைகோய்கள்கரியவே. (டு)

ஆற்ற	பொறுக்கப்பொறாக	எம்மான் தன்னே	எம்பெருமானே,
கல்ல வகை	விலக்ஷணமையுள்ள (சிலரு க்கின் பரமக்தி பரமரு ப பரம பக்திகளாகிற) ப்ரகாரத்தையே	விரை தோய்கள	பாபங்களும் பெரிய வ்யாதிகளும்
காட்டும் அம்மானே	அடியவர்களுக்குக் காட்டிக் கொடுக்கின்ற சர்வேச்வரனும்	காற்றின் முன் னம் கடுகி	காற்றிலும் வேகமாய் ஓடிப்போய்
அமரர் தம்	நித்யஸூரிகளுக்கும்	கரிய	வெற்றுபோய்படியாக
எற்றை		மாற்றம் மாலை புனைந்த	சொல்மாலையைத் தொடுத்து
எல்லாப் பொருளும்	எல்லா அர்த்த விசேஷங்களையும் (இதோபதேஷத் ரூபத்தாலே)	ஏத்தி	துதித்து
விரித்தானே	விரிவாக உபதேசித்தவனை	வானும் மண்ணும்	எல்லாகாலமும்
		வெல்கின்றேன்	மகிழ்ச்சியைப்பெற்றேன்

K. 4—17.

http://acharya.org

* * *—எம்பெருமான் அடியார்களுக்குக்குச் செய்தருள கிணைக்கும் கண்மைகளை ஒருகாலே செய்து முடிப்பதில்லை; பொறுக்கப் பொறுக்கச் சிறிது சிறிதாகச் செய்தருள்வன். ஆசார்யஹ்ருதயத்தில் இண்டாவது ப்ரகரணத்திலுள்ள * புணர்தோறு மென்னக் கலக்துபிரிந்து * இத்யாதி சூர்ணிகை இக்கு அநுஸந்தேயம்: அதன் கருத்தாவது—* பொய்க்கின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்புமிக் கின்ற கீச்மையினி யாமுருமம் யென்று பிரார்த்திந்தபோதே ஆழ்வாருடைய அபேக்ஷிதம் செய்துவிடலாமாயிருக்க இவரை இல்லத்திலே வைத்துத் தன்னுடைய ஸம்ச்லேஷ விச்லேஷக்களாலே ஜ்ஞானபக்திகளை வளர்த்தது எதற்காக வென்னில்; கனமான கர்ணபூஷணமிடுதற்கு இடமாம்படி தூளிட்டுத் திரிவிட்டுக் குதம்பையிட்டுக் காது பெருக்குமாபோலவும், ஒருமாளம் உபவாளமிருக்கவர்களுக்கு முதலிலே போஜனமிட்டால் பொருதென்று சோற்றையளைத்த உடம்பிலே பூரிப்பொரிக்கஞ்சி கொடுத்துப் பொரிக்கறி கொடுத்து காலடைவிலே போஜனம் பண்ணுவிக்குமா போலவும், பகவதநுபவம் களிக்கண்டறியாத விவர்க்கு அதிச்சாக்யமாய் இத்யணவி கள் அநுபவிக்கிற போகத்தை முதல் முதலிலே கொடுத்தால் ஸாத்மியா தென்று கருதி அது ஸாத்மிக்கைக்காக ச்ரமம் செய்வித்தபடி என்னை.

ஆற்ற கல்லவகை இன்னருக்குக் காட்டும் என்னுமையாலே இது பொதுவிலே சொன்னதித்தனை. ஆழ்வாரிடத்திலே மைக்யம் காணலாம்.

எல்லாப்போருளும் விரித்தானை = அறியவேண்டிய பொருள்களையெல்லாம் பகவத் கீதை முகமாக விரித்தருளிச் செய்தவனென்றபடி. அப்பொருள்களாவன:—ஜீவாத்மாக்களுக்கும் பரமாத்மாவுக்கும் பேதம், ஜீவர்களுக்குள் பரஸ்பர பேதம், அசித்திற்காட்டில் சித்துக்குண்டான வாசி, ஆத்மாக்களின் சித்தத்வம் தேஹாக்களின் அசித்தத்வம், கைவல்ய முத்தி கிவ்ருத்திகளோடும் பண்ணுவித்தலாகிற மோக்ஷகத்வம் ஈச்வரனுக்கேயுள்ள தென்பது, பக்திமார்க்கம் நிரித்தமாகவும் அவதார ப்ரயுக்தமாகவும் அவன் எளியனாகின்றனென்பது, ஆச்ரயிக்குமிடத்து அபேக்ஷர்க்கும் அபேக்ஷிருக்கிறு வென்பது (அதாவது) அறிவு நிழுக்கம் ஜாதி முதலியவற்றுல் எற்றத்தாழ்வு பெரிது முடைய எவ்வருப்பினர்க்கும் ஒருக்கே ஆச்ரய னீயனாக இருத்தல், அதலக்காரோதம், இத்தரிய ப்ராபல்யம், மற்றை விக்ரியங்களிற் காட்டிலும் மகல்லிலுடைய ப்ராதான்யம், கால்கு வகைப்பட்ட ஸாக்ருதிகளில்பேதம், தேவாஸுரிபாகம், விபூதியோகம், விச்வரூபதர்சனம். ஸாக்யபத்தி, அக்கப்ரபத்தி என்ன தத்ப்ரபத்தியென்கிற இருவகை ப்ரபத்தி—என்றிப்படிப்பட்ட பொருள்களாம். ஸ்ரீகீதா பூஷணத்தில் முதல் ப்ரகரணத்தில்—"அறியாதவர்தமக்கோடையடைய அறிவித்து" என்ற விடத்து மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தில் இவ்வர்த்த விசேஷ விவரணம் கண்டு காணத்தக்கது.

இப்படி எம்பெருமான் பண்டின யுபகாரத்திற்குக் கைம்மாறு கரணமையாலே எத்தினேன், அதனிருவாய்மொழியாய்த் தலைக்கட்டிற்று; அக்கன்களும் அக்கதேதுவான கருமங்களுமெல்லாம் கிரைவாகவே தொலைத்தன வென்கிறார்.

காற்றில் முன்னங்குதி என்றது—கிரைவின் கிருநிலைச் சொன்னபடி. (இ)

கரியமேனிகை வெளியசிறுதிருவிலும் *
பெரியகோலத்தடங்கண்ணனி விண்ணோர்பெருமான்தன்னை *
உரியசொல்லாலிசைமாலைகளேத்தி உள்ளப்பெற்றேற்கு *
அரியதுண்டோவெனக்கு? இன்றுதொட்டுமினியென்றுமே. (ஈ)

http://acharya.org

நாள்காம்பத்து ஐந்தாந்திருவாய்மொழி—விற்றிருந்து

கரிய மேனி மிசை	(திருக்கண்ணின்) கரிய விழி மின் மேலே
வெளிய நீறு சிறிதே இடும்	நஞ்சன நீற்றினை அளவாக அணிந்த
பெரிய கோலம்	அளவிறந்த அழகினையுடைய
தடம் கண்ணன்	விசாலமான திருக்கண்களை யுடையவரும்
விண்ணோர் பெருமான் தன்னை	நித்யஸூரிகளுக்குத் தலைவரான ஸர்வேச்வரனை
உரிய சொல்லால்	(இவ்வழகுக்குத்) தகுதியான சொற்களாலே
இசை மாலைகள்	இனிமையான மாலைகளை சிட்டி
ஏத்தி உள்ள	துதித்த அநுபவிக்க
பெற்றேற்கு எனக்கு	பேற்றவனான எனக்கு
இன்று தொட்டும்	இன்று தொடங்கி
இனி என்றும்	இனிமேலுள்ள காலம் எல்லாம்
அரியது உண்டோ	அரியதாகிருப்பதும் ஒன்றுண்டோ

* * *—'ஆழ்வீர்! உமக்கு வேண்டுவது என்? என்று எம்பெருமான் கேட்க, இவரை யில் கான் பெறுதே இனி ஸாதிக்கவேண்டியதொரு பொருளுண்டோ வென்கிறார். [கரியமேனி மிசை வெளிய நீறு சிறிதேயிடும்] இதற்குப் பலவகையாகப் பொருள் பணிப்பர்கள். மேலே "பெரிய கோலத்தடங்கண்ணன்" என்ற திருக்கண்களின் ப்ரதாவயிருக்கை யாலே கரிய மேனி மிசை என்றது—திருக்கண்களில் கருவிழியினுடைய கறுத்த நிறத்தால் வந்த அழகுக்கு மேலே என்றபடி. வெளிய நீறு சிறிதேயிடும்—அஞ்ஜன சூர்ணத்தை மங்கலமாகச் சிறிது அணிந்து கொள்ளுகிற என்றபடி. "வெளியம்—அஞ்ஜனம்" என்ற பன்னிகண்டு. வேதாந்த தேசிகன் தாத்பர்யரத்நாவலியில் இப்பாஸுரத்திற்காக "கர்ப்பூராலேபதோபே" என்றருளிச் செய்திருக்கக்கண்டுகையாலே, சாமளமான திருமேனியிலே பச்சைக்கருப்பூர தூளியையணிந்து கொள்ளுகிற என்றும் பொருள் கொள்ளலாம். வெளிய என்றது வெள்ளிய என்றபடி.

கரி தம்மேனிமிசை வெளிய, நீறு சிறிதேயிடும் என்ற கொண்டு, கரி—குவலயாபீட யானையானது, அம்மேனிமிசை—கண்ணபிரானது அத்தத் திருமேனியிலே, வெளிய—சிறிப் பாய்த்தவளவிலே, சிறிதே—சணகாலத்திற்குள், நீற இடும்—அத்த யானையைப் பொடி படுத்தின—என்றுமாம் ஒரு தாழ்வு.

உரிய சொல்லால்—திருவாய்மொழிக்கு இது அளதாரணமான பெருமை. ராம கதையைச் சொல்லுவதாக ராமாயணமென்று தொடங்கி, கங்கையின் உற்பத்தி, ஸுப்ரம் மண்யனுடைய உற்பத்தி, புஷ்பகவிமானம் முதலான கதைகளைப் பரக்கப் பேசுவதால் அளவிறந்தகம் பண்ணி வால்மீகி ஆதிகவி பட்டத்தை வஹிக்கிறார்; 'காரவண கதை' என்ப தாகத் தொடங்கி ஸம்பவபர்வத்திலே பீஷ்மர் முதலான பற்பலருடைய உத்பத்தி ப்ரகாரங் களை விரிவாகப்பேசுகையாலும், 'பூரிபட்டோலி' [மஹத புண்ணகம்] என்றும்படி பாரதப் போர் வகைகளிலே பாக்கியின்று வருவித்த படியாலும் அளவிறந்தனத்திலே மிகவும் பரந்த அளவிபடைத்தான் வேத வ்யாஸனாகையால். ஆகவிப்படி, தொடங்கினபடிக்குச் சேராமே அளவிறந்தாத்தைப் பண்ணி வாக்கை அளந்தபாக்கிப் பின்பு "சாலஹீநதத கலாராவியதத்தலைதலைவரை வரை பரவிகலாதெல மாறிலெல—அளந் தித்த காத்தா பலவத்தத பாம்லாலாம், வாசம் செனிகதானாப கங்கையல புகிமதே." என்று அதற்கு சுத்திபண்ண வேண்டாதபடி "திருமாலவன் கல் யாது கற்றேன்" (திருவிருத்தம்) என்று திருமால் விஷயமாகவே கவிசொல்லி அடிவில்லாமேலே விட்டபடியே இத விஷயாலம்பத்தமுள்ள ஒரு சொல்லும் மற்ற வேண்டாதபடி சொற்களைத் தெரிந்தெடுத்த விஷயத்திற்குத் தகுதியான சொற்களாலே அருளிச் செய்ததிறே திருவாய்மொழி.

http://acharya.org

இப்படித் திருவாய்மொழிபாடி அநுபவிக்கப் பெற்ற வெனக்கு இனி அருமை யானது ஏதுமில்லை யென்றாயிற்று. (சு)

என்றுமொன்றுகி ஒத்தாரும்மிக்காரிலரும் * தன்தனக்கு
இன்றிகின்றதே எல்லாவுலகுமுடையான்தன்னை *
குன்றமொன்றுமல்மழைகாத்தபிரானைச் சொல்மாலைகள் *
கன்றுசூட்டும்விதியேய்ந்தினம் என்னகுறைகமக்கே ? (எ)

என்றும்	பரத்வம் முதலான எல்லா வஸ்துக்களிலும்	மழை	மழையை
ஒன்று ஆகி	ஒரேப்பகாரமுடையதாகக் கொண்டு	குன்றம் என்றுக் காத்தபிரானை	மலை ஒன்றிலுமே நடத்த மஹோபகாரகனை வணக்குறித்த
ஒத்தாரும் மிக்காரிலரும்	ஸமமாயும் அதிகமாயும் இருப்பார்	சொல் மாலைகள்	சொல்லமைந்த மாலைகளை
தன்தனக்கு இன்றி நின்றனே	தனக்கு இல்லாமலிருப்பதையும்	கன்று சூட்டும் விதி	ஆவின் ஆநிரைத் தூடிப்படி சூட்டுகைக்குற்ற பாக்கியத்தை
எல்லா உலகும் உடையான் தன்னை	எல்லாவுலகத்தையும் தனக்கு போஷ்யமாக வுடையனும்,	எய்தினம்	பெற்றோம்; (ஆதலால்)
		கமக்கு என்னகுறை	நமக்கு ஒருகுறை யுண்டோ?

* * *—இப்பாட்டில் "அரியதுண்டோ வெனக்கு இன்று தொட்டு ; மிளி யென்றுமே" என்று சொருக்குத் தோற்றப் பேசினார். இத்தகைய சொருக்கு எத்தாலே வந்ததென்ன, எம்பெருமானருளாலே வந்த தென்கிறார்ப் பாட்டில்.

பரமபத நிலையைப் பிற்றும் நிலைமையோடு, மநுஷ்யாதி ஸ்தாவரமும் அவதரிக்குமல தரங்களோடு வாசியற எல்லா நிலைமைகளிலும் தன்னோடு ஒத்தவர்களும் மேம்பட்டவர்களு மின்றிக்கே யிருப்பவனும், ஸகல லோகங்களையும் தனக்கு சேஷமாகவுடையனும், அத்த சேஷவஸ்துக்களுக்கு இந்திரனுல் சேர்த்த ஆபத்தை, கண்டதொரு மலையாலே போக்கின வனை ஸர்வேச்வரனைத் திருவாய்மொழியாகிற சொல்மாலைகளாலே அழகாக அலங்கரிக்கும் படியானபாக்கியம் பெற்றோம்; ஆனபின்பு நமக்கு ஒரு குறையுண்டோ வென்கிறார்.

என்றும் ஒன்றுகி என்றது—மேலே சொல்லப்படுகிற, ஒத்தாரும் மிக்காரிலரும் தனக்கு இல்லாமையாகிற விஷயம் எல்லா நிலைமைகளிலும் ஒரே விதமாகவேயிருக்கு மென்றபடி. பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரமென்கிற நிலைமைகளுக்குள்ளே நல்லொரு நிலைமையும் ஒத்தாரும் மிக்காருமின்றி யிருக்குமென்கை.

தன்தனக்கின்றி நின்றனே என்கிற விடத்திற்கு ஒரு விசேஷார்த்தமுண்டு, ஆள வந்தார் மகனைச் சோட்டை கம்பி பலித்தாராம்;—"தன் தனக்கு என்றது தானுன தனக்கு என்றபடி: ஒருவனைக்கு ஒப்பின்றிக்கே யிருக்கிறது பரத்வத்தில் அல்ல 'ஆத்மாகம் மாநுஷம் மந்யே' என்கிறபடியே, அவதரித்து மனிசர் பரிட்டுக்கொண்டு நிற்கிறநிலையிலே" என்க.

மேலே கூறப்பட்ட அர்த்தம் எத்தச் சொல்லினிருந்து கிடைக்கின்றது? என்ன ஆசங் கையுண்டாம். கேண்மின்: தனக்கு என்றுமன் தன்தனக்கு என்றதில் உட்புகுந்த ஆகாரமே மதம்; ஸ்ரீ பரதாழ்வானேடுகூட நின்றகூடன் சென்ற வனிந்திடபகவான் ஸ்ரீராமபிரானை நோக்கி "ஸுகரஜ் கரஜ் வதேஸ்வர:—ஆத்மாகம் காதிவர்த்தேதா:" என்றான்; 'தன்னைமீறுதே' என்பது சப்தார்த்தம். இங்கே ஆத்மாகம் என்பதற்கு - 'உயிர் நிலையான பரதாழ்வானே' என்று இவ் பொருள் கூறலதுண்டு. அப்படியல்லாமல் பட்டர் அருளிச்செய்யுமதாவது—

http://acharya.org

ஆத்மாகம் என்பது தானான தன்மையை யென்றபடி; தானான தன்மையாவது ஆச்ரித பாரதந்த்ரியம்; அதனை இழக்கவேண்டா என்பதாம். வடமொழியில் ஆத்மா என்பது போலத் தமிழில் தான் என்பதாம். அது தன்னிலும் தனக்கு என்பதற்கும் மேலாக, 'தன்தனக்கு' என்கையாலே எம்பெருமானுடைய தானுனதன்மையையே காட்டிக்காட்டுகிற சொல் இது என்று கொள்ளவேணும். எம்பெருமானுடைய தானுன தன்மை எதுவென்னும் ஆச்ரித பாரதந்த்ரியமே யென்பது இதே மூதனிக்கப்பட்டது. ஆகவே, ஆச்ரிதபாரதந்த்ரனாக அவதரித்த விடத்திலே ஒத்தாரும் மிக்காரு மில்லாதிருப்பதன் என்றதாயிற்று. இதனால் தெரிய வருகிற பாதெனில்; எம்பெருமானுடைய பரத்வத்திற்கு எல்லைகண்டாலும் காணலாம்; அவனுடைய எளிமைக்கு அதுகாணமுடியாதது என்பதாம்.

இவ்வளவு பூர்ணமான விஷயத்தை நாம் எப்படிப் பேசுவது! என்று கொண்டு மீளாமல், ஆனித்த வற்றாகப் பேசப் புகுந்த ஈடுபாட்டை பாக்கியமே பாக்கியம் என்றதாயிற்று.

நமக்கும்பூவின்மிசைநங்கைக்கும் இன்பமே*தூலத்தார்
நமக்கும் வானத்தவர்க்கும்பெருமானே*தண்டாமரை
நமக்கும்பாதப்பெருமானைச் சொல்மாலைகள்*சொல்லுமாறு
அமைக்கவல்லேற்கு இனியாவர்க்காகல்வானத்தே? (எ)

நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும் } நித்ய ஸம்ஸாரிகளான நமக்கும் காமரை மலரில் வசிக்கும் பெரிய பிராட்டியாருக்கும்
இன்பமே தூலத்தார் நமக்கும் } இன்பமளிப்பவனும் மீளவிழுங்கினதன்னாருக்கும்
வானத்தவர்க்கும்-பரமபத வாசிகளுக்கும்
பெருமானே தலைவனும்
தண் தாமரை பாங்கும் } குளிர்ந்த தாமரை மலர் போலும் படியான
பாதம் பெரு மானே } திருவடிகளே யுடையருமான ஸர்வேச்வரன் விஷயத்தில்
சொல்மாலைகள் திருவாய்மொழியை--
சொல்லும் ஆறு சொல்லும்படியாக
அமைக்க வல்லேற்கு } அமைதியைப்பெற்ற எனக்கு
ஆகல்வானத்து ஆகின்ற நித்ய விபூதியிலும்
வாழ் இனியாவர்தான் இனி ஓப்பாவர்?

* * *—ஆழ்வார், தம்பக்கலிலே எம்பெருமானுக்குண்டான அபிநிவேசத்தைக் கண்டு, இப்படிப்பட்ட எம்பெருமானைக் கிடைப்பது மற்ற எவர்க்கும் பரமபதத்தில் வாழ்கிறவர் சொல்லர் என்கிறார்.

பெரியபிராட்டியாரிடத்திலும், அவளுடைய பரிவையும் கண்டிடத்திலும் ஈடுபட்டிருப்பவன் எம்பெருமான் என்று இத்தாலேயிலே பிட்டுப் பாகரமருளிச்செய்ய வேண்டிருக்க, "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கும்" என்று தம்மை முந்துறச் சொல்லிப் பிறகு பிராட்டியைச் சொல்லியிருப்பது கொண்டு ஒரு விசேஷார்த்தம் கொள்ளப்படும். [ஆசார்ய ஹ்ருதயத்தில் இரண்டாம் சிகையத்தில்—"இப்பு மண்பும் முற்படுவது கொழுந்துவிடுவதாகிறது" இத்யாதி சூர்ணிகை இங்கே அநுஸந்தேயம்.] எம்பெருமான் பிராட்டியிடத்தில் பண்ணுவதைவிட இத்யாகபாயியான பிராட்டியிற்காட்டிலும் அதிகமாகவே அவளிடத்தில் பண்ணுவனென்னுமிடம் இதனால் அறியத்தக்கது. இங்கே ஒரு ஸூக்ஷ்மம் கண்டுகொள்ளுமின்;—"இன்பனு மிடத்தில் முற்பாடு இங்கேயாய்ப் பிள்ளையிற்று அவளுக்கு ஸ்வரூபித்திருப்பது" என்க.

இவ்வர்த்தம் ஸ்ரீராமாயணத்தில் ஒரு ஸந்தர்ப்ப விசேஷத்தில் பெருமாளாலேயே வெளியிடப்பட்டது; எங்ஙனே யென்னில், பெருமாள் எழுந்தருளி இற்கச்செய்தே இரவு

http://acharya.org

னன் கோபுர கொத்திலேவைத்த தோன்றினவாறே 'ராஜ த்ரோஹியான பயல் இன்னம் கூச் சமின்றித் திருமுன்பே நிற்பதும் கிடீரோ' என்று சிற்ற முற்ற ராஜ்ரீமஹாராஜர் அவன் மேலே எழுப்பாய்த்து மீண்டு வந்தபோது பெருமாள் " தூயி கிம்தி ஸ்தாவனை கிங்கரயஃ, ஸீதயா ஸஃ—த்வயி விஸ்ரித் மைதில்யாக்ரே ஸிப் காய்யம் விதேயா மாரி" என்றார்; 'உனக்கு ஓர் அனர்த்தம் விளையுமாகில் பின்னை விதாபிராட்டிதான் எனக்குக்கிடைத்தென்னி' என்பது இதன் பொருள். இதனால், பிராட்டி பக்கலிற்காட்டிலும் அடியவர் நிறத்தில் எம்பெருமானுக்குள்ள அன்பின் கனம் அறியலாகிறார்.

ஞாலத்தார் தமக்கும் வானத்தவர்க்கும் பெருமானே = இவ்வும் வானத்தவர்க்கு முன்னே ஞாலத்தார் முற்படுகிறார்கள். இங்கே ஈடு:—"மாதாபிதாக்கள் ப்ரஜைகளில் குறை வாளர் பக்கலிலேயிறே; அத்தாலே ஸம்ஸாரிகள் முற்படவேண்டுகிறது" என்று. நித்ய விபூதியிலுள்ளார்க்கு இவ்வுலகு மீறுக்குத் தண்ணீர்வார்ப்பது போலேயா மித்தனே. ஞாலத்தவர்க்கு இவ்வுலகே பாலே நிலத்தில் தண்ணீர்ப்பந்தல் வைத்தவனும்.

தண்தாமரை தமக்கும் பாதப்பெருமானே = குளிர்ந்த ஆயிரத்தாலே தரிக்கப்பட்ட திருவடிகளோடையவை வென்கை. எம்பெருமானுடைய திருவடிகளின் கீழ் பத்மாஸந திருப்பது அறிவத்தக்கது. "அடிச்சோதி சீ கின்ற தாமரையாய் அலர்த்ததுவே" என்றதும் அது ஸ்தோத்ரம். தண்டாமரையின் மீது விளங்குகின்ற பாதங்களையுடையவன் என்னவேண்டு மிடத்தில் "தண்டாமரை தமக்கும் பாதன்" என்றது ஒரு உத்ப்ரேக்ஷையில் நோக்காக. அதா வது—குளிர்த்தியிலும் பரிமளத்திலும் செவ்வியிலும் தாமரைப்பூவானது திருவடிக்குத் தோற் றுப்போயிற்றும்; தோற்றவர்கள் வென்றவர்களைச் சரப்பது என்கிற ஒரு லியவஸ்தை உலகிற் காண்பதாதலால், தோல்வியடைந்த தாமரைப்பூ வெற்றிபெற்ற திருவடியைச் சரக்கவேண் டியதாயிற்றுப்போலு மென்கை.

ஆழ்வான் ராத்தரபாஹுள்ளயத்தில் இக்கருத்தை அமைத்து ஒரு ச்லோகமருளிச் செய்தார்;— " கொளரபாரதி லலாடதலவாஸவாலுவதெஹா வனதலமி வாஹுயாஹுவதை வடாரவிதெ। கம்ஹோஜலம்வலாரினவலணதாதுவெஹுரு தலெ வாரிதிதிலே மரிவரை பிலதி-ஃ=வெனக்தர்ய மார்த்தல ராகத்தரஸப்ரவாதை: எதே ஹி ராத்தரபுஜஸ்ய பதார லிந்தே, அர்போஜடம்பபரிரம்பணமப்யலஷ்டாம் தத் வை பாரதிமிமே நிரஸா பேர்த்தி.' என்பதாமது. அழகு, லைகுமார்யம், கதாரணம், ராகரக்தஸப்ரவாதம் ஆகிய இவற்றுலே அழகருடைய இத்தத் திருவடிகளாலவை தாமரையை வென்றிட்டபடியினால் தோல்வியடைந்த அத்தத் தாமரைப்பூ இத்தத் திருவடிகளைச் சரக்கின்றது என்றவாறு. இப்படிப்பட்ட எம் பெருமான் விஷயத்திலே செல்லாலிகள் சொல்லுமாறு அமைக்கவல்ல எனக்குத் திராட்டி தும் இவி கிடில்லை யென்கிறார்.

சொல்மாலிகள் சொல்லுமாறு அமைக்க வல்லேற்கு என்ற விடத்தில் நிர்வாஹ பேத முண்டு; பட்டருக்கு முன்புள்ள முதலிகள் எப்படி நிர்வஹித்தார்களென்னும், ஆழ்வாரை நோக்கி ஸ்ரீவேர்வரன் 'ஆழ்வீர்! கர்மாக்குறித்து ஒரு கவி சொல்லும்' என்னும் நிறையும் மயக்கமும் அப்போதே கடக்கெனக் கவி சொல்லி முடிக்கும்படியான வல்லமை வாய்ந்த எனக்கு—என்று நிர்வஹித்துப் போந்தார்களாம்: பட்டர் நிர்வஹிப்பதாவது—மேலே முதல் பத்தில் " என்றைக்கு மென்னை என்கிற திருவாய்மொழியிற்படி ஸ்ரீவேர்வரன் தானே கவி பாடிய முறையாலே கவிபாடின ஸாமர்த்தியம் ஆழ்வாளாகப் பாராட்டத்தக்கதன்று; அந்த எம்பெருமான் திருக்கண்களாலே குளிர்க் கடாக்ஷித்து 'நீ ஒரு கவிசொல்லும்' என்னும்

http://acharya.org

* உன்னைவா முருகிக் குன்றமூழ்த் தொழிந்தேன் * என்னுல் கணக்கிலே சிலரசாகாமே தரித்து நின்ற சொல்மாலைகள் சொன்னதன்றே பாராட்டத்தக்கது; அத்தத்தன்மையை ஆழ்வார் இங்கு அருளிச்செய்கிறார் என்றும். கணக்க என்ற சொல்லின் ஸ்வாரஸ்யத்திற்கு மிகவும் பொருத்தியே கிர்வாஹம் இது. அமைத்தல்—தரித்தல். .... (8)

வானத்தும்வானத்துள்ளும்பரும் மண்ணுள்ளும்மண்ணின்கீழ்த்
தானத்தும் * எண்டிசையும்தவிராதுநின்றுவந்தினை *
கூனற்சங்கத்தடக்கையவனைக் குடமாடியை
வானக்கோனை * கவிசொல்லவல்லேற்கு இனிமாறுண்டே ? (9)

வானத்தும் உள்வானத்து உம்பரும்	ஸ்வர்க்கத்திலும் அதற்குள்ளாய்ப் பெரியதாகிறுக் கொண்டிருக்கிற மஹர்லோகாதிகளிலும்
மண்ணுள்ளும்	பூமிக்குள்ளும்
மண்ணின் கீழ் தானத்தும்	பூமிக்குக் கீழ் இருக்கிற பாதாள லோகத்திலும்
எண் திசையும்	இவற்றிலுண்டான எட்டு திக்குகளிலும்
தவிராது நின்றுவந்து தன்னை	முன்றிலும் வருமாறுபடி வியாபித்து நிற்பவனும்
கூன் தல் சங்கம்	வளைந்தவடிவால் அழகிய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
தடக்கையவனை	பெரிய திருக்கைகளையுடையவனும்
குடம் ஆடியை	குடக்கூத்திலே கைகள் ஓனல் களோடும் வீசுகிறவனும்
வானம் கோனை	நித்ய ஸூரிகளுக்குத் தலைவனான ஸர்வேச்வரன் விஷயத்திலே
கவி சொல்ல வல்லேற்கு	கவி பாடவல்ல எனக்கு
இனி மாறு உண்டே	இனி எதிர் உண்டோ ?

* * *— இப்பாட்டு ஆழ்வாருடைய ஸர்வஜ்ஞத்வத்தைக்காட்டிலும் பெருமையைக் காட்டுகின்றது. பரமபதத்திலுள்ள நித்யர்களென்ன, முக்தர்களென்ன, இவ்விபூதியிலுள்ள பரசர பராசர்ய வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகளென்ன, ஆகிய இவர்களெல்லாரிற் காட்டிலும் ஆழ்வார்க்குண்டான வைலக்ஷண்யம் இப்பாசுரத்தில் வெளியாகின்றது. எம்பெருமானுடைய பரத்வஸௌலப்யாதி அர்த்தாநுபவத்தில் அர்ச்சாவதாரங்களென்ற எல்லை நிலைமைகளிலும் புக்குக் கவிசொல்லவல்ல வெனக்கு ஸாதநாந்தரமே வேண்டாவென்கிறார்.

நித்யமுக்தர்கள் பரத்வமல்லது வேறெதுவுமறியார்கள். மஹர்ஷிகளில் வால்மீகி, பராசர பகவானும் வேதவ்யாஸபகவானும் க்ருஷ்ணவதாரமல்லது மற்றொன்று அறியார்கள். வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணதாரமன்றி யறியான். ஸகல ஸாஸ்த்ரஜ்ஞர்கள் அத்தர்யாமித்வத்திலே அதிகமாக மன்றிப்பிருப்பர்கள். இங்ஙனே பார்க்குமிடத்து ஒவ்வொருவர்க்கு ஒவ்வொன்று பாழியாயிருக்கும். கம்பாழ்வாருடைய் தன்மை இங்ஙனேயன்று; * வானத்தும் வானதுள்ளும்பரும் மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்தானத்தும் எண்டிசையும் தவிராது நின்றுவந்து கவிபாடுபவராகிற்கிறார். இங்கு விசேஷணப்பதங்களில் முழுகோக்கு. விசேஷ்ய பூதனான எம்பெருமான் விஷயத்திலே கவிபாடுதல் மற்றவர்கட்கும் உண்டேதானாலும், விசேஷணாம்சங்களிலே தனித்தனியே புகுந்து அம்ஸ்ய நிலைமைகளுக்கும் கவிபாடுதல் ஆழ்வார் தொருவர்க்கேயா யிற்றே.

முன்னிரண்டடிகளாலே எம்பெருமானுடைய ஸர்வவ்யாபகத்வம் சொல்லப்படுகிறது. இந்த வ்யாப்தியை மற்றையோர்கள் பேசுவதிற்காட்டிலும் ஆழ்வார் பேசுவதிலே சுவை மிக்கிருக்கும். "பாக்த தன்பாலவையுள் நீக்தொறும் பரக்துளன்" என்பது முதலான பாசுரங்கள் காண்க.

எம்பெருமானுடைய வ்யாப்தி விஷயத்திலே சிலர் விப்ரதிபத்தி பண்ணிப்போருவார்கள். அநுவான பதார்த்தங்களிலே எம்பெருமானுக்கு உள்ளீடாக வ்யாப்தி யம்பலிக்க

http://acharya.org

மாட்டாதென்றும், ஒரு பதார்த்தத்திலே அவனுக்குப் பரிபூர்ண வ்யாப்தியை அங்கீகரிக்கு மனஸில் மற்றொரு பதார்த்தத்தில் வியாபிக்க ப்ரமாணநிபுணமையாலே பரிணாமப்ர வ்யாப்தியை அங்கீகரிக்கலாகாதென்றும் இங்ஙனே சில விப்ரதிபத்திகளைப் பண்ணுகிறபர்கள். இவற்றைக் கெல்லாம் பரிஹாரமாக ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா என்கிற வடமொழி க்ரந்தம் இயற்றி யுள்ளோர்; அதிலே பார்க்கக் கண்டு கொள்வது.

கூனல் சங்குத் தடக்கையவனே = முன்னிரண்டடிகளிற் சொல்லியபடி எங்கும் வியாபித்து நிற்கிறவன் அடியவர்களைக் காத்தற்பொருட்டு மநுஷ்யஸஞ்சாரியைப் வந்து அவதரிக்கும்படி சொல்லுகிறது. இங்ஙனே சொல்லுகை சக்கரத்திற்கும் உபலக்ஷணம். கண்ணனைப் பிரிவதரிக்கும் போது நிருவாழி நிருச்சங்கோடே வந்து பிறக்கவை அறியத்தக்கது. "ஜாதோஸி தேவதேவேஸ! சங்கசக்ர கதாதர!" என்ற வஸுதேவர் வார்த்தையும் காண்க.

குடமாடியை வென்று குடக்கூத்தைச் சொல்லுகை நிருஷ்ணாவதார சேஷ்டிதங்களுக் கெல்லாம் உபலக்ஷணம். இங்ஙனே நிருஷ்ணாவதாரத்தைத் தெரிவித்தது மற்றுமுள்ள விபவாவதாரங்களுக்கெல்லாம் உபலக்ஷணம்.

வானக்கோனே = ஓர் ப்ரளயவன்றியிலே ஒரு காட்டுக்காகக் காட்டி கொடுத்துக்கொண்டிருக்கிறபடி. பரம்பூஜ்ய விபவாந்தர்யாமி யர்ச்சாவதாரமென்கிற ஐக்யத்தினால் முன்பு இப்பாட்டில் சொல்லப்பட்டன; நிருவாய்மொழி அர்ச்சாவதார வேதமாகையாலே அர்ச்சாவதாரத்தை விசேஷித்து எடுக்கவேண்டாதே. விபூதியைப்பற்றிச் சொல்லவேண்டுமது அதிகமில்லையென்று நிருவுள்ளம்.

"எம்பெருமான்றன்னைக் கலிசொல்லவல்ல வல்லோ டெடுக்குமோ ஸர்வேச்வரனை எம்பெருமான்தானும்" என்பது ஆழ்வீர்ப்படியருளிச் செயல்.

உண்டுமிழ்ந்தும்கடந்துமிடந்தும் கிடந்துநின்றும் *
கொண்டகோலத்தொடுவீற்றிருந்தும் மணங்கூடியும் *
கண்டவாற்றல் தனதேயுலகெனின்றுண்தன்னே *
வண்டமிழ்தூற்றுகோற்றேன் அடியார்க்கின்பமாரியே.

உண்டும்	(ப்ரளயத்திலே) உண்டு வயிற்றிலே வைத்தும்
உமிழ்ந்தும்	பிறகு வெளி நாடுகாண உமிழ்ந்தும்
கடந்தும்	[மற்றொருகால்] அவர்க்கு காத்தேழெளிவும்
இடந்தும்	[அவர்கள ப்ரளயத்திலே வராதே ருஷியாய்] இடந்தெடுத்தும்
கிடந்தும்	[ஸ்ரீராமாவதாரத்திலே] கடற்கரையிலே கிடந்தும்
நின்றும்	இராவணவதத்தின் பிறகு தேவர்கட்குக் காட்சி கொடுத்துநின்றும்
கொண்ட கோலத் தொடு	மீண்டுவந்து பட்டாபிஷேகம் பண்ணின கோலத்தோடே
வீற்றிருந்தும்	ஸிம்ஹாஸநத்திலிருந்தும்
மணம் கூடியும்	பதினாராயிரம் ஆண்டு பூமியை ரக்ஷிக்கையாலே பூமிப்பிராட்டி விரும்பி யணைக்க அவளோடே ஸம்ச்லேஷித்தும்
கண்ட ஆற்றல்	இப்படி ப்ரத்யக்ஷமாகக் கண்ட சேஷ்டிதக்களால்
உலகு தனதே என	உலகம் தனக்கே போகம் என்று காடாகச்சொல்லும் படி
நின்றுண் தன்னே	நின்ற ஸர்வேச்வரன் விஷயத்தில்
வண் தமிழ் தூற்ற	அழகிய தமிழ்ப்ரபந்தத்தை தொடுக்கைக்கு
கோற்றேன்	புண்ணியம் பண்ணினேன்; [இத்திருவாய்மொழி ப்ரபந்தமானது]
அடியார்க்கு இன்பம் மாரி	எம்பெருமானடியார்கட்கு ஆனந்த மழைபொழியும் மேகமாயிரா நின்றது.

http://acharya.org

* * *—தாம் பாடுகிற கவிகளின் இனிமையைத் தாம் அநுஸந்தித்து, எம்பெருமானுக்கு நல்லராயிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவற்றைக் கேட்டால் எல்லாமே இனியராகிறார் வென்கிறார். எம்பெருமானுடைய சேஷ்டிதங்களைடங்க மன் சொல்லுக்குள்ளோசம் படி கவிபாட வல்லனைப் ப்ரஸ்த விஷயத்திலே யாதொன்றாக அழகை செய்யப்பெற்றது மாத்ரமன்றிக்கே ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஆனந்தமளிக்கவல்லவனுமே னென்கிறார்.

எம்பெருமானுடைய சேஷ்டிதங்கள் பலவற்றையும் முன்னடிகளில் கண்காப்பாளரும் போல் அருளிச்செய்கிறார். உண்டது பிரளயபத்தில், உமிழ்ந்தது பிரளயம் தீர்ந்தவாறே; கடந்தது வாமனாவதாரத்தில். இடந்தது வராஹாவதாரத்தில். இடந்தது கடற்கரையிலே; வேறுபத்தனத்திற்கு முன்னே மறுத்ராஜனிடம்போக்கி அந்நூலிபண்ணிக்கிடந்தபடை. பின் ரகு-ராவண ஸம்ஹாரம் ஆனபிறகு தேவர்களுக்குக் காட்டி கொடுத்து நின்றது. கொண்ட கோலத்தொடு பிற்றிருந்தது-ஆடா வல்லதாரியாய்ப் பர்ணசாலைகளிலே இருந்த இருப்பா தல்; மருடாவிஷேகஞ் செய்துகொண்டு பதினாராயிரமாண்டு இருந்த இருப்பாதல். * ரஸ வஸ ஸாவஸ்ரணி ரமஸஸ்ரமதாதிஜ, ராகொராஜ்ய உவாஸலிஸ்வர * (தச வர்ஷஸஹஸ்ரணி தச வர்ஷசதானி ச, ராமோ ராஜ்யமுபாஸித்வா.) என்றபடியே பதினாராயிரமாண்டு பூமியை ரக்ஷிக்கையாலே பூமிக்கு அபிமானியான பிராட்டி விரும்பியேனைக்க, அவளோடே எம்மிலேவித்தனை சொல்லுகிறது மணிக்கூடியும் என்க.

தண்டவாற்றல் என்றது-இப்படி ப்ரத்யக்ஷமாகிற்தமான சேஷ்டித ப்ரகாரங்களாலே என்றபடி. ஒருவன் ஒரு நிலத்தைத் திருத்துவது செடி கொடிகள் வைப்பது எருவிடுவதாய் கொண்டுகாலம் க்ருஷிபண்ணக்கண்டால் 'இந்த நிலம் இவனுடையது' என்று அறியலாமன்றே; அதுபோல, உண்கை உமிழ்கை முதலான பலபல சேஷ்டிதங்களினால் 'உலகமெல்லாம் எம்பெருமானுடையது' என்று அறிதற்கு குறையில்லையாயிற்று.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாகத் திருவாய்மொழிபாடுகைக்குப் பர்யாப்தம் பண்ணினேன்; இத்திருவாய்மொழியானது கொண்டார்கட்கு ஆனந்தத்தைப் பொழியும் மேகமாகவுள்ளது என்கிறது ஈற்றடி.

ஆசார்யஹ்ருதயத்தில் "மிட்டிவ்ப மின்பப்பாக்களில் தெய்வபாஷா நிரூபணமும் இன்பமாரியிலாரய்ச்சி" என்றவிடத்து இன்பமாரி என்பதற்கு "திருவாய்மொழி முகத்தாலே ஆனந்தத்தை வர்ஷிக்கும் மேகமாகவு ழ்வார்" என்ற வியாக்கியானம் கண்டையாலே இங்கு "அடியார்க்கு இன்பமாரியாகிய சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால்" என்று உரைத்தனமாம். .... (கர)

மாரிமாறுதண்ணம்மலை வேங்கடத்தண்ணலே *
வாரிமாறுதலைம்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன் *
சீரிமாறன்சடகோபன் சொல்லாயிரத்திப்பத்தால் *
வேரிமாறுதலூமேலிருப்பாள் விரைதீர்க்குமே. (கக)

மாரி மாறுத	மழைதப்பாதபடியினாலே
தண்	குளிர்ந்து
அம்	அழகியதான
வேங்கடம் மலை	திருவேங்கடமலையிலேயுள்ள
அண்ணலே	ஸ்வாமி விஷயமாக
மாரி மாறு	ஜலம்பெருகி குறையாத
வை பூ பொழில் சூழ்	பரந்த பூஞ்சோலைகளாலே சூழப்பட்ட
குருகூர் சடகோபன்	திருநகரியில் (அவதரித்த)

தி. 4—10.

http://acharya.org

காரி மாறன் சடகோபன்	} ஆழ்வார்	வேரி மாறாத பூ மேல் இருப்பான்	} பரிமளம் அறாத தாமரை மலரிலே நித்ய வாஸம் பண்ணுகிற பிரமன்
சொல்	அருளிச்செய்த	விரோதி தீர்க்கும்	} எல்லாப் பாபங்களையும் போக்கி யருள்வள்.
ஆயிரத்து	ஆயிரத்தில்		
இப்பத்தால்	இப்பத்துப் பாசுரங்களினால்,		

* * *—இத்திருவாய்மொழி கற்பாருடைய நிகிலங்களையெல்லாம் பெரியபிராட்டியார் தீர்த்தருளக்கூடுமென்ற பயனுரைத்தத் தலைக்கட்டுகிறார். மழை ஒருகாலும் மாறுதபடியாலே குளிர்ந்து அழகியதான திருவேங்கடமலையிலே, தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காகவந்து நிற்கிற ஸௌலப்யனான ஸ்வாமி விஷயமாகப்பணித்ததாம் இப்பதிகம்; ஒரு பாசுரத்திலும் திருவேங்கடமுடையானுடைய ப்ரதாநமே இல்லையாயிருக்க இவ்வளவே சொல்லுவானேன்? என்னில்; தர்மியின் ஔஜ்வல்யத்தைக் காட்டினபடி. திருவாய்மொழிக்கு அர்ச்சாவதாரத்திலேயே முழுகோக்கு என்று காட்டினபடியுமாம். இப்பதிகத்தில் "மலைக்கும் பூவின்மிசை கண்ணைக்கு மின்பமே" என்ற பெரிய பிராட்டியார்க்கு முன்பே நித்யஸூரிகளுக்கு முகங்கொடுக்கும் ஸௌலப்யத்தைச் சொல்லிற்றுகையாலே ஸௌலப்யத்துக்கு எல்லையான திருவேங்கடமுடையானைக் கவிபாடினபடியாயிற்றென்ப.

"வேரிமாறாதபூமேலிருப்பான் விரோதிக்கும்" என்கையாலே பிராட்டிக்கும் எம்பெருமானுக்குப் போலவே பலனளிக்குந்திறல் உண்டென்ற லெர் சொல்லுவர்கள். நம்மை எம்பெருமான் அங்கீகரிப்பதற்கு இடைநிலைகளாக இருக்கும் நிகிலங்களைப் புருஷகாரத்வத்தாலே பிராட்டி போக்குவாள் என்றறிந்தோம். சதுச்ச்லோகீ பாஷ்யத்திலே ஸ்ரீமத்கேசவாசார்யர்கள் "ஸ்ரீகைவல்யமோக்ஷலக்ஷணே வ்யதர்த்தே ஸதி ஸ்ரீய: பிராட்டியுடைய புருஷகாரத்வம் சரமே கைங்கர்யரூபே—அன்றி கர்மாராதநபலமே பத்மவர்ணத்வாதிகளும் சரீர: பிராட்டியுடைய புருஷகாரத்வம் காலே ஸத்ஸஹாயமபேக்ஷதே." என்ற ஒரு காரிகை அருளிச் செய்துள்ளார். இவ்வொன்ற போதும் அவ்வாசிரியருடைய விவக்ஷிதத்தை நன்கு தெளிய. இக்காரிகையின் பொருளில் யாரும் விவாதப்பட இடமில்லை. இனிச் சொல்லுவதாவது—கர்மாநுகுணமாய்ப் பலன் கொடுப்பதில் எம்பெருமானுக்கே அதிகாரமுள்ளது. அவன் மனைவியான பிராட்டியாலே சிலசமயங்களில் நிக்ரஹிப்பது முண்டு; சில சமயங்களில் அநுக்ரஹிப்பதுமுண்டு; அப்படிப்பட்ட சமயங்களில் பிராட்டி என்ன செய்கிறாளென்னில், அவன் அநுக்ரஹத்தில் அபிமுகனாயிருக்கும்போது இவள் அதை மேன்மேலும் வளர்த்செய்வதில் மூக்கை நுழைத்துக்கொள்ளுகிறாள்; நிக்ரஹத்தில் அபிமுகனாயிருக்கும்போது அதைத்தணிப்பதிலே மூக்கை நுழைத்துக்கொள்ளுகிறாள். இவ்விரண்டு செயல்களே பிராட்டியினுடையவை—என்பதே மேற்குறித்த காரிகையின் பொருள். 'இதுவன்ற பொருள்' என்ற யாரும் இயம்ப இயலாது. இதுதான் தேசிகனித்தாந்தம்; இதுவேதான் லோகதேசிக விவக்ஷிதமும். (கக)

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து ஆறாந் திருவாய்மொழி—தீர்ப்பாரையாமினி.

உரையவதாரிகை:—கீழில் சென்ற திருவாய்மொழிக்கு அடுத்தபடியாக இத்தத் திருவாய்மொழி இருக்கத் தகுதியில்லை யென்ற சம்முதலிகள் கூறுவர்களாம். கீழ்த்திருவாய்மொழி எல்லை கடந்தப்பரிநியோடே சென்றது; அதற்கு எதிர்த்தட்டாய்ச் செல்லுகிறது

http://acharya.org

இத்திருவாய்மொழி, மேற்பதிகத்திற்கும் இப்பதிகத்திற்கும் லக்கதி அருளிச் செய்ய வேணுமென்று எம்பாரைச்சிலர் கேட்டார்களாம்; அதற்கு எம்பார் "இதற்கு நான் என்ன சொன்னேன்? அலங்கதிரேவ லக்கதி என்று கொள்ளுங்கோள்" என்றாராம்; இது இன்னையே வழிவெடுத்த வார்த்தையாகும். லக்கதி சொல்ல முடியாதென்ற ஆபாத ப்ரதிநிலையே பொருளாம்; அலங்கதி என்றது அலம்+லேஷமென்றபடியாய் விச்லேஷத்தைச் சொல்லிற்றாய், விச்லேஷந்தான் இதற்கு லக்கதி என்கை பராசர்த்தம்.

* மண்ணுலகிலிருந்து முறாவியில் தூர்வார்க்கு உண்டான பிராப்ய பிராபகத்தைத் தனிப்பதற்காக வந்து பிட்டின வைகுந்தநாதன் மறைய நிற்க, அத்தப்பிரிவை ஆற்றமாட்டாமல் இத்திருவாய்மொழி விஷாதத்திலேயாய்ச் சென்றின்றது. வேறிலக்குத் தானேயிலே அவதரித்ததாய் இத்திருவாய்மொழி. ஆழ்வார் தாமான தன்மையையிழந்து ஒரு தலைமகளாம் நிலையை எய்தி, அதுதன்னிலும் தம்மையாலே சொல்லமாட்டாமல் வேற்று வாயாலே சொல்லவேண்டித் தோழியின் பேச்சாகச் சென்றுகின்றது.

பிரிவாற்றாது மிகவருந்திய தலைமகளது வடிவுவேறுபாட்டினைக் கண்டதாய்மார் 'இவள் இங்ஙனம் மெலிதற்குக் காரணம் என்னோ?' என்று கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் தன் மரபின்படி ஆராய்ந்து 'இவளுக்கு முருகக்கடவுள் ஆவேசித்தொழியப் பிறிதொன்றுமில்லை' என்று கூற, அதுகேட்ட தாயர் உடனே வெறியாட்டாளனை அழைப்பித்து அவனைக்கொண்டு ஆவேசமாடுவிப்பதும் கந்தர்தெய்வங்களுக்கு உரிய வஸ்தப்பலிகளை யிடுவிப்பதும் செய்ய, அதற்குத் தலைமகள் மிகவருந்தாநிற்க அச்சமயத்தில் அவளது துன்பத்தின் உண்மையால் காரணமுணர்ந்த தோழி அந்த ப்ரவ்ருத்தியைக் கண்டித்துக் கூறுகிற பாசுரமாய்ச் சென்றுகிறது.

ஸ்ரீவைஷ்ணவக் கட்டுவிச்சியென்றும் தேவதாந்தரக் கட்டுவிச்சியென்றும் கட்டுவிச்சிகளிலே இரண்டு பேதமுண்டு; நிருமல்யையாழ்வாருடைய நிறை நிருமடலிலே வந்த வள் ஸ்ரீ வைஷ்ணவக் கட்டுவிச்சி; இத்திருவாய்மொழியில் "இதுகாண்மினன்னீமீர் இக் கட்டுவிச்சி சொற்கொண்டு, நீர் எதுவானுஞ் செய்து அங்கோர் கன்னுமிறைச்சியும் தூவேல்மின்" என்கிற பாசுரப்பட்டிக்கு வந்தவளான கட்டுவிச்சி தேவதாந்தரக் கட்டுவிச்சியாவள்.

"கண்டியூரரங்கம் கிடந்தபோர் கச்சிபேர் மல்லிசேர்ந்து மண்டியே நிரிவேலை யாரிக்கழைத்ததாடி"

"விண்ணகரம் வெஃகா விரிதிரை நீர் வேங்கடம் மண்ணகரம் மாமாடமேழுக்கை எல்லாநிலத்து நின்றே நீள்வேலை யாரிக்கழைத்ததாடி";

"வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவுமஃகாத பூங்கிடங்கில் நீள்கோவல் பொன்னகருமெல்லாம் நிலத்து நின்றே நீள்வேலை யாரிக்கழைத்ததாடி;"

"கொல்லருடக்கையும் கோட்டியூரும்பேரும் எல்லாநிலத்து நின்றே நீள்வேலை யாரிக்கழைத்ததாடி"

என்று கன்னிருதாகப் பாடிக்கொண்டே மிதியாலருவல் ஸ்ரீ வைஷ்ணவக் கட்டுவிச்சி;

"வினைகளாடு காடதனுள் நடமாடு மிருடிகளின் குலங்களையே யிசையும் கூறித் நிரிவேலை யாரிக்கழைத்ததாடி"

"வெற்றாகென்பும் கருநீறும் மெய்யில் பூசி வெள்ளைவெருப்பிரியும் பெரியோள் குணம்பாடி நின்றேநிரிவேலை யாரிக்கழைத்ததாடி"

http://acharya.org

"கடலிலில் கடி தேனமர்ந்ததோர் கடலையப்பாடி காடெல்லுத்திரிவேனே யாரிக்கழைத்தாரே!"

"அக்கும் புலியினதளு முடையாரவரொருவர் பக்கமே சென்று பாசெல்லாம் திரிவேனே யாரிக்கழைத்தாரே."

"ஆமம் மிறையுமரவமுமடம்புனற்சடை மேலணிக்கடலம் சீமம் பூசி எறுதமிறையோன் தனையிற் படிவேனே யாரிக்கழைத்தாரே."

என்ற பாடிக்கொண்டே இரிவன் தேவதாத்தாக் கட்டுவிச்சி மின் கட்டுரைகட்கு இணங்கிய செயல்களே விலக்குகின்றதாயிற்று இத்திருவாய்மொழி.

தேவதாத்தை ஈர்ப்பக்கத்தையும் எறியாக ஆழ்வாருடைய பாச வைஷ்ணவத்தைச் சொல்லுகிறது இத்திருவாய்மொழி. .... *

தீர்ப்பாரையாமினி எங்ஙனம்காதுமென்னுமீர்! *
ஓர்ப்பாலிவ்வொண்ணுதல் உற்றகன்றேயிதுதேறுமேனும் *
போர்ப்பாகுதான்செய்து அன்றைவரைவேல்வித்த * மாயப்போர்த்
தேர்ப்பாகனூர்ந்து இவள்சிந்தைதுழாய்த்தினைக்கின்றதே. (க)

அன்னைமீர்	தாய்மார்களே!	போர்	பாரதப்போரிலே
இனி	இப்படிப்பட்ட நிலைமையான பின்பு	பாகு	பாகனுயிருந்து செய்யவேண்டிய காரியங்களை
தீர்ப்பாரை	இந்த நோயைத் தீர்க்க வல்லவர்களை	தான் செய்து	தானே முன்னின்று நடத்தி
யாம் எங்ஙனம் காதும்	நாம் எவ்விதமாகத் தேடிப்பிடிக்க முடியும்? (முடியாது)	இலை	பஞ்சபாண்டவர்களை
ஓர்ப்பால்	என்று கிருஷ்ணனிடம்	வென்றித்த	ஜயம் பெற்றவர்களாகச் செய்வித்த
இவள் அதல்	அழகிய நெற்றியையுடைய இப்பெண்பிள்ளை	மாயம்	ஆச்சரிய சக்தியுக்தரும்
உற்ற இது	அடைந்திருக்கின்ற இந்த நோயானது	போர் தேர் பாகனுக்கு	யுத்தபூமியில் தேர்செலுத்தவல்ல வருமான பெருமான் விஷயத்திலே
கற் நோய்	விலக்ஷணமான நோயாகும்;	இவள்	இப்பராங்குச நாயகியுடைய
தேறினோம்	நிச்சயமாக அறிந்தோம்;	சிந்தை	மனமானது
அன்று	முன்பொருகாலத்திலே	துழாய்	துழாவப்பெற்று
		நினைகின்றதன	அநுபவியா கின்றதே!

* * *—பராங்குசநாயகியின் தோழியானவள், 'இந்நோய் பாண்டவபக்ஷபாதியான கண்ணபிரானடியாக வந்ததானபோலே இதற்கு மேற்கள் பரிஹாரமாக நினைத்துச் செய்கிறவை பரிஹாரமல்ல' என்று சேஷிக்கிறாள். அன்னைமீர்! யாம் இனித்தீர்ப்பாரை எங்ஙனம் காதும்? = இச்சொல்தொடர் பலவகைக் கருத்துக்களைக் கொண்டது; இவ்வாழ்வாருடைய அருகிலே வருமவர்களெல்லாம் இவளோடொப்ப மோஹிப்பவர்களேயன்றி, உணர்ந்திருந்து பரிஹாரமுறைமைகளை ஆராயவல்லார் ஒருவருமில்லையே! என்கை. நோய்க்குப் பரிஹாரம் பண்ணிக்கொண்டிருக்குமவர்களோ நோக்கித் "ஓர்ப்பாரையாமினி யெங்ஙனம் காதும்" என்னையாலே நீங்கள் செய்கிறவை பரிஹாரமல்ல என்றவர்களாம். "கடல்வண்ணரிது செய்தார் காப்பாரரே?" என்கிறபடியே * நோய்களனைத்துக்கும் மருந்தான எம்பெருமான் தானே இந்நோயை நோய்செய்தானை நின்று இனி இந்நோயைத் தீர்க்க வழியுண்டோ? என்றபடியாகாம்.

ஓர்ப்பால்—இப்போது ஆராய்ந்து பார்த்தலிடத்தில் என்றபடி. தர்ப்பு—ஆராய்ச்சி.

http://acharya.org

இவ்வோன்னுதல்—"அகத்தினாழகு முகத்தினே தெரியும்" என்பர்களே உகைகள்; இவளுடைய திருமுகமண்டலத்தில் தெளிவை நோக்குங்போதே இவளுடைய நோய்க்கு நிதானம் தெரியவில்லையோ என்னை. இங்கே கடு;—"அப்புபட்ட வாட்டத்தோடே முடித்தாரையும் சிரிவேடுக்கு முடித்தாரையும் முகத்திலே தெரியாதோர் குறைகை விரகத்தையாசைப் பட்டுப் பெருமையாலுண்டான மோதமாகையாலே முகத்தில் செல்லிக்கு அளத்தி வழிக்க வேண்டுமிப்படியாயிற்றிருக்கிறது."

நோய் என்னுதே 'கன்னெய்' என்னையாலே, ஒவ்வொருவரும் சோன்பு சோற்றுப் பெறவேண்டிய நோயன்றே இது; இது வளர்வதற்கு வழிதேடவேண்டுமோயல்லது இதைப் பரிஹரிக்க முயல்வது முறையோ? என்ற கருத்து வெளியாம்.

தெறினும்—தெளிவுபெற்றே என்றபடி. இது தோழி சொல்லும் வார்த்தை யாகையாலே, தான் தெளிவு பெற்றதாகச் சொல்லுகிறதனால் அங்குள்ளாரெல்லாரும் கலக் கமுற்றிருப்பதாக ஏற்படுகின்றது; இக்கக் கலக்கமே இவர்களுக்கு நிதியம்; "மஹர்ஷிக ளின் கோஷ்டியில் கலக்கம் காணக்கிடைக்காது; ஆழ்வார்களின் கோஷ்டியில் தெளிவு காணக்கிடைக்காது" என்பர் நம் முதலிகள். தெளிந்திருக்க வேண்டுவதன்றே ப்ராப்தம்; கலங்கியிருத்தல் நோயன்றேயென்று மாமாக்கர் நினைப்பர்கள்; "தர்மவீர்யஜ்ஞானத்தாலே தெளிந்து ஐந்தஞ்சாய் மேலே மேலே தொடுப்பாரைப் போலன்றே அருளின பக்தியாலே உள்கலங்கிச் சோகித்து மூவாறு மாளும் மோஹித்து வருந்தி யேங்கித் தாழ்ந்த கொற்களாலே நாற்றினவிர்" என்ற ஆசார்யஹ்ருதய இவ்வளவுக்கு நோக்குக.

இத்தலைவிக்கு உண்டான நோய் இன்னவகைத்து என்பதைப் பின்னடிகள் நிரூபிப் பன. கண்ணபிரான், பாண்டவர் தூர்யோதனாதிகள் என்ற இருவருப்பினரையும் வைத்து செய் யிக்கைக்காகத் தூர்யோதனாதியரிடம் தூதாகச்சென்று பாண்டவர்களும் நீங்களும் பகைமை கொள்ளவேண்டா; ராஜ்யத்தில் இருவர்க்கும் பாகமுண்டு; நீயையால் ஸமமாகப் பிரித்துக் கொண்டு ஸுகதானமாக அரசாட்சி செய்து வாழுங்கள்; அதற்கு ஸம்மதியில்லையாயிடில், தமக்கு இரண்டிரண்டு ஸுகாகப் பாண்டவர் ஐவர்க்கும் பத்து ஸுகைக் கொடுங்கள்; அதுவும் அல்லடாயில் பாண்டவர்கள் குடியிருக்கும்படி ஒரு ஸுகையாவது கொடுங்கள்' என்று பலபடி அருளிச்செய்ய, அந்தச் சொல்லுக்குச் சிறிதும் இசையாமல் 'பராக்ரமமிருந்தால் போர் செய்து ஜயித்துக்கொண்டட்டும்; இக்கப் பூமி பிரசக்கே உரியது' என்றிப்படி. இக்காரமாக மதத்துச்சொல்லவே, தான் பாண்டய பராபாயப்பாரத்தராதியாயிருந்து பாரதாந் தத்தை நடத்திவைத்து எதிரிகளைத் தோற்றித்து அடியவர்களை வெற்றி பெறுவித்தருளினன் என்ற வரலாறு அறியத்தக்கது.

இவள் சிந்தை தழாய் நினைக்கின்றது மாயப்போர்த் தேர்ப்பாகனுர்க்கு = கண்ணபிரா னுடைய ஆச்ரிதபாரதந்த்ர்யம், ஆச்ரிதவாத்ஸல்யம் முதலிய நிருக்குணங்களில் ஈடுபட்டதனா லுண்டான நோய்காண்மின் இது என்று தெரிவித்தாளாயிற்று. தழாய்—துழாவி; ப்ரார்த்து என்றபடி. .... (க)

நினைக்கின்றதேயிவள்நோய் இதுமிக்கபெருந்தெய்வம் *
இனைப்பின்றிநீரணங்காடும் இளந்தெய்வமன்றிது *
நினைப்பின்றியே சக்குசக்காமென்றிவள்கேட்க * நீர்
இனைக்கித்றியாகில் உம்நோயில்பெறுமிதுகாண்மினே. (உ)

இ. 6—20).

http://acharya.org

(அன்னைமீர்) தாய்மார்களே,
நிரைக்கின்ற தே } நீங்கள் இப்படியும் ஆறிய கேடாகுமோ?
இவள் கோய் இது } இப்பெண்பிள்ளைக்கு உண்டாகி யிருக்கின்ற இக்கோயானது
மிக்க பெரு தெய்வம் } பராத்பரமான தெய்வமடியாக வந்தது;
இரைப்பு இன்றி } தருகியில்லைதாடி
நீர் நீங்கள்
அணங்கு ஆகும் வெறியாடுகிறீர்கள்
இள தெய்வம் அன்று இது } ஆழ்வார் தெய்வமடியாக வந்த தன்மை இது (ஆதலால்)

இரைப்பு இன்றியே } மலக்குமுப்பம் தவிர்த்த
நீர் நீங்கள்
இவள்கேட்க } இப்பெண்பிள்ளையின் காதில் விழும்படியாக
சங்கு சக்கரம் என்று } சங்கென்றும் சக்கரமென்றும்
இரைக்கின்றிச் நாவில் } சொல்ல வல்லீர்களாகில்
தன்றே நலமாகவே
இல் பெறும் } (இவள்) இல்லிருப்பும் பெறும் படியாகும்;
இது காண்மின் } இங்கனே கடத்திப் பாருங்கள்.

* * *—ஆழ்வார் தெய்வங்களைக் குறித்துப்பண்ணும் சாந்திகளால் இவளுடைய நோய் போக்கவரிது; மற்பெருமானுடைய லக்ஷணங்களைச் சொல்லில் இவளைப்பெற்றவளென்கிறாள் நீசைக்கின்றதே என்பது மிக வருந்திச் சொல்வதாகும். இப்படியும் ப்ரார்த்தகளாகுமோ ? என்று சோதிக்கிறபடி..

இவள் நோயது மிக்கபெருந்தெய்வம் = திருவிருத்தத்தில் "வானோர்தலைவனும் சீரிய தெய்வாள்னைப் இது" என்றும் "என்மொழிகோயோ கழிபெருந்தெய்வம்" என்றும் உள்ள பாசுரங்கள் இங்கே அநுஸந்திக்கத்தக்கன. "நானாயணனையே தொழுதீர்காள் நமரங்காள் வம்மின்" என்கிறபடியே பரதெய்வமான ஸ்ரீமந்நாராயணனிலே உண்டுபண்ணப்பட்ட நோய் இது என்றபடி.

நீர்இரைப்பின்றி அணங்காடும் இளந்தெய்வமன்று இது—இரைப்பு—பொருத்தம்; அம்மி இல்லாமல் கீங்கள் செய்கிற்துப்போருகிற வெறியாடல் முதலான தீயசெயல்களுக்கு இலக்கான தெய்வமடியாக வந்த நோயல்ல இது என்றபடி. இரைப்பின்றி யென்பதற்கு ஈடு;—"கீங்கள் பண்ணுகிற பரிஹாரத்துக்கும் உங்களுக்கும் ஒரு சேர்த்தியில்லை; இந்நோய்க்கும் இவருக்கும் ஒரு சேர்த்தியில்லை; முதல்தன்னிலே பகவத்விஷயத்திலே கைவைத்தார் கொண்ட கைக்கு ஸம்பவனியுடைய நோயன்று இதுதான். ஒரு வழியாலும் ஒரு சேர்த்தியில்லை."

அணங்காடுதல்—தெய்வமேவேறித்து ஆடுதல். இனிச்செய்யவேண்டிய ஸாந்நாள பரிஹாரப்ரகாரமுணர்த்துவன நின்னடிகள். நீசைப்பின்றியே—மருள்கொள்ளாமல். மற்பெருமானுடைய நிவ்யாயுதங்களே இவள் செவிப்படுமாறு ப்ரார்த்திப்பதே நன்று என்கை.

இவ்விடத்திலே ஒரு ஐதிஹ்யம்; பட்டர்காலத்தில் ஆய்ச்சிமகன் என்றொருபாகவதர்; அவர் நோயுகண்டு ப்ரார்த்தனையற்றுக் கிடக்குங்காலத்திலே பட்டர் அவரைப்பார்க்க எழுந்தரு ளினார்; அப்போது அந்த ஆய்ச்சிமகன் அடியோடு அறிவு கடையரடாதபடி கிருப்பதைக் கண்ட பட்டர் அவர் அழகிய மணவாளனிடத்தில் மிக்க பக்தியுடையவர் என்பது காரணமாக அவருடைய செவியிலே மென்ன மாதிரப்போலே 'அழகியமணவாளப்பெருமாளே சரணம்' என்றருளினார்; அதனால் உணர்ச்சியுண்டாய் கெடுப்போதெல்லாம் அவர் அந்த வார்த்தையையே சொல்லிக்கொண்டிருந்து திருநாட்டுக்கு நடந்தாராம்.

நன்றே இல்பெறும், நன்று எயில்பெறும்—என்று இரண்டு வகையாகப் பிரிப்பர்கள்; இரண்டாவதில், நன்று—நன்றுக, யில்பெறும்—வார்த்தை சொல்லப்பெறுவள் என்றவாறு. மயக்கம் தீர்ந்து உணர்த்தியுண்டாகுமென்கை. .... (2)

http://acharya.org

இதுகாண்மினன்னைமீர் இக்கட்டுவிச்சி சொற்கொண்டு * தீர்
எதுவானுமஞ்செய்து அங்கோர்கள்ளுயிரைச்சியும்தூவேன்மின் *
மதுவார்துழாய்முடி மாயப்பிரான் கழல்வாழ்த்தினுல் *
அதுவேயிவளுற்றநோய்க்கும் அருமருந்தாதமே. (உ)

அன்னைமீர் இதுகாண்மின் — தாய்மார்களே! கான் சொல்லுகிற இக்காரியத்தைச் செய்துபாருங்கள்;
தீர் இக்கட்டுவிச்சி சொல்கொண்டு எதுவானும் செய்து — நீங்கள் இந்தக் குறத்தியின் பேச்சைக் கேட்டு ஏவாத பிரதிகூலமானதைச் செய்து
அங்கு ஓர் கள்ளுயிர் இறைச்சியும் காவேல்மின் — அவ்விடத்திலே தேவையான மதுவையும் மாம்ஸத்தையும் ஆராதனையாகவைக்கவேண்டா;
மது ஆர் துழாய் முடி மாயம் பிரான் — தேன் பொருந்தின திருத்துழாய் மாலையை திருமுடியிலணிந்துள்ள ஆச்சர்ய சக்தியுக்தனான ப்ரபுவின்
கழல் வாழ்த்தினுல் அதுவே அதுதானே — திருவடிகளே கோக்கி மங்களாசாஸனம் பண்ணினால் அதுதானே
இவள் உற்ற நோய்க்கும் — இப்பெண்ணின்னையடைந்த நோய்க்கும்
அரு மருந்து ஆகும் — அருமையான மருந்தாகும்.

* * *—தவறுதலான செயல்களைச் செய்யாமல் எம்பெருமான் திருவடிகளே வாழ்த்துவதாகிற பரிஹாரமுறையையை யநுட்டித்தால் இவளுடைய நோய் தீருமென்கிறள். கான் சொல்லுகிறவார்த்தை விரைவில் பயன்தருகின்றதா இல்லையா என்பதை நீங்கள் கைமேலே காணலாம்கோளென்பாள் இதுகாண்மினன்னைமீர் என்கிறள். காண்மின் என்றது 'கேண்மின்' என்ற பொருளில் வந்ததாகவும் கொள்ள இடமுண்டு. அன்னைமீர்! என்கையாலே நீங்கள் மிகவும் மூத்தவர்களேயானாலும், செய்துகிற கான் நெடியேயானாலும் சொல்லும்பேச்சு கல்லதாயிருக்குமாகில் ஆதரிக்கவேண்டாவோ? என்கிற கருத்துத்தொனிக்கும். "வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று மடக்கினியைக் கைகூப்பி வணங்கினனே" என்கிறபடியே என்போல்வாருடைய பேச்சைக்கு உபசார விசேஷங்கள் செய்யவேண்டியிருக்க, அவை செய்யாவிடினும் காது கொடுத்துக் கேட்கத்தானாகாதோ என்கிற கருத்தும் தொனிக்கும்.

கட்டுவிச்சி—குறி சொல்லுகிறவள். இதுகண்டு—அவளுடைய இழிவைப் புலப்படுத்தும். "காணிலு முருப்பொலாச் செயிக்கினைத சீத்தியார், பேணிலும் யாத்த பிடுகில் லாத தேவர்" என்கிறபடியே மிகவும் சோமான தெய்வத்தை வழிபடுகின்ற இவளே எங்கே தேடிப்பிடித்தீர்கள்! என்று கேளாகின்றபடி.. கள்ளொண்டு காணவொண்ணாத மிகவும் அழுத்து மதிரேயிருக்கையாலல்லாமல் இவளுடைய கடியகொடிய பேச்சுக்களுக்குக் காது கொடுப்பதுஞ் செய்தீர்களே! என்ற இடித்துக்கூறுகிறபடி. இதுகண்டு சொல்லில் அவ்விக்கவுமாம்; கட்டுவிச்சியின் இச்சொல் என்க.

தீர்—உங்களுடைய வைலக்ஷண்யத்தை நீங்கள் அறியீர்களோ! *மறத்தும் புறத்தொழுத குடியிலே பிறந்துவைத்து நீங்கள் இப்படியே செய்யத்தகுமோ! என்பது கருத்து. இவர்கள் செய்கிற காரியம் தனக்கு அனர்த்தமாயிருக்கிறபடியை எதுவானுஞ்செய்து என்பதனால் காட்டுகின்றள். வாயால் அதுவே அதுவதிக்கவும் கூசுகிறபடி. நோயான ஏதுவையும் மாம்ஸத்தையும் தூவி ஸ்ரீ வைஷ்ணவக்ருத்யத்தைக் கெடுக்கவேண்டாவென்கிறள். தேவதாந்தரக்கட்டுவிச்சியின் பேச்சைக்கேட்டு தேவதாந்தர ஸமாராதனம் பண்ணுகிறார்களாகையாலே "கள்ளுயிரைச்சியும் தூவேன்மின்" என்கிறள். தாமச தெய்வங்களுக்குத் தாமச பதார்த்தங்களே உகந்த ஸமாராதனமாம் "பேய்மகளே முதலா அல்லாமுயறாயினசெய்கை"

http://acharya.org

(திருவாசிரியம்) என்கிறபடியே ஆடுபலி கொடுத்தல் கோழிபலி கொடுத்தல் முதலிய நிஷித்த செயல்களைச் செய்கிறார்களாகக் கொண்டு நிவர்த்திப்பிக்கிறபடி.

ஆழ்வாருடைய பரிணாமத்திலே கன்றும் இறைச்சியும் தாய பிரஸக்தியிலேசமுமில்லையே; இங்கனே அப்ரஸக்த பரிஹாரந்தான் பண்ணலாமோவென்னில்; கேண்மின்; திருவாய்மொழி பகவத்ஸம்பந்தமாயிருப்பதுபோலவே தத்ஸம்பந்தமுமாயிருக்கும். ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களைத் தெரிவிக்கின்றவத்தனையிலேயோக்கு; ஆசாரியாபசாரணத்திலே இவை பரிஹரணீயங்கள் என்னுமிடத்தை வற்புறுத்துகிறபடி.

இனி, ஸ்வரூபாநுரூபமான பரிஹாரக்ரமத்தைச் சொல்லுகின்றவை மேல்வருகிற. *தொலியினேமேலும் கன்மாச்சின்மேலும் சுடர்முடிமேலும் தாளினேமேலும் பூங்கத கண்ணக்முமாயுடையப்பானது திருவடிகளே ஸ்மரித்து "உன்சேவடி செவ்வி திருக்காப்பு" என்று பல்லாண்டு பாடுமளவேபோதும் என்கிறார். .... (ரு)

மருத்தாகுமென்று அக்கோர்மாயவலவைசொற்கொண்டு *
கருஞ்சோறும்மற்றைச்செஞ்சோறும் களனிழைத்தேன்பயன் *
ஒருங்காகவேயுலகேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட *
பெருந்தேவன்பேர்சொல்லகிற்கில் இவரைப்பெறுதிரே. (ச)

(அன்னையீர்!)	தாய்மார்களே!
மருத்து ஆகும் என்று	கேசரிக்குப் பரிஹாரமாகுமென்று சொல்லி
தூமையர் அலவை சொல் கொண்டு	வஞ்சகச் செய்கைகளையுடையரான தேவதாந்தரங்களுடைய வார்த்தைகளையுமிருக்கின்ற மூடரான பேச்சைக்கொண்டு
நீர்	நீங்கள்
கரு சோறும்	கருஞ்சோற்றையும்
மற்றை செம் சோறும்	மற்றுள்ள செஞ்சோற்றையும்
களன்	காத்சத்திமிலே
இழைத்த	இடுவதனால்
என் பயன்	என்ன பலனுண்டாம்? (இது மிகவும் கர்ஹ்யம்;)
உலகு ஏழும்	லோகங்களேழையும்
ஒருங்கு ஆக வே	ஒருகாலே
விழுங்கி	(பிரளயம் கொள்ளாதபடி) உட்கொண்டு
உமிழ்ந்திட்ட	பிறகு வெளிப்படுத்தின
பெருந்தேவன்	பரதேவதையான ஸ்ரீமந்நாராயணனுடைய
பேர்	திருநாமங்களே
சொல்ல இ(த்)தில்	(இவளது காதிலே படும்படி) சொல்லவல்லீர்களாகில்
இவரை பெறு(த்)தீர்	இவளை நிரவாமே பெறுவீர்கள்.

* * *—என்பெருமானுடைய திருநாமங்களே இப்பெண்பிள்ளை செவிப்படச் சொல்லுவதே இவ்நோய்க்குப் பரிஹாரமென்கிறாள். எக்காலுக்த நிரபணம் பண்ணுவதில் கண்டபடியே சொல்லுகிறவளுக்கு அலவையென்ற பேயர்; இக்கே கட்டுவிச்சியைக் குறிக்கின்ற சொல் இது. பரிஹாரமுறையை சொல்லவந்து தோன்றினபடியே பிதற்றுகின்ற இக்கட்டுவிச்சியின் சொல்லைக்கொண்டு கீழ்கள் கூறுத்தெய்வங்கள் வந்து கிட்டிப்பண்ணுமிடமான காற்சக்தி முதலான வற்றிலே செஞ்சோறு கருஞ்சோறுகளே யிடுவதனால் என்ன பயனுண்டு?

பின்னை என்செய்கேனுமென்னில்; ஆச்சிதர் அரசிதர் என்கிற வாசிபாரமில்லாதவர்களையும் பிரளயம் விழுங்காதபடி தான் விழுங்கி ரக்ஷித்து, பிரளயம் கழிந்தவாறே வெளிப்படுத்தின பரதேவதையின் திருநாமம் சொல்லவல்லீர்களாகில் இவள் உய்யப்பெறலாம்; வேறவலகையான காரியங்கள் செய்வது இவளை இழப்பதற்கே உறுப்பாமென்றவாறு. (4.)

இவரைப்பெறும்பரிசு இவ்வணங்காடுதலன்றுக்தோ! *
குவளைத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும் பயந்தனள் *
கவளக்கடாக்களிறட்டபிரான் திருநாமத்தால் *
தவளப்பொடிக்கொண்டு சீப்பிடுமின்தனியுமே. (ஞ.)

http://acharya.org

அன்னைமீர்	தாய்மார்களே!,
இவளை	இப்பெண்பிள்ளையை
பெறும்பரிசு	(நோய்தீர்த்து) நாம் பெறுதற் குரிய மார்க்கம்
இ அணல்கு ஆதல் அன்று	வெறியாற்றலாகிற இக்காரிய மன்று;
அந்தோ	ஐயோ!;
	(இப்பெண்பிள்ளை)
குவளை தடங் கண்ணும்	குவளை மலர்போன்றதாய் விசாலமான கண்களும்
கோவை செம் வாயும்	கோவைக்கனிபோன்று சிவந்த அதரமும்
பயக்கலன்	வைவர்ணியமடையப்பெற்றன;
	(இதற்குத்தகுந்த பரிஹாரமென்னவென்றால்)
கலவம்	மதகரமான மருக்குகளை கலைகொண்டதாய்
கடா	மதம்பெற்றதான
களிறு	(குவலயாபீடமென்னும்) யானையை
அட்ட	தொலைத்தருளின
பிரான்	ஸ்வாமியினுடைய
திருநாமத்தால்	திருநாமோச்சாரண பூர்வகமாக
தலவம் பொடி கொண்டு	பரிசுத்தமான (ஸ்ரீவைஷ்ணவ பாத) தூளியைக் கொண்டுவந்து
தீ இட்டிடுமின்	தீக்கள் (இவள்மேல்) தூவுங் கோல்
தலையும்	(இவளதுநோய்) தீரும்.

* * *—மகளுடைய நோய் தீரவேணுமென்று தீக்கள் பண்ணுகிற பரிஹாரம் கோலை இன்னமும் அதிகப்படுத்தா நின்றதேயன்றித் தீரச்செய்கின்றதில்லையே; ஆனபின்பு இந்த முறையைவிட்டு நோயின் ஸ்வரூபத்திற்கு யோக்யமான பரிஹாரமுறையை அனுஷ்டிக்கப் பாருங்களென்கிறாள்.

இந்த நல்லசாக்கை இழவசமாய் பெறுவேண்டியிருக்கிறீர்களாகில் இப்படி விபரீதமான செயல்களைச் செய்கிறீர்களோ? பெறுதற்கு நோதுவென்று நினைத்து தீக்கள் செய்கிற காரியம் இழத்தற்கன்றே நோதுவாகின்றது. வேலனைக்கொண்டு வெறியாடுவிக்கின்றவிது தினைப் பெறுதற்கு நோதுவாகுமோ? இவளது உயிர்மாய்வதற்கன்றே இது நோதல். அயலார் முன் இப்பெண்பிள்ளையை இழுத்துவிட்டுப் பார்க்கின்றீர்களே! அந்தோ! இப்படியும் ஒரு காரியம் செய்யலாமோ! என்கிற கிர்வேதம் முதலடியாக வாடிவெதும்பிருக்கின்றது.

உலகத்தில் ஒரு வியாதிக்கு ஒரு சிகித்சை செய்தால் அது உத்தமமாக இதுக்கு மாறுள் ஸ்மேண குணமன்றே காணப்படவேணும். குணம் காணப்படாததோடு தீர்க் குணமும் காணப்பட்டால் உடனே அந்த சிகித்ஸாக்ரமத்தை விட்டுத் தொலைக்கவன்றே அடிப்பது; இங்கு இவளுடைய நிலைமை கண்டீர்களா! குவளைமலர் போன்ற அழகியவாய கண்கள் விகாரப்பட்டனவே; கொவ்வைக்கனிபோன்ற பழுத்திருந்த அதரமும் நிறவேறு பாடுற்றதே! இன்னமே பயத்தலைக்கண்டுவைதலும் இப்பரிஹாரமுறையைத் தவிர்க்கின்றிலீர்களே பாவிகாள்! என்கிறாள் இரண்டாமடியால்.

இவ்விடத்தில் நாட்டு ஸ்ரீஸூக்திகள் காண்மின்;—"அவனுடைய வாய்புகு சோறன்றே பறியுண்கிறது; 'தொண்டையஞ் செல்கனிவாய் நுகர்த்தானே' என்றும் 'எனைநோக்கழுங் டான்' என்றும் இவையிறே அவனுக்கு வால்". இத்யாதி.

மாறன்பணித்த தமிழ்மறைக்கு மூலங்கூற அவதரித்த நிருமங்கையாழ்வார் இரண்டிடத்திலே இரண்டு பாசுரங்களருளிச்செய்தார்; "வண்டார் பூமாமலர்மங்கை மணாளன் கேசக முண்டானே!" என்றும் ஒரிடத்தில், பிரஸ்துதமான கடாசஷ வீக்ஷணத்தையே எம்பெருமான் உளவாகக் கொண்டிருக்கிறானென்பது இதனால் தெரிவிக்கப்பட்டது. "கன்னன் கொல்லில் "என்மகன் தன் தொண்டையஞ் செல்கனிவாய் நுகர்த்தானே" என்றார். இதனால் அதர ஸம்பந்தமே எம்பெருமான் உளவாகக் கொண்டவன் என்பது தெரிவிக்கப் பட்டது.

http://acharya.org

"பின்னைகோல் நிலமாமகள்கோல் திருமகள்கோல் பிறந்திட்டான்" என்கிறபடியே இப்பாசுரத்துக்கு காயகியும் பிராட்டியேயன்றே. இவளுடைய குலமேத்தடங்கண்ணும் கோவைச்செவ்வாயும் அறிந்தால் எம்பெருமானுடைய உயிர் மூட்டுப்பட்டதே! என்ன அன்பர்கள் துடிக்கவேண்டி மத்தனையே.

பயந்தனள்—வைலர்வினியபடையும்படியாகுள் என்றவாறு. பயப்பு—பிறவேதபாடு.

நாக்கள் செய்வது கோசை பரிஹாரமன்றுவில், நீ சொல்லிக்காண் என்று தாய்மார் தோழியைக்கேட்க, பின்னடிகளில் கோசை பரிஹாரமுறை பகரப்படுகின்றது.

தன்னைக் கொல்லுமாறு கம்ஸனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீட யானையை முடித்த கண்ணபிரானுடைய திருநாமங்களைச் சொல்லுங்கோள்; அல்லனவே போராது; ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஸ்ரீபாதரேணுவையும் கொண்டு ரக்ஷையிடுங்கோள்; உடனே கோய் நிறுமாறு காணுங்கோள் என்றபடி.

கூடாக்களிறு—மதயானை; கவளமென்ற யானையின் உணவுக்குப்பெயர். கவளமென்ற வடசொல்லிகாரம். நிலிகளையிட்டு மதமூட்டப்பட்ட யானை என்றபடி. கண்ணன் திருநாமத்தைச் சொன்னால் குவலயத்தடங்கண்ணனின் பாப்புத்தீரும்; தவளப்பொடிக்கொண்டு நிட்டால் கோவைச்செவ்வாயின் பயப்புத்தீரும் என்றதாகக் கொள்க.

கவளம் என்ற வடசொல் தவளமெனத்திரிந்தது. பரிசுத்தமானை என்றபடி. இங்கு இன்னபொடியென்று சொல்லிற்றிலேயாகிலும் ஸ்ரீவைஷ்ணவர்களின் திருவடித்தூள் என்னும் பொருளே சூழ்வார்க்கு விளங்குதலென்னுமிடம் மேற்பாட்டில் "மாயன்தமரடிநீறு கொண்டு" என்றதனாலும் அநுஸந்தித்தக்கது. திருமங்கையாழ்வாரும் சிறிய திருமடலில் "சோச் செழும்புழுதிக்காப்பிட்டு" என்றருளிச்செய்தார். புழுதியென்பது தொடுப்புழுதி; செழும்புழுதியென்பது எம்பெருமானை யே திருவடிப்பொடி; சோச்செழும்புழுதியென்பது பாகவதர்களின் திருவடிப்பொடி.

இனி, "தெய்வத்தண்ணந்துழாய்த்தராயினும் நறையாயினும் நல் கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்றமண்ணையினுங்கொண்டு விளமினே" என்கிற திருவிருத்தப் பாசுரத்தின் படி திருத்துழாய் மண்பொடியைக் கூறினதாகவுங் கொள்வர் சிலர். .... (இ)

நணியும்பொழுதில்லை நாணங்காடுநிரன்னெடீர்!*
பிணியுமொழிகின்றதில்லை பெருகுமிதுவல்லால் *
மணியினணிநிறமாயன் தமரடிநீறுகொண்டு *
அணியமுயலில் மற்றிலங்கணஞ்சிவ்வணங்குக்கே. (ஈ)

அன்னைமீர்	தாய்மார்களே!
நணியும்பொழுது இல்லை	சிறிதும் ஒய்வு இல்லாமல்
நீர் அனங்கு ஆடுகின்றீர்கள்	நீங்கள் வெறியாடுதலைச் செய்கின்றீர்கள்; (இவ்வெறியாட்டினால்)
பிணியும் ஒழிகின்றதில்லை	நோயோ நீங்கின்றதில்லை;
நீத அல்லால்	கோய்தீராத மாத்திரமே அன்றிக்கே
பெருகும்	மேன்மேலும் வ்ருத்தியுமடைந்து வருகின்றது;
இதனைக்குக் மணியில் அணி நிறம்	இப்பெண்பிள்ளைக்கு நீலமணிபோற்காட்டிலும் அழகிய நிறம்படைத்த
மாயன் தமர்	எம்பெருமானுடைய பக்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்களினுடைய
அடி நீறு கொண்டு	பாததூளியைக்கொண்டு வந்து
அணிய முயலில்	இவ்வதற்கு முயற்சி செய்தால்
மற்று இல்லை கண்டீர்	(இதோடொத்த பரிஹாரம்) வேறெதவுமில்லைகாண்.

http://acharya.org

* * *—இப்பாட்டில் "தவளப்பொடிக்கொண்டு தீர்ட்டிடுமின்தணிமினே" என்ன கூறின தோழியை நோக்கித் தாய்மார் "நீ சொல்லுகிறபொடி இன்னதென்று தெரியவில்லையே!; விளக்கச்சொன்னால் கவர்" என்ன; அதுவே விளக்கவுரைக்கின்றபடிப்பாட்டில்.

அன்றோ! சிறுபின்னைகள்போலே நீங்கள் செய்கின்றீர்களே!; (அதாவது) எதாவது தொரு காரியத்தைச் சிறுபின்னைகள் செய்யாகின்றபடி அதில் தகுதியின்மை கண்டு பெரியார் மறுத்தால், அப்பின்னைகள் அக்காரியத்தையே மேன்மேலும் பிடிவாதமாய் வலிக்து செய்வது போருவது வழக்கம். அப்படியே நீங்களும் கண் மறுப்பதே தேறுவாகப் பிடிவாதங் கொண்டு வெறியாட்டத்தன்னையே விடாது செய்கின்றீர்களே!; இதனால் பினி ஒழியாத தோடு பெருகிச்செல்லுமிக்காலை இன்றேபோல் என்றிருள் மூன்னடிகளில்.

நீலமணிவண்ணனை என்பெருமானை வாடிவழுவிலீடுபாடு கொண்ட பரம பாகவதர்களின் ஸ்ரீபாததூளியைக்கொண்டுவந்து....என்ற இவள் சொல்லத் தொடங்கும் போதே தாய்மார்கள் 'இவ்வகும் பெரும்பொருள் மைக்குவிடைக்க வழி எதுவும் இலையும் துர்லபமான வஸ்துவைச் சொல்லுகின்றாளே, இது லம்பாதிப்பது கஷ்டமாயிற்றே!' என்ன சொல்ல; அன்னைமீர்! மாயன்தமடி. தேறுதல்மேல் கொண்டுவரவேண்டா; 'அதைக்கொண்டு வரவேணும்; இவளுக்கு அதையிடவேணும்' என்ற மனோரதித்தாலும் போதும்; அவ்வளவிலேயே நோய் தீர்ந்ததாகும், பாருங்கோள் என்கிறாள்.

மனோரதமாத்திரமே பலன் அளிக்கவல்லதோ? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக கட்டில் "ஞானசக்தியஸ்வரூபாய நம: பூதிசக்தியஸ்வரூபாய நம:—ஆநந்தசக்தியாய நம: ப்ராதிகேவல்யாய நம:" என்கிற சுலோகத்தை மேற்கத்துக்காட்டித் தெளிவு பிறப்பிக்கப் பட்டது. இது, ப்ரபத்தியில் அங்கங்களைக் காட்டுகிறவொரு பாஞ்சராத்ரப்ரமாணம். இதில் ஆநந்தசக்தியத்தைப் பற்றின எண்ணம் போதுமென்றும், ப்ராதிகேவல்யத்திலோ வென்னில், அதை விடுவோமென்கிற எண்ணம் போராது, விட்டே தீரவேணும் என்றுஞ் சொல்லிற்று. இதுபோலவே இங்கு மாயன்தமடி தேறுகொண்டு தரவேணுமென்கிற முயற்சியளவே போதுமென்றும், பரிஹாரமாகச் செய்துபோருகிற விஷயங்களை விடுவோமென்ற எண்ணினால் மாத்திரம் போராது, எடுத்து விட்டே தீரவேணுமென்றும் தெரிவித்தவாறு.

இங்கே ஸ்ரீவைஷ்ணவ பாததூளியின் ப்ரபாவமாகக் ஒரு ஐதிஹ்யமநுஸந்திக்கத்தகும். அகளங்க காட்டாழ்வான் இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களோடே தீர்டத்திற்குச் செல்லுகையில் வழியிடையே ஒரு மஹாக்கோயில் தென்பட்டது; அப்போது இராக்காலமாய் விருந்தது. அக்கோயில்வாசலில் சில்பப்பதுமை விருப்பதைக்காட்டி அவ்வாழ்வான் 'பகவத்விஷயீ நேயிருங்கள்' என்று வேடிக்கையாகச்சொல்ல, அவர்களும் மெய்யென்றேயெண்ணி சேவித்த பிறகு இது மஹாக்கோயில் என்றறிந்தவரோ மோஹித்து விழுந்தார்களாம்: அப்போது அருகேயிருந்த பின்னழகியப்பிள்ளையென்பவர் தம்முடைய ஸ்ரீபாததூளியை அவர்களுக்கு இட, மோஹம் தெளிந்து எழுந்தார்களாம். .... (கு)

அணங்குக்கருமருந்தென்று அம்கோதைமென்முலைமேல் *
கணங்கையெறிந்து நும்தோள்குலைக்கப்படுமென்னைமீர் *
கணங்கள்கோடிச் சுழலைபுடைட்டம்கண்டென்பயன்? *
வணங்கீர்கள்மாயப்பிரான்தமர் வேதம்வல்லவரையே. (எ)

http://acharya.org

அணக்குக்கு அரு மருத்த என்று } இப்பெண்ணின்நல்லாக்கு அருமையான மருத்தென்று சொல்லி

அங்கு ஓர் ஆயம் கள்ளும் பராய் } தேவதாந்தரத்திற்கு ஆடமுக்கவும் கள் நிவேதனம்செய்யவும் பரிந்து

சுணக்கை எறிந்து } ஒருவகைக் கூத்தாடுதலையும் செய்வித்துக் கொண்டு

தம் தோள் குலிக்க படும் அன்னீர்! } தோள்கள் குலுக்கக் கண்டும் பட்டுக்கொண்டிருக்கின்ற தாய்மார்களே!

(இக்கூத்தாடுதலைக் கண்டு கொண்டிருப்பதும் ஒரு வேடிக்கையோ?)

உணக்கல்கெட } உலர்த்தினால் கெட்டுப்போக

கழுதை உதை ஆட்டம் கண்டு என் பயன் } (அதனை மேய்கிற) கழுதையின் உதை அகப்படுகின்ற அழகைக் கண்டு கொண்டிருப்பதனால் ஒரு பயனுண்டோ?

மாயன் மாள் } ஆச்சரிய சக்தியையுடையனான எம்பெருமானுடைய

தமர் } பக்தர்களான

வேதம் வல்லார்—வைதிகர்களே

வணங்கீரே வணங்குங்கள்.

• • •—இவளது நோய்க்குப் பரிஹாரமாக தேவதாந்தர பஜனம் பண்ணிலும் இவளுக்கு இழிவேயாம். இவள் பிழைக்கவேணுமென்றிருந்தீர்களாகில் ஸ்ரீவைஷ்ணவர்களைப் பணிவதே பாங்கு என்கிறாள். ஆடு அழைக்கையும் மது நிவேதனம் பண்ணையும் பரிக்கின்ற பரிஹாரமுறையை வாய்விட்டு நிந்திக்கின்றாள்.

பராய் என்றது பராவியென்றபடி. பராவுதலாவது பரிந்தன். ஒன்பதினாயிரப்படி, இருபத்தினாலாயிரப்படி, மூப்பத்தாறாயிரப்படி, பன்னீராயிரப்படி ஆகிய நான்கு வியாக்கியானங்களிலும் இவ்விடத்தில் ஏகரூபமாகவே ஒரு அச்சுப்பிழை புகுந்துள்ளது; அதாவது, "பராவி—பரிந்து" என்றிருக்கவேண்டுவது 'ப்ரார்த்தித்து' என்றே விழுந்திட்டது. இங்கு அதுவன்ற பொருள்; நிருத்திக்கொள்க.

இரண்டாமடியில் "சுணக்கை—எறிந்து" என்றும் "சுணர்—கையெறிந்து" என்றும் கொண்டு பொருள் கூறுவர். சுணக்கையென்பது சுணங்கைக்கூத்தைச் சொல்லுபடி: அதாவது கையைத்தட்டி ஆடுவதொருகூத்து; தேவதாந்தரமாராதனமாகச்செய்யும் செய்கைகளிலே இக்கூத்தாட்டமும் ஒன்றாகக்கொள்ளத்தக்கது. "துணங்கை யென்ற பாடமாய் துணங்கையென்ற கூத்தாகையாம்" என்பர் பன்னீராயிரவுரைகாரர். சுணம், கையெறிந்து என்ற இரண்டு மளவில், சுர்ணமென்னும் வடசொல் சுண்ணமென்றாகி, அது சுணம் என்று தொக்கிடப்பதாகக்கொண்டு மஞ்சட்பொடி என்று பொருள்கொள்க. மஞ்சள்பொடியை ஒருவர்மேலே ஒருவரெறிந்து ஆடுவதென்பர். நும்தோள் குலிக்கப்படும் அன்னீர்!=வெறியாடுகிற காலத்தில் தோள்கள் துடைத்தாடப்படுவதுண்டே, அதாகக்கூறியவாறு. அன்னையருடைய தோள்களுக்கு ஒரு வியாபாரமாயிற்றே; அப்படியிருக்க "நும்தோள் குலிக்க" என்று சொல்லிற்று மன்னெனவில்; ப்ரயோஜ்யகர்த்தாக்களிடம் காணப்படும் செயலை ப்ரயோஜக கர்த்தாக்களிடம் ஏறிட்டுச் சொல்லுவதுண்டாதலால் அந்த முறையிற் சொன்னபடி.

இவ்விடத்தில் கட்டு ஸ்ரீவைகிதாஸ்வாமி:—"பகவத் விஷயத்தில் பண்ணின அஞ்ஞானமாத்ரமும் சாண்யன் சேஷையாலே பிறை என்றிருக்கக்கடவ சீலர்கள் படும் எளிவரவேயிது." என்பதாம். ஆயாஸரூபமான காரியங்களைச் செய்யப்பொறுத பகவத்விஷயத்திலே வாளாபண்ணிப்போருகின்ற நீங்கள் இப்படிப்பட்ட ஆபாசகருமங்களை ஏறிட்டுக்கொள்வதே! என்று வைதிக்கிறபடி.

தோழி இங்ஙனே சொல்லச் செய்தேயும், வெறியாடுகிறவளது ஒருவேடிக்கையான காரியமாக இருப்பதனால் தாய்மார்கள் அதைப்பார்த்து ஆநிசயப்பட்டுக்கொண்டிருக்க,

http://acharya.org

அந்தோ! இதென்ன வேடிக்கைபார்த்தல்; கம்முடைய சாக்கு கஷ்டமாகிறபடியை அறிந்து கொள்ளாமல் இங்ஙனே வேடிக்கை பார்த்திருப்பது நகுநிலோ என்ன கேஷிக்க நினைத்த தோழி ஒரு லோகோக்தியை எடுத்துக்காட்டுகின்றாள். [உணங்கல் கெடக் கழுதையுதட்டம் கண்டு என்பயன்?] தெருவிலே உலர்த்தப்படுகிற நெல்முதலானவை உணங்கல் எனப்படும்: அதைக் கழுதை மேய்ந்து விடுவது உண்டு; அது சமயம்போது உதடு அசைகிற அநிசயமானது வேடிக்கைபார்க்கிறவர்களுக்கு விருப்பிக் காலத்தக்கதாகவே இருக்கும் (ஆனாலும் நெல் கஷ்டமாவதைக்கண்டு அக்கழுதையை அடித்துத்துரத்தவேண்டியதாயிருக்க, அது செய்யாதே உதடாடுகிற அநிசயத்தைக் கண்டுகொண்டிருப்போமென்று பார்த்துக்கொண்டிருக்கிறார்களாகில் அன்னவருடைய விவேகத்தை என் சொல்லுகிறோம்! அவ்வண்ணமாகவன்றே உங்களுடைய அவிவேகமிருப்பது என்றவாறு.

இங்கே நடை—"ஜீவகோடிகளான விரோதிகளை நினைத்துப்போம்படிக்கிடக்க அத்தைத் தின்கிற கழுதையினுடைய உதட்டின் விபாபாரம் கண்டிருந்தால் என்ன ப்ரயோஜனமுண்டு? அப்படியே, இவர்களைக்கொண்டு ஜீவிக்கவிருக்கிற நீங்கள் இவர் விரோதத்தை மறப்பிப்பதான தேவதாந்தரஸம்பந்தமுடையார் விபாபாரம் கண்டிருக்கிறபோதில் என்ன ப்ரயோஜனமுண்டு? ப்ரயோஜனமில்லாவிடுகையன்றே, விரோதமாயிற்று மறப்பது!" என்பதாம்.

ஜயன் திருக்குருகைப் பெருமானரையர் என்கிற வொருவ்வாமி மற்றொருவகையாகவும் மூன்றுமடியை நிர்வஹிப்பராம்; அதாவது. உணங்கல் கெட=இப்பெண்பிள்ளையினுடைய இளைப்பு நிருவதற்காக, கழுதை=பேயினுடைய, உதடாட்டம் கண்டு என்பயன்? = நீங்கள் ஆடுங்கள்நும் பாரித்துக்கொடுக்க அத்தை அது விரோதம் கொள்ளும்போது அதனுடைய உதடு ஆடுமே; அதைக்கண்டு கொண்டிருப்பதனால் என்ன பயனுண்டு? என்பதாம். கழுதை என்பது பேய்க்குப் பெயர். "காலார் மருதும் காய்பினைத்தலைதும்" என்றும் "வருந்தப்பல வாய்க் கழுதுக்கு இரங்காது" என்றும் இருபாலையாழ்வாரும் ப்ரயோகித்தருளினர். கழுதை என்றது கழுதினுடைய என்றபடி. மேலில் ஆசாரிக்கிற தேவதாந்தரத்தை நிஷேதிக்கும் கருத்தை இச்சொல்லாலபடி.

அடைவுபடச் செய்யவேண்டிய பரிஹாரமுறைமையை உணர்த்துவது சுற்றும்: வேதம் வல்லவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களே வணங்குவதே இதற்குப்பரிஹாரமென்று உணர்த்தியபடி. "வெடிதழு வரவெஃகுரல் வேழ" —மைகலவேதங்களுக்கும் பொருள் தானே என்று சேதனரில் அவன்தானே உருவிச்செய்தபடியும், "வருந்தா அமரா நந்நகுவேதா" என்று உபரிதத்துதானே நிலைபடியும் இதர தெய்வங்களுக்குத் தனித்து ஒரு சக்திவிசேஷமென்னும், "இறக்குமிறையிறத்துய்யை-எல்லாவுலகுக்குந்தன் மூர்த்தி, நிறத்தினன் தெய்வங்களாக அத் தெய்வசாயகன்தானே" என்கிறபடியே ஸ்ரீமந்நாராயணனே இவற்றுக்கு உரிமையென்றும் உணர்த்த பரமைகாந்திகளே வணங்குவர்களென்றதாயிற்று. ... . (31)

வேதம்வல்லார்கணக்கோண்டு விண்ணோர்பெருமான்திருப் பாதம்பணிக்கு * இவள்கோயிது தீர்த்துக்கொள்ளாதுபோய் *
ஏதம்பறைக்கல்லசெய்து கள்ளுடகலாய்ந்தும் *
தீதமுழலிட்டு நீரணங்காடுதல் தீர்மையே. (32)

(அன்னோரீர்) வேதம்வல்லார் கணக்கொண்டு — கையார்களேல் வைதிகர்களான ஸ்ரீவைஷ்ணவர் கணம் புருஷகாரமாகக் கொண்டு | விண்ணோர் பெருமான் திருபாதம் பணிக்கு — நித்ய ஸம்ஸாரதரனை எம்பெருமானுடைய திருவடிகளே ஆச்ரயிக்க

ந. மு—22.

http://acharya.org

நீலவன் நோய் இது	இவனுடைய இந்த நோயை	வாடி	மெலிவடைந்து
நீத்துக்கொள் ளாதபோய்	போக்கிக்கொள்ளாமல்	கண் கலையாய் தாய்—கள்நீர் கலந்த நூலி	
ஏதம் பறைந்து	நிழிலாவை பேச்சுகளைப்பேசி	நோம் முழுவு இட்டு	வாய்ய கோஷங்களைப் பண்ணி
அல்ல செய்து	ஸ்வரூபத்திற்குத் தகாத காரியங் களைச் செய்து	நீ அணைக்கு நாதேல்	நீயும் வெறியாடுமிடத்தின்றலித
		நிற்கையே	(இக்குடிக்கு) அவத்யமேயாம்.

* * *—வேதவித்துக்களான ஸ்ரீ வைஷ்ணவர்களைப் புருஷகாரமாகக்கொண்டு எம் பெருமான் திருவடிகளைப் பணிந்து இவனுடைய நோயைத்தீர்த்துக்கொள்ளாதே அற்ப தெய்வங்களைப்பணிதல் உசிதமன்றென்கிறாள்.

இதில் முதலடியில், நிறுத்த சாஸ்த்ரார்த்தமொன்று வெளியிடப்படுகிறது; யானையின் மீது ஏறினும்புமவர்கள் யானைப்பாகனுடைய அநுமதி கொண்டு புகவேண்டுமாபோலே ஸ்ரீவைஷ்ணவர்களைப் புரஸ்கரித்துக்கொண்டே ஸ்ரீமந்நாராயணனைப்பணிதல் வேண்டுமென்பது ஸித்தம்ப்ரதாயம். *வரவிஷ: கூடஸ்யைவ ஸ்ரீவைஷ்ணவஸ்ய ஸ்ரீமந்நாராயண தத்வஹிதாத்மஜ்ஞாந ஸம்பாவநாயாம்: கூரத்தாழ்வான் புண்டரீகாக்ஷ புண்யகோடி விமாநாரோஹணத்தை முக்தனை தன்மாத் ஆசார்யவாக்யவேத்." என்கிற ப்ரமாணமும், இதை யடிபொற்றி கடாதாம்மாளருளிச்செய்த "வந்தாழ்வினைவாழ்வை நெஞ்சமே வாழ்வாய் ஸ்ரீமந் நாராயணனை—ஸ்ரீவைஷ்ணவனை—ஸ்ரீமந்நாராயணனைப் பணிவிப்பாரை முந்துறாத் தொழுமின்" என்பதும் இங்கே அறியத்தக்கன. இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தில் இவ்வர்த்தம் அதிஸ்பஷ்டமாக சேவிக்கப்பட்டது: ஸ்ரீ விபீஷணாழ்வான் ஸ்ரீராமஸந்நிதானத்திலே புகும்போது அப்பெருமானுடைய வாத்ஸல்ய ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களைத்தான் நன்கு அறிந்தவனுகையாலே நேரே அவன் திருவடிகளிலேயே வந்து விழுவானாயிருக்கும் அங்ஙனம் செய்யாதே * ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே. நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்" என்று வானர முதலிகளைப் பணித்து அவன்டதெல்லாம் இந்த சாஸ்த்ரார்த்த முறையைப் பின்பற்றியேயாம். ஸ்ரீமந்நாராயணனும் திருவடியை [மாருதியை] முன்னிட்டே பெருமானைப்பற்றினர்.

கீழ்ப்பாட்டில் "வணங்கீர்கள் மானிடர்தான் தாம்வேதம் வல்லரையே" என்று ஸ்ரீ வைஷ்ணவர்களையே உத்தேச்யராகக்கொண்டுபடி சொல்லியவத்து, இப்பாட்டில் அந்த ஸ்ரீ வைஷ்ணவர்களை த்வாராகக்கொண்டு பகவதாச்ரயணம் பண்ணுமாபோலே சொல்லுவானேன்? என்னில்; சில்லு கப்பலேயே அருளிச்செய்யும்படி: ஸ்ரீவைஷ்ணவர்களே ஆச்ரயணீயர்; அவர் களுக்கு மேற்பட எம்பெருமானளவிலே சென்று ஆச்ரயிக்கவேண்டியதில்லைதான்; ஆனாலும் ஸம்ஸாரிகளிடத்திலே ருசிபிறந்தவர்களுக்கு உண்டாவது அரிதாகையாலே அவர்களைப் பரம சேதனராகக்கொள்ள இசைவு உண்டாகா தொழியினும் அவர்களைப் புருஷகாரமாக வாகிலும் கொள்ளப்பாருங்கோவென்ற சொல்லுகிறதென்க.

இவள்நோய் இது = இவள் என்றது பகவத் விஷயமான நோய் தவிர மற்றொரு நோய் வந்துபுகு ப்ரஸக்தியற்றவள் என்ற காட்டினபடி. நோய் இது என்றது—" வானோர் தலை மகனும் சோவினை தெய்வங்களோர் நிகர் என்றபடி.

ஏதம் பறைந்து = வெளியாடுகிற வேலன் வாயாற்சொல்லுகிற வார்த்தைகளெல்லாம் அநாதரிக்கவும் கணக்கணைகையாலே ஏதமென்ற பொதுவிலே சொன்னபடி. அவள் செய்

http://acharya.org

ஜிற காரியங்களும் அப்படியே மிகவும் ஆபாசங்களாகையாலே அல்லசெய்து எனப்பட்டது; ஸ்வரூபாநு ரூபமல்லாதவற்றைச் செய்து என்றபடி. அதை விவரிக்கிறது—கள் ஊடு கலாய்த் தூய் என்றும் கீதமூறிவிட்டு அணங்காதேல் என்றும்.

திருநெடுந்தாண்டகங்களில் கலந்து தானே, பொல்லாத பாட்டோடுங்கூடின வாத்யங்களை ப்ரவர்த்திப்பித்து நீங்கள் தைவாலேசத்தாலே ஆடுகிறபிரான் இக்குடிக்கே இழுக்கு என்று தாயிற்று. .... (கூ)

கீழ்மையிலுலங்கோர் கீழ்மகவிட்டமுழவின்கீழ் *
காழ்மைபலசொல்லி கீரணங்காடும்போய்காண்கிலேன் *
எழ்மைப்பிறப்புக்கும்சேமம் இக்கோய்க்குமீதேமருந்து *
ஊழ்மையில் கண்ணபிரான் கழல்வாழ்த்துமினுன்னித்தே. (கூ)

(அன்னைமீர்)	தாய்மார்களே!	ஊழ்மையில்	முறைப்படியே
கீழ்மையிலுலங்கோர் கீழ்மகவிட்டமுழவின் கீழ் பல காழ்மை சொல்லி கீரணங்காடும் போய் காண்கிலேன்	உங்கள் சீலத்தனத்திலுள்ள சிசுபால சண்டாளனென்பவன் கடந்திப்போரும் வாத்ய கோஷத்தின் சாக்காக தப்பு வார்த்தைகள் பலவற்றை யுஞ் சொல்லி நீங்கள் வெறியோடுகின்ற யுத்த வம்புவேலையை காண் கண்கொண்டு காணமாட்டேன்;	கண்ணபிரான்	க்ருஷ்ணபகவானுடைய
		கழல்	இருவடிகளை
		உன்னித்து	சிந்தித்து
		வாழ்த்துமின்	மங்களாசாஸனம் பண்ணுங்கள்;
		ஈதே	இந்த மங்களாசாஸனமே
		எழ்மை பிறப்புக்கும்	ஏழேழ் பிறவிக்கும்
		சேமம்	க்ஷேமகரம்;
		இக்கோய்க்கும்	இந்த நோய் பிறவிகளுக்கும்
		ஈதே மருந்து	இதுதான் மருந்து.

(இவையாகச் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால்)

* * *—நீங்கள் அவனுக்கையை சாய் கண்கொண்டு காணமாட்டேன்; இவள் வேழுக்கவேறுமென்றிருக்கிறவளிடை கண்ணபிரானுடைய நெடியதனே நினைத்துவாழ்த்துங் கோள் என்கிறான். ஒரு சண்டாளன் மிகச் சாத்யம் முழங்குவதாம்; அவ்விடத்தைச் சுற்றிப் பலர் இருந்துகொண்டு தேவதாந்தரங்களின் மேலே சில கட்டுக்கதைகளைச் சொல்லிப் பாடுவதாம்; இதனிடையே வேலன் தலை விரித்தாடுவதாம்; ஆகவிப்படி நீங்கள் செய்து போருகிற தப்புக்காரியங்களை என் கண்ணால் பார்க்க மாட்டுகின்றிலேன் என்கிறாள் முன்னடிகளில்.

ஸ்ரோகுணத்திற்கும் தமோகுணத்திற்கும் வசப்பட்டிருக்குந்தன்மையை இங்குக் கீழ்மை என்கிறது. காழ்மைபல சொல்லுவதாவது—அவற்றுக்கு இல்லாத வற்றல்கள் பலவும் சொல்லுகை. காழ்—அவத்யம்.

இப்படிநாநாமுறைகளிலே தமிர்த்து கண்ணபிரானது கழல்வாழ்த்துகையே எல்லைக்கு மேற்பட்டிருக்கும் கண்மைபயக்கு மென்கிறது பின்னடிகளில். எழ்பிறப்பென்றது—காலமுள்ளதனையும் என்றபடி. சேமம்—க்ஷேமகரம். ஊழ்மையின்—முறைப்படியே என்றபடி.

இக்கோய்க்குமீதே மருந்து என்பதற்குமுன்னே கட்டில் 'சம்பறுத்து ஆர்க்கைக்குப் போக வேணுமோ?" என்றொருவாக்கியம் காண்கிறது. இதன் பொருளாவது—கெல்முதலிய அறத்தால் அதை ஒரு கட்டாகக்கட்டுவதற்குக் கயிறு தேடப்போகவேணும்; சாப்பு அறத்தால் அதைக்கொண்டே அதைக் கட்டலாமாகையாலே வேறொரு கயிறு தேடப்போகவேண்டாதிறே; அதுபோல இங்குக் கண்ணபிரான் கழல்வாழ்த்துவது தனிவேறொருமருந்து

http://acharya.org

தேடப்போகவேண்டாவென்கை. "சம்பந்தத்தைச் சூர்க்கைக்குப்போகவேணுமோ?" என்னும் பாடாந்தரம் காண்கிறது. பொருள் ஒன்றே. சூர்க்கைக்கு—கட்டுவதற்கு. போக வேணுமோ—கழிய தேடப்போகவேணுமோ?. .... (கூ)

உன்னித்துமற்றொருதெய்வம்தொழாள் அவனையல்லால் *
நும்மிச்சைசொல்லி நும்தோள்சுலிக்கப்படுமென்னைகீர்! *
மன்னப்படுமறைவாணனே வண்துவராபதி
மன்னனே * எத்துயின் எத்துதலும்தொழுதாடுமே. (ஙி)

அவனை அல்லால்	எம்பெருமானைத் தவிர்த்த
மற்று ஒரு தெய்வம்	வேறொரு தெய்வத்தை
உன்னித்து தொழாள்	ஒரு வஸ்துவாக நினைத்து (இப்பெண்பிள்ளை) தொழுவது இடையாது;
நும் இச்சை சொல்லி	(இப்படியிருக்க) உங்களுடைய மனம் போனபடியே (தான் அநுவதம் செய்யவும் தகாத சொற்களைச்) சொல்லி
நும்	உங்களுடைய
தோள் சுலிக்கப்படும் அன்னீர்மீர்	தோள் அசையத்தின்ற தாய்மார்களே!
மன்னப்படும் மறைவாணனே	நித்யமாக விளங்குகின்ற வேதங்களினால் பரவி பாதிக்கப்படுபவனும்
வண் துவரா பதி மன்னனே	அழகிய துவாரகாபுரிக்கு அதிபதியுமான எம்பெருமானே
எத்துமின் எத்துதலும்	தரியுங்கோள்; தரித்தவுடனே
தொழுது ஆடும்	(இப்பெண்பிள்ளை உயிர்த்திபெற்று, அவனைத்) தொழுது களித்துக் கூத்தாடுவாள்.

** "—இப்பாசுரத்தை காயகிக்குக் கண்ணபிரான் பக்கலிலுள்ள அன்புகடந்த ப்ரேமவ்யத்தையறிந்து நீங்கள் அதற்குத் தகுதியாக ஊடிக்கொள்வதே யுக்தமென்கிறாள் தோழி.

"இவ்வுக்கு இன்ன பரிஹாரமென்றில்லையோ? அதை அறிந்து பரிஹரிக்க வேண்டாவோ? முழுக்கால் தகர, மூக்கிலே ரசத்திலே கட்டுமாபோலேயன்றே நீங்கள் பண்ணுகிற பரிஹாரம்." என்பது வர்த்தமானம். ஒருவனுக்கு முழுக்காலிலே காயம்பட்டால் முழுக்காலிலேயன்றே சிகித்ஸை செய்யவேண்டுவது; அதைவிட்டு, முழுக்கால் பாதையில் நின்றும் இக்காக மூக்கிலே சிகித்ஸை செய்வதுண்டோ? இது ரோகத்திற்குத்தகுந்த பரிஹாரமாகுமோ? என்கை.

"கஸ்தூரிதிலக" என்கிற ஸ்லோகத்தில் முகம் முதலான அவயவங்களுக்கு—அங்கிரோகே முகம் பர்யந்தம் வர்ணம் சித்தமாயிருக்கும் தசையில்." என்றொரு ஸ்லோகமுண்டு: கண்ணில் ரோகமுண்டானால் காதையறுத்து ப்ருஷ்டபாகத்தில் குத்தப்போடவேண்டியதென்று இதன்பொருள். மிருக சிகித்ஸை கூறுமிடத்திலே உள்ளதான இந்த ஸ்லோகத்தை ஒருவன் கண்டு இந்த சிகித்ஸையைக் கண்ரோகியான வொரு மனிதனுக்குச் செய்தானும். அதுபோலவன்றே இவர்கள் செய்து போருகிற பரிஹாரமுறையிருப்பது என்ன எளிதாயிருப்பது.

அவனையல்லால் மற்றொரு தெய்வம் உன்னித்துத் தொழாள்—இப்பெண்பிள்ளை ஒரு காலத்திலும் தேவதாந்தரம் பரவாம் பண்ணிவைக்கமாட்டாள். உன்னித்து என்றது தன்னெஞ்சாலே நினைத்து என்றபடி; ஒரு பொருளாகக் கொண்டு தொழாள் என்கை. "நிறைதொழும் பருவத்திலும் நிறைதொழுதறியாள்" என்பர் கர்மேலே. அம்புலிப் பருவத்தில் நிறை தொழுவது மனிசர் பாவர்க்கும் இயல்பாகையாலே; அதுதானும் இவட்கு நிகழ்ந்தறியாமே யென்கிறதிது மிக்க பொருத்தமானது. "முனியோ முழுமூர்த்தம் போன்றில மோய்பூங்குழல் குறிய கனியோவமரரில்லை காவோ குழுனும், சுடர் மண்ணெல்லாம் விழியோ வெளாரினிருள்

http://acharya.org

கண் இவள்பாலே! பெருமான் மனையோ நிருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே." என்ற நிருவிருத்தமும் இங்கு நினைக்கத்தக்கது. "அரியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து" என்றும்படியிருக்கிற ஆழ்வார்க்கு தேவதாந்தரப்பரம் ஒரு காலத்திலும் புகுவதற்கு ப்ரஸக்தியில்லையே.

நும் இச்சை சொல்லி = உங்கள் மனம் போனபடியே இவற்றைச் சொல்லி என்ற படி. நீங்கள் சொல்லுகிற சொற்கள் இவருடைய தன்மைக்குச் சிறிதும் சேராது; தோற்றினபடி எதேனும் சொல்லிப் போருகிற உங்கள் தன்மைக்குச் சேருமத்தனை யென்ற காட்டினபடி.. [நும் தோள் குலைக்கப்படும் அன்னீர்!] "தோன் அவனையல்லால் தொழா" என்கிற குடிவிலேறேற்ற வைத்த உங்களுடைய தோளுக்கு இப்படியும் ஒரு தர்க்கநிலை உண்டாவதே! என்ற பொடிகிறபடி.. தோள் குலைத்தலென்று கீழான ஆசாரத்தைச் சொன்னவாறு; தொழுகையைச் சொல்லிற்றாகுமாகில், குலைதலாவது கிடைகெடுதல். தேவதாந்தர விஷயத்தில் பண்ணுகிற கைங்கர்யாகாரமாகையாலே தோள்கிடை கெடுதலாகக் கூறுகிறபடி. ஆகையாலே தோள் அசைத்தலைச் சொல்லுவதாகக் கொள்ளுதல் ஏற்கும்.

ஒருங்குபடச் செய்யவேண்டிய பரதர முறையை உணர்த்துவன மின்னிடைகள். வேதாந்த விழுப்பொருளான வண்துவராபதி மன்னனுடைய நிருநாமத்தைச் சொல்லி யேத்துதல் செய்யலே இக்கோப் நிருமென்முளாயிற்று. எத்தனலும்—எத்திலையுடனே, தொழுது ஆடும்—இப்பெண்பிள்ளை உற்றிலனம் பெற்றவிடவள் என்றபடி. ஆடும் என்பதை எவற்பன்மை யினைமுற்றுகக் கொண்டு, நீங்கள் தொழுதாடுங்கோள் என்றதாகவுரைக்கலாம். சென்றால் நினையினில் "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில், செல்லாகும் செய்யுமென் முற்றே" என்ற நிறப்பு விதிக்கு மாறாக ஆடும் என்ற செய்யுமென் முற்றுக்கு முன்னிலைப் பொருள் கொள்ளலாமோ வென்னில், இதனைப் புதியனபுகுதலாகக் கொள்க. "நீர் உண்ணும் எனை முன்னிலையிற் பன்மை யேலலாம் வருதல் புருஷியனை புகுதல்" என்ற வள்ளலாரைகாரர்களும் சொல்லினவைத்தார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்ற வள்ளற் ருத்திரமும் காண்க.

நாலடி என்னும் வடசொல் துவராபதி யென்று நிரித்தது. தமிழ்த்தலைவனாகக் கொண்டாடப்படும் ஸ்ரீகிருஷ்ணன்முன் வாழ்ந்திருந்த இப்பாகரம் மிக்க நிறப்புப் பெற்றவரூர். (ய)

தொழுதாடித்நாமணிவண்ணனுக்கு ஆட்செய்துகோய்தீர்ந்த *
வழுவாததொல்புகழ் வண்குருகூர்ச்சடகோபன் * சொல்
வழுவாதவாயிரத்துள் இவைபத்துவெறிகளும் *
தொழுதாடிப்பாடவல்லார் துக்கசீலமிலர்களே. (கக)

தொழுது ஆடி	வணங்குதலும் கூத்தாடுதலும் செய்து
நா மணி வண்ணனுக்கு	அழகிய நீலமணிபோன்ற நிற முடையழகனை எம்பெருமானுக்கு
ஆள் செய்து	அடிமைத்தொழில் செய்து
கோய் தீர்ந்த	கோய் நீங்கப்பெற்றவரும்,
வழுவாத	அவத்யமடையாத
தொல் புகழ்	இயற்கையான புகழையுடையவரும்
வண் குருகூர்	அழகிய நிருநகரிக்குத் தலைவரான
சடகோபன்	ஆழ்வார்
சொல்	அருளிச்செய்த
வழுவாத	குறையற்றதான
ஆயிரத்துள்	ஆயிரத்திலுள்ளே
இவை பத்தும்	இப்பதிகத்தை
தொழுதாடி	தொழுவதும் ஆடுவதுமாய்க் கொண்டு
பாட வல்லார்	பாடவல்லவர்கள்
துக்க சீலம் இலர்கள்	துக்கப்படுந்தன்மையில்லாத வராவர்.

த. 6—29.

http://acharya.org

* * * இத்திருவாய்மொழியை அன்போடு அநுசந்திக்குமவர்கள் எம்பெருமானைப் பிரிந்து படுகையாகிற துக்கமின்றிக்கே வாழப்பெறுவர்கள் என்ற பயனுரைத்துத் தலைக்கட்டு கின்றார்.

"ஆட்செய்த கோய்நீர்த்த" என்ற வாசகமிருந்தாலும் 'உருப்புரித்துக் கூட்டுதல்' என்கிற முறைமையின்கீழ் "கோய்நீர்த்து ஆட்செய்த" என்ற பொருள்கொள்ளத்தகும். "கோய்நீர்த்து தொழுதாடிப்பாடித் தாமணிவண்ணனைக்கு ஆட்செய்த வண்குருகூர்ச்சட கோபன்" என்பது ஆழ்வீர்ப்படியருளிச் செயல். இனி, ஆட்செய்து என்பதை சொல்நிரு பிறும் பொருள் நிரியாகிலைக்குறை" என்ற நன்னூற்சூத்திரத்தின்படி சுச்சாத்திரியாகக் கொண்டு 'ஆட்செய்ய' என்ற பொருள் கொள்ளுமாம். தோழியின் சொற்படியே தாய் மார்கள் தொழுதாடித்தாமணிவண்ணனைக்கு ஆட்செய்ய, அதனால் ஆழ்வார் கோய்நீர்த்த தாகக் கூறியவாறு.

ஆழ்வாருக்கு இந்த நோய் நேருவதன்று; ஆத்மா உள்ளவரையில் அநுபவார்த்திக்கு மத் தனை. ஆகையாலே கோய்நீர்த்த என்ற சொல்லுவதற்கு ப்ரஸக்தியில்லை; அப்படியிருக்க இங்கு 'கோய்நீர்த்த' என்றது மோதலும் தெளிந்த நிறைவு உளர்த்தியுண்டானமையைப்பற்றி யென்க. இவ்வேட்டு ஸ்ரீவைஷ்ணர்கள்;—"தொழுதாடித் தாமணிவண்ணனைக்காட் செய்து கோய்நீர்த்த" என்றதற்கு அர்த்தவிசேஷம்தான் பணிக்கும்படி—மோஹித்தவள் அல்பம் ஜ்வலித்தவாறே மோர்க்குறும்பு குடித்தான் நரித்தான் கண்டித்தாள் வார்த்தை சொன்னாள் என்பர்களிறே; அதுபோலே காணும் என்று."

எம்பெருமானோடு கலவிபெற்ற கோய்நீர்த்ததாகச் சொல்லுகிறதன்று; மேல் திருவாய் மொழியில் * சாலவருந்தி, பிரவர்ப்பகனும் மாமுகில் கூப்பிட்டிருத்தனதனால் அவனைம் சொல்லுவதற்கில்லை; பிறக்த உணர்த்தியைக்கொண்டு கோய்நீர்த்ததாகச் சொன்னவத்தனை.

வழுவாத தொல்புகழ் வண்குருகூர்ச் சடகோபன் = இப்போது ஆழ்வார்க்கு வழுவாத புகழாவது தேவதாந்தர ஸம்பந்தத்தை ஸுசித்தும் மறியாளையேயாம். "ஒருவன் வைஷ்ணவ னாகையாவது இது" என்பர் நம்பிள்ளை.

ஆனுமுழியில் "இலைபத்த வெறிகளும்" என்பதை 'வெறிகள் இலைபத்தும்' என்று அன்வயித்துக்கொள்க: வெறிவிலக்கான இத்திருவாய்மொழியை என்றபடி. வெறி விலக்காவது—நாயகியாரத்தாலே காயவி பிகவும் வருந்திக்கிடக்க, அவளுடைய வடிவு வேற பாட்டை கோக்கி 'இவன் இவ்வளம் மெலிதற்குக் காரணம் என்னே' என்ற கவலைப்பட்டுக் கட்டுவிச்சியைக் குறிகேட்க, அவளும் தன் மாயின்படி ஆராய்ந்து 'இவளுக்கு முருகக்கடவுள் ஆவேசித்தொழிய வேறெண்ணமில்லை' என்றுகூற, அதுகேட்ட தாயார் உடனே வெறியாட் டாளனை யழைப்பித்து அவனைக்கொண்டு ஆவேசமாடுவிக்கவும், ஆடுவது கண்ணுறுப்பது பலியிடுவதாய்ப் பரிஹாரார்கள் செய்விக்கவும் முயல, அச்சமயத்தில் அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தையறிந்த தோழி அம்முயற்சியை விலக்குவதாம்.

ஆக இப்படிப்பட்ட வெறிவிலக்குத் துறையிலே அமைத்து இத்திருவாய்மொழியை ஸ்ரீஸுதயமாக அநுஸந்திக்க வல்லவர்கள் எம்பெருமானைப் பிரிந்து படுகிற துயரமும் அதற்குப் பரிஹாரமாக தேவதாந்தர ஸம்பாதனம் பண்ணத்தேடுகையாகிற துயரமும் ஸம்பந்திக்கப் பெறுதே வாழ்வர்கள் என்ற பயனுரைத்துத் தலைக்கட்டினராயிற்று. .... (கக)

ஆறாந் திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

---

http://acharya.org

நான்காம்பத்து வழாநிருவாய்மொழி—சிலமில்லாச் சிறியன்.

உரையவதாரிகை:—உலகத்து நரைப்பட்டுக்கிடந்த கொடியானது மழைத்துளிபட்டவாறே செழிப்புமாபோலே, இழே மோஹித்துத் தரைப்பட்டிருந்த ஆழ்வார், தோழிமார் வாக்கில் நின்றும் வெளிவந்த இவ் நிருவாய்மொழிகேட்கப்பெற்ற ப்ரஜைகளாலே உணர்த்தி பெற்றார். அத்தனையே யல்லது மிருந்தினபடி எய்பெருமானுடே வந்சலேலிக்கப்பெற்றிலர். மோஹித்திருந்த நிலைமைதானே கண்டிருந்தது. எனென்னில், அப்போது உணர்த்தி யில்லாமையாலே துயரம் தெரியாது. உறக்கத்தில் பரிபோதுக்கலாம்; விழித்துக்கொண்டால் உண்டாலல்லது தரிக்கப்போகாதே. அப்படியே ஆழ்வாரும் மோஹித்திருந்த நிலைமையிலே ஒருவாறு ஆறியிருந்த உணர்த்தியுண்டான விப்போது துடக்கவேண்டியவராயினர். துடித்துக்கூப்பிடுகிறார் இத்திருவாய்மொழியில்.

உலகத்திலே கோயாளிகள் மயக்கம் முற்றிருக்கும்போதுகளிலே பாதை தெரியாதே யிருந்து, மயக்கம் தெளிந்தவாறே பாடாற்றவொண்ணாமல் துடிப்பர்களே, அந்த நிலைமையே பாயிற்று ஆழ்வார்க்கு இப்போது.

அவனே ஆபத்துக்கு உதவுமியல்வினன்; ஆபத்துக்கு தோளமரித்து பரிஹரிக்கவல்லன்; பிரிந்தால் பொறுத்திருக்க வொண்ணாதபடியான அழகு படைத்தவன்; ஆபத்துக்களிலே விரோதியைப்போக்கி உதவுகைக்குப் போதுமான சக்திபடைத்தவன்; இப்படியிருக்கும் தம் கம் ஆற்றமைக்கு உதவகில்லையே, என்று கனத்த மூர்த்தியோடே, கோட்டாரெல்லாரும் சோப்க்கரையும்படி கூப்பிடுகிறார்.

சீலமில்லாச்சிறியனேலும் செய்வினையோபெரிதால் *
ஞாலமுண்டாய்! ஞானமூர்த்தி! காராயணா! என்றென்று *
காலந்தோறும்யானிருந்து கைதலைபூசலிட்டால் *
கோலமேனிகாணலாராய் கூவியும்கொள்ளாயே. (க)

சீலம் இல்லா சிறியன் ஏலும் செய் வினையோ பெரிது ஆல் ஞாலம் உண்டாய் காராயணா என்று என்று	நன்மை யொன்று மில்லாத சிறியனு மிருந்தேனுகிலும் செய்த பாபமோ பெரிதாயிருக்கின்றதா; அந்தோ!; (பிரளயத்தில்) உலகங்களை உண்டவனே! காராயணனே! என்றிப்படிப் பலகாலும் சொல்லி
காலம் தோறும் யான் இருந்து கை தலை பூசல் இட்டால் கோலம் மேனி காண வாராய் கூவியும் கொள்ளாய்	எல்லாக்காலத்திலும் நான் துணையோடிருந்து கொண்டு கையைத் தலையிலே வைத்துக் கூப்பிட்டால், அழகிய திருமேனியை நான் சேவிக்குமாறு வருகிறயில்லை; கூவிக்கொள்வதும் செய்கின்றிலை.

***—ஆழ்வார் சில ஞானிகளைச் சிறுமாமனிசர் என்று அருளிச்செய்வதுண்டு; வடிவு சிறுத்த ஞானம் பெருத்தவர்கள் என்கிற காரணத்தாலே அவர்களைச் சிறுமாமனிசரென்கிறது. இப்பாட்டின் முதலடியில் ஒரு விதத்திலே தம்மையும் சிறுமாமனிசராகச் சொல்லிக்கொள்கிறார் போலும். கற்குண மொன்றுமில்லாததனால் சிறியவன்; பண்ணின பாபங்களில் பெரியவன் என்கிறார். சீலமாவது கண்டவிடத்தை. ஆசீலமில்லாமைபற்றித் தம்மை சோராக அநுஸந்தித்துக்கொள்ளுகிறார். "செய்வினையோ பெரிதால் என்றவிடத்திற்கு மேல்வீழ்வீடு;—"பண்ணின பாபத்தைப் பார்த்தவாறே நிகரில்சர்வதந்த்ரஸ்வதந்த்ரத்தையும் விளக்குகொள்ளும்படி பெருத்திருந்தது. ஸம்ஸாரிகளுடைய குற்றங்களைப்பொறுக்கு மீச்வரனுடைய குணங்களிறம், அவன்தந்த பக்தரபராதங்களைஞானத்தாலுள்காட்டின் பெரிதாயாயிற்றிருக்கிறது."

http://acharya.org

நல்ல காரியங்களைச் செய்யாமற்போனதும் செய்யவேணுமென்று தெரிந்தும் தீமைத் தானும் பலனுண்டு; நீயே காரியங்கள் விஷயத்தில் அப்படியல்ல; நீயன செய்யவேணுமென்று தெரிந்தும் தீமைத்திருத்து அப்படியே செய்யாதொழித்தால் குற்றமில்லை என்று தற்கொள்ளையுண்டு. தான் அப்படியல்லாமல் நீயே செய்த குறைக்கட்டியோ வைவிரோ செய்வினையோ என்பதனால்.

தாம் செய்த பாவங்கள் மிகப்பல என்பதை மேலே மூதலிக்கிறார். எம்பெருமானே தான் விரும்பினபடியே அநுபவிக்கப்பெறாமல் இழந்திருக்கின்றேனாதலால் செய்தீவினை பெரிதென்னுமிடத்தில் வைதேஹராமனுண்டோவென்கிறார். அசோகவனத்தில் பிராட்டியும் "ஹதஹ ந்ஹ்ருதம் கிம்நு க்ரூரம் மயா பஹுதரம் நு கலேஷ்வஜ்ஞயா! வஸுவிவஸ்ய ஹி ஸதஹ ப்ரதாபினஹ ஸுதாம் ஸ்நுஷாம் மாம் அஸிதேக்ஷணாம் கதம் ந மாம் தஹதி ரோஷஜோ ரவிஹி" என்றாள். விரோதிகளைத்தோலைத்து என்னை ரக்ஷிக்கைக்குமுப்பான ஆற்றல்படைத்த அவ்விரண்டு ஆண்புலிகளும் என்னைக் கடாக்ஷியாதே விருத்தார்களாகில் இது என்னுடைய பாபத்தின் பலனேயன்றே என்றாள்போட்டி. இங்கு * துஷ்க்ருதம் கிஞ்சித்மஹத் * என்கிறாள். கிஞ்சித் என்றால் சிறிது என்றபடி; மஹத் என்றால் பெரிது என்றபடி. சிறிதாயும் பெரிதாயுமிருக்கிற பாபம் எனக்கு உண்டென்று சொல்லுகிற பிராட்டியின் திருவுள்ளம் யாதெனில்; பகவத் விஷயத்திலேபட்ட அபசாரத்தைச் சிறிய பாபமென்றும், பாகவத விஷயத்திலே பட்ட அபசாரத்தைப் பெரிய பாபமென்றும், கருதினபடி. காட்டுக்குப் புறப்படும் சமயத்திலே தன்னை உடன்கொண்டு செல்லாமற்போனென்ற பெருமானே நோக்கி "ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்" என்று பழித்துக்கூறினது பகவத் விஷயாபசாரம். மாரீசமாயமான் பின்னே பெருமான் எழுந்தருளியிருந்தபோது கபடமான கூக்குரலைக் கேட்ட பிராட்டி இளைய பெருமானே நோக்கிப் பல வார்த்தைகள் சொல்லிவருகையில் "ந நாயகஸ்ஸாஸ்ரயஹ ந்ருஸம்ஸ கச்சஸ்வ தத்ரைவ—அசேர்யகருணைப்பங்குசம்! குலபாம்ஸுல!" என்று தொடங்கி* "ஸஹைதா ரூபிணஸ்தஸ்ய ராக்ஷஸஸ்ய மஹாத்மநஹ। கருணம் ரஜதி வைதேஹி ஜ்ஞாதவ்யஸ்தே தவாபஹ॥ மமதேஹஸ்ய தஸ்யாஸ்ய ப்ராணிதஸ்ய: ப்ரஸக்தயஹ: ப்ரவ்ருத்தா பரதே வா, தன் விதேயஹி மைதிலே தவ வா பரதஸ்ய வா." என்று மிகவும் கடுமையாகப் பழித்துக் கூறினது பாகவதாபசாரம். இவற்றுள் பகவதபசாரம் அவ்வளவு கொடிதன்றுகையாலே கிஞ்சித் எனப்பட்டது; பாகவதாபசாரம் மிகக்கொடிதாகையாலே மஹத் எனப்பட்டது.

தும்பை தான் கதற்கூளையழைக்கிறபடியை அருளிச்செய்கிறார் ஞாலமுண்டாய்! என்ற தொடங்கி. விசாலமான பூமிப்பரப்பையெல்லாம் திரண்ட வெள்ளம் கொள்ளை கொள்ளப்புகுந்த காலத்திலே "மண்ணுண்டும் விண்ணுண்டும் வானவரும் தானவரும் மற்றுமெல்லாம், உண்ணுத பெருவெள்ளம் உண்ணுமல் தான் விழுங்கியுய்யக்கொண்ட" என்கிறபடியே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தவனே! என்று கூப்பிடா நின்றேன். ஆபத்துக்கு வந்து உதவுமவனல்லியோ நீ; சிலையாபத்து வந்தால்தான் ரக்ஷிப்பதென்ற ஒரு விரத முண்டோ?

ஞானமூர்த்தீ = சேதநகோடியிலே சேர்ந்த எனக்கும் ஞானமுண்டு; ஆகிலும் என்னுடைய ஞானம் என்னை நித்ய ஸம்ஸாரியாக்கிச் சொல்வதற்கன்றே உதவுகின்றது. இந்த ஸம்ஸாரத்தைக் கழித்து என்னைத் திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ளுகைக்கிடான ஞானமன்றே உன்னுடையது. "ஆமாறறியேன் நான்" என்றிருக்குமடியேனுக்கு "ஆமாறறியும் பிரானே!" என்னப்படுகிற நீ உதவித்தீரவேண்டுமே. நான் அறிவது ஒன்றுமில்லை; நீ அறியாதது ஒன்றுமில்லை; நான் செய்பவல்லது ஒன்றுமில்லை; நீ செய்யமாட்டாதது ஒன்றுமில்லை. ஒருவனுக்குக் கண்ணும் தெரியாதே காதும் கேட்டாராதேயிருக்கது;

http://acharya.org

மற்றெருவனுக்குக் கண்ணும் தெரிந்து காதும் கேட்டதாவிருந்தது; இப்படியிருக்கு மானால் ஆர்க்கு ஆர் வழிகாட்டிக்கொண்டுபோவார் என்பதை நான் சொல்லவேணுமோ?

ஞானமும் சக்தியுமுள்ளவர்களெல்லோரும் அந்தரும் அசக்தருமாயிருப்பாரை ரக்ஷித்தேயாகவேணுமென்ற ஒரு நிச்சயத்தமுண்டோவென்று எம்பெருமானுக்குத் திருவுள்ளமாக, காராயணு என்கிறார். ரக்ஷிக்கவேண்டிய ப்ராப்திபில்லையாகில் நிச்சயத்தமில்லைதான்; ப்ராப்தி முள்ள விடத்திலே உபேக்ஷித்திருந்தால் பழிப்பாருமுண்டே. "உன்றன்னோடுறவேல் எமக்கு இங்கொழிக்கவொழியாத" என்னும்படியான சுடர்த்தொடர்பு இருக்கும்போது கைவாங்கி யிருக்கவல்லீலையோ? ஸர்வத்திற்கு ஆகவேண்டிய என்மையை சரீரியன்றே சோக்கக்கடமைப் பட்டவன். உடையவன் உடைமையைப் பெறுகைக்கு விசாரிக்க வேண்டாவோ? என்ப தான கருத்துக்கள் காராயணு! என்பதில் உய்த்துணரத்தக்கன.

என்றென்று என்னையாலே இப்படியே பலகால் கூப்பிட்டுக்கொண்டே யிருக்கின் றமை காட்டப்பட்டது. இவ்தாம் கூப்பிடுவது ஒரு ப்ரயோஜனத்திற்காகவாகில் அது கிடைத்ததென்று வாய் ஓயலாம்; கூப்பிடுகைதானே ப்ரயோஜனமாகையாலே வொதுக்கு மூளை இதுவேகாணீர்.

காலக்தோறும் யானிருக்கு என்றவிடத்தில் சுட்டின்னீயீடு:— "படுவதெல்லாம்பட்டு நாமே பிராயமாக இருக்கவேணுமோ? சுலபிக விஷயத்தைப் பிரிந்தால் முடியவொட்டாது 'இன்னமும் காணேமோ' என்னும் நசை."

கைதலைபூசலிலேயாவது—"மத்தகத்திடைக் கைகளைக்கூப்பி" என்றும் "பரிவராஜஜி காயை—நென்னஞ்சுவிமாதாய" என்றும் சொல்லுகிறபடியே தலைமேல் கைக்குவிக்கை, ஆற்ற மையினால் தலைமேல் மோதிக்கொள்ளும்படியைச் சொல்லுகிறதென்றும் கூறுவர்.

கோலமேனி காணவாராய்=தூசைப்பட்டையர்கள் கண்டு அநுபவிப்பதற்காகவன்றே இத்திருமேனி படைத்தது. "பக்தாகாம் த்வம் ப்ராகாசலே" என்ற சொல்லிலிருக்க இப்படியும் உபேக்ஷிப்பதுண்டோ? "வாவெல்லிரிந்தறியேன்! வாழ்ந்தேபோம் நீயே!" என்ற வயிறெரிந்து சொல்லும்படியாக வைத்துக்கொள்வது தருமமோ? பரமப்ராப்யமான நீர்த் தத்தைச் சேகரித்துவைப்பது விடாய்த்திடாய் கெடுவதற்காகவன்றே; அதனை அவர்கட்கு எட்டாதே வைப்பது முண்டோ? என்கிறார். காணவாராய் என்றது காணவாவேணுமென்றபடி யன்று; காணவருகின்றிலையே! என்றபடி. நித்ய விபூதியிற்சென்று சேவிப்பதிலுங்காட்டில் இவ்விபூதியிலேயே சேவிக்கப்பெறுதல் பரமோத்தேச்யமாகையாலே இக்கருத்தைத் தோன்ற "கூவியுங்கொள்ளாயே" என்கிறார். .... (க)

கோள்ளமாளா வின்பவெள்ளம் கோதிலதந்திடும் * என்
வள்ளலேயோ! வையம்கொண்டவமருவோ! என்றென்று *
கள்ளிராவும்கன்பகலும் காலிருந்தோலமிட்டால் *
கள்ளமாயாவுன்னை என்கண்காணவந்தீயாயே. (கூ)

கோள்ளமாளா இன்பம் வெள்ளம் } அநுபவிக்கவநுபவிக்க எல்லைகாணவொண்ணாத பூரணாநந்தப்பெருக்கை
கோது இல குறையற

நந்திடும் என் வள்ளலே வையம் கொண்ட } கூடாகிக்கின்ற என் உதாரனே! (மாவலிபக்கல் நீரேற்றுப் பெற்று) உலகங்களெல்லாம் அளந்து கொண்ட

http://acharya.org

வாமன	வாமனமூர்த்தியே!	கள்ளம் மாய	கிருத்ரிமனான ஸ்ரீசர்ய பூதனே!
நு ஒ என்று	என்று அர்த்தியோடே சொல்லி	உள்ளே	உள்ளே
கள் இரவும்	இரவும் பகலும்	என் கண் காண	என் கண்கள் காணுமாறு
கண் பகலும்		வந்து	வந்து சேவை சாதிக்கின்
கான் இருந்த	கான் ஆசையோடிருந்த கூப்பிட்	சாய்ப்ப	றிலேயே.
ஓலமிட்டால்	டால்		

* * * ஏற்கனவே தம் நிறத்தில் எம்பெருமான் செய்தருளினதிருக்கிற உபகாரங்கள் நிலவற்றைச் சொல்லி 'இப்படி உபகாரம் செய்தருளின நீ இப்போது உபேக்ஷிப்பது தருமமோ?' என்கிறார். * சேர்ப்பாரையாமிலிக்குமுன்னே * விற்றிருக்தேழுலகில் "மிகுளின் பம் மிகவெல்லே கெழ்க்தனன்" என்று சொல்லும்படியாக அப்போது எம்பெருமான் தந்த பரமாகாத்ர ஸௌந்தர்யத்தைத் திருவுள்ளம்பற்றிக் "கொன்னமாளா வின்பவெள்ளம் கோதில தந்திடும் என் வள்ளலே!" என்கிறார். கொள்ளக்கொள்ள மாளாத இன்பவெள்ளமாவது மேன்மேலும் பெருகிச்செல்கின்ற இன்பவெள்ளம். அதனைக் கோதில்லாதபடி தருகை யாவது என்னென்னில்; பகவத் விஷயத்தை அநுபவித்துக் கொண்டே வரும்போது 'அநுபவித்தது போதும்' என்ற தோன்றுதலும், 'இதைவிட்டு இன்னொரு விஷயத்தை அநுபவிப்போம்' என்ற ஆசை பிறக்தாலும் அது இன்பத்திற்குக் கோது; அத்தகைய கோது இல்லாதபடி தந்தனனென்றது "எப்பொழுதும் கள் நின்களாண்டுழிபுழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுது என்னாவமுதமே' என்றும்படியாகத் தந்தருளினனென்றபடி.

என் வள்ளலே! என்ற சொல்லி ஓ! என்கிறார், இப்படி இப்போது கூப்பிடப்பண்ண நினைத்திருக்தால் விற்றிருக்தேழுலகிலே அப்படியென்ன அநுபவிப்பிக்கவேணுமோ? என்னைக்காக.

வையங்கொண்ட வாமனனே! = ப்ரயோஜனாக்தர பரனான வொருவனுக்குக் காரியஞ் செய்யநினைத்து முடியமாறினவனைக்குறித்து அக்கப்பரோநாலை என் விஷயத்திலே இரங்குகை அரிதோ என்று கூறியவாறு. வையத்தை இக்க காலத்தில் வாமகவேஷமிருக்கதேயல்லது, வையங்கொண்ட காலத்தில் அஃது இல்லையே; த்ரிவிக்ரம வேஷமன்றே அப்போது இருந்தது; அப்படியிருக்க 'வையங்கொண்ட வாமனனே!' என்றது என் என்னில்; ஆழ்வாருடைய திருவுள் ளத்தில் வாமகவேஷமொன்றே அழகின் மிகுதியால் நினைத்திருக்கிறபடி. இந்நினைப்போலே ஸாக்ஷாத்பெற்று மீளவேண்டியவர்மாளையாலே இங்ஙனே கூப்பிடுவதே இவர்க்குப் போது போக்கென்பது "என்றென்று" என்பதனால் தெரிவிக்கப்படும். இப்படிப் பல திருநாமங் களைச் சொல்லி இரவும் பகலும் கான் கூப்பிட்டால் என் கண்கள் விடாய் கெடும்படி கடை யழகு காட்டி என் முன்னே வந்து நிற்கின்றியேயே என்கிறார். ... (உ)

ஈவிலாததீவினைகள் எத்தனைசெய்தனன்கொல்! *
தாவிவையம்கொண்டவேந்தாய்! தாமோதரா! என்றென்று *
கூவிக்கூவிக்கெஞ்சுகுறிக் கண்பனிசோரநின்றால் *
பாவியேன்றென்றுசொல்லாய் பாவியேன்காணவந்தே. (ரு)

ஈவினைகள்	பாவங்களை	கொண்ட	ஸ்வாதீனப்படுத்திக் கொண்ட
ஈவு இலாத	முடிவில்லாதபடி	எத்தாய்	ஸ்வாமியே!
எத்தனை செய்	எவ்வளவு செய்தானோ!	தாமோதரா	தாம்பால் ஆப்புண்ட நழும்பை
தனன் கொல்			உதரத்திலுடையவனே!
தாவி	நிருவடிகளாலே வியாபித்த	என்று என்று	என்று பலகால் சொல்லி இடை
வையம்	உலகங்களை	கூவி கூவி	விடாதே கூப்பிட்டு

http://acharya.org

நெஞ்சு உருகி கண் பனி சோர நின்றும் பாவியேன் காண	நெஞ்சு சோயுருகி கண்ணீர் பெருக நின்றும், பாவியான என் கண்ணாலே கோவிந்தப்படியாக	வந்து கீ பாவி என்று ஒன்று சொல் மாய்	எழுத்தருளி '(ஆழ்வாரே!) நீ பாகொணும்' என்று ஒரு வார்த்தையும் சொல்லி இல்லையில்லை.

* * * நான் விரும்புகிறபடி என் கண் முன்னே வந்து காட்சி தந்தருளத் திருவுள்ளமில்லையாகிலும் "நீ பாவி, உனக்கு நான் காட்சிதரமாட்டேன்" என்கிறவொரு வார்த்தையை யாவது என் கண் வட்டத்திலே வந்து சொல்லிப்போதலாகாதோவென்கிறார்.

அவனோட்டைக் கலவியையே அன்றும் பகலும் ஆசைப்பட்டுக்கொண்டு இடக்கிற ஆழ்வார் 'பாவி நீ யென்றென்ற சொல்லாய்' என்னைக்குக் கருத்து யாதெனில்; 'ஆழிர்! நீர் பாவமே செய்து பாவியானவராகையாலே உம்மோடு கலப்பதற்கு எனக்கு விருப்பமில்லை' என்று சொல்லுகிற இந்த வார்த்தையையாவது நமது முகத்தை நோக்கி அவன் சொல்லுவானில் அப்போதைய சோகையாவது கிடைக்குமே என்றும், கண்ணிலே தென்பட்டானில் பிறகு அவனை உபாயங்களால் வசீகரித்து கொள்ளலாமென்றும் நினைத்துச் சொன்னதத்தனை. ஆண்டாளும் "மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடை தான் தருமேல் மிகநன்றே" என்றது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"அவச்யமநு போக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்" என்றும் 'நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி" என்றுமுள்ள பிரமாணங்களே நோக்கினால் நினைகள் அநுபவித்துத் தீர்க்கமுடியும் என்று சற்படுகிறது; அப்படியும் நீசத்தனமே பாவங்களைப் பண்ணினேனே! என்கிறார் முதலடியில். "மதியிலேன் வல்வினையே மாளாதோ" என்றதும் காண்க.

தாவிவித்யாதி. * கன்னருவமாரு மரியமால் தானவர்கோர் மன்னுக்குறளுருவில் மாணியாய் பாவலிதன் பொன்னியதும் வேள்விக்கண் புக்கிருந்து போர்வேந்தர்மன்னே மனங்கொள்ளவஞ்சித்து வெஞ்சூரன்னை மன்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண் மன்னு! தருகென்று வாய்நிறப்ப, மற்றவனுமொன்னலர் தாப்பட்டதென்றதுமே, அத்தனைக் கண்மின்னுர் மணிமுடிபோய் விண்தடவ, நெடுவெற்ப பொன்னுர் கமலமுறைகாலேழுலகும் போய்க்காக்க பாதலத்தைச் சென்றளந்தாய்; * உரியசார்த்த கறவெண்ணெயொளியால் சென்று அங்குண்டாலெங்கண்டு ஆய்ச்சியுலோடார்த்தத் தரியசார்த்த கருங்கலிறே போல நின்ற நடல்கண்கள் பனிமல்கத் தன்னையானே னினைப்பதற்குப்பேகலுன்; இல்லனே பாவ னெனலப்பங்களே பாரிமாரிப்பேரிக் கல்லுங் கண்ணீருமாய் நின்றக்கால் கண்ணெதிரேலத்து னேவைதந்தருளலாகாதோ? அருங்கறம் செய்யத் திருவுள்ளமில்லையாகிலும் இக்ருஹித்த விட்டேனென்குவது கண்முன்னே வந்து நின்று சொல்லிப்போதலாகாதோ? என்னே நீ பாக்கியவான் என்குதும் பாவியென்குதும் அதில் எனக்கொரு நிச்சயமில்லை; உன் திருமிடற்றழகை கேட்கவேண்டுவதே எனக்கு அபேக்ஷிதம்; கண்ணுக்குத் தோற்றுதே நின்ற மிடற்றழகையைக் காட்டிவிட்டாலும் திருப்தியடையேன்; என் கண்ணுக்கு இலக்காகி வந்து சொல்லவேணும்.. ... ... (கூ)

காணவந்தென்கண்முகப்பே தாமரைக்கண்நிறழ *
தூணிசெம்பொன்மேனிவேந்தாய்! நின்றருளாயென்றென்ற *
வாணமில்லாச்சிறுதகையேன் வானிங்கலற்றுவதென் ?*
பேணிவாழ்ந்தார்காணமாட்டாப் பீடையப்பனேயே. (சு)

http://acharya.org

வானோர் பேணி காணமாட்டா மிடி உடை அப்பனை — பிரமன் முதலிய தேவர்கள் விரும்பியும் காணமுடியாதபடி பெருமை வாய்ந்த ஸ்வாமியை நோக்கி,

ஆணி செம் பொன் மேனி எந்தாய் — "மாற்றரக்க பொன் போல் விரும்பத்தகுந்த திருமேனி படைத்தவரோனே!

தாமரை கண் நிறை — தாமரைப்பூப்போன்ற நிறைக்கண் கள் வினைக்கும்படி (என்னைப் பார்த்துக் கொண்டு)

காணவந்து என் கண் முகப்பே — நான் காணுமாறு வந்து என் கண் முன்னே

நின்றருளாய் என்று என்று — நின்றருளவேணும் என்று என்று ஓயாதே சொல்லி

நிறை தகை வேல் கான் — நீர்மையே காண்

நாணம் இல்லை—வெட்கம் கெட்டவனாய்க்கொண்டு

நிற்கு அலற்றும் நாயேன் — நிற்கே அலற்றுவதற்கு ஒரு சாமர்த்தியமுமில்லையே!

• • •—பிரமன் முதலிய தேவர்களுக்கும் காணக்கிடைக்காத பெருமானே வடிவழகு காணவிரும்பி வேட்கைமற்ற நான் கூப்பிடுகின்றேனே! இதற்கு என்ன பலனுண்டு என் நிறை.

ஆணி செம்பொன் மேனி = ஆணிப்பொன்னைவிட மாற்றறிதற்குக் கொண்ணும் உரைத்தரப்பொன். இதற்குமேலே மாற்றில்லை யென்னும்படியான நிறத்த பொன் என்றும் சொன்னவர். எம்பெருமானுடைய திருமேனி கருநிறமில் திருநிறத்தாயிருக்க, செம்பொன்மேனி என்றது என்? என்னில்; சொம்பொன் நிறத்திற்கு உவமையாகக் கூறப்பட்டதன்று: ஸ்ருதனீயதைக்குக் கூறிற்றென்க; அதுபோலே விரும்பத்தக்க திருமேனி என்றபடி. "ஆபாதலி தாரு வலை ஹரணீயாகாரணீயகேழி! ஸ்ரீகாலகேலயீ முதம் விதாத்ரு வாத்ஸல்யம் வாழி= ப்ரசாலிதாதரம் ஸர்வேஸ்வரம் ஆணீயாம் ஸாணீயஸாம், ருக்மாபம் ஸ்வப்நதீகம்யம், கித்யாத்ரு புருஷம்பரம்." என்றும், "யஸ்ஸொஜாதிதே; ஸ்ரீரணுயா வாஸுதேவோ ந்ருஸிம்ஹ தே" என்றமுதல்ல பிரமாணங்களைக்கொண்டும் தெரிவிக்கலாம். நரிஸ்ஸிம்ஹனான பிரட்டியின் சேர்க்கையாலுண்டான கிழிட்டாலே எம்பெருமானும் நரிஸ்ஸிம்ஹனாகத் தோற்றலாம். இப்படிப்பட்ட திருமேனி படைத்தவனே! என் கண் முன்னே வந்து நிற்கவேணும்; என்று பலகால் சொல்லியழைக்கின்றேனே! இதற்கு ஒரு பலன் கிடைக்கப்போகிறதோ?

மேம்பட்டவர்களாகப் பிரகிதி பெற்றிருக்கின்ற தேவர்களுக்கும் காணக் கிடைக்க மாட்டாத பெருமானைத் தாம் காண ஆசைப்பட்டது வெட்கமில்லாமையின் காரியமென்ற காட்டுதற்காக காணமில்லா என்றார். .... (அ)

அப்பனே! ஆடலாழியானே! தூங்கடலைக்கடைந்த
துப்பனே!* உன்தோள்கள்நான்கும் கண்டிடக்கூடுங்கொலென்று *
எப்பொழுதும்கண்ணீர்கொண்டு ஆவிதுவர்த்துதுவர்த்து *
இப்பொழுதேவந்திடாயென்ற எழையேன்கோக்குவனே. (இ)

அப்பனே அடல் ஆழியானே — உபகாரம் செய்யுமியல்வினனே! விசித்தன்மை வாய்ந்த திருவாழியையுடையவனே!

தூங்கடலை கடைந்த துப்பனே — தூமானை கடலை கடைத்து அன்பர்கட்கு அமுத மளித்த வாத்தனே!

உன் நான்கு தோள்களும் கண்டிட கூடும் கொல் என்று — உனது நிருத்தோள்கள் நான்கையும் கோக்க வேறுமோ! என்ற எண்ணி

எப்பொழுதும் கண்ணீர் கொண்டு — எப்போதும் கண்ணீர்சோடிருந்து

ஆவி துவர்த்து துவர்த்து — நோனன் நிகரும் உலர்த்து

இப்பொழுதே வந்திடாய் என்று — உடனே எழுந்தருள வேணு மென்று அபேக்ஷித்து

எழையேன் சோக்குவன் — அபலனான நான் சற்றும் பாராகின்றேன்.

http://acharya.org

• • •—பிரமன் முதலானோர்க்கும் காணமுடியாதிருக்கிற உன்னுடைய அழகைக் காண வேணுமென்ற ஆசைப்பட்டு 'இப்பொழுதே வந்திடாய்' என்று ஆசைகாட்டி, நாம் ஆசைகாட்டியபடியே வந்தருள்வன் என்று நம்பி, வரும்போதை யழகைக் காணவேணுமென்று பார்த்திருக்கின்றேனே! என்னுடைய சாபல்யத்தை என் சொல்லுவேன்! என்கிறார்.

அப்பன் என்று உபகாரம் செய்பவனைச் சொல்லுகிறது. நீ முகங்காட்டாதபோதும் உன்னையே சொல்லிக் கூப்பிடும்படியாக இவ்வளவு பரோபகாரம் பண்ணினவனே! என்ற படி. எனக்கு நீ அருள்செய்ய நினைத்தால் என்னுடைய பாவங்கள் குறுக்கே நிற்கவற்றே? "எப்போதும் கைமுலா கேயியான் சம்மேல் வினைகடிவான்" என்கிறபடியே என் வினை களைத் துணிக்கத் திருக்கையிலே நீயிவ்வாறறுமுண்டே பென்பார் அடலாழியானே! என்கிறார். கையிற் திருவாழியாலை அழகு காண ஆசைப்பட்டன்றே காண் கூப்பிடுகிறது என்ற வாதமாம்.

இழ்கடலைக் கடைந்த துப்பனே!—உன்னளவிலே பல்லாண்டு பாடாதே உன் திரு மேனியை சோபபடுத்தின் காரியங்கொள்ள நினைப்பார்க்கும் காரியம் செய்து தலைக்கட்டு கின்ற வுனக்கு என்னெதிரேவந்து நின்று காட்சி தருகைக்குத் திருவுள்ளமுண்டாகாதது என்றே? 'நம் உடம்பை சோபபடுத்துகின்றவர்களுக்குத் தான் நாம் காரியம் செய்யக் கடவோம்' என்று ஏதேனும் நியமம் கொண்டிருப்பதுண்டோ? "கடலைக்கடைந்த துப்பனே!" என்ற இவ்விடத்தில் விவக்ஷிதமான துப்பாவது—"விண்ணவரமுதுண ஆழிநின்வரும் பெண் ணமுதுண்ட எம்பெருமானே!" என்கிறபடியே தேவர்களுக்கு உப்புச்சாறு எடுத்துக் கொடுக்கிற வியாஜத்தாலே தான் பெண்ணமுதாகிய ஸ்ரீ மஹாலக்ஷ்மியை விரும்பினபடி.

உன் தோள்கள் நான்கும் கண்டிடேன்—கடல்கடைந்த காலத்திலே தேவர்கள் எம்போது நம் உலைவு கடலில் நின்றும் இளைப்போகின்றதோ என்று கடலிலக்கினிழ்ந்து பார்த்துக் கொண் டிருந்தார்களே யல்லது நோளழகிலே தலைக்குன்றி வாய்விட்டார்களில்லை; அக்குறைதீர "மல்லாண்ட நின்தோள் மணிவண்ணனே! பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு" என்று திருத்தோள்களுக்கு மங்களாசாஸனம் பண்ணவேணு மென்றன்றே நான் பார்த்திருப்பது. கண்ணபிரானுடைய வவதார க்ருத்யத்திலே அவதரித்தபோது "ஜாதோஸி தேவ தேவேஸ! சங்க சக்ர கதாதர!" என்ற நான்கு திருத்தோள்களோடே அவதரித்தானென்றும், பிறகு மாதா பிதாக்கள் "உபஸம்ஹர விச்வாத்மன்! ரூபமேதத் சதுர்ப்புஜம்" என்று, நான்கு திருத்தோள் களோடு கூடின இத்திருவுருவத்தை மறைத்திடாய் என்று வேண்டிக்கொள்ள, அப்படியே மறைத்திட்டதாகவும், உகவாதார்க்குக் கூரி மறைத்திட்ட அதனை உகந்த பெண்களுக்குக் காட்டிக்கொடுத்தானென்றும் கேள்விப்படுகிறோம்; அவ்வண்ணம் எனக்கும் நீ காட்டிக் கொடுக்க கேற்ற நான் காணப்பெறலாகுமோ வென்று பார்த்துக்கிடக்கின்றேனென்பது உள்ளுறையும் கருத்து.

கண்ண நீர் கொண்டு—ஆனந்தாச்ரு, சோகாச்ரு என்று இருவகையான கண்ணீர் கள் உண்டு. அவ்விரண்டும் இங்கு விவக்ஷிதமாகலாம்; அத்திருவுருவத்தை நினைத்தவளவி லேயே ஒரு ஆனந்தம் பெருகிச் செவ்வுமாலையாலே ஆனந்தாச்ருவாகும். 'நம் பாரிக்கிற படி நமது கண்களுக்குப் புலப்படவில்லையே!' என்ற வருத்தமுமாலையாலே சோகாச்ரு மாகும். ஆவி தூவாக்து தூவாக்து—பிராணன் பசையற உலர்ந்த என்றபடி. ஆவி அடி யோடு தொலையாளட்டே கொண்கிறது என்கிற வருத்தத்தைக் காட்டினபடி.

ஐ. 7—13.

http://acharya.org

இப்பொழுதே வந்திடாயென்று=தாமதித்து வந்தாயாகில் நோப்புவியாழ்வானைக் கட்டிக்கொண்டு அழவேண்டியதாகு மத்தனை யுனக்கு; இப்பொழுதே வந்தாயாகில் என் கண்ணிலே விழிக்கப்பெறுவாய் என்றவாறு. ஏழையேன் கோக்குவனே!=இங்ஙனே சொன்னவளவிலும் சர்வஜ்ஞன் இவளறிந்து வாராதிருப்பதே! அவியேம் வந்தே திருவன்; ஆபத்து நிருந்தவாறே தவறுத வந்து தோன்றிற வழக்கத்தை யறிந்திராழ்வான் ப்ரஹ்லாதாழ்வான் போன்வரப் பக்கலிலே கண்டிருக்கிறோமாகையாலே வந்தே திருவன் என்ன நிச்சயித்து சாபமத்தாலே நினைவெய்கும் கொள்ளுகின்றேன் என்கை.

ஏழையேன் கோக்குவனே வென்றவிடத்தில் ஒரு ஐதிஹ்யமுண்டு; சோழராஜனைத்தவிலே திருக்கண்களெழுந்த கூத்தாழ்வானே உடையவர் வரதராஜன் விஷயமாக ஒரு ஸ்தவம் பணிக்கும்படி நியமித்தார்; பேரருளாளன் வந்தருளும் பெருமானென்ன பேர்பெற்றிருக்கையாலே திருக்கண் தக்கருள்வன் என்ன திருவுள்ளப்பற்றி அப்படி நியமித்தருளினார். நூசார்ய நியமனத்தை வடியொற்றி ஆழ்வானும் வரதராஜன்தன மருளிச்செய்து அதை உடையவர் திருமுன்பே விண்ணப்பம்செய்து வருகையில் "நீலமேகநிபம் அஞ்ஜநபுஞ்ஜச்யாம குந்தலம் அகுண்டிதம் த்வாம். அப்ஜபாணிபதம் அம்புஜநேத்ரம் கேதாரஸ்தருகரீம! ஸதா மே." என்கிற சுலோகத்தைத் திருச்செவி சாத்தின உடையவர் "ஆழ்வான்! இப்படியாகாம் கேட்டால் பெருமான் இங்ஙனமையில்லை; உன்முகதேஜஸ்தைக்காட்டு பார்ப்போம்" என்றருளிச் சொல்லுகைக்கு எம்பெருமான் காட்டிதந்தே திருவன் என்ற அன்பர்கள் சொல்லுவதற்குமாம் பான ஐதிஹ்யம் இது.

கோக்கிலோக்கியுன்னைக்காண்பான் யானெனதாவியுள்ளே *
காக்குநீள்வன்ஞானமில்லை காள்தோறுமென்னுடைய *
ஆக்கையுள்ளுமாவியுள்ளும் அல்லலறத்தீர்ப்பாய்க்கும்
நீக்கமின்றிநிங்கும்நின்றாய்! நின்னையறிந்தறிந்தே. (க)

காள்தோறும்	காலைகாலத்திலும்	அறிந்து அறிந்தே	(அருள்செய்யத் திருவுள்ளமில்லாதவன் என்று) கண்டுகொண்டு அறிந்துவைத்தும்
என்னுடைய	என்னுடைய		
ஆக்கை உள்ளும்	சரீரத்திலுள்ளும்	யான்	நான்
ஆவி உள்ளும்	ஆத்மாவினுள்ளும்	உன்னை காண்பான்	உனது திவ்யமங்கள விக்ரஹத்தை யேலிக்கவேண்டி
அல்ல புறத்தின் உள்ளும்	மற்றுமுண்டான இந்திரியம் முதலானவற்றிலும்	கோக்கு கோக்கு	என்னாத்திசைகளிலும் பார்த்து
நீக்கம் இன்றி	நீங்காமல் [ஒன்றையும் விடாமல்]	எனது ஆவி உன்னை	எனது நெஞ்சுக்குள்ளே
எங்கும் நின்றாய்	எங்கும் வியாபித்திருக்கின்ற பெருமானே!	காக்கு நீள்வன்	காக்கை மீட்டுவைத்தேன் [ஆசைப்படுவேன்றேன்]
நின்னை	உன்னை	ஞானம் இல்லை	இப்படிப்பட்ட நான் விவேகமற்றவனத்தனை.

* * *—எம்பெருமானே! என்னுள்ளே நீ நிறைந்திருந்தும் எனக்கு நீ உன்னைக் காட்டாமலிருப்பது நிருவுள்ளமில்லாமையாலன்றே என்ன நான் அறிந்து வைத்தும் அவிவேகத்தாலே காலைவாராய்! காலைவாராய்! என்ற கதறுகின்றேன் என்கிறார்.

இறைப்பொழுதும் ஒயாதே வாட்டி வேட்டிப் பார்க்கின்றேன்; எத்தத் நினை வழியாகவருவதென்ன நெரியாமையாலே சாலாநாளும் விழித்துப் பார்க்கிறேன்; எதற்காகவென்னில்; உன்னைக் காண்கைக்காகவத்தனை. காண்பதற்கு மேலே வேறொரு ப்ரயோஜனத்தைக் கனவிலும் கருதாத குடியிலே பன்றே பிறந்திருப்பது. 'இப்படி எனக்கு ஆசை' என்ற வாய் விட்டுச் சொல்லமாட்டாதே காக்கை மீட்டிருக்கின்றேன். காக்கை மீட்டுவானேன் என்

http://acharya.org

வில்; "கன்னலங்கட்டி தன்னைக் கனியை யின்னமுதத் தன்னை" என்றும் "எனக்குத்தேனே பாலே கன்னலே யமுதே" என்றும் "விழுநிலமுழுவிலர் விழுப்புகழ் கோதின் கனியை" என்றும் சொல்லுகிறபடியே பகவத்விஷயமென்பது பரம போக்ய வஸ்துவாகையாலே "ஞாயவமுதைப் பருகிப்பருகி" "அடியேன் வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே" என்கிற கணக்கிலே சாவுக்கும் விஷயமுண்டே.

சக்ரு கீட்டிலவனவில் விருப்பினை பொருள் கிடையாதொழிந்தவாறே 'இதில் கால் கை வைப்பது தகுதியன்று' என்று கையாய்வி நிற்பதன்றே ப்ராப்தம். அறிதலறுமிடம் அறியாதே நிறு குழந்தைகள் சக்கை கீட்டினபடியே விருப்பதுண்டு; அதுபோலவே சாணும் என்று காட்டுகிறார் ஞானமில்லை என்பதனால்.

ஞானமில்லை என்றதை உபபாதிக்கிறது மேலுள்ளதெல்லாம். என்னுடைய சரீரத்திலும் ஆத்மாவிலும் மற்றும் இந்த்ரியாதிகளிலும் ஒன்றையும் விடாதே எல்லா விஷயத்திலும் வியாபித்து நின்றுள்ள நீ என்பதை அறியேனோ? இப்படிப்பட்ட நீ என் கண்ணுக்குத் தோற்ற வேணுமென்று நிருவுள்ளம்பற்றினாயில் உடனே தோற்றியிருக்கலாமே; "வாசி வல்லீர்" என்கிறபடியே இன்னாருக்குத்தான் தோற்றலேணும் இன்னாருக்குத் தோற்றலாகாது என்று ஒரு நிச்சயத்தைத் வைத்துக் கொண்டிருக்கிறபென்று சான் தெரிந்துகொண்டு வாய் மூடியிருக்கை அழகியது. அப்படியிருக்கின்றிலேனே; உன் கருத்தையறிந்து வைத்தும் அறியாதிருக்கின்றிலேனாகையாலே எனக்கு நானாகில்லை யென்னுமிடம் விந்தமேயன்றே என்று நயிற்று.

ஞானமில்லை என்றதற்கு ஒரு உள்ளுறை பொருளுண்டு; மற்றையோருடைய ஞானம் போன்றதன்று என்னுடைய ஞானம்; "மயர்வற மதிநலமருளினன்" என்றபடி பக்திரூபாபன்ன ஜ்ஞானத்தைத் தந்தருளினாயாகையாலே "அத்யந்த பக்தி யுக்தாநாம் க சாஸ்த்ரம் வைஷ்ணவக்ரமம்" என்ற கட்டளையிலே துவக்கின்றோன் என்பதாம். "சோற்றும் கறியும் கட்டி அழுக்கொண்ட பெருங் காதலுக்குப் பத்தினை நல்லாபில்லையே" என்ற ஆசார்யஹ்ருதய நிஷ்யனிகியும் இதற்கு ஸம்வாதமாக அநுஸந்தேயம்.

"கிக்கமின்ற வெங்கும் கின்றுழி" என்றவிடத்திலே ஸம்ஸ்லேஷிப்பிடு;—"விழிச்சியையிலே தனக்கிடக்கப் புறம்போன் விங்குவாளைப்போலே காணும் இவர்படி" என்று. (அதாவது) உள்ளே நிதி இடக்கச்செய்தேயும் இவர் வெளியிலே சென்வர்பெற வேணுமென்று பார்ப்பர்; அதுபோலே ஆழ்வார் தம்மிடத்திலே அந்தர்யாமியாய்ப் பூர்ணனாயிருக்கின்ற பரம புருஷனை அநுபவித்து த்ருப்திபெறாதாட்டாதே பாஹ்யாநுபவத்திலே மநோரதத்தைப் பெருக்கித்தகன்கின்றார் என்கை. .... (கூ)

அறிக்தறிக்துதேறித்தேறி யானெனதாவியுள்ளே *
கிறைக்தஞானமூர்த்தியானை கின்மலமாகலைத்து *
பிறக்தும்செத்தும்கின்றிடறும் பேதைமைதீர்க்தொழிக்தேன் *
கறுத்தழாயிவ்வண்ணியம்மா! காதலுள்ளேக்கண்டுகொண்டே. (கூ)

கறுத்தழாயின் கன்னி அம்மா காள் உன்னை கண்டுகொண்டு	பரிமளம்மிக்க திருத்துழாய் மாலையையுடைய பெருமானே! கன் உள்ளே (மாதளைமுத்துக் காமாக) வேண்டப்பெற்ற	அறிக்த அறிக்த தேறி தேறி	உன்னுடைய உபயத்வத்தை யும் உபாயத்வத்தையும் என்று அறிக்த மிக்க தெளிவையுடையேனாகி

http://acharya.org

பண்டொருகாலத்தில் மலைகளெல்லாம் இறகுகளோடு கூடி வானத்திலெழுந்து நின்று காடுகரைகளுக்கு விநாசங்களை விளைத்திட்டனவென்றும், அப்போது தேவேந்திரன் தனது வஜ்ராயுதத்தினால் அம்மலைகளின் இறகுகளைத் துணித்து விழ்த்தனன் என்றும் இதிஹாஸங்கள் கூறும். எம்பெருமானால் துணித்து விழ்த்தப்பட்ட அசுரர்கள் அம்மலைகளோடு ஒப்பிடத் தக்கவர்களனைக் கொண்டு "உயிர்வீசிக்க மலைத்துண்டம் கிடக்தனபோல்" எனப்பட்டது. "வஜ்ராயுதத்தைக்கொண்டு வஞ்சனித்த பர்வதங்கள் இந்த்ரன் கையில் வஜ்ராயுதத்தாலே பல கூறும்படி துணியுண்டு கிடக்தாப்போலே அஸுரவர்க்கத்தைப்பல கூறும்படி துணித்துகந் தருளிற்று" என்பது நம்பிள்ளைபடி.

ஸுதர்சநாதகத்தில் "ஸுதமஸ்ய ஹதஸ்ஸுரஸைந்யா—க்ருதலகுதல ம்பத்ததாக" என்றதை நோக்குமவனில் நிருவாழியாழ்வான்தானே மலைகளைத் துணித்ததாக பற்படு கின்றதே! என்று சிலர் சங்கைகொள்வர்கள்; இதற்குப் பரிஹாரமாவது அந்த ஸுதர்சந சதகத்திலேயே "ஸாதிய-ஸுரைஷு-டஸ்த்ர-வவ்யாபார-வ்யதிரேகிதீ—சக்திர்யஸ்யேஷு தம்ஸ்ட்ராதக பரமுகவ்யாதீ." என்றருளிச் செய்த கலக்கிலே நிருவாழியாழ்வானுடைய சக்தியின் ஆவேசங்கொண்டே வஜ்ராயுதம் செய்த செயலாகையாலே இன்று வகையாகவும் சொல்லக்குறையில்லை யென்பதாம்.

நடம்புனலசடைமுடியன் தனியோகூறமர்ந்துறையு முடம்புடையான்=தன்னுடைய சோதத்வத்தைச் சிலகாலங்களிலே மறந்து தன்னிலேயே உச்வரனை அபிமானிக்கும் அஹங்கார ரூபனான ருத்ரனுக்கும் உடம்புகொடுக்குமெம்பெருமான் எனக்கு உடம்பு கொடுத்திலனென்னும் பின்னை இந்த உயிர் எனக்கு யாதுக்கு? என்கிறார். "உயிரினுல் குறைவிலம்" என்றது இந்த ஆத்மா தொலைந்து போகட்டுமென்றபடி. நித்யமான ஆத்மவஸ்து எங்ஙனே தொலைந்து போகுமென்று சோதிப்பர் செய்யவேண்டா; எம்பெருமானுடைய விருப்பத்திற்கு உட்படுவதே ஆத்மாவுக்குச் சிறந்த ஸ்வரூபம் என்று காட்டினபடி. ஆசார்ய ஹ்ருதயத்தில் "சேஷத்வ பதவிர்ப்பூதஸ்வாதந்த்ர்யாகாங்க்ஷயையும் வஹியாதார் ந்யாஸ்யோபாதேயை ஆதரியார்களே" என்றருளிச்செய்த ஸ்ரீஸூக்திபோல், மூமுக்ஷுப்படியில் "உயிரினுல் குறைவில மென்கிறபடியே த்யாஜ்யம்" என்றருளிச்செய்த ஸ்ரீஸூக்திபோல் இங்கு உணரத்தக்கது. (இ)

உயிரினுல்குறைவில்லா உலகேழ்தன்னுள்ளோடுக்கி *
தயிர்வெண்ணெயுண்டானேனத் தடங்குருகூர்ச்சடகோபன் *
செயிர்சில்சொல்லிசைமாலை ஆயிரத்துளிப்பத்தால் *
வயிரம்சேர்பிறப்பறுத்து வைகுந்தம்கண்ணுவரே. (கக)

http://acharya.org

உயிரினுல் குறைவு இல்லா ஏழ் உலகு தன்னுள் ஒடுக்கி தனிர் வெண் ணெய் உண் டானை } எண்ணிறந்த ஆத்மாக்களை யுடைய ஸமஸ்த லோகங்களையும் தன்னுடைய ஸங்கல்பத்திலே யடக்கிவைத்து தனிரும் வெண்ணெயும் அமுது செய்தவனை எம்பெருமான் விஷயமாக

செவிர் இல் இசை சொல்மாலை ஆயிரத்துள் இப் பத்தால் வியிரம் சேர் திறப்பு அறுத்த வரைருக்கம் கண்ணுவர் } நிருமமற்ற இசையோடு கூடின சொல்மாலையாயிய ஆயிரம் பாட்டினுள்ளே இத்தப்பிரகரணத்தினுல் உயர்வறவுயர்நல மெய்ரார்த்தத்தை அடியறுத்து பரமபதத்தை விட்டப்பெறுவர்.

நடம் குருகூர் சடகோபன்—;

* * *—[உயிரினுல் குறைவில்லா.] இருள் தருமாஞாலத்தில் பிறப்பைபறுத்துப் பரமபதம் பெறுதற்கு இத்திருவாய்மொழி ஸாதனமாயிருக்குமென்று பயனுரைத்துத் தலைக் கட்டுகிறது.

உயிரினுல் குறைவில்லா என்றது ஒரு நீவாத்மாவும் தப்பாதபடி என்றவாறு. "கெற்றி மேற்கண்ணனும் கிறைமொழிவாய் ரான்முகனும் சிவ்ட ரால்வாய், ஒற்றைக்கை வெண்பகட்டிலொருவனையு முள்ளிட்டவமரோடும், வெற்றிப்போர்க்கடலரையன் விழுங் காமல் தான் விழுங்கியுய்யக்கொண்ட" என்றும், "மண்ணுடும் விண்ணுடும் வானவரும் தாள வரும் மற்றுமெல்லாம், உண்ணுத பெருவெள்ள முண்ணுல் தான் விழுங்கி யுய்யக் கொண்ட" என்றும் திருமங்கையாழ்வாருளிச் செய்தபடியே இந்நின் றிழுவிசனென்கி வர்களில் ஒருவரும் தப்பாமல் என்றதாயிற்று.

உலகேழ் தன்னுள்ளோடுக்கித் தனிர்வெண்ணெயுண்டானை = இங்கே கம்பிள்ளோடு காண்மின்;—"தனிரும் வெண்ணெயும் களவுகாணப்புகுறபோது 'செருப்பு வைத்துத் திரு வடி தொழுவாரைப்போலே அப்பாதைக்கு உடலாகவொண்ணுது' என்று எல்லாலோகங் களுக்கும் வேண்டும் ஸ்வீதானம் தன் ஸங்கல்பத்தாலே செய்து பின்னையமிர்த வெண் ணெயமுதுசெய்தது." என்பதாம். "உலகேழ் தன்னுள் ஒடுக்கித் தனிர்வெண்ணெயுண் டான்" என்ற சொற்செறிவின் அழகை கோக்கி கம்பிள்ளை இங்ஙனே பருளிச்செய்தது இன்சுவையிக்கது. காலில் செருப்போடே கோவிலுக்குச் செல்பவர்கள் கோபுரவாசற் புடையிலே செருப்பை விட்டிட்டு உள்ளேபுகுந்து பெருமானே வேண்டுமானவிதாம் செரு பிலே நினைவு இடையருமல் செல்லுகின்றபடியாலே "ஸ்வாமின்! சித்தம் ஸாதிக்க; இருத்த மாய்ஸாதிக்க" என்னவேண்டும்போதும் 'செருப்புஸாதிக்க' என்பர்களாம்; எம்பெருமா னும் உலகங்களுக்குச் செய்யவேண்டிய ஸ்வீதானங்களைச் செய்யாமல் செய் தனிர் வெண் ணெய் களவுகாணப்புகுந்தால் இடையிடையே அந்த உலகினையும் உண்டாகி, செருப்பை வைத்துத் திருவடிதொழுத கதையாக ஆய்விடுமென்றெண்ணி, எல்லா லோகங்களுக்கும் வேண்டும் ஸ்வீதானங்களைத் தன் ஸங்கல்பத்தாலே செய்துமுடித்து அப்பாதைக்கு இட மாறத்தக்கொண்டு வெண்ணெயமுதுசெய்யப் புகுந்தானென்று ரஹஸ்யத்திருக்கிறபடி. "கர்ப்பிணிகள் வயிற்றில் பின்னைக்கிடாக போஜனாதிகள் பண்ணுமாபோலே உள்விழுங்கின லோகங்களுக்கு நீவனமாகத் தனிர்வெண்ணெயுண்டான்" என்ற நாட்டு ஸ்ரீஸூக்தியும் பர போக்யம்.

இப்படிப்பட்ட எம்பெருமான் விஷயமாக ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்தினிப் பத்தால் ஸம்ஸாரத்தை அடியறுக்கலாமென்றதாயிற்று.

வியிரம்சேர் பிறப்பு = வேண்டாவென்ன கழித்தாலும் விடாதபடிகாழ்ப்பு ஏறிக்கிடக் கிற ஸம்ஸாரம்.

செவிர் இல் = சொற்குற்றமும் பொருட்குற்றமும் இல்லாத என்றபடி. (கக)

எட்டாந் திருவாய்மொழி—உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

—— o ——

http://acharya.org

உரையவதாரிகை. ஈற்றிருவாய்மொழியில், உடம்பு வேண்டா, உயிர் வேண்டா, அது வேண்டா; இது வேண்டா என்ற ஆத்மாத்மீயங்களெல்லாம் வெறுத்து உதறித் தள்ளப்பார்த்தார். தள்ளினால் தள்ளுண்டு போகாவையோ அவை? பேற பெறுவதற்கு எப்படி அவன் கை பார்த்திருக்கவேணுமோ, அப்படியே முடிகைக்கும் அவன் கை பார்த்திருக்கவேண்டுகையாலே 'எம்பிரானே! என்னை நீதானே முடித்திடாய்' என்கிறார். ஆழ்வாருடைய ஆர்த்தி பேச்சுக்கு நிலமல்லாதபடி பெருமிடறை இத்திருவாய்மொழியிலே விளங்காகின்றது.

ஆழ்வாருடைய ஆர்த்திக்கு மூன்று நோதுக்களுண்டு; எம்பெருமானோடு கலவி பெறாமல் பிரிந்து படும் ஆர்த்தி ஒன்று; ஸம்ஸாரிகளோடு ஸஹவாஸம் பொறுக்க வொண்ணாத தசை அதனாலே வரும் ஆர்த்தி ஒன்று; இந்திரியங்கள் விஷயங்களிலே கொண்டுபோய் மூட்டி அரசாங்கமே நிர்வஹிக்கையாலே அதனாலேவரும் ஆர்த்தி ஒன்று. இவற்றுள் எம்பெருமானுடைய பிரிவினால் வந்த ஆர்த்தி ஈற்றிருவாய்மொழியிலே கண்டது. இந்திரியங்களால் வரும் ஆர்த்தி மேலே "உண்ணிலாவியலைவரால்" என்கிற திருவாய்மொழியிலே காணலாகும். ஸம்ஸாரிகளினிடையே ஸஹவாஸம் பொறுக்கவொண்ணாமையாலாகும் ஆர்த்தி இத்திருவாய்மொழியில் காண்பதாகும்.

எம்பெருமானைக் காணப்பெறுகிறோம், எம்பெருமானைக் காணப்பொறாத பாவிகளின் இடையிலே இருப்பவது இல்லாமலிருக்குமானால் ஒருவாறு ஆறியிருக்கலாம். அப்படியல்லாமல் உண்டியே உடையே உகந்தோடுமிம்மண்டலத்தினிடையிலே இங்ஙன விபரீத மான லோகயாத்ரைகளைக் கண்ணாலே கண்டு கொண்டு இருப்பதென்றால் இது ஆழ்வார்க்கு நெஞ்சாலே நைந்திக்கத்தக்கதாகுமே?

(நிருமங்கையாழ்வார் "மருவினிய தண்துழாய் மாலைமார்பா தலையனைத் தாழ்வரைதோள் வண்ணனே பிரப்பாயினைப்பொழுது மென்னுளனே" என்றும், "கண்ணனென் கண்ணை மல்கை நகரானன் கழல்சூடி அவனியுள்ளத்து வண்ணனை மாலிடத்தை வெண்ணெயதோதெல்லாம் இலியவாறே" என்றும் அருளிச்செய்தார். இதனால் தோறுவது என்ன? எம்பெருமானைச் சிந்திக்கையாகிற பேறுவிடைக்காதொழியினும் எம்பெருமானிடத்திலே அன்பில்லாத பாவிகளைப் பற்றினால் நாம் மனிதப்பிறவி பெற்றது என்பதாம்.)

ஸ்ரீ விபீஷணாழ்வான் "இராமபிரானது கோஷ்டியிலே நமக்கு ப்ரவேசம் கிடைக்கட்டும்; கிடைக்காமற் போகட்டும்; மறைபாயினோன இராவணனுடைய கண்வட்டத்தில் நின்றும் எழுந்து அப்பால் சென்றால் போதும்" என்று துணிந்து "உத்பபாத தாபாணி: சதுர்ப்பிஸ்ஸஹ ராக்ஷஸை:" என்கிறபடியே படக்கென எழுந்து சென்றதுபோல, ஆழ்வாரும் இவ்விருண்ட ஸம்ஸாரமண்டலத்தில் நின்றும் படக்கென வெழுந்து செல்லத்துணிவு கொண்டாலும், அது நம்முடைய இஷ்டப்படி நிறைவேறுவதன்றே; எம்பெருமான் திருவுள்ளத்திலுகக வேண்டிய தன்றே இது. ஆகையாலே "உனக்கழற்கே வரும்பரிசு பணிகண்டாய் சாமாறே" என்றும், "கூமாறே நினைகண்டாய் குடிவேலைக் குறிக்கொண்டே" என்றும், "கோட்டையிலிற் கழித்தென்னை உன் கொழுஞ்சோதியுலகத்துக் கூட்டிய திருவடிக்கண் ஈஞ்ஞான்று கூட்டுதியே" என்றும் அளவற்ற ஆர்த்தி தோற்றப் பேசுகிறார்.

http://acharya.org

வாய் கூசுகிறதுமுண்டாகையாலே நாக்குழறுகிறபடி. தன் பொருளாகிற வழி நலமெல்லாம் வெளவுகிற = வரம் தருகிறதாகிற பந்துரசத்தை ஸ்வயமாகப் பருகி: தன்னோடு சிநேகமுடையனாம் வாசை யெல்லாம்." என்கிற ச்லோகம் இங்கு அநுஸந்திக்கத்தக்கது. இதன் பொருளாவது—பற்றியெரிகிற நெருப்பினிடையே வாழ்ந்தாலும் வாழலாம்; எம்பெருமானேச்சிக்கை செய்ய அறியாத பாவிகளுடனே கூடியிருத்தல் கூடாது என்பதாம்.

இத்திருவாய்மொழியின் அவதாரிகையை எம்பார் ஒருவகையாகவும் ஆழ்வான் ஒரு வகையாகவும் வேறிப்பர்களாம். எம்பார் வேறிப்பதாவது—மேலே விவரித்தபடி, "உன்னியொழியப் புறம்பே பேதமிழுமையிருக்கிற ஸம்ஸாரிகள் நடுவேயிருக்கிற கிருப்பால் படுகிற க்லேசமானது உன்னிப்பிரிந்திருக்கப்படுகிற க்லேசத்தனவல்ல; உன்பிரிவை ஒருவாறு ஆற்றலாம்; இந்த மஹாபாபிகளான ஸம்ஸாரிகளினிடையிலே இருப்பதான இந்த க்லேசம் ஒரு விதத்தாலும் ஆற்றப்போகவில்லை; ஆகையால் இவ்விருப்பைத் தவிர்த்தருள வேணும்" என்று சொல்லிப்பதாக எம்பாருடைய வேறுகை.

ஆழ்வானுடைய வேறுகை:—தம்முடைய ஆற்றலைக்கு ஸம்ஸாரிகளில் ஆரேனும் கூட்டாவாருண்டோவென்று லோகயாத்ரையிலே கண் வைத்தாராழ்வார்; தமக்கு பகவத் விஷயத்திலே எல்லாரு ப்ரவண்யமோ அதற்கு மேற்பட்ட ப்ரவண்யம் அவர்களுக்கு சப்தாதி விஷயங்களிலேயாயிருந்தது. தாம் பகவத் விஷயத்திலே இழவாளராய் நோவு படுகிறப்போலே அவர்கள் விஷயாந்தரங்களிலே இழவாளராய் நோவுபடுவது கண்டார்: வாளேறு கண்டவர்க்குத்தேளேறு மாய்வது போல, (அதாவது, ஒருவன் தேன் கொட்டி கொக்குவாரா நிற்க மதிமே யொருவன் வாளால் வெட்டுப்பட்டு மொக்க வந்தால் அத்தப் பெரு நோவைக் கண்டவாறே தேன் கொட்டினை நிறுவோன மனிதராபோல) ஸம்ஸாரிகளின் பேரிழவிலே ஆழ்வாருடைய ஆர்த்தி அளக்கலாமாயிற்று. (அதாவது) தம் இழவை மறந்து இவர்களுடைய இழவையே நிரூபணத்திற்கொண்டார்; உடனே எம்பெருமானை நோக்கி "ஸ்வாமின்! இவர்களே இப்படித் துடிக்கவிட்டிருக்கலாமோ? ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாயிருக்கிற நீ இவர்களைக் கரைமரம் சேர்த்தேயாகவேணும்" என்று ப்ரார்த்தித்துத் திருவடிகளைப் பிடித்துக்கொண்டார்; "இவர்கள் அநேதனங்களன்றிக்கே சேதநராகையாலே இவர்களுக்கும் நிறை நரியுமன்டாகியே நீயேணுக்காணும்" என்று எம்பெருமான் அருளிச் செய்தான்; அதுகேட்ட ஆழ்வார், "ஸ்வாமின்! சேதநர்களென்ற பேர்மாத்திரமாய் அசேதந ப்ராயங்களான இந்த ஜடங்கள் விஷயத்திலே இப்படியே திருவுள்ளமாகலாமோ? அவையும் திருவுள்ளமிரக்கியருளவேணும்" என்று ப்ரார்த்திக்க; எம்பெருமான் சொன்னான்—"ஆழ்வீர்! இவர்களே அசேதனங்களாக நான் எப்படிக் கொள்ளமுடியும்? இவர்கள் உண்டி உடை முதலானவற்றைக் கொள்ளாமலிருக்கை; அவற்றிலே வல்லது நியதமாக ஆசாச்சி செய்ய வல்லவர்களாயிருக்கின்றார்கள்; அப்படிப்பட்ட இவர்கள் விஷயார்த்தங்களிற்காட்டிலும் நம்முடைய வசனை அறியாதேயிருக்கார்களென்றும், இவர்கள் தொலைத்து பேசுகிறபடியே தொலைத்து போகட்டும் என்று கைவிடுவதனில் வேறு நம்மால் செய்யலாவதுண்டோ? இப்பாவிகளோப்பற்றி நமக்கு கவலையை நீரும் விட்டிடும்" என்றான். அதுகேட்ட ஆழ்வார், "ஸ்வாமின்! ஆகில் இப்படிப்பட்டவர்களின் நடுவே என்னை என் வைத்திருக்கிறாய்? இவ்விடத்தில் நின்றும் என்னை முன்னம் வாங்கவேணும்" என்ன; "ஆழ்வீர்! உம்மை முன்னமே வாங்கிவிட்டேன் காணும்; ஸம்ஸாரிகளோடு பொருந்தாதபடி உம்மைச் செய்தவைத்திருக்கிறேனல்லவா? இவ்வுலக யாத்ரையைச் சிந்தித்ததனால் உமக்குண்டான க்லேசமெல்லாம் நீங்கும்படி ஒன்று காட்டுகிறேன், காணும்" என்று சொல்லிப் பரமபதத்திலே அபரிவர்த்தமான கள் அடிமைசெய்யப் பெரிய பிராட்டியாரும் தாமுமாக இருக்கிற விலக்ஷணமான திருப்ப

http://acharya.org

எம்பெருமான் காட்டிக்கொடுக்க, "ஒண்டொடியாள் நிருமகளும் பூமேல் மலரிற்பக்கண்ட சதிர்கண்டொழிந்தேன் அடைந்தேனுள் நிருவடியே" என்று அநுஸந்தித்துத் தரித்து க்ருதார்த்தராய்த் தலைக்கட்டுகிறார்—என்பதாம்.

இங்கு ஆழ்வானைப்பற்றி ஓர் இதிஹாஸம் எட்டில் அருளிச்செய்யப்படுகிறது;—ஆழ்வான் ஒரிடத்தே வழிபோகாமற்க ஸர்ப்பத்தினால் பிடிக்கப்பட்ட தவளை கூப்பிடாமற்க. இது ஆறியக் கூப்பிடுகிறதோ! என்று மோஹித்தராம். "அரவவாய்க் கோட்பட்ட மண்டுக வெளிகேட்டு மநிலெல்லாமுள்கலங்கி மயங்கி நின்ற பெருமானுர்" என்று பின்புள்ளாரும் பேசினர்கள் .... (*)

கண்ணநார்முறுவலிப்ப கல்லுற்றுர்கரைக்தேங்க *
எண்ணரார்த்துயர்விளைக்கும் இவையென்னஉலகியற்கை? *
கண்ணனார்!கடல்கடைந்தாய்! உனகழற்கேவரும்பரிசு *
தண்ணநாதடியேனைப் பணிகண்டாய்சாமாறே. (க)

கண்ணநார் முறுவலிப்ப கல்லுற்றுர் கரைந்து ஏங்க என்ன ஆர் துயர் விளைக்கும் இவை உலகு இயற்கை என்ன	பகைவர்கள் மகிழ்ந்து சிரிக்கவும் கல்லும் உறவினர்கள் மனமுருகிவருந்தவும் எண்ணுறுதியாத துன்பங்களை விளைக்கின்ற வையாள இத்த லோகயாத்ரைகள் என்ன!	கண் ஆரா கடல் கடைந் தாய்	தயாளுவே! (தேவர்களுக்கு அமுத மளிக்கக்) கடலைக் கடைந்தவனே!
உன கழற்கே வரும் பரிசு தண்ணநாது அடியேனை சாம் ஆறு பணி	உனது திருவடி வாரத்திலேயே தான் வந்து சேரும்படி காலதாமதமின்றியே அடியேனை மரணமடையும்படி அருள் செய்யவேணும்;		

கண்டாய்—முன்னிலையசை

* * *—எம்பெருமானே! ஸ்வரஸமாக ஸமைத்தருளி ஸ்வகிங்காரஸுகத்தை நீ பிறக்க, இந்த ஸம்ஸாரிகள் அனவுகடந்த துயரக்கடலை வருபவித்துக்கொண்டிருக்குமிருப்பு கண்டு என்னால் பொருத்திருக்க முடியவில்லை; இவர்களுடைய ஆர்த்தியைத் தீர்ப்பதோ, அன்றி இவர்களுடைய இழவை நான் பிறக்கவொண்ணாதபடி பண்ணி முடிப்பதோ செய்யவேணும் என்கிறார்.

உலகத்தில் ஒவ்வொருவர்க்கும் பகைவர் என்று சிலரும் நண்பர் என்று சிலரும் இருப்பர்களே; ஒருவனுக்கு ஓர் ஆபத்து நேர்ந்தால் 'அந்தோ! நேர்ந்ததே!' என்று அனைவரும் கூடி வயிறு பிடிக்கவேண்டியிருக்க, சிலர் உகந்து சிரிக்கும்படியும் சிலர் வருந்தும்படியும் மாவதே! என்று லோகயாத்ரைக்கு வருந்துகிறாழ்வார், இங்கு ஊட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;—"ஒருவனுக்கு ஓர் அநர்த்தம் வந்தவாறே அற்றைக்கு முன்பு வெற்றியே நின்றறியார் களேயாகிலும் அன்றாக ஒரு வெற்றியே தேடித்தின்பது, ஓர் உறுப்புவாங்கியுடுப்பது, சிரிப்ப தாகா நிற்பர்களாயிற்று."

எண்ணரார்த்துயர்விளைவை—கண்ணநார் முறுவலிப்பதும் கல்லுற்றுர் கரைந்து ஏங்குவதுமாகிய எல்லாம் ஆழ்வார்க்கு எண்ணரார்த்துயராகத் தோற்றுகின்றது. எல்லாரும் எம்பெருமானையே பரமபக்துவாகக் கொண்டு அவனுக்கு ஒரு துன்பம் வந்தால் கரைந்தேங்கவும், அவனுக்கு இன்பம் மிகுந்தால் குதூகலிக்கவும் ப்ரஸக்தமாயிருக்க, ஆபாஸபக்துக்களுக்காகச் சிலர் வயிறு பிடிப்பதும், பகைமை பாராட்டிச் சிலர் முறுவலிப்பதும் ஆழ்வார்க்கு அஸஹ்யமாயிருக்கிறது.

தி 9.—31.

http://acharya.org

* ஸதைகரூபரூபாய * என்கிறபடியே எப்போதும் ஒருபடிப்பட்டிருக்கிற எம்பெருமானுக்கும் துன்பம் கிடையாது இன்பம் மிருவதும் உண்டோவென்னில்; மங்களாசாஸனபரர்களுடைய கருத்தாலே உண்டென்க. அசுரர்கள் தலைப்பெய்யில் வவ்வுகொளாவென்ன ஆழுமென்னுமிர்" என்னும் "அவத்தங்களிடையும் என் சொற்கொளுந்தோ!" என்னுமுள்ள பாசுரங்களே கிடைப்பது.

இவையென்னவுலகியற்கை!=அவரவர்களுக்கு லாபநஷ்டங்கள் உண்டாகிலோ காதே புறம்போயாம்படி இப்படியொரு லோகயாத்ரையைப் பண்ணிவைப்பாயோ பெருமானே! என்கிறார்.

"தான் பண்ணிவைத்ததுண்டோ? அவரவர்கள் பண்ணின கருமங்களின் பலன் தொடர்ந்து வருகிறதித்தனையன்றே; நம்மால் வந்தது ஒன்றுமில்லை காணும்" என்ன எம்பெருமான் திருவுள்ளமாக; கண்ணுளா! கடல்கடைந்தாய்! என்ன அவன் தெளிலேபடும்படி கிளிக்கிறார். அவரவர்கள் பண்ணின கருமங்களின் பலனே அவரவர்கள் அநுபவித்தே போவதாகில் உன்னுடைய க்ருபைக்கு இலக்குத்தான் எங்கே? என்கிறார் கண்ணுளா! என்பதனால். க்ருபையுடையவனைக் கண்ணுடையவனென்பர்களே. உன்னுடைய க்ருபைக்கு இலக்காக்க வேண்டியவர்களே கிடைக்கு விஷயமாக்கலாமோ ப்ரானே! என்கிறார். [கடல் கடைந்தாய்] உன்வடிவழகிலே சிறிதும் கண்சென்றமாட்டாதவர்களும், ப்ரயோஜநாந்தரமே கண்ணாயிருப்பவர்களும், காரியம் தலைக்கட்டினவாறே உன்னுடனே எதிரம்பு கோப்பவர்களுமான தேவர்களுக்குச் சாவாமருந்து கொடுப்பதற்காகத் திருமேனி தோலக் கடல் கடைந்தவனல்லியோ நீ.

"ஆழ்வீர்; தேவர்களுக்கு நாம் காரியம் செய்ததல்லோ; அவர்களுக்கு இச்சையாவது இருந்தது; அதுவுமில்லாதவர்களுக்கு என்னால் செய்யக் கூடியது ஒன்றுமில்லையே!" என்ன எம்பெருமான் திருவுள்ளமாக, ஆகில் இவர்கள் கடுவேகிரஸபடி என்னை உன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளவேணுமென்கிறார்; 'உனகழற்கே வரும்பரிசு' என்னும்போதே, அப்படியே செய்கிறேனென்ன எம்பெருமான் தலைதூக்க, ஆகட்டுமாகட்டுமென்ன தலையாட்டும்படியாயோ என் கிடைமையுள்ளது; இவிக்காலதாமதம் செய்யலாகாது என்கிறார். தண்ணுவாது—விளம்பம் செய்யாமல்; தண்ணுத்தல்—தாமதித்தல்.

சாமாறுபணி=சரீரம் மூடிந்ததாம்படி பார்த்தருள் என்கை. சரீரவியோகத்தாலே மோக்ஷமென்ன சொல்லுகிற மதாந்தரங்களைப் போலன்றியே, நித்யகைங்கர்யம்பண்ணி ஆனந்திப்பதே மோக்ஷமென்று உறுதிகொண்டிருக்கிற ஆழ்வார் இப்போது சரீரவியோகமந்த்ரத்தைப் பண்ணிக்கொடுக்கும்படி ப்ரார்த்திப்பதாவதெங்ஙனே? இக்கொடியவர்களின் கடுவேகிருக்கிற இருப்புத் தவிர்த்தால் போதும் என்பது இப்போதைய கிடைவு போதும். (க)

சாமாறும்கெடுமாறும் தமருற்றுத்தலைத்தலைப்பெய்து *
ஏமாறிக்கிடந்தலற்றும் இவையென்னவுலகியற்கை *
ஆமாறென்றறியேன்கொல் அரவணையாயம்மானே!
கூமாறேவிரைகண்டாய் அடியேனைக்குறிக்கொண்டே. (உ)

சாம் ஆறும் கெடும் ஆறும் தமர் | நிகரென்ற மாண மடைவதும் பல்வகைக்கஷ்டங்களையடைவதும் (இதற்காணமாக) தாயாதிகளும் | உற்றுர் தலைத்தலைப் பெய்து } உறவினர்களும் ஒருவர்க்கொருவர் மேல் விழுந்து

http://acharya.org

ஏமாறி இடத்து அஞ்சும் இலை உலகு இயற்கை என்ன } எல்லிக்கிடத்து கதறும் படியான இந்த லோக யாத்திரைகள் எல்லே!

அரவு அணை யாய் அம் மானே! } சேஷசாயியான ஸ்வாமியே!

கான் அடியேன்

அஞ்ச ஆய ஒன்று அறி யேன் } உபாயாந்தரங்களைச் சிறிது மறி கின்றிலேன்;

அடியேனை குறிக்கொண்டு கூம் ஆறு விரை } இப்படிப்பட்ட அடியேனை திருவுள்ளம் பற்றி (திருவடிவாரத்திலே) அழைத்துக் கொள்ளும்படி விரைந்தருளவேணும்.

* * *—கீழ்ப்பாட்டில் "என்னரசாத்தியர்" என்று ஸாமாந்யமாகச் சொன்னதைச் சிறிது விவரித்து, இப்படி இவர்கள் படுகிறதுக்கெல்லாம் போக்கியருளமாட்டாமலிருக்கிறபடியாலே நான் நமக்கு உன் திருவடிவாரத்திலே அழைத்துக்கொண்டருளவேணுமென்கிறார்.

சாமாறும்—வெகுகாலங்கழித்திருக்கப்போகாதாகப் பார்த்திராகிற்கையில் இடி விழுந்தாற்போலே நடுவென்று ஸம்பவிக்கிற மரணமும். இவ்விடத்தில் "ஸாதி மஹிஷீ தீம விஷ்ணு ஸ்வாதம் வாஸ்ய நஷ்டதனஷ்டி வாலிஷ்டி கங்கஸ்ரீ! உதம் விநியதி கோபமதித தினமை வஸ வதனனன! தவி தீம ஸஹ உஷ்ட்ரா=ராத்ரிச் சிமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம் பாஸ்யாநுதேஷ்யதி ஹலிஷ்யதி பங்கஸ்ரீ:, இத்தம் விசிந்தயதி கோபமதே தவிரேபே நராதநத்! நநத்! கலீம் கநு யத்ஸரா." என்கிற ச்லோகம் காணத்தக்கது. (இதன் கருத்து.) ஒரு வண்டானது மாலைப்பொழுதில் ஒரு தாமரை மலரினுள்ளே புகுந்து மதுபருகத்தொடங்கியது; ஸூரியன் அஸ்தமித்தவாறேயாய் மூடிக்கொண்டது; இரவெல்லாம் வண்டு அதனுள்ளேயே இடக்கவேண்டியதாயிற்று; விடக்குப்போது, இரவுகழிந்து போழுதுவிடியப்போகிறதென்றும் தாமரை மலரப் போகிறதென்றும், உடனே இளம்பிச் சென்று குடும்பங்களோடே சேர்ந்து களிக்கப்பெறலாமென்றும் பாரித்துக்கொண்டிருந்தது; இருக்கையில், ஒரு காட்டானை நடுவென்று அத்தாமரையோடுவிழுங்கி அவ்வண்டையும் வேர் பரியாகப்பறித்துக் கபளீகரித்திட்டது என்னுமிது. இத்தக்கணக்கிலே மனிசர்களுக்கு நேரும் மரணத்துள்ளல்களும் பலபல.

கெடுமாறும்=பிறரைக் கெடுக்கவேணுமென்ற கோலிருக்குமவர்கள் தங்களை கெட்டுப்போகிற விதங்களும் பலபல. ஒரு கள்வன் பிறர்மனையிலே புகுந்து திருவெதாகச் சென்றான்; அங்கே அவ்வீட்டுக்காரர்களிலே விழித்துண்டு பரிபவங்கள் பட்டுக்கிடக்கின்றான்; அதுமன்றியில் மற்றொரு கள்வன் இவன்றன் வீட்டிலே புகுந்து மற்றையிலே இவன் பலகாலமாகக் கஷ்டங்கண்டு நிரப்பிவைத்திருந்த பொருள்களோவென்னாமல் கவர்ந்து சென்றான். இப்படியாக எனக்கு கெடுமாறன் வாசாயமோகாண்.

[தமருற்றார் இதயம்.] ஆழ்வார்க்குத் தாய்களும் ஸ்ரீவைஷ்ணவர்களேயாயிருப்பர்கள். உலகர்கள் சரீரஸம்பந்தத்தைப்பற்றிச் சிலரை ஜ்ஞாதிகளென்றும் ஸம்பந்திகளென்றும் நினைவிப்போலுள்ளார்கள். அப்படிப்பட்ட உறவினர்கள் கீழ்ச்சொன்ன காலங்களிலும் கேடுகளிலும் மேல்விழுந்து இடர்த்த கூப்பாடு போடுவர்கள். ஆக இப்படிப்பட்ட உலகியற்கை என்னே! கெடுகை ஒழிக்க மகோதாரியான கிருஷ்ணனில் முழுகுற, சதுரகர் கையிலேயுண்டானவர் போல 'இது நமக்கு உண்டு' என்றிருக்க அது கெட்டுப்போனது, தேஹாத்மாபிமானமே தமக்கு மூலனித பந்துவாக நினைத்து இவற்றுக்கு முன்னிலையாரே 'பட்டேன்! கெட்டேன்!' என்று கூப்பிட்டு அலற்றுகிறது, ஆகை இவையொரு சோகவசனமே என்று ஆச்சரியப்படுகிறார் இதில்.

http://acharya.org

இப்படிப்பட்ட ஆழ்வாரை நோக்கி ஸ்ரீமந்நாராயணன் "ஆழ்வீர்! இவ்வுலகு உம்மைக் கண்டால் உமக்கென்ன? அவர்களைப்போல் அலற்றும்படியான நிலைமையில் உம்மை நான் வைத்திருக்கவில்லையே; என்னைச் சொல்லியலற்றும்படியாகவன்றே உம்மை நான் வைத்திருப்பது; நடாதே கொண்மின்" என்றருளிச்செய்ய; ஆமாறு ஒன்றறியேன் நான் என்கிறார். இந்த ப்ரக்ருதி மண்டலத்திலே என்னை வைத்திருக்கிறபடியாலே இது என்னை இவி எப்படி படுத்துமோவென்று மிக அஞ்சுகின்றேனென்கை. இந்த ஸம்ஸாரிகளுக்கும் உன்னோடு உறவு முறையற்றிருக்கவும் ப்ரக்ருதிக்கு வசப்பட்டிருத்தலாலன்றே உன்னை மிழக்க படுகிறார்கள்; அந்த ப்ரக்ருதியின்தாளை நீ என்னையும் வைத்திருக்கிறது; "ஆற்றல் கரை வாழ்மாப்போல் அஞ்சுகின்றேன்" என்றும், "காற்றத்திடைப்பட்ட கலைச் மனம் போல் ஆற்றத்தளர்கின்றன்" என்றும், "பாய்போடொரு கூரையிலே பனிதுற்போல் நாக்காதுன்னம் தன்னும்" என்றும், "இருபாடெரி கொள்ளியினுள்ளெறும்பேபோல் உருகா நிற்குமென்னுள்ளம்" என்றும் ஞானிகள் கதறுவேண்டுப்படியான நிலத்திலே என்னை வைத்திருக்கையாலே இந்த ஸம்ஸாரிகளைப்போலே எனக்கும் என்ன ஆருமோ! என்று அஞ்சவேண்டுப்படியாயிராகின்றதே! என்றவாறு.

"ஆமாறென்று அறியேன் நான்" என்ற கிடத்தில் இன்னுருக்கு என்றில்லாமையாலே, இந்த ஸம்ஸாரிகளுக்கு ஆமாறு என்று அறியேன் என்றமுகைக்கலாம். இவர்களுக்கு இத்துயரம் நிக்கும் வழி அறிகின்றிலேன் என்க.

அரவு அணையாய்!= திருவனந்தாழ்வானெருவனையே * சென்றுற்குடையாயிருந்தால் நிக்காசனமாம் இத்யாதிப்படியே கைகலந்த கைங்கர்யங்களுக்கும் உரியவனாகக் கொள்ள வேறுமென்றொரு நிர்ப்பந்த முண்டோவென்று கேட்கிறபடி.

கூமாறு—கூவாதாறு என்றபடி. என்னை நீ அழைத்துக்கொள்ளுர்படியாக என்கை. இவ்விபூதியிலே இல்லாதே கதறுகிறவன் வாளெருவனே யன்றது வேறெருவனுமில்லை; ஆகையாலே என்னைப்பற்றி விசேஷித்துத் திருவுள்ளப்பற்ற வேறுமென்கிறார் அடியேனைக் குறிக்கொண்டே என்ற. .... (உ)

கொண்டாட்டமேக்குலம்புணைவும் தமருற்றுர்விழுங்கியும் *
வண்டார்பூங்குழலாரும் மனைவோழ்வுமெயிர்மாய்தல் *
கண்டாற்றேனுலகியற்கை கடல்வண்ணு! அடியேனை *
பண்டேபோல்கருதாது உன்னடிக்கேகூய்ப்பணிகொள்ளே. (ஊ)

கொண்டாட்டம்	(புதிதாகச் சில் எதிட்டுச் செய்கிற) கொண்டாட்டமும்
குலம் புணைவும்	இல்லாத குலத்தை எதிட்டுக் கொண்டு அலங்கரிப்பதும்
தமர்	தாயாதிகளும்
உற்றார்	உறவினரும்
விழுங்கியும்	அளவற்ற செல்வமும்
வண்டு ஆர் பூ குழலாரும்	வண்டுகள் படிந்த பூக்கள் நிறைந்த கூந்தலையுடைய மனைவியும்
மனை	வீடும் (ஆகிய இவை)
வாழ்வு	நன்னெனிட்டு வீக்க
உயிர் மாய்தல்	(இடைவின்று) இறக்கு போவதாகிற
உலகு இயற்கை கண்டு	இந்த லோகயாத்திரையைக் கண்டு
ஆற்றேன்	வைரிக்கமாட்டேன்;
கடல் வண்ணு	கடல் வண்ணனை எம்பெருமானே!
அடியேனை	அடியனை என்னை
பண்டே போல் கருதாது	இத்தனை காலம்போல் நினைத்திராமல்
உன் அடிக்கே கூய்	உன் திருவடிவாரத்திலே அழைத்துக் கொண்டு
பணி கொள்	அடிமை கொண்டருளவேணும்.

* * *—இப்பாசுரத்திற்கு நாற்பத்தாருயிரப்படி. ஸ்ரீமன்நிகமாந்த மஹாதேசிகன் இவ்வைவையே வழிவெடுத்தவை. ஆசார்யர்களுக்கு சரம்ப்ரார்த்த நிகழ்வைகளிற்போலவே லோகரீதி வர்ணிக்கலிலும் வல்லமை விளக்கத்தக்கதென்று அம்மஹாசார்யரான அழகிய மணவாளச்சீயர் அருளிச்செய்யும்படி.

http://acharya.org

கொண்டாட்டும் = முன்பு இன்னானென்ற தெரிந்துகொள்ள முடியாதபடி அபதாரத்த மாய்க் கிடந்தவொருவன் சாதுகாக வைப்பட்டவாறே சாதுபேர்களால் கொண்டாடப்படு வனும்; அப்படிப்பட்ட கொண்டாட்டமுர்.

குலம்புகுவும் = சாதுபேர்கள் கொண்டாடத் தொடங்கினவாறே தாம் அவதி யாகவே பெரிய உற்குடிப்பிறப்புடையார் என்று காட்டிக்கொள்வதற்காக 'இன்ன திரு வம்சம்' என்று எரிட்டுக்கொள்ளப் புகுவர்களாம்; அங்ஙனே பொரு குலத்தைத் தொடுத்துக் கொள்வதும்.

தமர்—எற்கனவே தாயாதிகளாயிருந்தாலுங்கூட 'இவனுடைய தாயாதியாக நாங்களே சொல்லிக்கொள்வது எங்களுக்கு இறக்கேடு' என்று விட்டுத் தொலைவர்கள்; அப்படி விடப்பட்ட வன்தானே சிறிது செல்வம் பெற்றவாறே தாயாதிகளல்லாதாருங்கூட 'இவனுடைய ஞாதிக ளாக நாமைச் சொல்லிக்கொள்ளுதல் பெரிய மேன்மை' என்று நினைத்து 'இவனும் நாங்களும் ஒரே குடும்பம்' என்று சொல்லி அணுகிப்போருவர்கள்.

உற்றார் = பெண்கொடுத்தல் கொள்ளுதல் முதலிய ஸம்பந்தங்கள் செய்து கொள்வதற் குத் தகுதியற்றவன் என்று முன்னம் கைவிடப்பட்டிருந்தாலும் இப்போதாக உறவுக்கு மேல்விழுகிறபர்களாம்.

விழுமியும் = சாதுகாக சேர்த்தமிடத்தே மேன்மேலும் பத்தெட்டு காகைகள் வந்து சேருமே; அப்படியே சேர்த்துசேர்த்து பெரிய செல்வமாகும். அந்தச் செல்வத்திற்கு ஒரு விநியோகம் வேணுமே.—(இங்கே சற்றின்னிலிடு;—) "இனிமேன்மேலே பிறருக்குச் செய்தே சருகிலே நேரமாப்போமே பெரிய நிதியை கைப்புருளுமே; அதுக்குப் போக்கடிகாணுமை யாலே செய்வதுபியாமை அத்தையிட்டு ஒரு ஸ்தாபனம் பண்ணுகிறுர்; அவன் தான் *வண்டார் பூங்குழலாளையிற்று; இவன் செய்கினை வண்டே புரித்துப் போகித்தலே போக்கித் தான் புரிக்கமாட்டான். லோகயோக்கியதை பில்லாத பருவத்திலேயாயிற்று பிகோரிப்பது."

மனையொழிய உயிர்மாய்தல் கண்டு = ஆயுளும் தானுமாய் எகாக்தமாக இருக்கைக் கென்று ஒரு மாடமாளிகையைப் பல வேலைகள் கட்டுவிப்பன்; ஆக இவை யெல்லாவற் றையும் விட்டு ஒருகால் நிடீரென்று மரணம் சேர்ப்பட, அப்போதையப் சிர்வேதங்கள் கண்டு பொறுக்கவொண்ணுதனவையாயிருக்குர். இதுவரையில் ஒருவாறு இவ்விளிப்புகளே பெல்லாம் கண்டு பொறுத்திருந்தேனுகிலும் இனி ஒரு கொடிப்பொழுதும் ஆற்றவில்லே ஞாலம் விரைந்து அடியேனேத் திருவடி சேர்த்துக்கொள்ளவேணு மென்றாயிற்று. (ரு)

கொள்ளென்றுளங்கொழுத்த பெருஞ்செல்வம்கெருப்பாக *
கொள்ளென்றுதமம்மூடும் இவையென்னவுலகியற்கை ! *
வள்ளலே ! மணிவண்ணு ! உனகழற்கேவரும்பரிசு *
வள்ளல்செய்துடியேலே உனதூளால்வாங்காயே. (ச)

கொள் என்று இளைத்த எழுந்த } 'எல்லோர்க்கொள் எல்லோர்க் கொள்' என்று மேன்மேலும் பெருகித் தோற்றுகிற
பெரு செல்வம் பெரிய செல்வமானது
கெருப்பு ஆக { கெருப்புப்போல் வருகல வாசல் பண்ணுகிற்கச் செய்தேயும்
(அதில் கவச மொழியாமல்)

கொள் என்று } தன்தன் செல்வத்தையே மேன் மேலும் கொள்ளுமிடியாக
தமம் சூழும், இவை உலகு இயற்கை என்ன } தமோ குணம் மேவிட்டுச் செல்லு கின்ற இந்த லோகங்களுடைய கிருத்தமடி என்னே!
வள்ளலே மணிவண்ணனே!

நி 9.—32.

http://acharya.org

மணி வண்ண நீலமணிவண்ணனே,
உன தடிநிலை உன் திருவடிவாரத்திலேயே
வரும் பரிசு வந்து சேரும்படி.
அடியேனை அடியேன் விஷயத்தில்

வள்ளல் செய்து-ஔதார்யத்தைக் காட்டி
உனது அருளால்-உனது பரம கிருபையாலே
வாங்காய் வைக்கொண்டருளவேணும்.

* * * [கொள்ளென்ற கிளர்ந்து.] ஐச்வர்யமானது அகர்த்தவ்யம் என்பதைக் கட்டுகாகக் காணுமிற்கச்செய்தேயும், பின்னையும் மேல்விழுந்து அதிலே மனை பண்ணிப் போருகிற லோகயாத்ரையைக் காணப்போகிறதில்லையே! என்கிறார். கொருப்புக்கு ஆச்ரயாசம் என்ற பெயர்; தனக்குப் பற்றுக்கோடான இடத்தையே கபளீகரிப்பது கொருப்பின் இயல்பு; அதுபோலவே செல்வமும் தான் பற்றுகிற இடத்தை வேரோடே அழிக்கவல்லது என்பதைக் கண்ணுக்காணுமிற்கச் செய்தேயும்—என்பது முதலடியில் கருத்து. செல்வம் விஞ்சி ஜீவிக்கப் பெறாதவர்களே அச்செல்வமே காரணமாகப் பொருமையாளர்கள் நெறிமுறை வதம் செய்வது உலகவியற்கையாதலால் ஆழ்வார் இங்ஙனே பருலிச்செய்தது மிகப் பொருந்தும்.

கொருப்பாக என்றவிடத்தில் உம்மை தொக்கிநிற்பதாகக் கொள்ளவேணும்.

கொள்ளென்ற தமழ்தும்=" பலர்கண்ட குறியிலே இராவிழுவாரைப் போலே" என்ற ஒரு தர்ஷ்டாந்தம் அடிக்கடி ஆசாரியர்கள் சொல்லுவதுண்டு; அதாவது, நிடத்தில் ஒரு பெரிய பள்ளமிருக்கும்; அதனைப் பகலில் நன்றாகக் கண்டிருக்கச் செய்தேயும் இரவில் இருளிலே சென்றபோது காற்றை அதிலே விழுந்து படிவர்களாம்; அப்படியே செல்வம் விசாலமாது என்பதை ப்ரத்யக்ஷமாகக் காணுமிற்கச்செய்தேயும் மீண்டும் அதனிலே கொள் ளும்படியாக இப்படியும் ஒரு தர்மாநுஷ்டானத்தை முடிமோலென்ற ஆழ்வார் கியக்கிறார். தமம் என்னும் வடசொல் தாமெனத்திரிந்தது.

வள்ளலே மணிவண்ணா=வள்ளல் என்றால் தாராளமாகக் கொடுப்பவன் என்ற பொருள்; எதைக்கொடுப்பதென்னில், மணிவண்ணா! என்கிற பதச் சேர்த்தியினால் தனது திருமேனியையே முற்றாட்டாக அநுபவிக்கக் கொடுப்பதென்பது பெறப்படும். "மாணிக் கப் பண்டாரத்தையிறே தனதாக்கிப் பண்ணிற்று" என்பது நம்பிள்ளைவாக்கு. .... (அ)

வாங்குநீர்மலருலகில் நிற்பனவும்நிரிவனவும் *
ஆங்குயிர்கள்பிறப்பிறப்பும் பிணிமூப்பால்தகர்ப்புண்ணும் *
ஈங்கிதன்மேல்வெங்கரகம் இனவையென்னஉலகியற்கை? *
வாங்கேனீமணிவண்ணா! அடியேனைமறுக்கேலே. (இ)

வாங்கும் உலகங்களே யெல்லாம் பிறரு தன் பக்கலிலே ஸ்வீகரித்துக் கொள்ள வல்லதான
நீர் நீரிலே
மலர் மலர்ந்த
உலகில் பூமியின் கண்
நிற்பனவும் ஸ்தாவரங்களும்
நிரிவனவும் ஜங்கமங்களுமான
ஆங்கு அவ்வவ்விடங்களிலுள்ள
உயிர்கள் ப்ராணிகள்
ஈங்கு இப்புவியில்
பிறப்பு இறப்பு பினி மூப்பால் பிறப்பது இறப்பது வியாதி கொண்டிருப்பது பிறந்த மடைவது ஆகிய இவற்றாலே

தகர்ப்புண்ணும் வருத்திக்கிடக்கும்;
இதன் மேல் இதற்கொழித்தபின்போ வென்னில்
வெங் கரகம் கொடிய நரக வேதனைகளாம்;
இனைய என்ன உருத இயற்கை—;
மணி வண்ண நீலமணி வண்ணனே!
நீ
வினை இத்தியாசம் பொறுக்க மாட்டாத என்னை
வாங்கு அங்கீகரித்தருளவேணும்
அடியேனை உன்னடியனான என்னை
மறுக்கேல் கலக்கப் பண்ண வேண்டா.

http://acharya.org

* * *—பிறப்பது பிறப்பதுமாய் சோபுபட்டுத்திரிகிற இந்த ஸம்ஸாரிகள் கடலில்நின்றும், இத்துன்பம் கடையாடாத தோளிசோதத்திலே வெல்லியவைழத்துக் கொண்டருள வேணுமென்கிறார்.

வாங்கு நீர்மலருலகில் என்பதற்கு இரண்டுபடியாகப் பொருள் கூறுவர்; (வாங்குதல் சூழ்தலாய்) நீர்வாங்கு—கடல்சூழ்ந்த, மலர்—விண்ணோர்களான, உலகில், என்று ஒரு பொருள். மற்றொருபொருளாவது, காரியப்பொருள்களுக்கெல்லாம் காரணப் பொருளிலேயே லயமாகையாலேயே, * அவ்வவ்வல வவ்வவ்வுடன்ள—அப வவ வவர்ஜாதேள்* என்கிறபடியே முழு முதற்காரணமான நீரிலேயே காரியப் பொருள்களெல்லாம் லயமடைய வேண்டுகையாலும், மீண்டும் அதிலிருந்தே உத்பத்தியாகவேண்டுகையாலும், வாங்கும் நீர்—காரியப்பொருள்களே யெல்லாம் தன்னிடத்தே சுருக்கிக்கொள்ளுதான நீரில்நின்று, மலர்—மறுபடியும் உத்பவித்த, உலகில்; என்பதாம்.

இப்படிப்பட்ட உலகத்திலே ஸ்தாவரஜங்கமாத்மகங்களான மனுஷ்யாதிகளும் அநுபவிக்கும் துயரங்கள் கண்கொண்டு காணவொண்ணாதனவை; இதற்குமேல் சூம்பீபாகம் முதலிய நரகங்களில் படும் யாதனைகளும் அளவிலாதனவை; "காமடித்தென்னையினை தண்டம் செய்வதா நிற்பர் கமன்தமர்கள்" என்றும், "கமன்தமர்பற்றி கலிக்கிட்டு இத்த ஊனே புகே யென்ற மோதும்போது" என்றும், கமன்தமர்பற்றி யெற்றிவைத்து எரியோழின்ற செம்பி குலியன்ற பாலையைப் பாவிதாழுலை சொரிவதற்கஞ்சி" என்றும் மதுரகவிகள் கூறுவர்கள். இவையெல்லாம் படுப்படியாயே என்னே நீ இருந்து வைத்திருக்கின்றது! அந்தோ! இப்படியெல்லாம் கலங்கப்பண்ணுதே சடக்கென ஸ்ரீவடி சேர்த்துக் கொள்ளவேணும்.

மறுக்கீவல்வலிப்படுத்தி குமைத்திட்டுக்கொன்றுண்பர் *
அறப்பொருளோயறிந்தோரார் இவையென்னவுலகியற்கை ? *
வேறித்துளவமுடியானே ! வீணேயேனுனக்கடிமை *
அறக்கொண்டாய் * இனியென்றுமுய்வதே ! கூயருளாயே. (கூ)

மறுக்கி வல் வலிப் படுத்தி	பரமபுருஷ! தங்களது கொடிய கயிற்றினை இக்கிக்கொள்ளும்படி செய்து
குமைத்திட்டு கொன்று	நெரிவதும் பண்ணி
உண்பர்	நங்கள் வரிற்றை வளர்ப்பர்கள்;
அறம் பொருளோ அறிந்து ஓரார்	தருமதர்மவத்தை யறிந்து கவலிப்பாரில்லை;
இவை என்ன உலகு இயற்கை!—;	
வெறி துளவம் முடியானே	பரிமளம்மிக்க திருத்துழாயைத் திருமுடியிலணிந்துள்ளவனே

(இப்படிப்பட்ட ஒப்பனையழகைக்காட்டி)

வினையேனை	பாபியான என்னை
உனக்கு அற	உன் விஷயத்திலேயே அற்றுத் திரும்படி
அடிமை கொண்டாய்	முற்றவே அடிமை கொண்டருள் பவனே!
என் நீர் அருதே	எனக்கு பரிஹ்ணமான அருதே!
இனி ஆய் அருளாய்	உடனே அழைத்துக்கொண்டருள வேணும்.

* * * [மறுக்கீவல்வலிப்படுத்தி] பரமதயிளையே போதுபோக்காக இந்த லோக யாத்ரையை நான் கழிதுபடி என்னையழைத்துக் கொண்டருளவேணுமென்கிறார். ஆழ்வார் திருப்புளியாழ்வாடியிலே திருக்கண்களே மூடிக்கொண்டு எழுந்தருளியிரா நிற்கச்செய்தேயும் லோகயாத்ரை முள்ளது உள்ளபடியுணர்ந்து பேசுகிறது என்னே! என்று வியக்கவேண்டும் படியிராகின்றது.

கையிலே கதுகாசு உள்ளவர்களைக் கண்டால் அதைப் பறிக்கவெண்ணிச் சில உபாயங்கள் செய்வர்கள்; 'உன்னே இன்னும் இன்னுமாக இன்னபடி செய்யக் கோலியிருக்கி

http://acharya.org

முர்கள். என்றபடி பொய்களைச் சொல்லி அச்சமூறுத்தித் தங்களிடத்தே நம்பிக்கையுண்டாய்ப் பொருள்களையெல்லாம் தங்களிடத்திலேயே கொண்டுவைக்கும்படியாகச் செய்து இப்படியாக வலியிலே அகப்படுத்திக்கொண்டு ஈசுவரத்வமான நிர்மலைகளையும் பண்ணி வயிறு வளர்ப்பர்கள் ஸம்ஸாரிகள்; தேவரத்நிற்காட்டில் வேறுபட்டதான ஆத்மவஸ்து ஒன்று இருக்கின்றதே; அது படும்பாடு என்னுருபோ! என்ற நிதும் ஆராய்வாரில்லை; இப்படி ஒரு லோகயாத்ரையுண்டாயிருப்பதே! பிரானே, இக்கொடிய ஸம்ஸாரிகள் நடுவே பிருக்கிற வெள்ளை உன்னுடைய பரமயோக்யதையைக்காட்டி எற்கனவே அடிமை கொண்டிருக்கிறாய்; இருந்தாலும் இவ்விலத்திலேயே இன்னமும் வைத்திருவாயாகில் என்னே நீ அடிமை கொண்டதெல்லாம் பழுதாயொழியுமத்தனை; சப்தாதி விஷயப்ரவணராயிருக்கிற இவர்களிலே சாணுமொருத்தனுய்த் தொலைத்த போலேனத்தனை; அங்ஙனும் போகாதபடி விரைந்து திருவடி சேர்த்துக்கொண்டருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

ஆயேயில்வுலகத்து நிற்பனவும்நீரவையும்*
நீயேமற்றெருபொருளும் இன்றிநின்றனமையால்*
கோயேமுப்பிறப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய*
கூயேகொள்ளடியேனைக் கொடுவுலகம்காட்டேலே. (எ)

இ உலகத்து நிற்பனவும் நிரவனவும் நீயே ஆய்	இந்த லோகத்தில் சரீராரப் பொருள்களும் அசரீரப் பொருள்களும் நீயாகவே இருக்க	கோப் முப்பு பிறப்பு பிறப்பு பிணி என்ற இவை ஒழிய	ஜ்வரவியாதி, பிறத்தனம், ஜனன மரணங்கள், சரீரவிடைகள் எனப்படுகிற இவை தொலையும்படி
மற்று ஓரு பொருளும் இன்றி	மேல்லாத பொருள் வேறென்று இல்லாதபடி	அடியேனை	அடியனான வென்னை
நீ நின்றமையால்—நீயிருப்பதனாலே		கூயே கொள்	அழைத்துக் கொண்டருள வேணும்;
		கொடு உலகம் காட்டேல்	கொடிய இவ்வுலகத்தை இனிமேலும் காட்டவேண்டா.

* * *—"ஆழ்வீர்! உம்மை காலனழைத்துக்கொள்வதென்ற ஒன்றுண்டோ? பேறு உம்முதலை பின்பு நீர்தாமே முயற்சிசெய்து வந்து சேரக்கடவீர்த்தலே" என்று எம்பெருமான் திருவுள்ளமானதாகக்கொண்டு, கைவல பதார்த்தங்களும் கேட்டவழக்கான பின்பு நீயே என்னை இட்டுமுடி பார்த்தருளவேணுமென்கிறார்.

ஆயே! என்பதற்கு மூன்றுபடியாகப் பொருள் கொள்ளலாம்; தாயே! என்ற எம் பெருமானே விளிக்கிறபடி; அத்தோ! என்றபடி; "இவ்வுலகத்து நிற்பனவும் நீயே ஆய்" என்ற மேலே கூட்டுகிறபடி.

"தேவிகா த்ருணக்ரமபிக சதி" என்கிறபடியே எனை நுங்கமன்தாவரங்களையும் அநுப்ரவேசித்து ஆட்டுவைப்பவன் நீயேயானபின்பு மனக்கு சான் ஒரு நன்மைதேடிக்கொள்ள மண்டோ? பத்த ஸம்ஸாரிகளில் நின்றும் என்னே வேறுபடுத்தி முமுக்ஷுவாக ஆக்கிவைத்த நீயே முக்தனாக்கி வைத்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

மூப்பு பிறப்பு—மூப்புப்பிறப்பு என்ற ஸ்திரமாகவேண்டுமிடத்து 'மூப்பிறப்பு' என்னுமது தொகுத்தல் புணர்ச்சி. "தன் சங்கதை வாளாழியான்" என்றவிடத்திற்போல.

பிணி—தாரித்ரியமுமாம்.

கொடுவுலகம் காட்டேல்=இவ்வுலகத்தின் கொடுமையைத் தவிர்த்து இவ்விழுநிலைதன்னிலே நித்ய விபூதியாக்கிக் காட்டியருளவேணுமேயல் காட்டுவாயாக, என்பது உட்கருத்து. (எ)

http://acharya.org

காட்டிக்கரத்துமிழும் நிலநீர்த்தீவிசும்புகால் *
சட்டிசீவைத்தமைத்த இமையோர்வாழ்தனிமுட்டை *
கோட்டையினில்கழித்து என்னையுன்கொழுஞ்சோதியுயரத்து *
கூட்டசீயதிருவடிக்கள் எஞ்ஞான்றுகூட்டுதியே. (அ)

(எம்பெருமானே)
நீ காட்டி கரத்து — நீ படைக்கும்போது பிரகாசிப்பித்த (பிரளய காலத்திலே) உன்னே மறைத்து
உமிழும் நிலம் நீர் தீ விசும்பு கால் — மறுபடியும் வெளிப்படுத்துகின்ற பஞ்ச பூதங்களையும்
சட்டி வைத்து அமைத்த — ஒன்றுகத் நிரட்டி வைத்து ஒழுங்கு படித்திய
இமையோர் வாழ் தனி முட்டை — பிரமாண்டமாகிற

கோட்டையினில்—கோட்டையில் நின்றும்
என்னை கழித்து—என்னை அப்புறப்படுத்தி
உன் — உன்னுடைய
கொழு சோதி உயரத்து — மிக்க வொளியுருவமாய் எல்லா வற்றிலும் உயர்ந்ததான திரு காட்டிலே
கூட்டு அரிய — கூடுதற்கரிதான
திருவடிக்கள் — திருவடிகளிலே
எஞ்ஞான்று — என்றைக்கு
கூட்டுதி — கூட்டிக்கொள்வாய்?.

* * *—'ஆழ்வீர்! நீர் விரும்பியபடியே காம் செய்கிறோம் என்று எம்பெருமான் அருளிச்செய்ய, அது என்றைக்குச் செய்வதாகத் திருவுள்ளமோ? என்கிறார்.

இப்போது ஆழ்வார் தாம் இருக்கப்பெற்ற பரமபத மண்டலத்தின் தன்மையை முன்னிரண்டடிகளால் கூறுகின்றார். ஒரு காலத்திலே ஸ்ருஷ்டித்தும், ஒரு காலத்திலே சேஷமாய்கொள்ளுதலாகிய உள்ளடக்கியும், மற்றொரு காலத்திலே மறுபடியும் வெளிப்படுத்தியும் போருகிற ஐந்து பூதங்களையும் பஞ்சீகரண ப்ரகாரத்தாலே நிரட்டி, இவைகொண்டு நீ சமைத்து வைத்த ப்ரம்மாண்டமாகிற கோட்டையில் நின்றும் என்னைப் புறப்படவிட்டு, ஸம்ஸார ஸாகரம் தொட்டறியாததும் அத்த ஸத்வாயமானதும் நித்யஸூரிகளான பரமபதத்திலே திருவடிகளோடே சேர்த்துக்கொள்வது என்றைக்கோ? ஸ்ரீ பரதாழ்வானுக்கு ஒரு காளிட்டுக்கொடுத்ததுபோலே அடியேனுக்கும் கொடுத்தால் ஆறியிருக்கத்தட்டில்லையே; இன்னாளிலேயென்று ஒரு வார்த்தை யருளிச் செய்யவேணும் என்றாயிற்று.

இப்பாட்டினிட்டிலே ஒரு வார்த்தை:—"பேரில் நிருவாறன்பூரையர், ஒரு குருவி பிணைத்தபிணை ஒருவரால் அவிழ்க்கவொண்ணாதிருக்க, ஒரு ஸ்வாமிகள், கர்மானுகூலமாகப் பிணைத்தபிணையை அவனைக் காண்கட்டாதே இவ்வெளியேனும்பனை வம்மாரியால் அவிழ்த்துக் கொள்ளப்போமோ வென்று பணிப்பர்" என்பதாம்.

இமையோர்வாழ் தனிமுட்டை=பிரமன் முதலிய தேவதேவர்க்கங்கள் பிறந்த அண்டம் என்றபடி. .... (அ)

கூட்டுதிநின்குரைகழல்கள் இமையோரும்தொழாவகைசெய்து *
ஆட்டுதிரீயரவணையாய்! அடியேனுமஃதறிவன் *
வேட்கையெல்லாம்விடுத்து என்னையுன்திருவடியேகமத்துழல *
கூட்டசீயதிருவடிக்கள் கூட்டினோகாண்கண்டேனே. (கூ)

அரவு அணை யாய் — சேஷசாயியான பெருமானே!,
நீ — நீ
நின் குரை கழல்கள் — (அமேதரான நிலைமை) ஆபரணத்தில் பொருந்திய உனது திருவடிகளிலே

http://acharya.org

கூட்டுதி	சேர்த்துக் கொள்ளுகிறாய்;
	(திருவுள்ள மில்லையாகில்)
இமையோரும்	(ஞானசக்திகள் கிடைக்கிறுக்கப்
தொழ வகை செய்து	பெற்ற) தேவர்களும் கண்டு அநுபவியாதபடி பண்ணி
ஆட்டுதி	அலைக்கின்றாய்;
அன்று	இப்படி எளியரையும் அரியரையு மிருக்கும் தன்மையை
அடியேனும் அறிவன் என்னே	காலும் அறிந்தேயிருக்கின்றேனில்; எனக்குண்டான
வேட்கை எல்லாம் விடுத்து	விஷயாக்தா விருப்பங்களெல்லா வற்றையும் கழித்து
உன் திரு அடியே	உனது திருவடிகளையே
கமத்த தொழல்	கான் தலையால் கமக்க திரியும் படி.
கூட்ட அரிய திரு அடிக்கண் கூட்டினை	ஸ்ரீலபமான திருவடிகளிலே சேர்த்துக் கொண்டாய்;
நான் கண்டேன்	இதை ப்ரத்யக்ஷமாக அநுபவித் தேன்.

* * * ஆழ்வாருடைய ஆர்த்திநிரும்படி பரமபதத்திலிருப்பைக் காட்டிக்கொடுக்க, அதுகண்டு நாம் களித்தமை கூறுகின்றது இப்பாசுரம். கூட்டுதியின் குறைதழல்கள் = நிலைத்த திருவடி சேர்த்துக்கொள்ளத் திருவுள்ளம்பற்றாமல், அவர்கள் எல்லாரையும் தள்ளியாகளா யிருந்தாலும் தன்னுடைய சக்தியே காரணமாக அவர்களைத் திருவடி சேர்த்துக்கொள்ளுகிறு யென்கை. இன்னரியோரென்று பாராமல், உகந்தாரைத் திருவடி சேர்த்துக்கொள்ளுதல் உன்னுடைய இயல்பு என்றபடி.

இமையோரும் தொழவகைசெய்து ஆட்டுதி=பிரமன் முதலிய பெரியோர்களேயானி லும் உகப்புக்கு இலக்கு ஆகாதவர்களை வர்து கிட்டாதபடிபண்ணி அலைக்கின்று யென்றபடி.

அடியேனும் அது அறிவன்=விருப்பமுள்ளானல் சிலர்க்கு எளியனென்றும், விருப்ப மில்லையாகில் சிலர்க்கு அரியனென்றும் போருகின்ற யென்கிற இந்த உண்படியை நான் அறிந்து கொண்டே யிருக்கின்றேன் என்ற கூறின ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! இப்போது நீர் அறிந்துகொண்டது என்ன?' என்ன கேட்க; இப்போது என்னை நீ விரும்பி வேண்டித் திருவுள்ளம்பற்றினபடியாலே திருவடியோடே என்னைச் சேர்த்துக்கொண்டாயே! இதுதான் நான் கண்டது என்கிறார்.

வேட்கையெல்லாம் விடுத்து=இல்லையில் என்னுடைய ஆசைக்கு இலக்காகாத பொருளே இல்லை; கண்டபொருள்களிலெல்லாம் 'எனக்கு, எனக்கு' என்றே ஆசைவைத்துப் போந்தேன்; அந்த ஆசைகளையெல்லாம் விடுவித்தருளினாய். அதுவன்றியும், [உன் திருவடியே கமத்தழல] பரதாழ்வானுக்கு மரவடியைக்கொடுத்த உபசாரத்தைப் பண்ணினாப் போலன் றிக்கே எனதுதாத் திருவடிகளையே என்தலைமீது வைத்தருளினாய்; இதைக் கேட்டாச்வாய்க் கேட்கையன்றிக்கே நான் அநுபவிக்கப் பெற்றேனாகையாலே அறிந்தேன்—என்றாயிற்று.

கண்டுகேட்டுற்றுமோந்துண்டுழலும் ஐங்கருவி
கண்டவின்பம் * தெரிவரிய வளவில்வாய்ச்சிற்றின்பம் *
ஒண்டொடியாள் திருமகளும் பூமேலிலாவிற்ப *
கண்டசதிர்கண்டொழிந்தேன் அடைந்தேனுன்திருவடியே. (கo)

ஒண் தொடி மகள் நிறை மகளும் பூமேல் நிலா வீற்ற கண்ட சதிர்	அழகிய கைவளைகளையுடைய பெரிய பிராட்டியாரும் அவளுடைய காலகுணை பூமேல் களித்து வாழ்கிற அழகிய திருப்பை
கண்டு	இப்போது காணப்பெற்ற
கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட இன்பம்	கண்பது கேட்பது தொடுவது மோருவது உட்கொள்ளுவ நாசிற வேண்டுமோச்செய்து கொண்டு அலைகின்ற பஞ்சேக் நியங்களுக்கும் வாய்த்த விஷய சுகங்களையும்

http://acharya.org

தெரிவு அரிய அளவு இல்லை சிறு இன்பம் } கைவல்ய ஸுகத்தையும் ஒழிந்தேன் தவிர்க்கப் பெற்றேன்; | உன் நிரு அடியே அடைந்தேன் } உனது திருவடிகளே அடையும் பெற்றேன்.

* * * மேற்பாசுரத்தில் ப்ரஸ்தாபித்தபேற்றை உகப்பின் மிருதியாலே இன்னமும் பன்னியுரைக்கின்றாரிதில்.

ஒண்டொடியாள் திருமகளும் பூமேல் நிலாநிற்பக்கண்ட சதிர்க்கண்டு—கண்டுகேட்டுற்ற மோகத்தண்டுமுதலாமல் கருமிகண்ட மின்பமும் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பமும் ஒழிந்தேன், உன்திருவடியே அடைந்தேன்—என்று அருளிப்பாடு.

"வைகுண்ட: வகுளாபரணாதயோ நாதாதய: ஸ்ரீர்ந்ருகேஸரிண: ஸ்ரீவல்லபத்வாத் ஸ்ரீமதோ நாராயணஸ்ய ஸர்வாதிகத்வம் ஸித்தம்," என்கிறபடியே* தன் திருமார்பிலே தான் தனியரசாயுறைகின்ற விருப்பை எம்பெருமான் ஆழ்வார்க்குக் காட்டிக்கொடுத்தருளினனாதலால் "ஒண்டொடியாள் திருமகளும் பூமேல் நிலாநிற்பக்கண்ட சதிர்க்கண்டு" என்கிறார், தொடி என்று கைவளைக்குப்பெயர்; ஒளிபொருந்திய கைவளைகளையுடையவள் என்று பிராட்டிக்கு இவ்வடைமொழி கொடுத்ததனால், கூனைகாலமும் விட்டுப் பிரியாதவள் என்பது பெறப்படும். இவ்விடத்தில்—"யாதிநயாதீ தி யவை வடி வாஸாஸ்ரங் கணைத கதோமதாரமணி தாதி வ யொவயுவாதி லவாளனிவா நதஸ்யெவ ஸுவிதாதி = யாம் ந யாசிஞி தவே வதநி புன்தாத் ஸுவிஸோ தர்வன்க்யா:, கனிதாதி புரோவல யாதி அபராணி புன் தனதவ தனிதாதி," என்ற ஸ்லோகத்தின் தாற்பரியம் நினைக்கத்தகும். அதாவது, தலைமகள் தலைமகளோக்கி, 'என் கல்யாணி! நான் உன்னைப் பிரிந்து ஓர் நாழ்க்குச் செல்கின்றேன்' என்று சொன்ன கொடிப்பொழுதிலேயே அவளது கையில் அணியப்பட்டிருந்த வளைகளில் முன்னேயிருந்த வளைகள் கழன்று கீழே விழ்ந்தன. அதனைக்கண்ட தலைவன் 'இவள் எமது பிரிவைப் பொறுத்திருக்க மாட்டாதவளாகையாலே இவளைப் பிரிந்து நாம் வெளியேறலாகாது' என்று நினைத்து உடனே 'ஸ்யாமி' என்றான்; இதற்கு இரண்டுவகையான பொருள்: ஸ, யாமி என்று இரண்டு பதமாகக்கொண்டால் 'நான்போகிறதில்லை' என்று பொருள்படும்; 'ஸ்யாமி' என்று ஒரு சொல்லடியாகவே கொண்டால் உன்னையும் உடனழைத்துக் கொண்டு போகிறேன்' என்று பொருள்படும். இரண்டுவகையான பொருளும் இங்குத்தலைமகளுக்கு விவக்ஷிதமே. காயகிக்கு அச்சொல் செவிப்பட்ட கொடிப்பொழுதிலேயே, கையில்நின்றும் கழன்றவைபோக நின்ற வளைகள் பழம் என்று வெடித்துத்துகளாய் விழுந்தன என்பது மேற்காட்டிய ஸ்லோகத்தின் கருத்து. நாயகனுடையபிரிவு ப்ரஸ்தாவத்தில் வந்த மாத்ரத்திலேயே உத்தம நாயகியினது உடல் மிகவும் மெலிந்துபோகும் என்பதும், அந்த விச்லேஷவார்த்தை மாத்ரமாறே உடம்பு பூரிக்குமென்பதும் உள்ளுறை. பெரியபிராட்டியார்க்கு ஒருபோதும் பிரிவைப்பற்றின ப்ரஸ்தாவமேயில்லாமலிருக்கு மாதலால் ஒண்டொடியாள் திருமகள் எனப்பட்டது.

"திருமகளும் பூமேல் நிலாநிற்ப" வல்லதது பொருத்துமோ? பல கோடி நூறாயிரம் சித்ய முக்தர்களும் அங்கு இருக்கும்போது "திருமகளும் பூமேல்" என்று பிரிவிலேகாசம் இட்டுப்பேசுவது கூடாதே என்று சங்கையிறக்கும்; இதற்குப்பரிஹாரமாக நம்பிள்ளை யருளிச்செய்வது காண்மின்;—"இருவருடையவும் அபிமானத்துக்குள்ளே நித்யபாத் விழுதியாக அடங்கிக்கிடக்கும்; வாசல்தோறும் நித்யஸூரிகள் இக்கேயிறே." என்பதாம். அங்கு நித்யமுக்தர்கள் சேஷத்வாநுரூபத்தாலே வரைப்பினுள் தளிப்பட்டுத் தோன்றுமே நில்லாதம்பதிகளின்

http://acharya.org

அபிமானத்துக்குள்ளே அடங்கிக் கிடக்கின்றமையாலே அவர்களோப் பிரித்துச்சொல்லவேண்டிய அவசியமில்லை; இவ்விடத்தில் மணிதோஅம் 'காணே கடவுள், காணே கடவுள்' என்றிருப்பதுபோல, திருநாட்டில் அநுபம்பாவமடித்துத் திரிகிறவர் ஒருவருமில்லையாதலால் நித்யதம்பதிகளைச் சொன்னதுவே போதுமென்றபடி.

நிலைநிற்ப = அழுகுற நிற்ப. இந்த நித்யசேஷவஸ்துவை இவ்வே காட்டிக்கொடுக்கக் கண்டதனால் இவ்விடத்து விஷயபோகங்களையும் கைவல்ய மோக்ஷமென்கிற அப்பாவனத்தையும் காரியமிழ்த்தேனென்கிறார். கண்ணாலே நில ரூபங்களைக் கண்டும், காதாலே நில சப்தங்களைக்கேட்டும், த்வகிந்திரியத்தாலே நிலவற்றைத் தொட்டும், மூக்காலே நிலவற்றை மோக்தும், நாவினால் நிலவற்றை உட்கொண்டும் இவைகளே பந்தஹேதுக்களாயும் பெறப்படுகிற இதரலோக விஷய ஸுகங்களில் வெறுப்படைந்தேன். தேவ்ய அளவில்லாச் சிற்றின்பம் என்பது கைவல்ய ஸுகத்தை. மேற்சொன்ன கண் முதலிய இந்திரியங்களினால் க்ரஹித்து அநுபவிக்க அரிதாகையாலே தேவ்ய என்றது. பரமபோக்யமாகையாலே அளவில்லா என்றது. பகவதநுபவத்தை யபேக்ஷித்து அற்பமாகையாலே சிற்றின்பம் என்றது. (கம)

திருவடியைகாணவேக் கேசவனேப்பரஞ்சுடரை *
திருவடிசேர்வதுகருதிச் செழுங்குருகூர்ச்சடகோபன் *
திருவடிமேலுரைத்ததமிழ் ஆயிரத்துளிப்பத்தும் *
திருவடியேயடைவிக்கும் திருவடிசேர்ந்தொன்றுமினே. (கக)

திரு அடியை — ஸர்வ ஸ்வாமியாய்
காணவே — காரணனாய்
கேசவனே — கேசவனாய்
பரம் கடலை — பாற்கடலில் பாயிருக்கிற சம்பெருமானே
திரு அடி சேர்வது கருதி — இட்டபாவிக்க விரும்பி
செழு குருகூர் சடகோபன்:—
திரு அடி மேல் — அவனது திருவடிகளின் மீது
உரைத்த — அருளிச்செய்த
தமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்—;
திரு அடியே — அந்தத் திருவடிகளையே
அடைவிக்கும் — அடையப்பண்ணும்;
(ஆதலால், நீங்கள்)
திரு அடி சேர்ந்த — அந்தத் திருவடிகளைக் கிட்டி
ஒன்றுமின் — பொருந்தியிருக்கப் பாருங்கள்.

* * *—[திருவடியை காணவே] இத்திருவாய்மொழியானது, தன்னைக் கற்பவர்களை அவன் திருவடிகளோடே சேர்விக்கும் என்ற பயனாரத்தைத் தனக்கட்டுகிறது. முதலடியில் திருவடி யென்றது ஸர்வஸ்வாமி யென்றபடி. கேசவன் என்ற திருநாமம் மூன்று வகையான பொருள்களைக் கொண்டிருக்கும். 1. நிறைந்த ஸமிருத்தியையுடையவன். 2. கேசி யென்னும் அசுரனை (ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில்) வதஞ்செய்தவன். 3. ப்ரஹ்மனுக்கும் சிவபிரானுக்கும் சிறந்தவன்—என்பன மூன்று அர்த்தங்கள்.

இப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருவடிகளைச்சென்று கிட்டவேணுமென்கிற மனோரதத்தையுடையவராய் ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்துள் இப்பத்துப்பாசுரமும் சடக்கென பகவத் பாதாரவிந்த ப்ராப்தியைப் பண்ணுவிக்கும்; ஆகையாலே, பக்தர்காள்! நீங்கள் இக்குன்னவனையும் இத்திருவாய்மொழியைக்கொண்டு அவனது திருவடிவாரத்திலே கைங்கரியம் பண்ணிப்போருங்கோள்—என்றதாயிற்று.

ஒன்பதாந் திருவாய்மொழி முற்றிற்று.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

http://acharya.org

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பத்தாத்திருவாய்மொழி—ஒன்றுத்தேவுமுலகும்.

உரையவதாரிகை:—மேற்திருவாய்மொழியிலே ஆழ்வார் தமக்கு ஸம்ஸாரிகளினிடையே ஸஹவாஸம் பொறுக்கமுடியாமல் பலவாறுகக் கதறி ஒருவிதமாக அவருடைய ஆர்த்தியை மாற்றவேணுமென்று திருவுள்ளம்பற்றின எம்பெருமான், திருகாட்டிலே நிருமகளும் தானுமாக இருக்கிற இருப்பை இக்கே இவர்க்குக் காட்டிக்கொடுத்தருள, இவரும் கண்டு ஒருவாறு களிக்கப்பெற்றார்.

கண்ணுளாய் கடல் கடைந்தாய் உனகழற்கே வரும் பரிசு, தண்ணுளாய் தடிவேனைப் பணிகண்டாய் சாமாறே என்றும் *ஆமாறொன்றறியேன் நான் அரவினணையாயம்மானே!, கூமாறே விரைகண்டாய் அடியேனைக் குறிக்கொண்டே* என்றும் கல்லும் கரையும்படி ஆழ்வார் கூப்பிடாகிற்கச்செய்தேயும் எம்பெருமான் இவரை இக்விலத்திலேயே வைத்திருப் பதற்குப் பல நோதுக்கன் உண்டு; ஆழ்வானைக்கொண்டு உபதேசங்கன் பண்ணுவித்து நாட்டைத் திருத்தவேணுமென்பது ஒரு நோதுவாகையாலே, அதுவே எம்பெருமான் ஆழ் வார்க்கு ஒருவாறு மிலேப்பூட்டினன்போதும் ஆழ்வாரும் எம்பெருமானுடைய நியமனத்தை நிறைவேற்றக்கருதி, பிரிருதத்தில் எவ்விதமான உபதேசத்தைப் பண்ணலாமென்று பார்த் தார். உலகப் பெரும்பாலும் எம்பெருமானுடைய பரத்வத்தை அறியப்பெறுதவர்களாயும் தேவதாந்தரங்கன்பக்கலிலே விபரீதமோதும் கொண்டவர்களாயும் காணப்படுகையாலே இவர்களுக்கு எம்பெருமானுடைய பரத்வத்தையும் இதரதெய்வங்களின் நிகிஷ்டத்வத்தையும் கன்கு உணர்த்தினேமாகில் இவர்கள் நிருக்நி மாம்ஸரம் அடியறக்கூடும் என்ற திருவுள்ளம் பற்றி அங்ஙனே உபதேசித்தருளுகிறார் இத்திருவாய்மொழியாலே.

மேலே * உயர்வறவுயர்வனம் * நின்னன்பிடு * முதலான திருவாய்மொழிகளிலும் எம்பெருமானுடைய பரத்வத்தை அருளிச்செய்திருந்தாலும், இத்திருவாய்மொழி அச்சாவ தாநத்திலே பரத்வத்தை மூதலிக்கிறதாகையாலே விறுபெற்றிருக்கும். திருக்குருகூர் என்கிற ஆழ்வார் திருநகரியில் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு ஆதிநாதப் பெருமாள் என்ற திருநாமமாகையாலே, மலர்மகள்நாண மூதன் என்கிற அத்திருநாமத்தை யநுஸந் திருக்கின்ற இப்பெருமான் பக்கலிலே பரத்வத்தை யெடுத்துரைக்கப் பாங்காயிருக்குமென்ற திருவுள்ளம் பற்றினாயிற்று.

உலகுக்கெல்லாம் முழுமுதற்காரணமான பொருள் எதுவோ அதுவே பரதெய்வமென் றும் அதுவே உபாஸிக்கத் தருந்தென்றும் உபநிஷத்துக்கள் முழங்கிடுகின்றன. இவ் வித்தெய்வம் முழுமுதற்கடவுள் என்ற ஸாமர்த்ய பரீக்ஷணஸ்தலத்தில், இதை ஸாதித்துக் கொண்டே அமைந்திடவேணும். அப்படி ஸாதித்துக்கொண்டு பரிஹரமே செய்வதற்கு முன்னே எம்பெருமானுடைய திருமேனியின் அமைப்பு இருக்கும்படியை நோக்கினே மாத்தி ரத்திலும் இவனே மலர்மகள் நாண மூதனென்றறிந்து கொள்ளலாயிருக்குமென்ற இவ்வாழ்வார்தாமே பெரிய திருவந்தாதியில் ஒரு பாசுரத்தாலே கொஞ்சம் அழகாக அருளிச் செய்தார்; அதாவது—(72) "முதலாகிநிருமூவர் மூன்றெல்பர், ஒன்றே முதலாகும் மூன்

http://acharya.org

துக்குமென்பர்–முதல்வா, நிகரிலகு காருருவா மின்னகத்தகன்றே, புகரிலகு தாமரைபோல் நீ" என்பதாம். அரி அயன் அரன் என்கிற மும்மூர்த்திகளும் பரம்பரம் எற்றத்தாழ்வு இன்றியே ஒத்திருப்பரென்ற சிலர் கூறுவர்; மேற்கூறிய மும்மூர்த்திகளிற்காட்டில் வேறுபட்ட தான்காவது தத்துவம் ஒன்றுண்டு என்றும், அதுவே இம்மூன்று தத்துவங்கட்கும் நிர்வாஹக மானது என்றும் சிலர் கூறுவர்கள்; இங்ஙனே அவரவர்கள் சொல்லுவதெல்லாம் தருமபற்றது என்பதை எம்பெருமானே! உனது திருநாபியில் தோன்றியுள்ள தாமரைப்பூவே அறிவித்துக்காட்டாகின்றது—என்பது மேலெடுத்துக்காட்டிய பாசுரத்தின் கருத்து. சிவன் பிரமனிடத்துத் தோன்றியவனென்றும் அந்தப் பிரமன் தாமரைத்தண் தோன்றியவனென்றும், அக்கமலம் திருநாபியிலுள்ள தென்றும், அந்தத் திருநாபி ஸ்ரீமந்நாராயணனுடையதென்றும் அறியப்பெற்றால் அந்த ஸ்ரீமந்நாராயணனே ஸகலஜகத்காரணபூத பரதேவதையாவன் என்ற விடம் எளிதில் அறியலாம் என்ற நிரூபித்துக்காட்டியவாறு.

இனி வேதார்த்தங்களினுட்புகுந்த பரிசிலரே செய்தால், ஸகல ஜகத்காரண பூதமான தெய்வம் இன்னதென்பதை அறுதியிடும்வழி எங்ஙனேயென்னில், சாந்தோக்யமென்னும் உபநிஷத்தில் * வஷெல லொஷ்ட உடஉ ஸ்ருஷீல * என்கிற வாக்யமானது காரணபூதமான வஸ்துவை ஸத் என்ற சப்தத்தாலே ஒதிற்று; இது ஸாமான்ய சப்தமேயன்றி விசேஷசப்த மன்று; மற்றொரு உபநிஷத்து * ஸூதாவா உடிகெ வாவாஸ்ருஷீல் என்ற ஆத்ம சப்தத் தாலே ஒதிற்று; இதுவும் விசேஷசப்தமன்று மற்றொரு உபநிஷத்து * ஸுஷுவை உடிகெ தெவஸ்ருஷீல் என்ற ப்ரஹ்ம சப்தத்தாலே ஒதிற்று; இதுவும் விசேஷசப்தமன்று. கடைசியாக மஹோபநிஷத்திலே * ஸகெஸவஷெவை நாராயணஸ்ருஷீல் நஸுஹூர தெவஸ்ய தெதெ டூஷாலவுபிவி * என்ற நாராயண சப்தத்தாலே ஜகத்காரணபூதமான வஸ்து ஒதப்பட்டிருக்கிறது. இந்த நாராயண சப்தமானது ஸத்சப்தம் போலவும் ஆத்மசப்தம் போலவும் ப்ரஹ்மசப்தம்போலவுமன்றிக்கே விசேஷசப்தமாகையாலே கீழெடுத்த ஸாமான்ய சப்தங்களெல்லாம் இந்த விசேஷ வ்யக்தியிலே பர்யவஸித்து நின்று நாராயணனே ஸகலஜகத்காரண பூதன் என்று காட்டி அவன்றன்னையே பரதெய்வமாக நிலைநாட்டிற்றும். இப்படி வேத வேதார்த்தங்களிலே நிலைபட்டுப் பரத்வநிஷ்கர்ஷம் பண்ணப்படவேண்டிய பரமபுருஷன் நிற்க்குருகூரிலேயே * ஸ ஏ ஷ ஸ்தூலஸூக்ஷ்மஸர்வாத்மகஸ்வாமீ தாளிஜோதஸ்ரீ நீ:—அச்சச்சுவை ஸர்வஸாரநிஷ்ணுச்சுகபாதாகங்களாத் மன்றிநிற்க மன்னிறபடியே மனிசனுய்க்காட்டிதத்தருளா நிற்க இவரைப்பணித்து உத்தரிக்கத்தப்போகாதே அல்பதெய்வங்களைப் பணித்து அநர்த்தப்பட்டுப்போகிறீர்களே! என்று தேவதாந்தரபரர்களைத் தட்டியுணர்த்துவது இத்திருவாய்மொழி.

உலகத்தில் பலர் பல சாஸ்த்ரங்களையும் கற்றவைத்தும் 'பரதத்வமின்னது' என்று துணியமாட்டாமல் கண்ட தெய்வங்களின் காலிலும் விழுகின்றார்கள்; நம் எம்பெருமானுடைய திருவடிஸம்பந்தம் பெற்றவர்கள் எத்தனையேனும் கல்வி யறிவு இல்லாதவர்களாயிருந்தாலுங்கூட தேவதாந்தரங்களை அடுப்பிடுகல்லாக நினைத்திருப்பர்கள்; இதற்குக் காரணம்—பரமகாருணிகரான நம்பாழ்வார் * ஒன்றுந்தேவு மென்கிற இத்திருவாய் மொழியை அருளிச்செய்து வைத்தனையாம்—என்று எம்பார் அருளிச்செய்வராம். ... ... (*)

ஒன்றுந்தேவுமுலகமுமுயிருமற்றும் யாதுமில்லா
வன்று * கான்முகன்தன்னொடு தேவருலகோடுயிர்படைத்தான் *
குன்றம்போல்மணிமாடநீடு திருக்குருகூரதனுள் *
நின்றவாதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம்நாடுதிரே. (க)

http://acharya.org

தேவும் உலகும்	தேவர்களும் அவர்களுக்கிருப்பிடமான உலகங்களும்
உயிரும் மற்றும் யாதும்	மனிதர் முதலிய பிராணிகளும் மற்றுமுள்ள எல்லாமும்
ஒன்றும் இல்லா அன்று	பிரிதலில்லாத அந்த ஊழிக் காலத்திலே
நான்முகன் தன்னொடு	பிரமனையும்
தேவர் உலகு உயிர் படைத்தான்	தேவதைகளையும் உலகங்களையும் பிராணிகளையும் படைத்தவனும்
மின்ற	சான்றம்களில் கிடந்திருப் பவனுமான
ஆதி பிரான்	ஆதிகாரணனென்னும் பெரிய மான்
குன்றம் போல் மணிமாடம் நீடு	மலைபோன்ற பெருமாளிகைகள் உயர்ந்திருக்கப்பெற்ற
திரு முகூர் அதனுள்	திருக்கோயிலே
கிடக்க	காட்சிதந்து கொண்டிருக்கும் போது
மற்றை தெய்வம்—கொழுதி எ	வேறுதெய்வங்களை தேடியோடின்றீர்களே.

* * *—ஸகலஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன் திருநகரியிலே புளியமரத்தைக் காட்டிக்கொடுக்க, வேறு தெய்வத்தைத் தேடி ஓடுகிறீர்களே! இது என்ன அறிவு கேடு! என்று வெறுக்கிறார்.

பரமபதநாதனுடைய ஜகத்காரணத்வத்தை மூதலிப்பவை மூன்றடிகள். ஒன்றும் என்பதை மேலுள்ள தேவும் இத்யாதிகளுக்கு விசேஷணமாக அன்வயிப்பதும், "தேவுமுலகு முயிரும் மற்றுப்யாதும் ஒன்றும் இல்லாவன்று" என்ற அன்வயித்து உரைப்பதும் பொருத்தும். விசேஷணமாக அன்வயிப்பதனால், ஒன்றுதல்—பொருந்துதலாய், அதாவது லயிப்பதாய், * ஸர்வலோகமஹேச்வரனே * என்கிறபடியே, காரணத்திற்குக் காரணத்திலே லயமாகச் சொல்லுகையாலே காரணபூதனான தன்பக்கலிலே சென்று ஒன்றுகிற [அதாவது, லயமடைகிற] தேவும்—தேவஜாதியும், உலகும்—அத்தேவர்களில் இருப்பிடங்களும், உயிரும்—மனிதர் முதலிய பிராணிவர்க்கமும், இப்படி பிரித்துப் பிரித்துச் சொல்லவேண்டாதபடி எஞ்சுமே இல்லாமலிருந்த ஊழிகாலத்திலே முற்றுற முன்னம் ஸன்முகனாய்ப்படைத்து, அவன் வழியாக தேவஜாதியையும் அவர்களுக்கு இருப்பிடமான லோகங்களையும் இவற்றிலே சேதநவர்க்கங்களையும் ஸ்ருஷ்டித்த ஸர்வேச்வரன் எம்பெருமான் என்றவாறு.

இங்கே ஸம்ப்ரதாயத்தில் விசேஷமாக அநுஸந்தேயமொரு ஸூசனைக்கிறதாயிற்று;—"ஸர்வேச்வரன் ஏதேனுமொன்றை ஸ்ருஷ்டித்தான்; அதனுள்ளே பஞ்சமுகனாய் ஸ்ருஷ்டித்தான்; பஞ்சமுகன் மூன்றுமுகனாய் ஸ்ருஷ்டித்தான்; ஆக இப்படியான பரம்பரையாகாயிற்றும் காரணம்."

ஆக இப்படிப்பட்ட ஸர்வேச்வரன் உங்களுக்குக் கண்ணுக்கெட்டாத தூரவிடங்களாய் பழ, மரம்போல் பழுதியமணிமாடங்கள் உயர்ந்திருக்கிற திருநகரியிலே 'கற்பகக்காவலரு வரச் சேவுமுண்டே...?' என்று நின்ற நின்ற நிலையை நோக்கிக்கொண்டிருக்க, வேறொரு தெய்வத்தை அல்லோ! தேடித்திரிகின்றீர்களே!

* வாசஸ்தெஷாம் வரிஷ்டாதி ஸோஷ்டா ஸ்தாஸ்ரயதே ஜகத் | ஸ்ரயிதாரஸ்ரயஸ்தஸ்மாத் ஸ்ரயிஷ்யாஸ்ரயதே ஹரிம் | என்கிறபடியே ஸகலஜகத்காரணபூதனான ஸர்வேச்வரனுக்கே தேவர்முதலான ஸகலரும் ஸேஷபூதர்களாய் அவனையே ஆச்ரயிக்கவேண்டுமென்கிற ஸாஸ்த்ரார்த்தமும் இவ்விடத்திற்குப் பொருந்த அநுஸந்திக்கத்தரும். தாதித்தலன், கல்லை பெருமிடைப்பிலே அதிலே அள்ளிக் குழித்து அத்தன் விடாய் நீராட்டினதே அதன் கரையிலே நுந்தாவிளக்கு ஏற்றுகையும் முயலுமாப் போலே இருந்தது இவர்களுடையபடி. திருமாலையில் "கேட்டிரே கிளிகாள்! கொடுவானவனும் கிடக்க, சேட்டைதன் மடியகத்துச் செல்வர்பார்த்திருக்கின்றீரே." என்ற பாசுரமும் இங்கு நினைக்கத்தரும்.

http://acharya.org

திருக்குருகூர்—இது பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் ஒன்று; ஆழ்வார் திருநகரியென வழங்கப்படுமது. கூ-ரு-கா-வ-பூ [குருகாபுரீ] என்பது வடமொழிவழக்கு.

காடுசீர்வணங்கும் தெய்வமும் உம்மையும்முன்படைத்தான் *
வீடில்சீர்புகழாதிப்பிரான் அவன்மேவியுறைகோயில் *
மாடமாளிகைகுழ்ந்தழகாய திருக்குருகூர்தனை *
பாடியாடிப்பரவிச்சென்மின்கள் பல்லுலகீர்! பாரதே. (உ)

பல் உலகீர்	பலவகைப்பட்ட உலகர்களே!
சீர்	சீர்மை
காடு	தேடி
வணங்கும்	வணங்கும்படியாயுள்ள
உம்மையும்	உங்களையும்
முன் படைத்தான்	முன்னம் படைத்தவனும்
வீடு இல் சீர்	நித்யவித்தர்களான திருக்குணங்களாலுண்டான
புகழ்	புகழையுடையவனுமான
ஆதிபிரான் அவன் மேவி உறைகோயில்	ஆதிசேஷன் விரும்பி வெகுகாலமிருக்குமிடமான
மாடம் மாளிகை சூழ்ந்த அழகு ஆய திரு குருகூர் அதனை	மாடமாளிகைகளால் சூழப்பட்டு அழகு வாய்ந்த திருநகரியை
பாடி ஆடி	பாடுதலும் ஆடுதலும் செய்து கொண்டு
பரவி	துதித்து
பாரத்து சென்மின்கள்	எல்லாவிடத்திலும் பரவி சஞ்சரியுங்கள்.

* * * உலகர்களே! நீங்கள் எத்தனை தெய்வங்களைப் பணிகின்றீர்களோ, அத்தனை தெய்வங்களோடு உங்களோடு ஒரு வாசியில்லை; நீங்கள் எப்படி காரியபூதர்களோ அப்படியே அவர்களும் காரியபூதர்களேயல்லது காரணபூதர்களல்லர்; ஆகையாலே, அவர்களை நீங்கள் ஆச்ரயிப்பது போல உங்களையும் அவர்கள் ஆச்ரயிக்கலாம். உங்களைக்காட்டிலும் அவர்களுக்குச் சிறிது ஞானமும் சக்தியும் மிகுதியுண்டு என்கிற இவ்வளவேயல்லது வேறொரு வாசியில்லையிறே; உங்களோடு அவர்களோடு வாசியற அனைவர்க்கும் காரணபூதனான ஸ்ரீமந்நாராயணன் கண்டு தன்தனதாயிடமாகிய திருநகரியைப் பணியுங்கோளென்கிறார்.

சீர்காடுவணங்கும் தெய்வமும்—காற்றலாலது தேடுதல்; உங்களால் தேடிவணங்கப்படுகிற தெய்வங்களையும் என்றபடி. சான்த்யங்களானவை "ஸ்வோத்தரைஸ்தவ விதிஜ்ஞாகீதவர:" என்ற பாஞ்சராத்ரத்தில் தேடவேண்டு மென்ற சொல்லாயிற்று, அத்தேர! நீங்கள் காபுருஷர்களைத் தேடி யோடுகிறே! என்ற கருத்தினிற்கிறபடி. எம்பெருமான் உங்களைத் தேடாநிற்க, நீங்கள் நீசர்களைத்தேடியோடாநின்றீர்களே! என்றுமாம்.

இங்கே நம்பின்னோர்;—"கன்னலைத் தேடிப்பிடிக்குமாபோலே தேடிப் பிடிக்க வேண்டி யிருக்கிறபடி; ஆடு நிறுவினைகள்மாறிற்ற இவர்கள்தாம்".—ஜீவநிர்வாஹகனான ஆதாரனாகக்கொண்டிருக்கிற சேதநர் தெய்வங்களென்ன காட்டினபடி.

வீடு இல் சீர்புகழ்=சீர் என்பதற்குச் செல்வம் என்கிற பொருளும் குணம் என்கிற பொருளும் உண்டு. ஒருநாளும் குறையாத செல்வங்களையுடையவன் என்றும், நித்யவித்தர்களான நிருக்குணங்களையுடையவன் என்றும் கொள்க.

அவன்மேவியுறை கோயில் என்றவிடத்தை நம்பின்னோர்;—"அவன் பரமபதத்தில் உள்ளதுபோலே போலேகாணாநிற்பது; நம்மாழ்வீகள் படுகிற க்லேசத்தை அநுஸந்தித்து 'இவை என்படுகின்றனவோ' என்று இருநிலத்தில் வெறுப்போடேயாயிற்று அங்கிருப்பது...

http://acharya.org

'பரமபதத்திலும் ஸம்ஸாரியின் படுகிற க்லேசத்தை யநுஸந்தித்துத் திருவுள்ளத்தில் வேதப் போடேயாயிற்று எழுந்தருளியிருப்பது' என்ற பட்டர் அருளிச்செய்ப, ஆச்சானும் பின்னே யாழ்வானும் இக்கைக்கேட்டு 'பரமபதத்திலே நமக்க யிச்ப்பானவிருக்கிற விருப்பிலே திரு வுள்ளத்திலே ஒரு வ்யஸனத்தோடே கிருத்தானென்னை உகிதமோ?' என்றருள்—என்ன பண்டிதரென்கிறவர் வந்து விண்ணப்பஞ்செய்ப, *வதவை நஷ-ஈ நஷ-ஸ்தாணாம் வரமாலவதி ந-ஸ்வி தா—ம்யஸனேஷு மநுஷ்யாணாம் ப்ராய்பயதி தாக்ஷி:.* என்றது ஸுலப்யகாலத்திலேயோ தோஷப்ரகாசத்திலேயோ வென்று கேட்கையாட்டிற்றிறே? இது குணமாகில் குணமென்ற பேர் பெற்றவற்றில் அகில்லாததொன்றுண்டோ வென்றருளிச்செய்தார்."

இத்த ஐதிஹ்யம் இங்கு அருளிச்செய்ப ப்ரகரத்தி எதென்னில்; மூலத்தில் "அவன் மேவியுறைகோயில்" என்றுள்ளது; மேவியுறைதலாவது ஆசையோடு வாழ்தல்; பரமபதத்தில் பட்ட நலம் இங்குத் தீப்பெறுவோமென்று ஆசைப்பட்டு வாழ்தலென்றே பொருள் சொல்லவேண்டியிருந்தலால், பரமபதத்திலும் பெருமாளுக்கு துக்கப்ரஸக்தியுண்டோ வென்ன சங்காஸ்பதமாகுமாதலால் அதைப்பரிஹரிக்க ஐதிஹ்யமருளிச் செய்தபடி.

எம்பெருமானே ஸர்வஜ்ஞனென்னுமிடம் *உபர்யுபரி கலுமுடைய வன் என்னும் கூறினவர்கள், "ஒன்றொழியாமே ஸகலகுணங்களும் அப்பெருமானிடத்தே திருக்கின்றன" என்று இசைந்தே போலேயிருப்பர். ஒரு குணம் இல்லை செய்யப்பட்டதும் *ஸமஸ்த கல்யாண குணாம்ருதோததி:* என்று சொல்வதற்குக் குறை சொல்லுகிறதாகும். இக் கப்படுவதென்பது கல்யாணகுணமன்றே; அது நேரய குணமாயிற்றே என்று சிலர் கலக்கு வர்கள்; ஸ்வார்த்தமான தோஷமே நேரயமேயல்லது பரார்த்தமான தோஷம் நேரயமே யன்று: அதுதான் நிறுத்த குணமெனப்படும். தானதுபற்றியே இராமாநுஜனுடைய பெ குணங்களே யெடுத்துரைக்கின்ற அயோத்யாவாஸி ஜனங்கள் *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித:* என்றருள்கள். எம்பெருமானாரும் ஸ்ரீபாஷ்யத்தில் *ஏவமிதர— ஸாமாந்யநிரவதிகாதி-ஸுலாலஹிந்-ஆதி* என்றருளிச் செய்தார். ஸதல்ஸாகாரத்திலே விகர்த்தா என்னும் நிருக்தமத்தின் பாஷ்யத்திலே "ஸர்வ ஏவைதஸ்மாத்ஸர்வாத்ஸர்வெஷி வாரா ய-ந்த ஸர்வஸ்மிந் வதொஷ; ஸதுபாஸகஸ்ய ஸ-ஸ்மாத்ஸகலாதிய ஸ-ஸ்மாத்ஸகலாத் வாரா ய-ந்த" (இதல் கருத்து) தமக்காக இன்பதுன்பங்கள் இல்லாமலிருந்தும் பிறர் இன்பதுன்பங்களே அநுபவிப் பதனால் தாம் இன்பதுன்பங்களையடைந்து விகாரப்படுகிறவர்; இந்த விகாரம் பிறரிடத்தி லுள்ள அன்புபற்றியதாதலால் ஸ்வரூபக்குக் குறைவாகாது."—என்ற பட்டர் ஸ்பஷ்ட மாகவே அருளிச் செய்தார்.

எம்பெருமான் அநுபவிக்கிறதாகச் சொல்லப்படுகின்ற துக்கம் மெய்யானதா, பொய்யானதா என்கிற விசாரமே அகிஞ்சித்கரம். எம்பெருமானென்ன ஒருவனுளனென் னும் அவன்முன் சமந்த கல்யாணகுணவிசிஷ்டனென்றும் இசைகின்றவர்கள் அப்பெருமானைப் பரதுக்க துக்கியாக இசைந்தேதீரவேணும். இக்குணம் அவனுக்குப்பொருந்தாது என்ப வர்கள் சிக்குணப்ரஹ்மவாதிகளேயாவர். ஏதத்ஸர்வஞ்ஞம்.

முதற்பாட்டில் "நிருக்குருகூரதனுள் நின்றுவாழ்கின்றீர்கள்" என்ற எம்பெருமானை யுத்தேசித்து பேலே ஆழ்வார் இப்பாட்டில் "நிருக்குருகூரதனைப் பாடியாடிப் பரிசிச்செல் மின்கள்" என்கிறார்; எம்பெருமானிற்காட்டிலும் அவன் உகந்தருளினவிடமே பரமப்ராப்யம்

http://acharya.org

என்று காட்டினபடி. இவ்வதேசத்திலே சென்று சேர்ந்து சேஷிப்பதிலுங்காட்டில் வழிப் போக்குத்தானே மிக இனிதாகையாலே பாடியாடிப் பரவிச்சென்மின்கள் என்கிறார்.

பரந்தே என்றவிடத்து சடு;—"பெரிய திருநாமத்துக்கு வலிதாகிற [ஸர்வோத்தரமான] மாகவத்தோமாபோலே ஸாஹஸிக்கமாகப் பாடியாடிப் பரவிச்சென்மின்கள்." (உ)

பரந்தெய்வமும்பல்லுலகும்படைத்து அன்றுடனேவிழுங்கி *
காந்தமிழ்த்துகடந்திடந்தது கண்டும்தெளியகில்லீர் *
சிரங்களாலமரர்வணங்கும் திருக்குருகூரதனுள் *
பரன்திறமன்றிப்பல்லுலகீர் ! தெய்வம்மற்றில்லைபேசுமினே * (கூ)

பரந்த தெய்வமும் பல் உலகும்	விஸ்தீர்ணமான தேவதாவர்க்கங்களையும் (அவர்களுக்குப்) பல உலகங்களையும்
படைத்து அன்று உடனே விழுங்கி	ஸ்ருஷ்டித்தும், ப்ரளயம் வந்த காலத்திலே எல்லாவற்றையும் ஒரு சோற்றுருண்டை விழுங்கி
காந்த உமிழ்ந்து	உள்ளே மொளித்து வைத்தும், பிறகு வெளிப்படுத்தியும்
கடந்த	(மஹாபலியிடத்தில் தானம் பெற்று) அளந்துகொண்டும்
இடந்தது	(மஹாவராஹமாய்) இடந்தெடுத்தும் ஆக இப்படிச்செய்த காரியங்களை
கண்டும்	ப்ரமாணங்களாலே கண்டறிந்து வைத்தும்

தெளிய இல்லீர்	"தெளியமாட்டீரத
பல் உலகீர்	பலவகைப்பட்ட உலகத்தவர்களே!
அமரர்	தேவர்கள்
சிரங்களால் வணங்கும்	தலையால் வணங்கப் பெற்ற
திருக்குருகூர் அதனுள்	திருநகரியில் எழுந்தருளியிருக்கிற
பரன்	பரம புருஷனுக்கு
திறம் அன்றி	ப்ரகாரமாயல்லது
மற்று	வேறு ஸ்வதந்திரமாயிருப்பதொரு
தெய்வம் இல்லை	தேவதை இடையாது;
பேசுமின்	அப்படிப்பட்ட தேவதை யொன்று உண்டாயில் சொல்லுங்கள்.

* * * உலகங்களை ரக்ஷித்தருள்வதற்காக எம்பெருமான் செய்த போரும் செயல்களை ஆராய்ந்து பார்த்தாலும் இவனே பரம புருஷனென்று அறியப்போது மென்கிறார்.

தேவவர்க்கம் முதற்கொண்டு பலவகைக்களையும் படைத்ததும், "மண்ணும் விண்ணும் வானவரும் தானவரும் மற்றுமெல்லாம் உண்ணுத பெருவெள்ள முண்ணுமன் தான்விழுங்கி உய்யக்கொண்டதும், பிறகு வெளிநாடுகாணப் புறப்படவிட்டதும், வாமனனவதாரம் பண்ணி மூவடிநீரேற்றுப்பெற்ற அனத்து கொண்டதும், மஹாவராஹமாய் அண்டபித்தியில் நின்றும் ஒட்டு விடுவித்தெடுத்துக்கொண்டதுமாகிய இத்தகைய செயல்களைக் கொண்டே இவனே பர தேவதை என்ற நிஸ்சயமாக எல்லாராலுமிருக்க, அந்தோ! தெரிவுபெற மாட்டிற்றிலீரே என்கிறார் முன்னடிகளில்.

எந்த தெய்வங்களை நீங்கள் சென்று பணிகின்றீர்களோ அந்த தெய்வங்களும் வந்து தலையாலே வணங்கும் திருக்குருகூரில் பரத்வம் பொலிய நிற்கும் பெருமானுக்குச் சரீரமல்லாத தெய்வம் ஒன்றுண்டோ?* வைதிக ஸம்ரதாயத்தை அனுஸரித்து என்றுப்படியாக வன்றே எல்ல தெய்வங்களுமிருக்கின்றன. ஸ்ரீமத் சடகோபஸ்வாமிகளே ஸ்வதந்த்ரமான தெய்வம் ஒன்றுண்டாயில் எடுத்துப் பேசுங்களென்கிறார். (கூ)

பேசின்றசிவனுக்கும்பிரமன்தனக்கும் பிறர்க்கும்
காயகனவனே * கபாலங்கொண்மோக்கத்துக்கண்டுகொண்மின் *
தேசமாமதிள்சூழ்ந்தழகாய திருக்குருகூரதனுள் *
ஈசன்பாலோரவம்பறைதல் என்றுவதிலிங்கியர்க்கே ? (ஙு)

http://acharya.org

போகின்ற	உங்களால் பரதெய்வமாகப் பேசப்படுகின்ற
சிவனுக்கும்	குத்ரனுக்கும்
பிரமன் தனக்கும்	(அவனது தந்தையான) பிரமனுக்கும்
பிறர்க்கும்	மற்றமுள்ள தேவதைகளுக்கும்
நாயகன் அவனே	நீலவண் ஸ்ரீமத்கரதாயன்னே என்றுமிடத்தை
கபாலம் கல் மோக்கத்து	கபாலமோக்ஷக்ஷேத்ரத்தில்
வந்துகொண்மின்	சேர்த்துகொள்ளுங்கள்;

தேசம்	தேஜஸ்ஸுபொருந்திய
மா	சிறந்த
மதிள் சூழ்ந்த	மதில்களால் சூழப்பட்டி
அழகு அய	அழகு பெற்றதான
திரு குருகூர் அதனுள்	திருக்கிளியில் எழுந்தருளியிருக்கிற
சொல் பால	வேதவேதாந்த விஷயத்திலே
ஓர் நூல் பலதான்	தப்பான பேர்க்கைகளைப் பேசுவது
இலிங்கியர்க்கு	லிங்கப்ரதானமான வாதிகளுக்கு
என் சுவை	என்ன பயனைத்தரும்? 1.

* * * அநுமானத்தாலே சர்வஜ்ஞ ஸதிக்கவிரும்பு மவர்களும் பலபதிகளே ஸர்வேச்வரனென்று கூறுபவர்களுமான நிலை இப்பாசுரத்தாலே நிரகரித்தருளுகிறார். இலிங்கியர்க்கு என்றது நேதுவாதிகளுக்கு என்றபடி; அநுமானத்தைக் கொள்பவர்களே நேதுவாதிகளாவர்கள். சப்தப்ரமாணமான சாஸ்த்ரத்தின் முன்னே வேறு எந்த ப்ரமாணமும் நிற்கமாட்டாதாகையாலே அந்த சாஸ்த்ரப்ரமாணம் விருத்தமாக இலிங்கியர் பேசுவது பொருளற்றது என்று சொல்லிற்றாயிற்று. இலிங்கியர்—லிங்கவாதிகள்; லிங்கமாவது நேதுவாகிய அநுமானமென்கை.

ஒருகாலத்திலே பரமசிவன் தன்னைப்போலவே பிரமனும் ஐந்து தலையுடையனாயிருப்பது பலரும் பார்த்து மயங்குதற்கு இடமாகிருக்கின்றதென்று கருதி "அவனது சிரமொன்றைக் கிள்ளியெடுத்துவிட, அக்கபாலம் அப்படியே சிவன் கையில் ஒட்டிக்கொள்ளுவதும் அவன் 'இதற்கு என்செய்வது' என்ற கலங்கிப்பட, தேவர்களும் முனிவர்களும், 'இப்பாவத்தைப் போக்கவேண்டும்; என்றைக்குக் கபாலம் நிறைகிறதோ அன்றைக்கே இது கையைவிட்டு அகலும்' என்று உரைக்க, சிவபிரான் பலகாலம் பல தலங்களிலுஞ்சென்று பிக்ஷையேற்றுக்கொண்டே வருந்தி நிற்கும் அக்கபாலம் நிரம்காதாக, பின்பு ஒருகால் பதரிகாச்ரமத்தையடைந்து அக்கு எழுந்தருளியுள்ள நாராயணமூர்த்தியை வணங்கி இருந்தபோது அப்பெருமான் அருளிச்செய்ய உடனே அதுநிறைந்து கையைவிட்டு அகன்றது என்பது கபாலவிமோக்ஷ வரலாறு. கொல்லுவதும் கொல்லச்செய்பவனுமான பிரமனும் உருத்ரனும் பரதெய்வமாக இருக்கத்தகுதியுடையரல்லரென்பது இக்கதையினும் தெற்றெனவிளங்கும்.

வேதத்தில் "நமஸ்தக்ஷகபாலாய நம: கபாலினே" என்றும் "யஸ்ய வை ப்ரஹ்மணோ ஹரிதீ யாய தஸ்யை" என்றும், "கபிலாஜடாகலாபாய தஸ்மை ப்ரஹ்மகபாலினே நம: விதிரேக ஸ்ருஷ்டி" என்றும் சொல்லியிருப்பவற்றைப் பற்றிக்கொண்டு சிலர் சிவனுக்குப் பரம்பதத்தையும் சிலர் பிரமனுக்குப் பரம்பதத்தையும் பேசுவதுண்டாதலால் ஆழ்வார் அதைத் திருவுள்ளம்பற்றிப் "பேசின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும்" என்கிறார். 'பேசின்ற' என்பது சிவனுக்குப் போலவே பிரமனுக்கும் அடைமொழியாகத்தகும். சில ஸ்ருதிகளிலே இவர்களுக்குப் பரத்வம் தோன்றும்படியான வசனங்களுங் காணப்படுகின்றன. "ஸ ஏதமேவாத்மானம் ருத்ரம் அத்ரும் வாஸுதேவம் ஸங்கர்ஷணம் ப்ரத்யும்நம் அநிருத்தம் ஸர்வாத்மாநம் ஸர்வாத்மகம் ஸர்வாத்மநா—ஸ்ருஜதி தஸ்ய தேவஸ்ய பதமாப் நோத்யாயதநம், காப்யாயம் விஷ்ணுருதம் பூர்வம் தத்ரோத்பத்தி: பிதாமஹ:" என்றும், "யதூர்த்வம் ஏஷாம் வஸவ்யம் தத்ருத்ரா யுஜாயத। ஸுஷுவுஸ்தே யதி வாலாத் பரிஷத் தஸ்மாத் ஸ ருத்ரோ ஜாயத தத் பத்மாஸநபூர்வம் தத்ர ப்ரஹ்மா ஸ்வயாயத, ப்ரஹ்மணஸ் ஸபி ஸம்பூதஸ் ஸ இத்யவதாரயதாம்" என்றும், "யதேநா வா ஏஷ ஏதேந ஜ்ஞாயே ஸோயே

http://acharya.org

ப்ரம்மண: புத்ராய ஜ்யேஷ்டாய ச்ரேஷ்டாய" என்றும், "ஸஹோவெலவலவதேலே ஸஹாதா ஸ-ஸ்வாதரதம் தெவதெலொஸவஸ்ஸலவ-மதரதேவஸ் ஸர்வயேதே மதரத்மர ஜுஹ்வா ஆத்மாகம் தேவதேலோ பலுவ" என்றமுன்ன ஶாத்ரக்கணக்கான ப்ரமாணங்களுக்குள்ளே சிர்வஹிக்கவேண்டுகையாலே அப்படி சிர்ணயித்தருளின பாம வைதிகரான ஆழ்வார் "சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் காயகனவனே" என்ற துணிந்து அருளிச் செய்கிறார்.

இங்கே சப்பின்னேபிட்டு புதீனஸ்திலன் காண்மின்;—

"நீங்கள் சர்வசர்களாக சங்கித்தவர்களிருவரும் நின்ற நிலை கண்டதே; ஒருவன் தலை கொட்டு சிவ்ருன்; ஒருவன் முடிகொண்டு ப்ரகாசிக்கிறபடி நின்ருன். முட்டையோடுதோடு ஒருகலோடுபோய், உங்கள் குணத்தைப் பற்றவற்ற நீங்கள் உங்களிலும் பெருங்குறை வானரையோ பற்றுவது? 'பாதலியாய் பிளந்தபுக்குத் நிரிந்தவன்' என்ற நீங்களே சொல்லி வைத்து அவனுக்குப் பரத்வத்தைச் சொல்லலாமோ? ஒருவனுடைய சர்வத்வம் தனியோடே போயிற்று. மற்றவனுடைய சர்வத்வம் அவன் கையோடே யென்ற சுட்டிக்கொடுக்கிறார் [கண்டு கொண்மின்.] உந்தம் அகங்களிலே நீங்கள் எழுதிவிட்டுவைத்த சாத்தங்களைப் பார்த்துக்கொள்ளமாட்டிகோலோ முன்னேநின்ற பிதற்றுதே யென்கிறார்."

தேசம்—தேதல் என்ற வடசொல்திரிபு. தேசபொலிந்த திருமலையாலே சூழப்பட்டு அழகிய திருகரியிலே நிற்கிற வர்வேச்வரன் பக்கலிலே குறை கூறும்படியான தெளிப் பாச்யமுண்டாயிற்று! என்ற வெறுக்கிறார். (அ)

இலிக்கத்திட்டபுராணத்தீரும் சமணரும்சாக்கியரும் *
வலிந்துவாதுசெய்வீர்களும் மற்றுநுந்தெய்வமுமாகின்றன் *
மலிந்துசேர்கேல்கவரிவீசம் திருக்குருகூரதனுள் *
பொலிந்துநின்றபிரான்கண்டீர் ஒன்றும்போயில்லைபோற்றுமினே. (ஆ)

இலிக்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்	வித்வமதாதிய விஷயமாகக் கல்பிக்கப்பட்ட புராணங்களைப் பற்றினவர்களாயும் சமணர்களாயும் பௌத்தர்களாயும்	பொலிந்த நின்ற நான் செல்கேல் மலிந்த கவரி வீசம் திரு குருகூர் அதனுள்	பொலிந்து நின்ற பிரானென்கிற ஸர்வேச்வரனே, செல்கேற்பவர்களானவை ஸ்வீகரிப்பதற்று சாமரை வீசப்பெற்ற திருகரியிலே
வலிந்துவாது செய்வீர்களும்	விரோதவாதம் செய்பவர்களாயும் மிருக்கிற நீங்களாகவும்		
மற்றும் நும் தெய்வமும் ஆகின்றன்	தேவதாந்தரங்களாகவும் [இப்படி ஸர்வசரீரகனான]	கண்டீர் ஒன்றும் பொய் இல்லை போற்றுமின	கொலிபுக்கோள்; என்னையும் அடிமையில்லே; அடியுங்கோள்.

* * * கேள்வபுராணம் முதலாகச் சில குத்ருஷ்டி ஸ்ம்ருதிகளையும் பாற்பல்ம்ருகளையும் பிரமாணமாகக்கொண்டு பேசவந்தவர்களே நிராகரித்தருளுகிறார்.

புராணங்களானவை சாஸ்த்ரங்களென்றும் தர்மங்களென்றும் மாத்ரிகங்களென்றும் பாகுபாடுற்றிருக்கின்றன. "ஸதெஸ்ரிவைதே ஸாதவ ஆஸுர் தாவைதாந்ர ருஷீ திஷதி! ஸாவ வேதாந்ர ஸாதர் தூரயிகம் ஸுஸ்வாலோவிதாந்ர ஸாவ தூரயிகம் வதொ! தெஸ்ரிவயோ ஹவைலோ நிவ்ருஷி பாதாந தீம! வாவீனை ஸதாந்ர வைஷ்ணவ தூர விதாணாந விரதிதை—அக்கேச்சிவல்ய மாதரதர்யம் தாமனேஸாந்ர ப்ரஜேத்திதம், ராஜனேஸாந்ர

http://acharya.org

சமாதரத்வம் அதிகம் ப்ரஹ்மணோஸ்திது;; ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யம் அதிகம் ஹரேர் ஸங்கீர்ணேஷு ஸ்வல்பகம்; பித்ருஸாம்ய மதிகதயதே.* [தாமஸகல்பங்களில் அக்நி யிறைவனையும் வேறுடையவரும் மாஹாத்ம்யத்தையும், ராஜஸகல்பங்களில் சான்முகனுடைய மாஹாத்ம்யத்தையும், ஸாத்விககல்பங்களில் ஸ்ரீவைகுண்டநாதனுடைய மாஹாத்ம்யத்தையும் முக்குணங்களும் கலந்த ஸங்கீர்ணகல்பங்களில் பித்ருக்களினுடையவும் ஸ்வல்பதெய்வங்களுடைய மாஹாத்ம்யத்தையும் பேசியிருப்பதாக முன்னோர்களே கூறிவைத்தார்கள்.

ஸ்ரீவிஷ்ணுபுராணம் எப்படி அவதரித்திருக்கின்றதென்பதைச் சிறிது உற்றுப்பார்க்க வேணும்; *பகவந்த மமர ஸ்வாமி யதிவிஸ்ரு தஷ்டாரமாதி: ஸ்ரீ ஸகலஜகதுத்பத்தி யதோ—பகவான் சதுரமுகப் ப்ரஹ்மாவுக்கு ஸ்ருஷ்டிக்கும் ஸாமர்த்யத்தைக் கொடுத்தருளினவன்; ஸகலஜகத்துக்கும் காரணபூதனான ஸர்வேச்வரனை யாரேனும் ஒருவர் ஸ்ருஷ்டிகர்த்தாவென்று சொல்லுவார்களோ?* என்று பொதுவிலே கேள்விகேட்டு; *விஷ்ணோராராதநாத் பரதரம் நாஸ்த்யேவ தத்தத் ஸுரார்சநாதி தபஸாம் ஸாராத் ஸமாராதநம் ஸர்வேஷாமபி தேவதாவலி தபோ யஜ்ஞக்ரியாணாம் ஸமஸ்தாநாம் ஸம்பூதயே தத் ஸமஸ்தஜகதாராத நாய ஸதாம் ஸர்வாராதந மச்யுதஸ்ய விதிவத் ஸர்வாத்மநா ஸர்வதா—ஸர்வாத்மாவான ஸர்வேச்வரனை ஸர்வகாலத்திலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஆராதிப்பதைக் காட்டிலும் மேற்பட்ட ஆராதநம் வேறில்லை; ஸ்ரீமந்நாராயணனை ஆராதிப்பதே ஸகலதேவதைகளையும் ஆராதிக்கிறபடியாம்; ஸகலயஜ்ஞங்களாலும் ஸகலதபஸ்ஸுகளாலும் ஸாதிக்கப்படுகிற ஸகலபுருஷார்த்தங்களும் ஸித்திக்கைக்காக ஸர்வேச்வரனை ஸர்வப்ரகாரத்தாலும் ஆராதிப்பதே ஸாரதமம்; ஸர்வேச்வரனை ஆராதிப்பதே ஸகலஜகத்துக்கும் ஆராதநமாகிறது;* என்று விடை அழகாக அவதரித்திருக்கின்றது. இப்படியன்னோன், ஸாருமதியை யாணையாகக் கவிபாடித்தரவேணு மென்பாரைப் போலே விஷ்ணுத்துக்குப் பெருமையிட்டுச் சொல்லவேணுமென்ன கேள்வியாய், அதன்மேற்றோன்றின விஷ்ணுபுராணமாகையாலே இவிஷ்ணுத்து இட்ட புராணத்தீரும் என்று ஆழ்வார் ஸாரஸத்தை வெளியிட்டுப் பேசியிருளினாயிற்று. *ய வெடி யாதமநா ஏவ தாய யாஜுகரஜுக—ஏவ ஸ்வா ஸிஷ்டயா ! வைஷ்ணவா ஸிஷ்டயா வெத்த தரோ ஹிஸ்யாஹி தா: ஸ்வ தா:—யா வேதபாஹ்யா: ஸ்மிருதயோ யாஸ் ச காஸ் ச குத்ருஷ்டய:, ஸர்வாஸ் தா நிஷ்பலா: ப்ரேத்ய தமோநிஷ்டாஹி தா: ஸ்மிருதா:.* என்று மநுமஹர்ஷி சொல்லிவைத்ததும் அநியத்தக்கது.

இப்படிப்பட்ட பாற்கடலுக்குரிய ஸ்ரீமந்நாராயணனே விளித்து, 'நீங்களும் நீங்கள் தொழு கிற தெய்வங்களும் அவனேயாலே நின்றுள்' என்று இங்கு ஆழ்வார் அருளிச்செய்வது *ஸ்ரஷ்டாரமீஸ்வரமஜம் ஜகதாம் விதாதாரம்* ஸ்ருஷ்டிஸ்திதிப்ரளயஸாதநஹேதுஜாலம் *தஸ்மை நமோ பகவதே புருஷோத்தமாய* இத்யாதி ப்ரமாணங்களையே உட்கொண்டதாம். சிவபிரான் நிரிபுரமெரித்த வரலாற்றை நன்குணர்ந்தால் ஒவ்வொரு தேவதைக்கும் எம்பெருமானே உபாஸ்ய நிர்வாஹன் என்பது புலனாகும்;

இப்படி ஸர்வாந்தராத்மாவாக இருக்கும் ஸர்வேச்வரன் ப்ரத்யக்ஷாநல்லன் என்ற கண்ணழிவு சொல்லவொண்ணாதபடி இருகரியிலே அகப்பிறந்தனுய், பாமபதத்திலுங்காட்டிலும் இக்கே தன் திருக்குணங்கள் நன்கு விளங்கப் பெற்றதனால் பொலிந்து நின்ற பிரானென்ன திருநாமம் அணிந்து நின்றும் பெருமானே யேத்தி, நாம் உபபாதிக்கும் எம்பெருமானுடைய நன்மைகளையும் அந்தத் திருநாமத்தியிலே அநுபவித்து மங்களாசாஸனம் பண்ணுகின்றோமென்கிறார் பின்னடிகளால்,

... ... (இ)

போற்றிமற்றோர்தெய்வம் பேணப்புறத்திட்டு * உம்மையின்னே
தேற்றிவைத்தது எல்லீரும்வீடுபேற்றுலகில்லையென்றே *
சேற்றில்செங்கேழ்கமலமோங்கு திருக்குருகூரதனுள் *
ஆற்றவல்லவன்மாயம்கண்டீர் அதறிந்தறிந்தோமினே. (ஈ)

மற்று ஓர் தெய்வம் } வேறொரு தேவதையை | போற்றி பேண | கழித்து ஆராதிக்கும்படியாக

தி. 10–36.

http://acharya.org

புறத்து இட்டு	வேறுபடுத்தி
உம்மை	உம்மோ
இன்னே	இப்போதுமீக்களிருக்கிற விதமாக
தேற்றி வைத்தது	தேவதாந்தரங்களே கர்புர்படியாக (எம்பெருமான்) செய்து வைத்ததாலே
எல்லீரும்	எல்லாரும் (எதற்காகவென்றால்)
வீடு பெற்றால்	முக்தியடைத்தால்
உகந்து இங்கே என்றே	புண்யபாப விஷயமான சாஸ்த்ர மரியாதை குலைத்தபோருமென்கிற காரணத்தாலோயாகும்;
சேற்றில்	சேற்றுவிலத்தில்
செக்கேல்	செக்கெற்பரிக்கோம்

சுமனம்	தாமரையும்
ஒன்று	ஒப்பு வரைப்பெற்ற
திரு குருகூர் அதனுள்	திருநகரியிலே எழுத்தருளியிருக்கின்ற
ஆற்ற வல்லவன்	பரமசக்தியுக்தனான பெருமானுடைய
மாயம் கண்டீர்	மாயையோமத்தனே;
அது	மாயையென்பதை
அறிந்த	தெரிந்துகொண்டு
அறிந்த	'அது தப்பும் வழி அவன் திருவடிகளைப்பற்றுவதே' என்றும் தெரிந்துகொண்டு
முந்துமின்	திருவடியே சென்று சேரப் பாருங்கள்.

* * * ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேச்வரனுகில் அவன் தன்னையே ஆச்ரயிக்கும்படி என்னைப்பண்ணாமல் இந்த தெய்வங்களோத் தொழுமாறு எங்களைச் செய்துவைத்தது ஏன்? என்று ஒரு கேட்பதாகக் கொண்டு அவர்களுக்கு உத்தரமளிக்கும் பாசுரம் இது. உங்கள் பாபக்தான் அதற்குக் காரணம் என்ற விடை கூறிற்றாயிற்று.

இப்பாசுரத்தில் எல்லீரும் வீடுபேற்றில் உலகில்லையென்றே என்பது தான் மருமமாக வுள்ளது. ஆபாதப்ரதீதியில் இதற்கு என்னபொருள் தோன்று மென்றால், எல்லாரும் ஸ்ரீமந்நாராயணனையே தொழப்பெற்றால், எல்லாருமே வீடுபெற்றுவிட்டால் லீலாவிபூதி அடியற்றுப்போய்விடும்; அவ்வுலகம் போகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இந்த தேவதாபாஸம் பண்ணி மம்மாரிகளாய்த் தொலைத்துபோம்படி செய்துவைத்தான்—என்ப தாகப் பொருள்தோன்றும். இப்படிப்பட்ட பொருள் எம்பெருமானுக்கு மிக்க அவத் யத்தை விளைக்குமதாகையாலே ஆழ்வார் இப்பொருளைப்பட அருளிச்செய்ய மனக்கிலிலை; ஆறுரைப்படி முதலிய வியாக்கியானங்களில் இவ்வளவே பொருள் சொல்லாதும் விளக்கப்பட வில்லை. ஆனால், திருவாய்மொழிக்கு மம்ஸ்க்ருதப்படாரையிட்டு [ஒன்பதினாயிரப்படி இயற் றிய] தேசிகவிஷத்பாஷ்யகாரரான ஸ்ரீரங்கராமானுஜஸ்வாமி இப்பொருளையே பலித்து வைத்தார்; அவருடைய வாக்கியம் வருமாறு;—"மலரடிபரவலை உஷ்ம தொகுதைஹை மீமாலிஹிதத்வனைஷ்ட தனோகநாழி உத்தேஷ்யவை வராதி சிதவெவை மறவதா ஷவிஷய வஜ்ஜித-ஷ்ரீரிஷ்ட தெவதானரவிஷயே மஜ்ஜன-ஷ்தஜிதெதி மாவ." என்பதாம்.

பிள்ளான் முதலிய மலைநாட்டாசாரியர்களும் திருவுள்ளம்பற்றின பொருள் யாதெனில்; உலகில்லையென்றே என்ற விடத்தில் உலகு என்பதற்கு சாஸ்த்ரமர்யாதை என்ற பொருள். அவரவர்கள் பண்ணின புண்யபாபரூப கருமங்களுக்குத் தக்கபடியே பண் கொடுப்பதென்ற ஒரு சாஸ்த்ரமரியாதை ஏற்பட்டிருக்கின்றது; நீங்கள் முற்பிறவிகளில் பிரபலமான நிஷித்தகர்மத்தைச் செய்திருந்தபடியால் அவற்றின் பலனை இப்பிறப்பில் உங்களே ஸ்ரீமந்நாராயணனைப் பண்ணும்படியாக உபதேசித்திடலாயிற்று. கொடிய பாவங்கள் செய்த உங்களே புண்யாத்மர்களைப்போலே ஸ்ரீமந்நாராயண மமாச்ரயணமே செய்யும்படி பண்ணிவிடுவதானால் அப்போது முன்சொன்ன சாஸ்த்ரமரியாதை அழிந்துவிடுமன்றே. அவ்வுலகம் அழியாமைக்காகவே உங்களை இவ்வளவு கிறுத்திவைத்தது—என்கை. வேதாந்த தேசிகரும் தாத்பர்ய ரத்நாவளியில் உதாஹரணவாக்யமாகவே "மாயம் கண்டீர்" என்ற இவ்வர்த்தத்தையே வெளியிட்டருளினார்.

http://acharya.org

* மம மாயா துரத்யயா * என்ற அவன்தானே கீதையில் சொல்லிவைத்தபடி தப்ப வொண்ணாத இந்த மாயையை அவன் திருவடிகளைக் கட்டியே தப்பப்பார்க்கலென்கிறார் பின்னடிகளில். ... ... (சு)

ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து மற்றோர்தேய்வம்
பாடியாடிப்பணிந்து* பல்படிகால் வழியேழிக்கண்ணீர் *
கூடிவானவரேத்தநின்ற திருக்குருகூரதனுள் *
ஆடுபுட்கோடியாதிமூர்த்திக்கு அடிமைபடுவதுவே. (எ)

ஓடி ஓடி பலபிறப்பும் பிறந்து	எல்லாச சக்தியில் ஓடியோடி பலபல யோனிகளிலே பிறந்து	வானவர் கூடி ஏத்தநின்ற	தேவர்கள் திரண்டு துதிக்குமிடமான
பல்படி கால் வழி ஏறி	வந்த பரம்பரையாக	திருக்குருகூர் அதனுள்	திருக்கோயிலே எழுந்தருளி யிருக்கின்ற
மற்று ஓர் தெய்வம் பாடி ஆடி பணிந்து	தேவதாந்தரக்களே அந்தந்த நாள்களிலே சொல்லியிருக்கிறபடி பலபடியாக வழிபட்டு	ஆடுபுள்கொடி ஆதிமூர்த்திக்கு	ஆநேகருளக்கொடியுடைய ஆதிகாதப் பெருமாளுக்கு
கண்ணீர் அடிமை படுவது	பலன் கைபுகுத்தமை கண்டு கனே,		அடியாராயிருக்கத் தகுதி

* * *—தேவதாந்தரங்களே ஆச்ரயிப்பதனால் என்னபலன் உண்டாகுமோ அது உலகருக்கு இதிஹாஸங்களில் தெரியாமையில்லை; இச்சான் மாயையிலே கைகண்ட பலன்தான் இனியே நாம் காணக்கடவதாயிருக்கும்; ஆனால் கருடக்கொடியுடையாருக்கு அடிமை புகுவதே உறுதி யென்கிறார்.

தேவதாந்தரபரனத்தின் பலனை முன்னடிகளில் அருளிச்செய்கிறார். மற்றோர்தெய்வம் பாடியாடிப்பணிந்ததற்குப் பலன் ஓடியோடிப் பல பிறப்பும் பிறப்பதேயத்தனை என்கிறாயிற்று. *ஸ்ரேஷ்டாம் ஸ்ரீகுணம் தத்ர பாஸ்ரா நாராயணாதரா: ஜ்ஞாநிந: ஸாதவ: ஸாந்தா ஸர்வஜ்ஞ ஸமதர்சிந: ஸர்வே ஸர்வேஷ்வரம் விஷ்ணும் ஸர்வபூதாத்மகம் ஹரிம் ஸர்வே வதந்தி ஸர்வஜ்ஞம் ஸர்வே பச்யந்தி ஸர்வதா ஸர்வே ஸர்வாத்மகம் விஷ்ணும் ஸர்வே ஸர்வாத்மகா: ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா ந லோகேஸ்மிந் தேவாந்தே யம்மாத் பரிபதந்: பலம்.* [ரிஷிகள் விஷ்ணு முதலிய தேவதைகளோத் தொழுவதனால் அற்பபலனே யடைக்குமாதலால் விவேகிகள் அத்தெய்வங்களைத் தொழுவ தில்லை] என்கிற ப்ரமாணத்தை அடியொற்றி ஆழ்வார் அருளிச்செய்கிறபடியால் இவ்விடத்தே ஒரு ஆக்ஷேபமும் இடம்பெறாது.

கீழ்கள் தொழுகின்ற தெய்வங்களும் வந்து தொழுது தத்தம் வாய்படைத்த பலன் பெறுமாறு தோத்திரம் செய்யுமிடமான திருக்குருகூரிலே யிவையனைத்தின்றும் பரனையேபற்றி பரம்புருடனுக்கு அடிமை செய்வதே ஸ்வரூப ப்ராப்த மென்றாயிற்று.

ஆடுபுள்=ஆடு' என்ற வெற்றிக்குப் பேராதலால் வென்றிக்கருடன் என்னுமாம்.

புக்கடிமையிலுள்ளன் னெனக்கண்ட மார்க்கண்டேயனவனே *
கக்கபோலனுமன்றுய்யக்கொண்டது காரணனகுளே *
கொக்கலர்தடந்தாழைவேலித் திருக்குருகூரனுள் *
மிக்கவாதிப்பிரானன்றிற்க மற்றைத்தெய்வம்விளம்பதிரே. (அ)

அடிமையிலுள் புக்கு தன்னை கண்ட	அடிமைசெய்து உள்புகுந்து தன்னைக்காணப்பெற்ற	மார்க்கண்டேயன் அன்று	மார்க்கண்டேயனென்று ப்ரஸித்த னானவன் அக்காலத்தில்

http://acharya.org

சக்கரோன் உய்யக்கொண்டதும்	நிகும்பசூசுமியான குத்தன் சஞ்சித்ததும்
நாராயணன் அருளே	நாராயணனுடைய அருளின் பயனேயாகும்;
கொக்கு அலர்	கொக்குப்போலே வெண்மலர் மாக அலர்கின்ற
கடல் தானை வேலி	பெரியதானைகளை யேலியாகவுடைய
நிருகுருகூர் அதனுள்	திருநகரியிலே
மிக்க	மேம்பாடுடைய
ஆதிரான் கிற்க	ஆதிசேஷப்பெருமாளிருக்க
மற்று ள தெய்வம்	வேறு எத்த தேவதைகளை
எனப்புகில்	போகிறீர்கள்?

* * *—மார்க்கண்டேயன் ருத்ரனை ஆராதித்துத் தன் அபேக்ஷிதம் பெற்றானே யென்று இவர் சொல்ல, அத்தக்கதையின் பொருமையும் கேட்கலாகாதோ வென்கிறார்.

மிருகண்டு வென்னும் முனிவர் பின்னிலில்லாக்குறையினால் பிரமனைக்குறித்துத் தவஞ் செய்தபோது, பிரமன் ப்ரத்யக்ஷமாகி 'முனிவரே! அரிஷ்டாயுஸ்ஸையும் அக்ஷயகீர்த்தியும் பெரும் பேரியும் நேருணர்க்குருமுடையவனும் நூறு ரோயம் உயிர்வாழ்பவனை புத்ரனாகப் பெறுகிறீரோ? அன்றி, கூர்மையான புத்தியும் அழகு பொலிந்தவடிவழகும் ஆரோக்கியமும் சற்குணமுமுடையவனும் பதினாறு ரோயமே வாழ்பவனை குமாரனாகப் பெறுகிறீரோ? சொல்லும்' என்ன, முனிவர், 'ஆயுள் நிச்சயமும் அறிவும் அழகும் குணமும் நிறைந்த புத்ரனையும் எனக்குத்தாரும்' என்று தம் கருத்தைக்கூற, சான்முகக்கடவுள் ; அவ்வாறே அநுக்ரஹித்தனர். அங்ஙனம் வாழ்நாளோ பதினாறாயிருக்கப்பெற்றுப் பிறந்த புத்ரனை மார்க்கண்டேயன் தனது அல்பாயுஸ்ஸைக்குறித்து வருந்திய தாய்தந்தையரைத்தேற்றித் தான் விதியைக் கடந்து வருவதாகச்சொல்லி, நீக்காயுள்ளை பெறுதற்பொருட்டுத் தினந்தோறும் வைபூதை செய்துவருகையில் ஒருநாள் யமன் தூதரையனுப்ப, அவர்கள் மார்க்கண்டேயனது தவக்கனலால் அவனை அணுகமாட்டாது அவன் செய்யும் விபூதிப் பிறப்பைக்கண்டஞ்சி வெருண்டோடி யமனிடம் செய்தி சொல்ல, யமனும் கோபித்துத் தனது மந்திரியான காலனை ஏவ, அவன் வந்து சபயங்களாலழைக்கவும் மார்க்கண்டேயன் வராமற்போனென்று சொல்லிவிட, பிறகு யமன் மிகக்கோபித்துத் தானே சேரிவந்து மார்க்கண்டேயனைக் காலபாசத்தாற் கட்டியிழுக்கத்தொடங்குகையில் அம்முனி குமாரன் லிங்கத்தைத் தழுவிக்கொள்ள, யமன் லிங்கமுட்பட வளித்திழுக்கும்போது சிவரோன் ஸ்ரீமக்காராயணனைச் சிந்தைசெய்து அவனது திருவருள்பெற்று அங்குநின்று வெளிப்பட்டு யமனைக் காலபாசத்துத்தள்ளி முனிமகனுக்கு என்றும் பதினாறு ரோயமாகவே ஆயுளை கல்பகாலமளவும் இனிது வாழும்படி சிரஞ்சீவியாக்கினன் என்பதுவரலாறு.

இவ்வண்ணம் சிவரோன் மார்க்கண்டேயனுக்கு அருள் செய்தது நாராயணருளால் தான் பெற்ற சக்தியினாலேயென்பதும், அச்சிவரோனுக்கு அத்தகாதிமாவாய் நின்று தொழில் செய்தவன் எம்பெருமானாகிய ஸ்ரீமக்காராயணனே என்பதுமாகிய உண்மை உணர்த்தற்கரியது. சில புராணங்களில் சிவனெழுந்தவாரியாகப் பார்க்கும்போது பரமசிவனே மார்க்கண்டேயனுக்கு அபயமளித்ததாகக் காணப்படினும், மஹாபாரதத்தில் ஆரண்யபருவத்தில் நூற்றுத்தொண்

‡ புராணபேதத்தால் இக்கதை சிறிது பேதப்படுமுண்டு; சிவனுடைய அநுக்ரஹத்தினால் மிருகண்டுமுனிவருக்குப் பின்னே பிறந்ததாகவும், அப்பின்னே ஒருநாள் விதியில் விளையாடிக்கொண்டிருக்கு மிருப்பைத் தாய்தந்தையர் தனக்குமாறாகக் கண்டுகொண்டிருக்குங்கால் 'இப்பின்னைக்கு ஆயுள் குறைந்து' என்று ஆகாசவாணியொன்று சொல்லிற்றாக, அதனால் அத்தாய்தந்தையர் மிக்க வருத்தங்கொண்டதாகவும், அதுகண்ட மார்க்கண்டேயன் 'இதற்கு நீக்கள் வருத்தவேண்டா, இவ்வாபத்தை நானே போக்கிக்கொள்ளுகிறேன்' என்று அவர்களைத் தேற்றித் தான் விபூதிதரிக்கத் தொடங்கினனென்பதாகவும் சில புராணங்கள் கூறும்.

http://acharya.org

ணற்றிரண்டாமத்வாயத்தில் மார்க்கண்டேயன் தானே தருமபுத்திரரை நோக்கிச் சொன்ன மனவில் ஸ்ரீமன்நாராயணனுடைய வார்த்தையை அநுவதிக்குமிடத்து, "விஷ்ணுஸ்ருஷ்டி விஷ்ணுஸ்ருஷ்டா ஸம்ஸாரோ விஷ்ணுபர்த்தாசவி விப்ரர்ஷே! மாஞ்சைவ சரணம் கத:" என்னுள்ள ச்லோகத்தினால் இவன் ஸ்ரீமன்நாராயணனே சரணம் புகுந்தவனென்பது நன்கு விளங்கும்.

ஸ்ரீ பாகவதத்திலும் பன்னிரண்டாம் ஸ்கந்தத்தில் பட்டாரகத்வாயத்தில் "ஸுராஸுரநர வரஸ்ரீகமஹம் நிகமே ஸ்வத்ர-ஸ்ரீ கரஸ்ரீ—ஸுராதயஸ் நாராயணஸ்ரீகரம் ப்ரீத்யை மருத்யும் ஸுதுர்ஜயம்" [ஸ்ரீமன்நாராயணனையே ஆராதித்து வெள்ளையொன்றை யமனை வென்றொழித்தான்] என்று ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று.

மார்க்கண்டேயன் இவ்வனம் தெற்றென் வாழ்த்துவருகையில், மறுநாட்ரவத்தைத் தான் காணவேணுமென்று ஆசைகொண்டு எம்பெருமானைப் பேசற்றிப் பிரார்த்தித்து அவ்வனம் காணும்போது, மறுநாட்ரவத்தில் திருமாலொருவனே வன்றி மற்றைத்தேவரெவரையும் பிழைத்திருக்கக் காணுதவனும் அப்பெருமானது திருவயிற்றினுள்ளே அனேகவுலகங்கண்டு, முடிவில் தான் சுற்றும் பெறுதற்பொருட்டுத் திருமாலையே சரணமடைய, அப்பெருமான் அவனைத் தனது திருவடிகளிற்சேர்த்துக்கொண்டருளினன் என்பதும் அறியத்தக்கது. இதைத் திருவுள்ளம்பற்றியே பன்னீராயிரப்படியாரையில் "அன்று உய்யக் கொண்டதும்" என்பதற்கு—"ப்ரளயதசையிலே மேழுப்பித்து பகவத்பரனுக்கி உற்றீன்ப்பித்தது" என்ற உரை கூறப்பட்டது.

நாராயணனருளே என்றவிடத்து ஈறு;—"நீ தெற்றென் பள்ளியிட்டு ஆச்சரித்தாய்; அவ்வாச்சரியம் வேறாரால் போகிற்றதாக வொன்றாது—என்று அவனையழைத்து 'சாணும் உன்னேபோதி ஒருவனே ஆச்சரித்துக்கான் இப்பதம் பெற்றது; இனி மண்கொடுத்தல் உபதேசம் கொடுத்தலிறே என்று சொல்லி அவனைக்கொண்டுபோய் ஸ்ரீவைகுண்டம் பக்கலிலே வாட்டிக்கொடுத்தருளிற்று."

ஆதலால் இப்பாட்டில் ஸ்ரீவைகுண்டநாதனையொழிய மற்று எத்தத் தெய்வத்தைக் கொண்டாடுகிறீர்களென்பது சொல்லிற்றாகும். .... (அ)

விளம்பமாறுசமயமும் அவையாகியமற்றும்தன்பால் *
வளர்த்துகாண்டடர்கியனுகிய ஆதிப்பிரானமரும் *
வளர்கொள்தண்பணைசூழ்ந்தழகாய திருக்குருகூரதனை *
உளங்கொள்ளுஞானத்தமைவுள்ளீர் உம்மையுய்யக்கொண்டுபோகுறிலே. (கூ)

விளம்பம் } கண்டபடி சொல்லுவது தனிப் பொருட்பொருத்தம் பிறிது மில்லாதவைகளான
ஆறு சமயமும் } ஆறுவகைப்பட்ட பாஷ்யமதங்களும்
அவை ஆகிய } அந்த பாஷ்யமதங்கட்குப் பரியாயமான
மற்றும் குற்றமற்ற மதங்களும்

தன் பால் தன் விஷயத்திலே
வளர்த்து காண்டு அர்த்த ஞான ஆகிய } எல்லோரையொன்றாகவு மிருக்கிற
ஆதி பிரான் } அகலாதகாரணபூதனான ஸ்ரீவைகுண்டன்
அமரும் நித்யவாஸம் பண்ணுமிடமாய்

உ, 10–37.

http://acharya.org

வனம் கொள் தண் பணை சூழ்ந்த அழகு ஆய — வளம்மிக்க குளிர்ந்த நீர் நிலங்களாலே சூழப்பட்டு அழகியதான

நிகரில் புகழாய் — நிருகரிவய

(நிக்கள்)

உம்மை — உங்களை

உய்யக் கொண்டு போகுமின் — உஜ்ஜீவிப்பித்துக்கொண்டு உடக்கவேண்டியிருந்தீர்களால்

உளம் கொள் ஞானத்து — அந்தரங்கஜ்ஞானத்துக்குள்ளே

வைம்மின் — வைத்துச் சிக்கென செய்யுங்கள்.

* * * வேதபாரம்பர்யர்களும் சூத்ரகர்த்ருக்களும் பல்லாயிரம் துஷ்தர்க்கங்களால் அழிக்கவொண்ணாத ஜ்ஞாவர்யத்தையுடையனாய் எம்பெருமானைமூர்த்தருளிச்செய்கிற நிருகரியை ஆச்சரியர்கோள் பிழைக்கவேண்டியிருந்தீர்களால் என்கிறார்.

வேதம் முதலிய சாஸ்த்ரங்களை ப்ரமாணமாக இசைபாதவர்கள் வேத பாரம்பர்யர்களைப்படுவர்; அவற்றை ப்ரமாணமாக இசைத்தாலைத்தும் அவற்றுக்குத் தகுராத அர்த்தங்களைப் பண்ணுமவர்கள் (அதாவது) எம்பெருமானிலைவனுவன் தவிர மற்ற தத்துவமொன்றுமே இல்லையென்றும், அவனுக்குக் குணமில்லை, விக்ரஹமில்லை யென்றும் சொல்லுமவர்களை சூத்ரகர்த்ருக்களைனப்படுவர்; இவ்விருவகுப்பினரையும் பற்றிக் கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் ஒரு ச்லோக மருளிச்செய்கிறார்; அதாவது—*வாவதூக: கூஷ்யவாத-தி கித வெவதவாஸ் வொமம் தவஜ்ஞ-வொனி நஹீஸ்வரெ தாரு। ஜ்ஞாவாதூகா நநூவெஸ்வ ஸ அயிகேவெஸ்வ சுவொஸவாவவிதவதவாதூ கொவிவொஹ—பாரம்பர்ய: சூத்ரகர்த்ருக்களிந்த்ரியேப்யபரம் கோரம் தமன் மறுபயந்தி ஸ்ரீமதஸ்தே தாரு, ஜகத்ஸ்ய காரணம்ருஷைர்ம்ருகதருஷ்ணிகேப்ஸவ: காரணத்வநிஹதஸ்ய ச கோ விசேஷ:!* என்பதாம். இதன் கருத்தாவது:— வேதபாரம்பர்யகளும் வேதசூத்ரகர்த்ருக்களுமான இருவகுப்பினரும் ஒருகாலும் பகவத் கடாக்ஷத்திற்கு இலக்காகமாட்டாமல் நித்ருப்போவர்கள். வேதத்தை அடியோடே ப்ரமாணமாக அங்கீகரியாதே தூஷிக்கின்ற பாரம்பர்யர்கள் நித்ருப்போவது யுக்தம்; அப்படியல்லாமல் வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்த வைதிகர்களென்று பேர்பெற்றிருக்கின்றவர்களும் நித்ருப்போவர்களென்னலாமோ என்ன; இருவகுப்பினரும் துல்ய யோகக்ஷேமர்களேயென்பது ஒரு க்ருஷ்டகத்த முகத்தாலே மூதலிக்கப்படுகிறது; விடாய்பிருத்த தண்ணீரைத் தேடியோட இரண்டு ம்ருகங்கள் புறப்பட்டன; அவற்றில் ஒரு ம்ருகமானது தடாகத்தில் புகாதே காணிக்கண்டு தண்ணீர்ப்பொருக்காக மயங்கி ஓடிக்கொண்டேயிருக்கையில் வழியிடையிலே சேர்பட்ட புலி முதலிய கொடிய விலங்குகளினால் அடித்துத் தின்னப்பட்டதாயிற்று. இது இப்படியாக, மற்றொரு ம்ருகமானது விடாய்தீர்த்த தடாகத்திலேயே சென்று சேர்ந்தது; ஆனால் அடையே இறியவேண்டிய தூறுவிலே விழியாமல் தூறைதப்பி விழியலே அங்குக் கிடந்த வொரு கொடிய நூலாற்தவாலே அது பாஷிக்கப்பட்டொழிந்தது. ஆக இரண்டு ம்ருகங்களும் தடாகப்ரவேச—அப்ரவேசங்களாலே சிறிது வாசி பெற்றிருந்தாலும் ஸ்நாநத்திலே வாசி பெற்றனவில்லையே; அதுபோலவே சூத்ரகர்த்ருக்களும் பாரம்பர்யகளும் வேதப்ராமாண்யாவ்கோர—அங்கீகாரங்களாலே சிறிது வாசி பெற்றிருந்தாலும் ஸ்நாநத்திலே வாசிபெற்றவர்களேயாவர். என்றதாயிற்று. காணலிலே மயங்கியொழிந்த ம்ருகத்தின் ஸ்தானத்தில் பாரம்பர்யர்கள்; தடாகத்திலே விழுந்து தூறைதப்பியொழிந்த ம்ருகத்தின் ஸ்தானத்திலே சூத்ரகர்த்ருக்கள் என்றுணர்க.

விளம்பம் ஆறுசமயமும்=சாக்ய, உலூக்ய, அக்ஷபாத, க்ஷபண, கபில, பதஞ்ஜலி மதங்கள் எனப்படுகிற ஆறும் பாரம்பர்யசமயங்களாம்; சாக்யர்—பௌத்தர்; உலூக்யர்—சார்

http://acharya.org

வாகர்; அஷ்டபாதரென்று கௌதமரைச் சொல்லி வையாகரணரென்பர் சிலர். சுஷ்பணர்—மூகர்.

அவையாகிய மற்றும்=மற்றும் அவற்றோடொத்த குத்ருஷ்டிகளும் என்றபடி. "அவையாதியும்" என்பது பன்னீராயிரப்படி யுரைக்கு மாத்திரம் பாடம்.

மற்றும் என்பதற்கே குத்ருஷ்டிவர்க்கமெனப் பொருள்கொண்டு, அவையாகியும் என்பதற்கு 'அவையாகத் திரண்டாலும்' என்று பொருள் கூறினர் பன்னீராயிரவுரைகாரர். அவை—அவை; பாஞ்சராத்ரர்களும் குத்ருஷ்டிகளும் பெருந்திரளாகக் கூடினாலும் பரிச்சேதித்து அறிய முடியாதவன் எம்பெருமான் என்றபடி.

ஆசமயங்களுக்கு விளம்பும் என்ற அடைமொழி கொடுத்தது—அர்த்தமில்லாத வென்றும் சொற்களேயே பிதற்றுபவர்களென்று காட்டினபடி. ஆக, பாஞ்சராத்ரர்களாலும் குத்ருஷ்டிகளாலும் சரிப்பிக்கவொண்ணாத எல்லாப்பொருளையும் விழுங்கிவிடுகிற ஸர்வேச்வரன் மழுங்காவுளி மிருக்குமிடமாய், வளர்மிக்க நீர் நிலங்களாலே சூழப்பட்டு அழகியதான திருநகரியை, உளங்கொள் ஞானத்து வைம்மின்—மனனஞ்ஞானத்துக்கு விஷயமாக்குங்கள் என்றபடி. இது வரைகோக்கி யுரைக்கிற தெல்லாம்; உம்மை உய்யக்கொண்டு போதலில்= உற்றுரைக்க விருப்பமுடையராகில்.

போக + உறில், போகுறில்; தொகுத்தல். .... (கூ)

உறுவதாவதெத்தேவும் எவ்வுலகங்களும்மற்றும்தன்பால் *
மறுவில்மூர்த்தியோடொத்து இத்தனையும்நின்றவண்ணம்நிற்கவே *
செறுவில்செங்கேல்கருங்கொடோங்கு திருக்குருகூரதனுள் *
குறியமாணுருவாகிய கீர்த்தடக்கடற்கிடக்காட்செய்வதே. (ஙி)

எத்தேவும்	எல்லாத் தேவதைகளும்
ஏ உலகங்களும்	எல்லா வுலகங்களும்
மற்றும்	மற்றுமுண்டான சேதன சேதனங்களுமாகிய
இத்தனையும்	இவையடங்கலும்
தன்பால்	தன்னுடையதான
மறு வில் மூர்த்தி யோடு ஒத்த	மிக்கவில்லையான அசாதாரண விக்ரஹம்போன்று [கைவிளக்கத்தாலும் விதேயங்களாகி யென்றபடி]
நின்ற வண்ணம் நிற்க	குறையாத நிற்குமிருப்பிலே—
செறுவில்	வீரோ லைக்களில்
செங்கேல்	செங்கெற்பயிர்களும்
கருங்கொழு	கருப்பஞ்சோலைகளும்
ஓங்கு	வளருகிறபடியான
திருக்குருகூர் அதனுள்	திருநகரியிலே
குறிய மாண் உரு ஆகிய	வாமநாகாரமாகாரி வேஷமெடுத்த தன்னும்
கீள் முடக் கிடத்தலுற்ற	(க்ருஷ்ணனாய்ப்) பெரிய முடக் கூதாடனையுமான பெரு மானுக்கு
ஆள் செய்வதே	அடிமை செய்வதே
உறுவது ஆவது எத்தேவும்.	

* * * தன் ஸ்வர்யத்தில் ஒன்றும் குறையாமல் திருநகரியில் வந்து நின்றருளின பொலிந்த நின்ற பிரானுக்கு அடிமைசெய்வதாலே எல்லாப்பாலுமுபமென்கிறார். பாட்டி.

http://acharya.org

னடியிணையுள்ள உறுவதாவது என்பதை, முடியிணையுள்ள சூட்செய்வதே என்பதனோடு கூட்டுக; சூட்செய்வதே உறுவதாவது என்றபடி.

எத்தேவும் எவ்வுலகங்களும் மற்றும் இத்தனையும் தன்பால் மறுவில் மூர்த்தியோடொத்து இவ்வாறே. இந்திரன் சந்திரன் குபேரன் என்ற சொல்லப்படுகிற வகை தேவாதாவர்க்கமும், மைந்த லோகங்களும், மற்றவையனைத்தான சேதநாசேதநவர்க்கமுமானவை இவையித்தனையும் தன்னுடைய அசாதாரண விக்ரஹப்போலே தனக்கு விதேயமாயிருக்கும்படியாகப் பெற்ற எம்பெருமான் திருக்குருகூரிலே நின்றருளினதனையாலே அவனுக்கு சூட்செய்வதே உறுவது என்றபடி.

மறுவின்மூர்த்தி யென்பதற்கு இரண்டுவகையாகப் பொருள் கூறுவர்; மறு என்ற ஸ்ரீவத்ஸத்திற்கும் பெயராகையாலே அதனையுடைத்தான திருமேனி; (அல்லது) மறு என்ற அவத்யமாய், அறிவில்லாத [நேயப்பதார்த்தமான] திருமேனியென்னுதல்.

எவ்வுலகங்களும் மற்றும் தன்னுடைய மூர்த்தியோடொத்திருக்கையாவது என்னென்னில்; சரீரத்திற்குடைய லக்ஷணம் இன்னதென்று அறிக்கால் இது அறிக்கதாகும்; "யஸ்ய ஸாத்மா சரீரம் யஆத்மாநமந்தரோ யமயதி ஏஷ ஆத்மா அந்தர்யாம்யம்ருத:" என்கிற படியே, எந்த சேதநனுக்கு ஆத்மாவாய் நியாமகனாய் சேஷியான பரமபுருஷன் எந்த சேதநனுடைய ஆத்மஸ்வரூபத்தை தன்னுடைய சரீரமாக்கிக்கொண்டு அந்தர்யாமியாய் நின்று நியமிக்கிறானோ, அந்த சேதநனுக்கு அந்த பரமபுருஷன் சரீரமாயிருக்கை சரீரலக்ஷணம். ஆத்மாவுக்கு ஸகலப்ரகாரங்களாலும் பரம்மாகாய் யாவ்வகையும் பேஷப்பட்டிருக்கையே சரீரத்வமாதலால் ஸகல தேவதைகளும் எம்பெருமானுக்கு இங்ஙனேயிருக்குமிருப்படியைச் சொன்னவாறு.

தெற—கிரேஷிப்.

சூடக்கூத்தன்—அத்தனைக்குச் செல்வம் விஞ்சினால் யாகஞ்செய்வது போல இடையர்க்குச் செல்வம் விஞ்சினால் அதனையுண்டாகுஞ் செருக்குக்குப் போக்குவிடாமல் அவர்களாடுவதொரு கூத்து சூடக்கூத்தெனப்படும். தலையிலே அடுக்குக்குடமிருக்க இருதோள்களிலும் இருகுடங்களிருக்க இருகையிலும் குடங்களே வேறி ஆகாசத்திலே யெறிந்து ஆடுவதொரு கூத்து இது. ... . (ஐ)

சூட்செய்தாழிப்பிரானைச்சேர்ந்தவன் வண்குருகூர்நகரான் *
காட்கமழ்மகிழ்மாலைமார்பினன் மாறன்சடகோபன் *
வேட்கையால்சொன்னபாடல் ஆயிரத்துளிப்பத்தும்வல்லார் *
மீட்சியின்றிவைகுந்தமாநகர் மற்றதுகையதுவே. (ஙக)

ஆன் செய்த	(உபதேச முகத்தாலே எம்மாதிகளைத் திருத்திப்பணிகொண்ட வகையாதிற) கைக்கரியதனைப் பண்ணி	மாறன் சட கோபன்	ஆழ்வார்
		வேட்கையால் சொன்ன	ஆதரத்தோடு அருளிச்செய்தவை
ஆழி மாமழை சேர்த்தவன்	ஆழியங்கையழகிய பெருமானை அடைந்தவரும்	பாடல் ஆயிரத்துள்	ஆயிரம்பாட்டிலும்னே
வண் குருகூர் நகரான்	திருநகரிக்குத் தலைவரும்	இப்பதம்	இப்பதிகத்தை
		வல்லார்	ஓதவல்லவர்களுக்கு
காள் கமழ் மகிழ் மாலை மார்பினன்	பரிமளம் மாறாத மகிழமாலையைத் திருமார்பிலே அணிந்தவரு மான	மீட்சி இன்றி வைகுந்தம் மாநகர் மற்றது கையது	மீண்டும் திரும்புதலில்லாத ஸ்ரீ வைகுண்டமாநகரமாகிய அவ்விடம் கைவந்தது.

http://acharya.org

* * * இதநிருவாய்மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தம்மிக்கட்டும் பாசுரம் இது. [ஆட்செய்து ஆழிப்பிரானைச் சேர்ந்தவன்] ஆட்செய்கையாவது கைங்கரியம் பண்ணுதல் இது மாகலிகமென்றும் வாசிகமென்றும் காயிகமென்றும் மூவகைப்பட்டிருக்கும்; இங்கு வாசிககைங்கரியம் கொள்ளத்தகும். செவிக்கினிய செஞ்சொற்களைப் பாடுவதே வாசிக கைங்கரியமாகும். எம்பெருமான் கையுங் திருவாழியுமான அழகைக்காட்டித் தம்மை ஆட்படுத்திக்கொண்டானென்பது தோன்ற ஆழிப்பிரானே என்றார்.

முதலடிக்கு ஈட்டு ஸ்ரீஸூக்திகள் பரமபோக்யங்களாயிருக்கையாலே அவை கண்டுக் கூறிப்பிடப் பெறுகின்றன;—"அடிமைதான் திரிதிறம்—மாகல வாசிக காயிகங்கள். இவற்றில் மாகலகாயிகங்களுக்கு ஆளல்லர்; என்றிய வென்னில், *காலமும் செஞ்சுழியும் கண்ணழுகும்* என்கையாலே. இனி வாசிகமொன்றுமேயாயினும், வாசிகமாகத் திருவாய்மொழி பாடி அடிமை செய்தாரென்கிறதோ வென்னில்; அன்று; அப்படியாமன்று இப்பாசுரம் *மூவிலே சன்முகனிலேயாகவேணும். இல்லையாகில் இவர் வாசிகமாக அடிமைசெய்த *புகழுங்கள் ஒருவனிலேயாகப் பெறில் முக்கியம். ஆனால், தேவதாந்தரபரத்வ நிரஸனபூர்வகமாக ஸர்வேச்வரனுடைய பரத்வத்தை வருளிச் செய்கையாலே யாகுலோவென்னில்; அதுவாகில் முதற் திருவாய்மொழியிலே யாகவமையும். பரத்வநிர்ணயத்திலே பரோபதேசமும் மாகல யாலே யாகுலோவென்னில், அதுவாகில் *நின்னன் வீட்டிலேயாதல்* அநிலதாவதி னிலே யாதலாகவுமமையும். ஆனால் அச்சாவதாரத்திலே பரத்வமருளிச் செய்கையாலே யாகுலோவென்னில்; அதுவுமொண்ணாது. அது *செய்யதாமரைக் கண்ணனிலேயாகவமையும். பரோபதேசம் பண்ணுகையாலே சொல்லிற்றாகுலோவென்னில், அதுவுமொண்ணாது; *கிடுமின் முற்றவும் தொடக்கிப் பல விடங்களிலும் பரோபதேசம் பண்ணினார்; அவற்றிலு மாகப் பெற்றதில்லை; ஆனால் எதாவதென்னில்; இப்பொன் னுலகிலே *பல் பிறவிப் பழுமரம் நாடும் பறவையே போலே* எல்லா பேரையும் விற்று பேரை எல்லாரைப் பலனென்ற இவருணர்ச்செய்கை கேட்டு * பயமயன்மொக்கத்தக் கண்டு கொண்மின் * என்னக்கண்டு நமக்தாகத் திருந்தி ஸ்ரீவைஷ்ணவர்களாயிற்று. இவர்தம் அவர்களுக்கு மங்களாசாஸனம் பண்ணும்படியிறே அவர்கள் தாம் திருத்தினபடி. *பொன்னுலகம் என்ன இதற்கென்ன வொரு திருவாய்மொழி சேருமிறே. ஸர்வேச்வரன் அபேக்ஷிதத்துத் திருத்தப் பார்த்தவிடத்தும் திருத்தாத மம்மாத்திலே இவர் திருத்தத்திருந்திலபடி. இனி இவர்களுத் தத்வநிச்சயம் பண்ண வேண்டாதபடி *இடர்பொன் சமயத்தை யெல்லாமெடுத்துக் கலைவன போலே தடங்கடற்பள்ளிப் பெருமான் தன்னடைப் பூதங்களேயாம்படி திருத்துகையாலே ஆட்செய்தாழிப் பிரானைச்சேர்ந்தவன் என்கிறார்."

இந்த கல்லைக்கு அடி கல்லாச்சரியில் குருகூரிலே பிறப்பு, என்பது தோன்ற வண்குரு கூர்க்கோன் என்கிறார்.

காட்கமழ்மகிழ்மாலைமார்பினன்—தூய்மையாய் வருளாலினையை அணியாகக் கொண் டிருத்தலால் வடமொழியில் 'வருணாபரணர், வருளுடையார்' என்றும், தென்மொழியில் 'மகிழ்மாலைமார்பினர்' என்றும் வழங்கப்படுவர். ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் யதிராஜஸப்ததியில் *வேதத் வொரமூலதத் தொரதொவை-யிரசொடுமாலி தரிபரு-டீதரம் விஸ்ருதாலோம பரிவரிம் தத்-வாஸ்ரயவை=யல்ய ஸாரஸ்வதம் ஸ்ரோதோ வருளாமோத வாஸிதம், ச்ருதிஸாரம் விச்ர மாயாமம் சடாரிம் தருமபாலமிறை.* என்றருளிச்செய்த ச்லோகம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது. ஆழ்வார் அணிந்துகொண்டிருக்கும் வருளாமலையின் கதம்பமான திருவாய்மொழியிலும் விரிக்

http://acharya.org

இடப்பதாக அருளிச்செய்கிறார். இத்தகைய சதுமணம் வடமொழி வேதத்திற்கு இல்லாமையாலே அதற்கொரு குறையுண்டு என்பதையும் காட்டியருளினர்.

வேட்கையால் சொன்னபாடல்=உலகத்திலே கவி சொல்லுவார் பலருண்டு; அவர்கள் பெரும்பாலும் தம்தம் கவித்திறம் காட்டுதற்கே பாடல்கள் பாடுவர்; ஆழ்வார் அங்ஙனமன்றி பக்தி பலாத்காரத்தாலே பரவசமாகத் திருவாய்மொழி பணித்தாரென்பது அறியத்தக்கது. ஆசார்யஹிருதயத்தில்—"சீர்பால் செய்பழுதாய் சிரமே எரி கெளிக்குமாபோலே பரபக்ஷ யாநிமயற்றாகாம்குதாப்தி நிமிறை வாய்கையினடந்து மொழிபட்டு அவாவிலக்தாதிவென்று பேர்பெற்றது." என்ற சூர்ணிகை இங்கு அநுஸந்தேயம்.

"வைகுந்தமாகுகர்மற்றது" என்ற விடத்தில் மற்று என்பது அசைச்சொல்லாய் வைகுந்தமாகுகாகிற அவ்விடம் என்ன பொருள்படும்; அன்றியே, வைகுந்தமாகுகாகிய நித்ய விபூதியும் மற்றதாகிய லீலாவிபூதியும் என்னும் பொருள்கொள்ளலாம். உபய விபூதி நாம்நாள்பழுண்டாகுமென்ற பலன் சொல்லிற்றுயிற்று. ... . (கக)

பத்தாந்திருவாய்மொழி உரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

சம்பன்னே திருவடிகளே சரணம்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி நிகமாந்த மஹாதேசிக பரகாலம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
திருவாய்மொழி திவ்யார்த்ததீபிகையில்
நான்காம்பத்து முற்றிற்று.

ஸ்ரீயர் திருவடிகளே சரணம்.

http://acharya.org